# நடைமுறை

# le பிரஞ்சு

# français courant

# நடைமுறை பிரஞ்சு
# le français courant

ஆக்கியோர்
வசந்தி பிரகலாதன்
தேவராஜா பிரகலாதன்
*(Diplômé de langue française à Paris XII)*

வெளியீடு
Association Socio Culturelle Educative Srilankaise (A.S.C.E.S)
62 rue du Poteau, 75018 PARIS

*முதற்பதிப்பு: வைகாசி 1995*
***அச்சுப்பதிப்பு:*** Ateliers Chédeville

© *உரிமை ஆசிரியர்களுக்கு*
***இந்நூலை அல்லது அதன் ஒருபகுதியை மறுபிரசுரம், மொழிபெயர்ப்புச்செய்வது 11 பங்குனி 1957ம் ஆண்டு சட்டத்தின்படி தடைசெய்யப்பட்டுள்ளது.***

~ எமது பெற்றோருக்கு சமர்ப்பணம் ~

# அணிந்துரை

பல்வேறு பிரச்சனைகளினால் சொந்தநாட்டைவிட்டு புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடான பிரான்சில் பெருமளவான இலங்கைத்தமிழர்கள் புகலிடம் தேடியுள்ளார்கள். இது சர்வதேச வல்லரசுகளில் ஒன்றாகும். இங்கு கல்வி, கலை-கலாச்சாரம், பொருளாதாரம், போக்குவரத்து என்பன மிகப்பெரும் வளர்ச்சி அடைந்துள்ளது. பிரான்சுமொழி மிகவும் தொன்மைவாய்ந்த அழகானமொழி, இம்மொழியானது காலமாற்றத்துக்கு ஏற்ப மாற்றமடைந்துவருவது ஓர் சிறப்பம்சமாகும்.

இங்கு புகலிடம் தேடிய இலங்கைத்தமிழ் மக்கள் தமது அன்றாடத்தேவைகளை மேற்கொள்வதற்கு மொழி மிகவும் முக்கியமான ஊடகமாக விளங்குகின்றது. அதாவது, வேலைவாய்ப்பு, சுகாதாரம், வங்கிநடவடிக்கை, வீட்டுவசதி, பிள்ளைகளின் கல்விதொடர்பாக பலகஷ்டங்களை அனுபவித்து வருகின்றார்கள். இலங்கைத்தமிழர்களின் ஒரே ஒருசொத்து கல்வியாகும். இங்கு வாழ்கின்ற பெற்றோர் தமது பிள்ளைகளின் எதிர்கால வாழ்வுக்கான கல்வியை பெற்றுக்கொடுக்க, அவர்கள் இந்த மொழியைப்பற்றித் தெரிந்திருக்கவேண்டியது இன்றியமையாத தொன்றாகும்.

இங்கு புகலிடம் தேடியபல தமிழ்மக்கள் அதாவது கற்றவர்கள் கூட பெரும்பாலும் தமது பொருளாதாரத்தேடலில் காலத்தைச் செலவழிக்கின்றார்கள். அது அவர்களுடைய குறையல்ல. காரணம் இங்கு வாழ்க்கைச்செலவு அதிகமானதாலும் அவர்களது குடும்பங்களைக் கவனிக்கவேண்டிய பெரும்பொறுப்பும் உள்ளது உண்மையே.

*"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்பது அறிவு"*

என்ற வள்ளுவர் கூற்றுக்கமைய, இலங்கை வடபுலம் யாழ்ப்பாணத்தில் சிறந்த கல்விமான் குடும்பத்தில் பிறந்த திரு.தேவராஜா பிரகலாதனும், அவரது துணைவியாரும் சேர்ந்து அயராது உழைத்து, பலகஷ்டங்களுக்கு பின்னர், எமதுமக்கள் மிகவும் இலகுவாக தாய்மொழி விளக்கங்களோடு (தமிழ்) ஊடாக பிரஞ்சு மொழியை இலக்கண வரம்போடு கற்றுக்கொள்ளக்கூடிய ஓர்நூலை வெளியிட இருப்பது மிக மிகப்பாராட்டவேண்டியது ஒன்றாகும். இவர்கள் தமது எல்லாத் தேவைகளையும் ஒதுக்கித்தள்ளிவிட்டு கல்விவளர்ச்சிக்காகத் தமது வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டிருப்பது போற்றுதற்குரியது. அதாவது வள்ளுவனுடைய வார்த்தையில் "அறிவுடையார் எல்லாம் உடையர்" என்றும், "கண்ணுடையோர் கற்றோர்" என்று கூறுவதிலிருந்து நன்கு புரிந்து கொள்ளலாம்.

நூலாசிரியர்கள் அவர்கள், கடந்த ஐந்து ஆண்டுகளாக, பாரிஸ் நகரத்தில் 13ம் நம்பர் மெற்றொ "Pernety" என்ற இடத்தில் தாய்மொழிமூலம் (தமிழ்) பிரஞ்சுமொழியை கற்பிப்பதோடு, கணக்கியல் பட்டநெறி, கம்பியூட்டர் பயிற்சிநெறி என்பவற்றையும் கற்பித்து வருவது மிகவும் பாராட்டி வரவேற்கக்கூடியது. இங்கு பயின்ற பலமாணவர்கள், மொழியிலும் ஏனையதுறைகளிலும் சிறந்த தேர்ச்சி பெற்றுள்ளனர் என்பது உண்மையாகும்.

மீண்டும் இவர்கள் வெளியிடவிருக்கும் "நடைமுறை பிரஞ்சு" என்ற நூலை நோக்குகையில், பாடசாலை மாணவர்கள் தொடங்கி வேலைசெய்கின்ற பெரியவர்கள்வரை இலகுவாக பொருள்விளங்க, இலக்கணப்பிழையின்றி, பலவிளக்கங்களுடன் எழுதப்பட்டுள்ளது. குறிப்பாக பெயர்ச்சொல்லின் வேறுபாடுகள், காலங்களின் பகுப்புகள், இடநிலைவேறுபாடுகள், எச்சநிலைகள், ஒருமை-பன்மை, பால்வகை வேறுபாடுகள், வெளிப்பாடுகள் நன்மைபயக்கூடிய அன்றாடு பயன்படும் பலஉரையாடல்கள் இப்படிபல... விளக்கமாக படிக்கக்கூடியமுறையில் எழுதியுள்ளமை தமிழ்மக்களுக்கு மிகப்பெரும் வரப்பிரசாதமாகும்.

இந்நூலாசிரியர்களின் கன்னிமுயற்சியினால் இந்நூல் உருவானது என அறியமுடிகின்றது. இவரும் இவரது துணைவியாரினனும் இடைவிடாத முயற்சியினாலும், உழைப்பாலும் உருவாக்கப்பட்டு தமிழன்னைக்குப் புகழ்சேர்த்து சிறப்படைய வேண்டி வாழ்த்துகின்றேன்.

*அன்புடன்*
**இசிதோர் பெர்ணான்டோ B.A, Dip-in-Ed**
*ஓய்வுபெற்ற அதிபர்*

# முன்னுரை

மாணவர்கள் எமக்களித்த ஊக்கமும், ஆர்வமும், தேடலின் விளைவே உங்கள் கைகளில் தவழும் இந்நூல். எல்லோரும் புரிந்து கொள்ளுமுகமாக இலகுதமிழிலும், சிலவாக்கியங்கள் பேச்சுத்தமிழிலும் எழுதப்பட்டுள்ளன.

இந்நாட்டவர்கள் உரையாடும்போது எம்மால் சுலபமாகப் புரிந்துகொள்ள முடியாமைக்கு ஒருகாரணம் அவர்கள் அதிகமாக வெளிப்பாடுகளை (Expression) உபயோகிப்பதே. Mot familier நன்கு தெரிந்தவர்களுடன் Argot நண்பர்களுடன் மட்டுமே பாவிக்கவேண்டும்.

மேலும் கவித்துவமான பிரஞ்சுமொழியில் ஓர்வினைச்சொல் பல்வேறு அர்த்தங்களை வெளிப்படுத்தும். உ+ம்: parler, Causer, Bavarder, Discuter ... இச்சொற்கள் பேசுதல் அல்லது கதைத்தல் என்பதைக்குறிக்கும்.

எமது "நடைமுறை பிரஞ்சு" பெற்றோர்களுக்குதவியாக வைத்திய, மருத்துவச்சொற்கள், குழந்தைக்காப்பகம் பற்றிய விளக்கங்கள், மாணவர்களுக்குதவியாக சகமாணவர்களுடன் பேசும்முறை, எமது கலாச்சாரம், இலக்கணம் பற்றிய விளக்கமும், தொழில்புரிபவர்களுக்கு தொழில் சம்பந்தமான சொற்கள், தொலைபேசி சம்பாஷணைகள், கடிதங்கள், எல்லோருக்கும் உதவக்கூடிய வங்கி, தபால், பொலீஸ் அலுவலக சம்பாஷணைகள், சமயம், கோயில் பற்றிய சம்பாஷணை வெளிப்பாடுகளும் இந்நூலில் அடங்கியுள்ளன.

A.S.C.E.S. இனால் நடாத்தப்படும் M° Pernety இல் அமைந்துள்ள எமது பாடசாலையின் வளர்ச்சிக்குத் தங்கள் சேவையை அர்ப்பணிக்கும் ஆசிரியர்கள் திரு.சுப்பிரமணியகுரு சபேஸ்ஐயர் (ஆங்கிலம்), திரு.கிறிஸ்தோபர் பெர்னாண்டோ (கம்பியூட்டர்), திருமதி.கௌசல்யா தர்மகுலசிங்கம் (நடனம்), செல்விகள் பவானி பரராஜசிங்கம், சுபாஜினி நடராஜா (சிறுவர்வகுப்புக்கள்) ஆகியோருக்கு தலைவணங்குகின்றோம்.

கடந்த 91 ஆம் ஆண்டு ஆரம்பமாகிய எமது பாடசாலையின் வளர்ச்சிப்படிக்கற்களாகிய தமிழ், பிரஞ்சு, ஆங்கிலம், கணனி, கணக்கியல், நடனமென பரிணமித்துள்ளது. சிறார்களுக்கு உதவுமுகமாக கணித, ஆங்கில, விஞ்ஞான வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

இலங்கையில் முதலாம்தர அதிபராயிருந்த திரு.இசிதோர் பெர்னாண்டோ அவர்களின் அணிந்துரைக்கும், இலக்கணவழுக்களைத்திருத்த ஆலோசனை வழங்கிய பேராசிரியர்களுக்கும், சக மாணவர்களுக்கும், மிகப்பொறுமையுடன் கணணிஅமைப்புச் செய்துதந்த நண்பர் திரு.பொ.இரவிச்சந்திரன் அவர்களுக்கும் சிறந்தமுறையில் அச்சுப்பதித்து தந்த அச்சகத்தாருக்கும் எமது நன்றிகள்.

இந்நூல் எமது கன்னிப்படைப்பாகும். ஆகவே ஏதும் தவறுகள் இருப்பின் அவற்றைப் பொறுத்தருளும்படி வேண்டுகின்றோம்.

எமது பாடசாலையில் பயின்ற, பயில்கின்ற மாணவர்களுக்கு எமது நன்றிகள்பல... அம்மாணவர்களுடன் இணைந்த எமது தேடலின் பயனாகவே இந்நூல் தங்கள் கைகளில் தவழ்கின்றது.

ஆசிரியர்கள்

# l'alphabet
## நெடுங்கணக்கு

*Les majuscules* **பெரிய எழுத்துக்கள்**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | - ah | B | -beh | C | -seh | D | -deh | E | -euh |
| F | -eff | G | -sheh | H | -ahsh | I | -ee | J | -shee |
| K | -kah | L | -ell | M | -emm | N | -en | O | -o |
| P | -peh | Q | -kyu | R | -airr | S | -ess | T | -teh |
| U | -yu | V | -veh | W | -doohble-veh | | | X | -eks |
| Y | -ee-greck | Z | -zed | | | | | | |

*(பிரஞ்சு நெடுங்கணக்கை உச்சரிக்க உதவியாக அருகில் ஆங்கிலத்தில் கூறப்பட்டுள்ளது)*

*Les miniscules* **சிறிய எழுத்துக்கள்**

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| a | b | c | d | e | f | g | h | i | j | k | l | m | n |
| o | p | q | r | s | t | u | v | w | x | y | z | | |

**உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும்**

*பிரஞ்சு நெடுங்கணக்கில் 26 எழுத்துக்கள் உண்டு.6 உயிரெழுத்துக்களும் 20 மெய்யெழுத்துக்களும் உண்டு.*

La voyelle *உயிர் எழுத்து*

La consonne *மெய் எழுத்து*

*Les voyelles* **உயிர் எழுத்துக்கள்**

a,e,i,o,u,y

இதில் y (semi-voyelle) *அரை உயிரெழுத்தாகும்.*

*Les consonnes* **மெய் எழுத்துக்கள்**

b,c,d,f,g,h,j,k,l,m,n,p,q,r,s,t,v,w,x,z

# Les accents
## ஒலிக்குறியீடுகள்

*எழுத்துக்களின் உச்சரிப்பை மாற்றுவதற்காக அவற்றின் மீது ஒலிக்குறியீடுகள் இடப்படும். இவை உயிரெழுத்துகளுக்கு மட்டுமே வரும்.*

1) L'accent aigu *கூர்ந்த ஒலிக்குறியீடு* ( / )

**இக்குறியீடு e என்ற எழுத்திற்கு மட்டுமே இடப்படும்.இதனால் ஏ என்ற ஒலியைப் பெறும்.**

***உ+ம்***

**thé தேநீர் ,** étudiant *மாணவன்,* école *பாடசாலை*

2) L'accent grave **கனத்த அல்லது தடித்த ஒலிக்குறியீடு ( \ )**

**இக்குறி a,e,u என்ற எழுத்துக்களின் மீது இடப்படும்.**

உ+ம்:
mère அம்மா அல்லது தாய், père அப்பா அல்லது தந்தை
குறிப்பு:
a,u மீது accent grave இடுவதன் மூலம் ஒரு சொல்லின் கருத்தை மாற்றலாம்.
ou அல்லது où எங்கே
la பெயர்ச்சுட்டு là அங்கே
3) L'accent circonflexe ( ^ )
இக்குறியீடு a,e,i,o,u க்குமேல் இடலாம்
a) சில உயிரெழுத்துக்களின் உச்சரிப்பை நீட்டுவதற்கு
உ+ம்
âge வயது, tête தலை
b) Adjectif இல் வரும் u க்கு மேல்
உ+ம்
mûr பழுத்த, sûr நிச்சயமான
c) உயிரெழுத்தின் பின் சத்தமிழந்த s ஐக் குறிப்பதற்கு
உ+ம்
hôpital வைத்தியசாலை, forêt காடு
4) Le tréma ( •• )
இக்குறி e,i,u மீது இடப்படும். இக்குறியிட்ட இடத்தில் ஒலிமுறிவு செய்யவேண்டும்.
உ+ம்
noël நத்தார் பண்டிகை, maïs சோளம், haïr வெறுத்தல்
நொயல் மய்ஸ் எய்ர்
5) La cédille ( ç )
இக்குறி c க்கு மட்டுமே இடலாம். ஒரு சொல்லின் இடையில் அல்லது இறுதியில் c ஐ அடுத்து a,o,u வருமாயின் உச்சரிப்பினிமைக்காக la cédille இடப்படும்.இதனால் s அல்லது z என்ற ஒலியைப்பெறும்.
உ+ம்:
garçon பையன், மகன் français பிரஞ்சு மொழி, பிரஞ்சு நாட்டைச் சேர்ந்தவர்.
விதிவிலக்கு:
vécu

# La Prononciation
## உச்சரிப்பு

1) ஒரு சொல்லின் இறுதியெழுத்து மெய்யெழுத்தாயின் அவ்வெழுத்தை உச்சரிக்கக்கூடாது.
உ+ம்:
Nous (னு) நாங்கள் Nuit (னுய்) இரவு Paris (பறி) பாரிஸ்
குறிப்பு:
சில சொற்களில் இறுதியெழுத்தான மெய்யெழுத்திற்கு உச்சரிப்பு உண்டு.
உ+ம்:
Cheval குதிரை Jour நாள் Neuf ஒன்பது

2) பொதுவாக ஓர் மெய்யெழுத்து உயிரெழுத்திற்கு பக்கத்தில் வரும் போதே அதற்கு ஓசை உண்டு.
உ+ம்:
Comment (கொமோ) எப்படி mots (மோ) சொற்கள்
*மேற்கூறிய இரு உதாரணங்களில் இறுதி எழுத்தான மெய்யெழுத்து இன்னொரு மெய்யெழுத்துடன் வருவதால் உச்சரிப்பு இல்லை.*

| உச்சரிப்பு | எழுத்துக்கள் | சொற்கள் | |
|---|---|---|---|
| a ஆ | *a* | papa, ta | அப்பா, உனது ( உன்னுடைய) |
| | *à* | là, déjà | அங்கே, ஏற்கனவே |
| | *ac* | tabac, estomac | புகையிலை, இரைப்பை |
| | *at* | rat, combat | எலி, சண்டை |

| | | | |
|---|---|---|---|
| | *ap* | drap | கட்டில் விரிப்பு |
| | *as* | bras, bas | புயம், பதிவான |
| **Wa** வ்வா | *oi* | quoi, loi | என்ன, சட்டம் |
| | *oids* | poids | நிறை |
| | *oie* | voie, foie, soie | வழி, ஈரல், பட்டு |
| | *oigt* | doigt | விரல் |
| | *ois* | bois, mois | பலகை அல்லது சின்னக் காடு, மாதம் |
| | *oix* | croix, voix | புள்ளடி அல்லது சிலுவை, குரல் |
| **abl** ஆபிள் | *âble* | câble | கேபிள் |
| | *quable* | remarquable | குறிப்பிடத்தக்க |
| **af** ஆf | *afe* | carafe | ஜாடி |
| | *aphe* | géographe | புவியியலாளர் |
| **al** அல் | *al* | local | உள்ளூர் |
| **ar** ஆர் | *ar* | bazar | பஜார் |
| | *ard* | milliard | நூறு கோடி |
| | *are* | phare | வாகன முன்விளக்கு |
| | *arre* | bagarre, bizarre | சண்டை, அசாதாரண |
| | *arrhe* | catarrhe | சளி, ஜலதோசம் |
| | *ars* | gars | பையன் |
| | *art* | art, quart | கலை, கால்பங்கு |
| **ay** அய் | *ail* | ail | உள்ளி |
| | *aille* | paille, taille | வைக்கோல், அளவு |
| | *aye* | papaye | பப்பாசிப் பழம் |
| **fé** fஎ | *fé* | café | கோப்பி |
| | *fer* | chauffer | சூடாக்குதல் |
| | *phée* | trophée | வெற்றியடையாளச் சின்னம் |
| **fè** fஓ | *fait* | parfait | பூரணமான |
| | *fèt* | préfet | மாவட்ட அதிபர் |
| **jè** ஜெ | *get* | budget | பட்ஜெட் |
| | *jet* | sujet | எழுவாய் |
| **lè** லே | *lais* | palais | மாளிகை |
| | *lait* | lait | பால் |
| | *llet* | ballet | கூத்து நாடகம் |
| | *let* | poulet, chalet | கோழிஇறைச்சி, மலையிலுள்ள பலகைவீடு |
| **té** தே | *té* | santé | உடல்நலம் அல்லது சுகாதாரம் |

| | | | |
|---|---|---|---|
| | *tée* | dictée | சொல்வதெழுதுதல் |
| | *ter* | goûter | சுவை பார்த்தல் |
| | *thée* | athée | நாத்திகன் |
| **yé** யியே | *ié* | amitié, moitié | நட்பு, பாதி |
| | *ied* | pied | பாதம் |
| | *ier* | crier, nier | கத்துதல், மறுத்தல் |
| | *illé(e)* | aiguillée | கூர்மையான |
| | *iller* | travailler | வேலைசெய்தல் |
| | *illez* | veuillez | தயவுசெய்து |
| | *yé* | employé, impayé | வேலையாள், பணம் செலுத்தாத |
| **èr** எய்ர் | *air* | pair, clair | ஜோடி, தெளிவான |
| | *aire* | faire, molaire | செய்தல், கடவாய்ப்பல். |
| **er** எர் | *er* | cher, amer | அன்பான அல்லது விலையாக, கசப்பான |
| | *ère* | père, prospère | அப்பா, செழிப்பான |
| | *erre* | terre, tonnerre | மண் அல்லது பூமி, இடிமுழக்கம் |
| | *ers* | divers, vers | வேறு, நோக்கி |
| | *ert* | vert, concert | பச்சை, கச்சேரி (இசை) |
| **ès** எஸ் | *aisse* | caisse, graisse | பணம் செலுத்துமிடம், கொழுப்பு |
| | *èce* | pièce, nièce | துண்டு, மருமகள் |
| | *ess* | express | விரைவான |
| | *esse* | hôtesse, politesse | பணிப்பெண், மரியாதை |
| **èt** எத் | *aite* | défaite, retraite | தோல்வி, இளைப்பாறிய |
| | *ète* | poète, planète | கவிஞர், கிரகம் |
| | *ête* | tempête | புயல் |
| | *ette* | dette, crevette | கடன், இறால் |
| **èy** எய் | *eil* | pareil, orteil | ஒத்த, கால் பெருவிரல் |
| | *eille* | veille, merveille | முதல்நாள், அதிசயமான |
| **eur** ஏர் | *eure* | heure | நேரம் |
| | *eurre* | beurre | பட்டர் |
| | *eurs* | plusieurs | பல |
| | *œur* | sœur, cœur | சகோதரி, இதயம் |
| **i** இ | *i* | souci | கவலை |
| | *ie* | biographie | வாழ்க்கைச்சரிதம் |
| | *il* | fusil, gentil | துவக்கு, அன்பான |

| | | | | |
|---|---|---|---|---|
| | | *is* | puis | பிறகு |
| | | *it* | cuit | வேகவைத்த |
| | | *y* | whisky | விஸ்கி |
| | | *ye* | rallye | போட்டி |
| | | *ys* | pays | நாடு |
| **o** | **ஓ** | *aud* | chaud, crapaud | சூடான, நீர்த்தவளை |
| | | *aut* | saut, défaut | பாய்ச்சல், பிழை |
| | | *aux* | taux, chaux | வீதம், சுண்ணாம்பு |
| | | *eau* | gâteau, seau | கேக், வாளி |
| | | *os* | dos | முதுகு |
| | | *ot* | escargot | நத்தை |
| **on** | **ஓ(ன்)** | *aune* | jaune | மஞ்சள் |
| | | *one* | zone, cyclone | பேட்டை, புயல் |
| | | *omne* | automne | இலையுதிர் காலம் |
| | | *onne* | personne | ஆள் |
| **or** | **ஓர்** | *orc* | porc | பன்றி, பன்றியிறைச்சி |
| | | *ord* | accord | சம்மதம் |
| | | *ore* | inodore | வாசமில்லாத |
| | | *orps* | corps | உடம்பு |
| | | *ors* | hors | வெளியே |
| | | *ort* | port, mort | துறைமுகம், இறப்பு |
| **our** | **ஊர்** | *our* | cour, four | முற்றம், அடுப்பு |
| | | *ourd* | lourd | பாரமான |
| | | *ours* | cours | வகுப்பு |
| | | *ourt* | court | கட்டையான |
| **un** | **அ(ன்)** | *eun* | jeun (a) | உபவாசம், விரதம் |
| | | *um* | parfum | வாசனைத் திரவியம் |
| | | *unt* | emprunt | கடன் |
| | | *un* | aucun | ஒன்றுமில்லை |

# Les articles
## பெயர்ச் சுட்டுக்கள்

பெயர்ச்சுட்டுக்கள் பெயர்ச் சொற்களுக்கு முன்னால் இடவேண்டும். பெயர்ச்சொல்லின் பால், எண்ணிக்கைகளை இவை குறிக்கும். பெயர்ச்சுட்டுக்கள் மூவகைப்படும்.

1. L'article défini — நிலையான அல்லது தெரிந்த பெயர்ச்சுட்டு
2. L'article indéfini — நிலையற்ற அல்லது தெரியாத பெயர்ச்சுட்டு
3. L'article partitif — பகுதிப் பெயர்ச்சுட்டு.

### *L'article défini* நிலையான அல்லது தெரிந்த பெயர்ச்சுட்டு

சம்பாசனையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு, உயிருள்ளதை அல்லது ஒரு பொருளை அறிந்திருப்பதைக் குறிக்கப் பெயர்ச்சொல்லுடன் நிச்சயமான அல்லது தெரிந்த பெயர்ச்சுட்டு இடவேண்டும்.

ஆண்பால் ஒருமையில் le உம்
பெண்பால் ஒருமையில் la உம்
ஆண்பால், பெண்பால் பன்மையில் les உம் இடவேண்டும்.

Ex:

le frère சகோதரன்
La sœur சகோதரி
les parents பெற்றோர்

பெயர்சொல் உயிரெழுத்தில் அல்லது சத்தமில்லாத H இல் ஆரம்பிக்குமாயின் உச்சரிப்பு இனிமைக்காக le, la இற்கு பதிலாக L' இடவேண்டும்.

~~le enfant~~ l'enfant பிள்ளை
~~la adresse~~ l'adresse முகவரி
~~la huile~~ l'huile எண்ணெய்

பொதுப்பெயர்ச்சொல்லுடன் அல்லது ஏற்கனவே அறிந்த பெயர்ச் சொற்களுக்கு முன்னால் நிச்சயமான பெயர்ச்சுட்டு இடலாம்.

le soleil சூரியன்
la maison வீடு

சிறப்புப் பெயர்ச்சொற்களில் மனிதர்களின் பெயர்கள், நகரங்களைத்தவிர்ந்த மற்றைய சொற்களுக்கு பெயர்ச்சுட்டு இடலாம்.

La France பிரான்ஸ்
La tour Eiffeel ஈபிள் கோபுரம்

ஆனால் விலாசங்கள், பழமொழிகள் ஆகியவற்றிற்கு பெயர்ச்சுட்டு பயன்படுத்துவதில்லை.

Rue de Paris பரிஸ் வீதி
Oeil pour oeil, dent pour dent கண்ணுக்கு கண், பல்லுக்கு பல் (பழிக்கு பழி)

### *L'article indéfini* நிலையற்ற அல்லது தெரியாத பெயர்ச்சுட்டு

தெரிந்திராத அல்லது அறிந்திராத உயிருள்ளதுடன் அல்லது ஒரு பொருளுடன் இப் பெயர்ச்சுட்டு இடவேண்டும்.

ஆண்பால் ஒருமையில் un உம்
பெண்பால் ஒருமையில் une உம்

ஆண்பால், பெண்பால் பன்மையில் des உம் இடவேண்டும்.

Un livre ஒரு புத்தகம்
Des livres புத்தகங்கள்
Une maison ஒரு வீடு
Des maisons வீடுகள்

**சுருக்கம்**:.

| | SINGULIER ஒருமை | | PLURIEL பன்மை |
|---|---|---|---|
| | **Masculin** ஆண்பால் | **Féminin** பெண்பால் | **Masculin / Féminin** ஆண்பால் / பெண்பால் |
| ***Article défini*** | LE, L' | LA , L' | LES |
| ***Article indéfini*** | UN | UNE | DES |

Article défini à,de என்ற முன்னிடைச் சொல்லுடன் வரும்போது பின்வருமாறு மாறும்.

| | | | |
|---|---|---|---|
| à + le | ➲ au | de + le | ➲ du |
| à + l' | ➲ à l' | de + l' | ➲ de l' |
| à + la | ➲ à la | de + la | ➲ de la |
| à + les | ➲ aux | de + les | ➲ des |

# L'apostrophe
## உயிர்க்குறைக்குறி

L'arbre இதில் L இற்கு இருக்கும் குறியே L'apostrophe ஆகும். இருசொற்களை உச்சரிக்கும்போது இடையில் வரும் இடத்தை நீக்குவதற்காக இக்குறி a, e, i, ஐ பிரதியிடும்.

இக்குறியைப்பெறும் சொற்கள்

1) நிச்சயமான பெயர்ச்சுட்டு — le, la *ex*: l'adresse விலாசம்
2) பிரதிப்பெயர்ச்சொற்கள் — je, me, te, se , le, la, ce, que *ex*: j'aime, c'est
3) முன்னிடைச்சொற்கள் — de *ex*: d'où
4) வினையுரிச்சொற்கள் — ne *ex*: il n'a pas ce livre.
5) புணரிடைச்சொற்கள் — si, que, etc...

si உடன் il, ils வரும்போது மட்டுமே இக்குறி இடலாம்.
s'il vous plaît!
ஓசையற்ற h (H muet) - L'heure நேரம்
இவை ஒரு உயிர்எழுத்தில் தொடங்கும் சொற்களுக்கு முன்பாக வரும்போது மட்டுமே இக்குறியை எடுக்கும்.

Le or - l'or
Ce est - c'est
அல்லது சத்தமில்லாத h இல் தொடங்கும் ஒரு சொல்லுக்கு முன்னால்வரும் போதும் இக்குறி இடவேண்டும்.
~~Le hôtel~~ - l'hôtel விடுதி
~~La huile~~ - l'huile எண்ணெய்
~~Le homme~~ - l'homme மனிதன்

***ஓசையுள்ள h - H aspiré***

| | | | |
|---|---|---|---|
| La hache | கோடரி | La hausse | அதிகரிப்பு |
| La haie | வேலி | Le haut | மேலே, உயரம் |
| La haine | பகை, குரோதம், வெறுப்பு | La Havane | ஹவானா (கியூபா) |
| Haïr | வெறுத்தல் | La hernie | குடல்இறக்கம் |
| Haleter | இளைத்தல் | Le héros | கதாநாயகன் |
| Le Hameau | சிறியஊர் | Le hibou | ஆந்தை |
| La Halle | சந்தை நடாத்தப்படும் கட்டிடம் | Le hockey | ஹொக்கி விளையாட்டு |

| | | | |
|---|---|---|---|
| La hanche | இடுப்பு | Hisser | ஏற்றுதல், தாக்குதல் |
| Le hangar | கிட்டங்கி | Le homard | சிங்கஇறால் |
| Harasser | வருத்துதல், அலைக்கழித்தல் | La honte | வெட்கம், அவமானம் |
| Le harem | அந்தப்புரம், பெண்களின் வீடு | La housse | உறை(தலையணை, மெத்தை) |
| Le haricot | அவரை | La houille | நிலக்கரி |
| Le hasard | தற்செயல், அதிர்ஷ்டம் | La hutte | குடிசை, குடில் |

# Les Liaisons
## தொடர்புகள்

ஒருவசனத்தை இனிமையாக்குவதற்கு இணைப்பு உதவுகின்றது. பொதுவாக ஒருசொல் மெய்யெழுத்தில் முடியுமாயின் அவ்வெழுத்திற்கு உச்சரிப்பு (ஓசை) இல்லை. ஆனால் அடுத்துவரும் சொல் உயிரெழுத்தில் ஆரம்பிக்குமாயின் மெய்யெழுத்தையும், உயிரெழுத்தையும் சேர்த்துவாசிக்க வேண்டும்.

Vous~êtes contents. நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கின்றீர்கள்.
*(ஸ் என்ற ஒலி)*

**சிலமுறைகள்**

1) s உம் t உம் எப்பொழுதும் அடுத்தசொல்லின் உயிரெழுத்துடன் இணையும்.
   Les grands hommes.

2) P, b, g எளிதில் இணையாது.
3) ஆனால் சில மெய்யெழுத்துக்கள் இணையும் போது அவற்றின் ஓசைமாறும்.
   a) d உயிரெழுத்துடன் இணையும்போது t ஆகும்.
      Un grand homme ஒருபெரிய மனிதன்
   b) f இன் ஓசை v ஆக மாறும்.
      Neuf assiettes ஒன்பதுகோப்பைகள்
   c) g இன் ஒலி k ஆக மாறும்.
      Sang et eau இரத்தமும் நீரும்
   d) x ன் ஓசை z ஆக மாறும்.
      Dix arbres பத்துமரங்கள்

4) n உம் சிலவேளைகளில் இணைப்பை ஏற்படுத்தும்.
   Rien à vous donner.
   உங்களுக்குத் தருவதற்கு ஒன்றுமில்லை.

# L'article partitif
## பகுதிப்பெயர்ச்சுட்டு

பெயர்ச்சொற்களில் எண்ணக்கூடியவை, எண்ணமுடியாதவை என இருவகையுண்டு. எண்ணக்கூடிய பெயர்ச்சொற்களுக்கு article défini அல்லது article indéfini பயன்படுத்தலாம். ஆனால் எண்ணமுடியாதபெயர்ச்சொற்களுக்கு article partitif இடவேண்டும்.
*எண்ணமுடியாத பொருட்கள் சிலஉதாரணங்கள்...*
   Farine - மா, Sucre - சீனி, Thé - தேநீர், Riz - அரிசி, Tissu - துணி.....

எண்ணமுடியாத பொருட்களைப் பொதுவாகக் கூறும்போது article défini இடவேண்டும்.
   La farine மா   Le Thé   தேநீர் அல்லது தேயிலை
   Le sucre சீனி   Le Riz அரிசி

ஆனால் இவற்றின் ஒருபகுதியை அல்லது பங்கைக் குறிப்பிடும்போது இச்சொற்களுக்கு முன்னால் de இடவேண்டும்.

De la farine ஒரு பகுதிமா (கொஞ்ச மா)
Du sucre ஒரு பகுதி சீனி (கொஞ்ச சீனி)

<u>*Note:*</u> de + le = du
de + la = de la
de + l' = de l'
de + les = des

| | | |
|---|---|---|
| Le beurre | du beurre | பட்டர் |
| La viande | de la viande | இறைச்சி |
| Le miel | du miel | தேன் |
| La confiture | de la confiture | ஜாம் |
| Les épinards | des épinards | கீரை |
| La bière | de la bière | பியர் |
| L'eau | de l'eau | தண்ணீர் |
| L'huile | de l'huile | எண்ணெய் |
| L'argent | de l'argent | பணம் |
| Le sel | du sel | உப்பு |
| Le pain | du pain | பாண் |
| Le café | du café | கோப்பி |
| Le riz | du riz | அரிசி அல்லது சோறு |

| | |
|---|---|
| Il a de l'argent | அவன் பணம் வைத்திருக்கின்றான் (அவனிடம் பணம் உண்டு). |
| Vous buvez du café | நீங்கள் கோப்பி குடிக்கின்றீர்கள். |
| Est-ce que vous avez du café? | உங்களிடம் கோப்பி உண்டா? |
| Je prends du miel | நான் தேன் எடுக்கின்றேன். |
| Elle mange du pain | அவள் பாண் சாப்பிடுகின்றாள். |

*குறிப்பு* : எதிர்மறையில் எழுதும்போது article இல்லாமல் de மட்டுமே இடவேண்டும்.

| | |
|---|---|
| Tu bois de la bière. | நீ பியர் குடிக்கின்றாய். |
| Tu ne bois pas de bière. | நீ பியர் குடிப்பதில்லை. |
| Nous mangeons du riz. | நாங்கள் சோறு சாப்பிடுகின்றோம். |
| Nous ne mangeons pas de riz. | நாங்கள் சோறு சாப்பிடுவதில்லை. |
| Il prend du sucre. | அவன் சீனி (ஒருபகுதி) எடுக்கின்றான். |

எண்ணமுடியாத பொருட்களுக்கு article partitif இற்குப் பதிலாக article défini இட்டால் முழு அல்லது முற்றாக என்று கருத்துப்படும்.

| | |
|---|---|
| Je mange le riz (qui reste). | நான் முழுச்சோற்றையும் சாப்பிடுகின்றேன். (மீதமிருக்கும்) |
| Il prend le sucre (tout le sucre). | அவன் முழுச்சீனியையும் எடுக்கின்றான். |

எண்ணமுடியாத பொருட்களைப் பின்வரும் அளவுக்கணியங்களால் அளக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| Le mètre | மீற்றர் | Le verre | கிளாஸ் |
| Le litre | லீற்றர் | L'assiette | கோப்பை |
| Le gramme | கிராம் | La goutte | துளி |
| Le kilo | கிலோ | La poignée | (கை)பிடி, சிறங்கை |
| Le morceau | துண்டு, கட்டி | La boîte | பெட்டி (பக்கெற்) |
| La tranche | சீவல் | La bouteille | போத்தல் |
| La part | பங்கு, பகுதி | La carafe | குடுவை, ஜாடி |
| La cuillère | கரண்டி | Le pot | ஜாடி |

*குறிப்பு* : இவற்றுடன் பெயர்ச்சொற்கள் வரின் ஒருபோதும் பெயர்ச்சுட்டு இடக்கூடாது. இதில் de இருசொற்களை இணைக்கப் பயன்படுகின்றது.

| | |
|---|---|
| Un mètre de tissu | ஒரு மீற்றர் துணி |
| Un litre d'huile | ஒரு லீற்றர் எண்ணெய் |
| Cinq cents grammes de farine. | 500 கிராம் மா |
| Un kilo de riz | ஒரு கிலோ அரிசி |
| Une goutte d'eau | ஒரு துளி நீர் |
| Une bouteille de bière. | ஒருபோத்தல் பியர் |
| Un verre d'eau | ஒரு கிளாஸ் தண்ணீர் |

# Les pronoms
**பிரதிப்பெயர்ச்சொற்கள்**

பெயர்ச்சொற்களைப் பிரதியிட இவை பயன்படும். பிரதிப்பெயர்ச்சொற்கள் எழுவாயாக, செயப்படுபொருளாகத் தொழிற்படும். எழுவாயாகத் தொழிற்படும்போது பின்வரும் வடிவை எடுக்கும்.

| | |
|---|---|
| Je | நான் |
| Tu | நீ |
| Il | அவன் |
| Elle | அவள் |
| Nous | நாங்கள் |
| Vous | நீங்கள் |
| Ils | அவர்கள் |
| Elles | அவர்கள் (பெண்கள்) |

On நாம், நாங்கள் என்று அர்த்தப்படும்.

**வசனம் அமைக்கும் முறை**

| | | |
|---|---|---|
| அவன் | ஒரு பட்டம் | விடுகின்றான். |
| எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
| *le Sujet* | *l'Objet* | *le Verbe* |
| **S** | **O** | **V** |

தமிழில் ஒரு வசனம் எழுவாய், செயப்படுபொருள், பயனிலை (SOV) என்ற வடிவில் எழுதுவோம். ஆனால் பிரஞ்சில் ஆங்கில வசனம் மாதிரியே SVO என்றவடிவில் எழுத வேண்டும்.

## *Le verbe*
**வினைச்சொல்**

ஒரு வினைச்சொல் எப்போதும் உருமாறாத வடிவிலே இருக்கும். இவ்வுருமாறாத வடிவத்தை l'infinitif என்றும் உருமாற்றத்தை la conjugaison என்றும் அழைக்கப்படும்.

| | | |
|---|---|---|
| உ+ம் | Avoir | வைத்திருத்தல் |
| | Venir | வருதல் |
| | Etre | இருத்தல் |

# Verbes auxiliaires
## உதவி வினைச்சொற்கள்

### *Avoir* வைத்திருத்தல்

| | | |
|---|---|---|
| J' | ai | நான் வைத்திருக்கின்றேன் அல்லது என்னிடம் உண்டு. |
| Tu | as | நீ வைத்திருக்கின்றாய். |
| Il | a | அவன் வைத்திருக்கின்றான். |
| Elle | a | அவள் வைத்திருக்கின்றாள். |
| Nous | avons | நாங்கள் வைத்திருக்கின்றோம். |
| Vous | avez | நீங்கள் வைத்திருக்கின்றீர்கள். |
| Ils | ont | அவர்கள் வைத்திருக்கின்றார்கள். |
| Elles | ont | அவர்கள் (பெண்கள்) வைத்திருக்கின்றார்கள். |

உ+ம்:

| | |
|---|---|
| J'ai un timbre. | நான் ஒரு முத்திரை வைத்திருக்கின்றேன். |
| Il a une voiture. | அவன் ஒரு கார் வைத்திருக்கின்றான். |
| Vous avez des livres. | நீங்கள் புத்தகங்கள் வைத்திருக்கின்றீர்கள். |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Un | ஒன்று | Trois | மூன்று | Cinq | ஐந்து | Sept | ஏழு | Neuf | ஒன்பது |
| Deux | இரண்டு | Quatre | நான்கு | Six | ஆறு | Huit | எட்டு | Dix | பத்து |

பெயர்ச்சொற்களை இலக்கங்களுடன் எழுதலாம். ஆனால் எண்ணிக்கையிடும்போது பெயர்ச்சுட்டு இடக்கூடாது.

| | |
|---|---|
| Ils ont cinq cahiers. | அவர்கள் ஐந்து கொப்பிகள் வைத்திருக்கின்றார்கள். |
| Elle a dix francs. | அவள் பத்து பிராங்குகள் வைத்திருக்கிறாள். |
| Tu as deux montres. | நீ இரண்டு மணிக்கூடுகள் வைத்திருக்கிறாய். |

*குடும்ப அங்கத்தவர்களைக் கூற Avoir பயன்படுத்தப்படும்.*

| | |
|---|---|
| J'ai trois frères et deux sœurs. | எனக்கு மூன்று சகோதரர்களும், இரண்டு சகோதரிகளும் உண்டு. |
| Il a deux enfants. | அவனுக்கு இரண்டு பிள்ளைகள். |
| Elle a vingt-cinq ans. | அவளுக்கு 25 வயது. |

**சில உணர்ச்சிகளைத் தெரிவிக்க Avoir உதவும்.**

| | |
|---|---|
| J'ai faim | எனக்குப் பசி |
| J'ai froid | எனக்குக் குளிர் |
| J'ai peur | எனக்குப் பயம் |
| J'ai honte | எனக்கு வெட்கம் |
| J'ai soif | எனக்குத் தாகம் |
| J'ai sommeil | எனக்கு நித்திரைத் தூக்கமாகவுள்ளது |
| J'ai des soucis | எனக்குக் கவலை |
| J'ai mal | எனக்கு வலி (நோ) |
| J'ai raison | நான் (சொன்னது, செய்தது) சரி |
| J'ai tort | நான் (சொன்னது, செய்தது) பிழை |
| J'ai besoin | எனக்குத் தேவை |
| J'ai envie | எனக்கு விருப்பம். |
| Il a de la patience | அவனுக்குப் பொறுமை இருக்கிறது |
| Il a de la chance | அவனுக்கு அதிர்ஷ்டம் இருக்கிறது |
| Il a du courage | அவனுக்குத் துணிவு இருக்கிறது |
| J'ai le temps | எனக்கு நேரம் இருக்கின்றது |

**எதிர்மறையாக்கும் முறை**

*உடன்பாட்டு வாக்கியத்தை எதிர்மறையாக்க, பொதுவாக* Ne...............pas *இடவேண்டும். பயனிலையின் முன்னால்* Ne *வும் பின்னால்* Pas *வும் இடவேண்டும். எதிர்மறையாக்கும் போது தெரியாத, நிலையற்ற பெயர்ச்சுட்டுடன் அல்லது பகுதிப் பெயர்ச்சுட்டுடன் செயப்படுபொருள் இருப்பின் அவற்றிற்குப் பதிலாக* de *என்ற சொல் பிரதியிடப்படும்.*

1. Tu as une radio — *உன்னிடம் ஒரு வானொலிப் பெட்டி உண்டு.*
   Tu n'as pas de radio — *உன்னிடம் வானொலிப் பெட்டி இல்லை.*

2. Nous avons un sac — *எங்களிடம் ஒரு பை உண்டு.*
   Nous n'avons pas de sac — *எங்களிடம் பை இல்லை.*

3. J'ai des fruits — *என்னிடம் பழங்கள் உள்ளன.*
   Je n'ai pas de fruits — *என்னிடம் பழங்கள் இல்லை.*
   *மூன்றாவது வசனத்தில் எதிர்மறையில் செயற்படுபொருளை ஒருமையிலோ அல்லது பன்மையிலோ இடலாம்.*

4. Il a de l'argent — *அவன் பணம் வைத்திருக்கின்றான்.*
   Il n'a pas d'argent — *அவனிடம் பணமில்லை*

5. Vous avez de la farine — *உங்களிடம் மா உண்டு*
   Vous n'avez pas de farine — *உங்களிடம் மா இல்லை*

*செயப்படுபொருளுடன் எண்ணிக்கை வரும் போது எதிர்மறையில்* de *இடவேண்டும்.*

Elle a deux valises — *அவள் இரண்டு சூட்கேசுகள் வைத்திருக்கின்றாள்*
Elle n'a pas de valises. — *அவளிடம் சூட்கேஸ்கள் இல்லை.*

*ஆனால், கீழேயுள்ள வடிவில் வரும்போது எதிர்மறையிலும் அதே எண்ணிக்கையை இடலாம்.*
Elle n'a pas deux valises, mais elle a trois valises.
*அவள் இரண்டு சூட்கேசுகள் வைத்திருக்கவில்லை ஆனால் மூன்று சூட்கேசுகள் வைத்திருக்கின்றாள்.*

**வினாவாக்கும் முறை**

| | | | |
|---|---|---|---|
| Qui | *யார்* | Quoi | *என்ன* |
| Que | *என்ன* | Qu'est - ce que | *என்ன* |
| Pourquoi | *ஏன், எதற்காக* | Comment | *எப்படி* |
| Combien | *எவ்வளவு, எத்தனை* | Quand | *எப்போது* |
| Où | *எங்கே* | | |

*இதில்* Quoi *ஐ பொதுவாக முன்னிடைச்சொல்லுடன் பயன்படுத்துவோம். வினாவாக்கும் சொல்லைப் பொதுவாக ஒரு வசனத்தில் முன்னாலிடுவோம்.*

*உ+ம்:*

Qu'est - ce que vous avez? — *நீங்கள் என்ன வைத்திருக்கின்றீர்கள்?*
Pourquoi as-tu deux stylos? — *ஏன் நீ இரண்டு பேனைகள் வைத்திருக்கின்றாய்?*

*ஒரு வசனத்தின் முன்னால்* Est-ce que *என்ற சொல் இடுவதன் மூலம் வினாவாக்கலாம்.*

*உ+ம்:*

Vous avez une voiture. — *நீங்கள் ஒரு கார் வைத்திருக்கின்றீர்கள்.*
Est-ce que vous avez une voiture? — *நீங்கள் ஒரு கார் வைத்திருக்கின்றீர்களா?*

*அல்லது பயனிலையாலும் வினாவாக்கலாம்.*

Avez - vous une voiture? — *நீங்கள் ஒரு கார் வைத்திருக்கின்றீர்களா?*

*இவ்விருமுறையின் போதும் விடை ஆம் ( Oui ) அல்லது இல்லை ( Non ) ஆகும்.*

Il a une télévision. — அவன் ஒரு தொலைக்காட்சிப் பெட்டி வைத்திருக்கின்றான்

A-t-il une télévision? — அவன் ஒரு தொலைக்காட்சிப் பெட்டி வைத்திருக்கின்றானா?

il, elle உடனுள்ள ஒரு வசனத்தை, பயனிலையால் கேள்வியாக்கும் போது, பயனிலை ஒரு உயிரெழுத்தில் முடிந்தால் உச்சரிப்பு இனிமையாக அமைவதற்காகப் பயனிலைக்கும், எழுவாய்க்கும் இடையில் T இடவேண்டும்.

## De உடைய

ஒரு உயிருள்ளதன் அல்லது பொருளின் உடமையைக் குறிப்பதற்கு de பயன்படுத்தப்படும்.

உ+ம்:

La voiture de Raja. — ராஜாவினுடைய கார்.

ஆனால் பிரதிப்பெயர்ச்சொல் வருமிடத்து Adjectif possessif பயன்படுத்துவோம்.

என்னுடைய கார்

| ~~La voiture de moi~~ | Ma voiture |
|---|---|
| *இது தவறான முறை* | *இது சரியான முறை* |

இரு பெயர்ச்சொற்களை இணைத்து de வரும்போது முதலில் உடமையையும் பின்னர் உடமையாளரையும் இடவேண்டும்.

| | |
|---|---|
| Le cheval de Rani | ராணியுடைய குதிரை. |
| La maison de mon oncle | எனது மாமாவின் வீடு. |
| La voix du professeur | ஆசிரியருடைய குரல். |
| Les livres de ton ami | உனது நண்பனுடைய புத்தகங்கள். |
| L'école des tamouls | தமிழர்களுடைய பாடசாலை. |
| Un de mes amis | எனது நண்பர்களில் ஒருவன். |
| Une de mes amies | எனது நண்பிகளில் ஒருத்தி. |

இவ்வடிவில் வினைச்சொல் Avoir உடன் எழுதும்போது Article défini இடலாம்.

உ+ம்:

| | |
|---|---|
| J'ai les livres de ton ami | நான் உனது நண்பனது புத்தகங்களை வைத்திருக்கிறேன். |
| Tu as la voiture de Ravi | நீ ரவியுடைய காரை வைத்திருக்கிறாய். |

## Etre இருத்தல்

| | | |
|---|---|---|
| Je | suis | நான் இருக்கிறேன் |
| Tu | es | நீ இருக்கிறாய் |
| Il | est | அவன் இருக்கின்றான் |
| Elle | est | அவள் இருக்கின்றாள் |
| Nous | sommes | நாங்கள் இருக்கின்றோம் |
| Vous | êtes | நீங்கள் இருக்கின்றீர்கள் |
| Ils | sont | அவர்கள் இருக்கின்றார்கள் |
| Elles | sont | அவர்கள் (பெண்கள்) இருக்கின்றார்கள் |

**Je suis grand** — நான் உயரமாக இருக்கிறேன்

Tu es fatigué — நீ களைப்பாக இருக்கிறாய்.
Elle est belle — அவள் அழகாக இருக்கிறாள்.

மேற்கூறிய மூன்று வசனங்களிலும் உயரமாக, (Grand) அழகாக, (Belle) களைப்பாக (Fatiqué) என்ற சொற்கள் எழுவாயின் நிலையைக் குறிக்கின்றன. இவ்வாறு எழுவாயின் நிலையைக் குறிக்கும் அல்லது பெயர்ச் சொல்லை விசேடிக்கும் சொல் பெயருரிச்சொல் ( Adjectif ) என்று அழைக்கப்படும்.

பெயருரிச்சொல் எழுவாயின் அல்லது பெயர்ச்சொல்லின் பால், எண்ணுக்கேற்ப மாறும்.

***L'adjectif*** **பெயருரிச் சொல்**

| ***Masculin*** **ஆண்பால்** | | ***Féminin*** **பெண்பால்** |
|---|---|---|
| Grand | பெரிய | Grande |
| Petit | சிறிய | Petite |
| Long | நீளமான | Longue |
| Large | அகலமான | Large |
| Haut | உயரமான | Haute |
| Malade | வருத்தமாக | Malade |

Le train est long — புகையிரதம் நீளமானது
La rue est longue — வீதி நீளமானது
Le crayon est petit — பென்சில் சிறியது
La maison est petite — வீடு சிறியது
Elle est malade — அவள் வருத்தமாக(உடல் நலக்குறைவு) இருக்கின்றாள்

வினைச்சொல் (être) உடன் ஒரு பெயர்ச்சொல்லையும் இடலாம்.
உ+ம்:
Je suis Kumar — நான் குமார்
Je suis un garçon — நான் ஒரு பையன்
Tu es un homme — நீ ஒரு மனிதன் (ஆண்)

வினைச்சொல் être உடன் தொழில்களையிடும் போது பெயர்ச்சுட்டு இடக்கூடாது.
உ+ம்:
Je suis étudiant — நான் ஒரு மாணவன்
Elle est étudiante — அவள் ஒரு மாணவி
Il n'est pas journaliste — அவர் பத்திரிகையாளர் அல்ல
Vous êtes docteur — நீங்கள் வைத்தியர்

வினைச்சொல் être உடன் பெயருரிச்சொற்களான நிறங்களையிடலாம். எழுவாயுடன் அல்லது பெயர்ச் சொற்களுடன் நிறங்கள் இடும்போது அவற்றின் பாலின் தன்மைக்கேற்ப மாறும்.

| ***Masculin*** | ***Féminin*** |
|---|---|
| Rouge | Rouge |
| Jaune | Jaune |
| Bleu | Bleue |
| Vert | Verte |
| Noir | Noire |
| Blanc | Blanche |

*குறிப்பு: நிறங்கள் அட்டவணையைப் பார்க்கவும்.*

பொதுவாகப் பெயர்ச் சொற்களின் பின்னே நிறம் இடவேண்டும்.

la rose rouge — சிவப்பு றோஜா
le ciel bleu — நீல வானம்
la rivière jaune — மஞ்சல் ஆறு
le chat noir — கறுப்புப் பூனை
la maison blanche — வெள்ளை மாளிகை

*வசனமாக எழுதுவதாயின்,*

| | |
|---|---|
| Le chat est noir | பூனை கறுப்பு நிறம். |
| Le ciel est bleu | வானம் நீலமாக இருக்கின்றது |
| Les roses sont rouges | றோஜாப் பூக்கள் சிவப்பு நிறமாகவுள்ளன |

### *La préposition* முன்னிடைச்சொல்

ஒரு பொருள் அல்லது உயிருள்ளவைகளின் இருப்பு (இருக்கின்ற) நிலையைக் குறிப்பதற்கு *être* உடன் முன்னிடைச்சொற்களைப் பாவிக்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| à | இல், க்கு | sur | மேல் |
| avec | உடன் | sous | கீழ் |
| sans | இல்லாமல் | chez | வீட்டில், வீட்டிற்கு |
| devant | முன்னால் | dans | உள்ளே |
| derrière | பின்னால் | dehors | வெளியே |

| | |
|---|---|
| Il est ***à*** Paris | அவன் பரிசில் இருக்கின்றான். |
| Tu es ***devant*** la gare | நீ புகையிரத நிலையத்திற்கு முன்னால் இருக்கிறாய் |
| Vous êtes ***dans*** la classe | நீங்கள் வகுப்பறையில் இருக்கின்றீர்கள் |
| Nous sommes ***chez*** Lingam | நாங்கள் லிங்கம் வீட்டில் நிற்கிறோம். |
| Le chat est ***sous*** le lit | பூனை கட்டிலுக்கு கீழே இருக்கின்றது |
| Je suis ***avec*** mon amie | நான் எனது நண்பியுடன் இருக்கின்றேன். |

முன்னிடைச்சொற்களுடன், பிரதிப்பெயர்ச்சொற்களை பின்வரும் வடிவத்தில் உபயோகிக்க வேண்டும்.

### *Le pronom tonique ou le pronom après la préposition*
**முன்னிடைச்சொல்லிற்கு பின்னால் பிரதிப்பெயர்ச்சொல்லின் வடிவம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Je | - | moi | Nous | - | nous |
| Tu | - | toi | Vous | - | vous |
| Il | - | lui | Ils | - | eux |
| Elle | - | elle | Elles | - | elles |

| | |
|---|---|
| Je suis avec ***toi*** | நான் உன்னுடன் இருக்கிறேன். |
| Elle est chez ***nous*** | அவள் எங்கள் வீட்டில் இருக்கின்றாள். |
| Balan est chez ***moi*** | பாலன் என்னுடைய வீட்டில் இருக்கிறார் |

Chez உடன் தொழில்களை இடும்போது, தொழில் செய்யும் இடத்தைக் குறிக்கும்.

| | |
|---|---|
| Je suis chez le coiffeur | நான் சிகை அலங்கார நிலையத்தில் உள்ளேன். |
| Il n'est pas chez le docteur | அவர் வைத்தியரின் அலுவலகத்தில் இல்லை. |

*மேலும் சில வசனங்கள்...*

| | |
|---|---|
| Nous sommes pour la paix | நாங்கள் சமாதானத்தை ஆதரிக்கின்றோம். |
| Qui êtes - vous? | யார் நீங்கள்? |
| Où êtes - vous? | நீங்கள் எங்கே? |
| Qui est dans la maison? | யார் வீட்டுக்குள்ளே இருப்பது? |
| Il est au magasin | அவன் கடையில் உள்ளான். |
| Elle est aux Pays - Bas | அவள் ஒல்லாந்தில் உள்ளாள். |

இதில் **à** உடன் **le** வருவதால் **au** என மாற்றமடைகின்றது. இவ்வாறு **à** உடன் **les** வருமாயின் **aux** என மாற்றமடையும்.

à < + le = au
+ les = aux

# Nombres

| | | | | |
|---|---|---|---|---|
| 1 Un | 21 Vingt et un | 41 Quarante et un | 61 Soixante et un | 81 Quatre- vingt un |
| 2 Deux | 22 Vingt -deux | 42 Quarante- deux | 62 Soixante- deux | 82 Quatre- vingt - deux |
| 3 Trois | 23 Vingt -trois | 43 Quarante-trois | 63 Soixante- trois | 83 Quatre- vingt - trois |
| 4 Quatre | 24 Vingt -quatre | 44 Quarante -quatre | 64 Soixante- quatre | 84 Quatre- vingt- quatre |
| 5 Cinq | 25 Vingt -cinq | 45 Quarante- cinq | 65 Soixante -cinq | 85 Quatre -vingt- cinq |
| 6 Six | 26 Vingt -six | 46 Quarante- six | 66 Soixante- six | 86 Quatre -vingt -six |
| 7 Sept | 27 Vingt -sept | 47 Quarante -sept | 67 Soixante- sept | 87 Quatre -vingt- sept |
| 8 Huit | 28 Vingt -huit | 48 Quarante- huit | 68 Soixante- huit | 88 Quatre- vingt- huit |
| 9 Neuf | 29 Vingt- neuf | 49 Quarante- neuf | 69 Soixante -neuf | 89 Quatre -vingt- neuf |
| 10 Dix | 30 Trente | 50 Cinquante | 70 Soixante- dix | 90 Quatre- vingt- dix |
| 11 Onze | 31 Trente et un | 51 Cinquante et un | 71 Soixante et onze | 91 Quatre- vingt -onze |
| 12 Douze | 32 Trente -deux | 52 Cinquante- deux | 72 Soixante -douze | 92 Quatre- vingt -douze |
| 13 Treize | 33 Trente -trois | 53 Cinquante- trois | 73 Soixante- treize | 93 Quatre -vingt -treize |
| 14 Quatorze | 34 Trente- quatre | 54 Cinquante- quatre | 74 Soixante -quatorze | 94 Quatre -vingt -quatorze |
| 15 Quinze | 35 Trente- cinq | 55 Cinquante- cinq | 75 Soixante- quinze | 95 Quatre -vingt -quinze |
| 16 Seize | 36 Trente- six | 56 Cinquante -six | 76 Soixante -seize | 96 Quatre- vingt- seize |
| 17 Dix- sept | 37 Trente -sept | 57 Cinquante -sept | 77 Soixante- dix -sept | 97 Quatre -vingt-dix -sept |
| 18 Dix- huit | 38 Trente- huit | 58 Cinquante- huit | 78 Soixante- dix- huit | 98 Quatre- vingt-dix- huit |
| 19 Dix -neuf | 39 Trente- neuf | 59 Cinquante- neuf | 79 Soixante- dix- neuf | 99 Quatre -vingt-dix- neuf |
| 20 Vingt | 40 Quarante | 60 Soixante | 80 Quatre-vingts | 100 Cent |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 200 | Deux cents | 700 | Sept cents | 100 000 | Cent mille |
| 300 | Trois cents | 800 | Huit cents | 1 000 000 | Un million |
| 400 | Quatre cents | 900 | Neuf cents | 10 000 000 | Dix millions |
| 500 | Cinq cents | 1000 | Mille | 100 000 000 | Cent millions |
| 600 | Six cents | 10 000 | Dix mille | 1 000 000 000 | Un milliard . |

# Aller போதல், செல்லுதல்

| | | |
|---|---|---|
| Je | vais | நான் போகிறேன் |
| Tu | vas | நீ போகிறாய் |
| Il | va | அவன் போகிறான் |
| Elle | va | அவள் போகிறாள் |
| Nous | allons | நாங்கள் போகிறோம் |
| Vous | allez | நீங்கள் போகிறீர்கள் |
| Ils | vont | அவர்கள் போகிறார்கள் |
| Elles | vont | அவர்கள் (பெண்கள்) போகிறார்கள் |

ஒரு இடத்திற்கு செல்வதைக்குறிக்க Aller உடன் பொதுவாக **à** ஐ சேர்ப்போம். இதில் à என்பது **க்கு** என்ற அர்த்தத்தைப்பெறும்.

| | |
|---|---|
| Je vais ***à*** la plage | நான் கடற்கரைக்குப் போகிறேன். |
| Tu vas ***à*** l'école | நீ பாடசாலைக்குப் போகிறாய். |
| Raja va ( ***~~à le~~*** ) ***au*** marché | ராஜா சந்தைக்குப் போகிறான். |
| Rani va ( ***~~à les~~*** ) ***aux*** magasins | ராணி கடைகளுக்குப் போகிறாள். |
| Je vais ***au*** travail. | நான் வேலைக்குப் போகிறேன் |

Aller உடன் வேறு முன்னிடைச்சொற்களையும் பயன்படுத்தலாம்.

| | |
|---|---|
| Je vais ***avec*** siva. | நான் சிவாவுடன் போகிறேன். |
| Il va ***devant*** toi. | அவன் உனக்கு முன்னால் போகிறான். |
| Il ne va pas ***dans*** le parc. | அவன் பூங்காவிற்குள் செல்வதில்லை. |
| Je vais ***chez*** moi. | நான் எனது வீட்டிற்குப் போகிறேன். |
| Tu ne vas pas ***chez*** Raja | நீ ராஜா வீட்டிற்குப் போவதில்லை. |

நாடுகளுக்கு பால் உண்டு. E இல் முடியும் நாடுகள் யாவும் பெண்பாலாகும். விதிவிலக்குகள் உண்டு. Le Mexique, (மெக்ஸிக்கோ) Le Cambodge (கம்போடியா) போன்றவையாகும்.

| | |
|---|---|
| Le Srilanka | இலங்கை |
| L'Inde | இந்தியா |
| La France | பிரான்சு |
| L'Angleterre | இங்கிலாந்து |
| L'Australie | அவுஸ்திரேலியா |
| L'Allemagne | ஜேர்மனி |
| La Suisse | சுவிஸ்லாந்து |
| Le Canada | கனடா |
| La Hollande ou Les Pays - Bas | ஒல்லாந்து |

| | |
|---|---|
| Je vais ( ***~~à le~~*** ) ***au*** Srilanka | நான் இலங்கைக்குப் போகிறேன். |
| Je vais ( ***~~à les~~*** ) ***aux*** Pays-Bas | நான் ஒல்லாந்துக்குப் போகிறேன். |

பெண்பால் நாடுகள் எழுதும்போது à la என்றுவருமாயின், en என மாறும். அவ்வாறே உயிரெழுத்தில் தொடங்கும் ஆண்பால் நாடுகளுக்கும் en என மாறும்.

| | |
|---|---|
| Je vais ( ***~~à la~~*** ) ***en*** France. | நான் பிரான்சுக்குப் போகிறேன். |
| Je vais ( ***~~à l'~~*** ) ***en*** Inde. | நான் இந்தியாவுக்குப் போகிறேன். |
| Je vais ( ***~~à l'~~*** ) ***en*** Irak. | நான் ஈராக் போகிறேன். |

***குறிப்பு:***
நகரங்களின் பெயர்கள் எழுதும் போது பெயர்ச்சுட்டு இடக்கூடாது.

| | |
|---|---|
| Où vas - tu? | நீ எங்கே போகிறாய்? |
| Je vais à six heures. | நான் ஆறு மணிக்குப் போகிறேன். |
| Avec qui allez-vous? | நீங்கள் யாருடன் போகின்றீர்கள்? |
| Je vais à cheval. | நான் குதிரையில் போகிறேன். |
| Je vais à pied | நான் நடந்து போகிறேன். |
| Je vais en train. | நான் ரயிலில் போகிறேன். |
| Je vais à Paris en voiture | நான் பரிசுக்கு காரில் போகிறேன். |

***(போவது இயந்திரத்திலாயின் en பாவிக்க வேண்டும்.)***

# Langage à propos des enfants
## மழலைச்சொற்கள்

Le gosse - குழந்தை, *சிறுவன், சிறுமி*
Le môme - குழந்தை
Le bébé - குழந்தை
Le gars - பையன்
Le gamin - *சிறுவன்*
La gamine - *சிறுமி*
La nana - இளம்பெண்
Le mec - காளை *(மரியாதையற்ற சொல் - நண்பர்களுடன் மட்டும்)*
Le bambin - *சிறுவன், சிறுமி*

Ma puce - (அன்புடன்) எனதன்பே
Mon vieux - என்னுடைய அப்பு *(familier)*
Ma vieille - என்னுடைய ஆச்சி
Mon poussin - என்னுடைய குஞ்சு
Ma poulette - என்னுடைய குஞ்சு
Mon bout de chou - எனதன்பு, எனது கொழுந்து குருத்து
Ma biche - என்னுடைய மான்குட்டி

La nourrice - குழந்தை வளர்க்கும் தாய்
Le nourricier - குழந்தை வளர்க்கும் தந்தை
Nourrir (v) - உணவூட்டல்
Nouveau - né - குழந்தை புதிதாகப்பிறத்தல் *(புதியபிறப்பு)*
Jumeau - இரட்டை ஆண்குழந்தை
Jumelle - இரட்டை பெண்குழந்தை
La crèche - குழந்தை காப்பகம்

Dodo - நித்திரை
Tou-tou - நாய் *(familier)*
Miam - miam - நல்ல சாப்பாடு
Dada - குதிரை
Toto - கார்
Lolo - தண்ணீர், பால்
Papi, Papy - பாட்டா
Mamie - பாட்டி, அம்மம்மா

Mettre au monde - உலகத்திற்கு ஒருகுழந்தையைக் கொடுத்தல் *(பிரசவித்தல்)*
Faire une fausse - couche - கருக்கலைதல், கரு அழிதல்
La grossesse - கர்ப்பம்
La grossesse nerveuse - போலிக்கர்ப்பம் *(உடலதோற்றத்தில் மட்டும் தாய்மையடைந்ததுபோல தோன்றுதல்)*
Les relevailles - குழந்தை பிறந்து நாற்பதாம்நாள் நடக்கும் சடங்கு
L'agalactie - பால்குறைவு *(பிரசவத்தில் தாய்ப்பால்)*
Faire une hémorragie - இரத்தப்போக்கு
Sevrer un enfant - குழந்தை பால் உணவைத்தவிர்த்து மற்றைய உணவுகளை உண்ணும்நிலை
La gestation - பிரசவக்காலம் *(தாய்மைக்காலம்)*
L'accouchement par césarienne- சத்திரசிகிச்சையின் மூலம்குழந்தையை பிரசவித்தல்
L'accouchement par forceps - கருவியினால் குழந்தையை பிரசவித்தல் *(வெளியேற்றுதல்)*
L'accouchement par voies naturelles - இயற்கைமுறையில் குழந்தையை பிரசவித்தல்
Le biberon - பால்போத்தல்
La poudre lactée - பால்மா
La tétine - பால் போத்தல்மூடி
La tétée - பிறந்த குழந்தைக்கு முதல்கொடுக்கும்பால்
Donner à téter - குழந்தைக்கு தாய்பாலூட்டல்

# Les mots concernant le travail
## வேலை சம்பந்தப்பட்ட சொற்கள்

| | |
|---|---|
| Travail à temps partiel | பகுதி நேர வேலை |
| Travail à plein temps | முழு நேர வேலை |
| Travail à mi-temps | அரை நேர வேலை |
| Travail par roulement | சுழற்சி வேலை |
| Travail en équipe | குழு வேலை |
| Travail temporaire | தற்காலிக நிரந்தரமற்றவேலை |
| Travail à l'essai | வேலைப்பயிற்சி |
| Reprise du travail | மீண்டும் வேலை ஆரம்பம் |
| Accident du travail | வேலை நேரத்தில் ஏற்படும் விபத்து |
| Accident du trajet | வேலைப் பயணத்தில் ஏற்படும் விபத்து |
| Certificat de reprise du travail | மீண்டும் வேலை ஆரம்பித்ததற்கான பத்திரம் |
| Durée de préavis | முன்னறிவிப்புக் காலம் |
| Rupture de contrat | ஒப்பந்த முறிவு |
| Fin de contrat à durée déterminée | நிச்சயிக்கப்பட்ட ஒப்பந்தகாலமுடிவு |
| Fin de mission d'intérim | இடைக்கால வேலைமுடிவு |
| Fin de période d'essai | முயற்சிக் காலமுடிவு |
| Licencier | வேலையிலிருந்து நீக்குதல் |
| Fermeture définitive de l'établissement | நிரந்தர மூடுகையின் விளைவாக வேலைநீக்கம் |
| Licenciement pour faute grave | பாரதூரமான தவறினால் வேலைநீக்கம் |
| Renouvellement de contrat | ஒப்பந்தப் புதுப்பிப்பு |
| Arrêt du travail | வேலைநிறுத்தம் |
| Avis d'arrêt de travail | வேலைநிறுத்த அறிவிப்பு |
| Licenciement économique | பொருளாதாரவேலைநீக்கம் |
| Retenue sur salaire | சம்பளத்தில் பிடிப்பு |
| Acompte sur salaire | சம்பள முற்பணம் |
| Prime de qualification | தகைமைக்கான உதவிப்பணம் |
| Prime de transport | போக்குவரத்திற்கான உதவிப்பணம் |
| Prime de mariage | திருமணத்திற்கான உதவிப்பணம் |
| prime d'ancienneté | சேவைக் காலத்திற்கான உதவிப்பணம் |
| Allocation de chômage | வேலையற்றபோது பெறும் உதவிப்பணம் |
| Allocation familiale | குடும்ப உதவிப்பணம் |
| Travail de longue haleine | கவனம் எடுக்க வேண்டிய நீண்டவேலை |
| Travaux publics | பொது வேலை |
| Travail à son compte | சொந்தத் தொழில் |
| Travail salarié | சம்பள வேலை |
| Travail bénévole | தொண்டு |
| Travail saisonnier | பருவகால வேலை |
| Travail occasionnel | நிரந்தரமற்ற வேலை |
| Travail fatiguant | களைப்பையூட்டும் வேலை |
| Travail pénible | கடின வேலை |
| Travail de Romain | மிகக்கடினமான வேலை |
| Ouvrier qualifié | பட்டம்பெற்ற ஊழியர் |
| Ouvrier specialisé | சிறப்புத்தேர்ச்சி பெற்ற தொழிலாளி |

# Etudes
## கல்வி பற்றிய விபரம்

***Ecole maternelle*** **பாலர் பாடசாலை**

| | |
|---|---|
| petite section | முதற்பிரிவு |
| moyenne section | மத்திய பிரிவு |
| grande section | மேற்பிரிவு |

| | | |
|---|---|---|
| ***Ecole primaire*** | **ஆரம்பநிலைப் பாடசாலை** | |
| | C.P. cours préparatoire | தயார் படுத்தும் வகுப்பு |
| | C.E. 1 cours élémentaire première année | ஆரம்ப நிலை முதலாம்ஆண்டு |
| | C.E. 2 cours élémentaire deuxième année | ஆரம்ப நிலை இரண்டாம்ஆண்டு |
| | CM 1 cours moyen première année | இடைநிலை முதலாம்ஆண்டு |
| | CM 2 cours moyen deuxième année | இடைநிலை இரண்டாம் ஆண்டு |
| ***Collège*** | **கல்லூரி** | |
| | 6ème | 6ம் வகுப்பு |
| | 5ème | 5ம் வகுப்பு |
| | 4ème | 4ம் வகுப்பு |
| | 3ème | 3ம் வகுப்பு |
| | Brevet des collèges | கல்லூரிப் படிப்பிற்கான சான்றிதழ் |
| ***Lycée*** | **உயர்பாடசாலை** | |
| | seconde | இரண்டாம் வருடம் |
| | première | முதலாம் வருடம் |
| | terminale | இறுதி வருடம் |
| | Baccalauréat | உயர்நிலைப்பரீட்சை |
| ***Université*** | **பல்கலைக்கழகம்** | |
| | DEUG1 | பட்டப்படிப்பு முதலாம் ஆண்டு |
| | DEUG2 | பட்டப்படிப்பு இரண்டாம் ஆண்டு |
| | Licence | பல்கலைக்கழகப் பட்டம் |
| | Maîtrise | பல்கலைக்கழகச் சிறப்புநிலைபட்டப்படிப்பு |
| | D.E.A | ஆராய்ச்சிநிலைப்படிப்பு |
| | Doctorat | ஆராய்ச்சிநிலைப்படிப்பு |

# Venir **வருதல்**

| | | |
|---|---|---|
| Je | viens | நான் வருகிறேன். |
| Tu | viens | நீ வருகிறாய். |
| Il | vient | அவன் வருகிறான். |
| Elle | vient | அவள் வருகிறாள். |
| Nous | venons | நாங்கள் வருகிறோம். |
| Vous | venez | நீங்கள் வருகின்றீர்கள். |
| Ils | viennent | அவர்கள் வருகின்றார்கள். |
| Elles | viennent | அவர்கள்(பெண்கள்) வருகின்றார்கள். |

| | |
|---|---|
| Il ***vient*** aujourd'hui | அவன் இன்று வருகிறான். |
| Elle ne ***vient*** pas demain. | அவள் நாளை வரமாட்டாள். |
| Tu ***viens*** chez moi. | நீ எனது வீட்டிற்கு வருகிறாய். |
| Balan ***vient*** vers cinq heures. | பாலன் ஐந்து மணிபோல் வருகிறான். |
| Quand ***venez*** - vous? | நீங்கள் எப்போது வருகின்றீர்கள்? |
| Nous ***venons*** à Paris. | நாங்கள் பரிசுக்கு வருகின்றோம். |
| Ils ***viennent*** en bus. | அவர்கள் பஸ்ஸில் வருகின்றார்கள். |

ஒரு இடத்திலிருந்து என்பதற்கு De என்ற முன்னிடைச்சொல்லைப் பயன்படுத்துவோம்.

| | |
|---|---|
| Il vient ***de*** Kilinochchi. | அவன் கிளிநொச்சியிலிருந்து வருகின்றான். |
| Tu viens ***de*** l'école. | நீ பாடசாலையிலிருந்து வருகின்றாய் |
| Je viens ***du*** marché. | நான் சந்தையிலிருந்து வருகின்றேன். |

Nous venons *du* Srilanka. நாங்கள் இலங்கையிலிருந்து வருகின்றோம்.

பெண்பால் நாடுகளை De உடன் எழுதும் போது பெயர்ச்சுட்டு இடக்கூடாது. விதிவிலக்கு இந்தியா.

Elle vient *de* France. அவள் பிரான்சில் இருந்து வருகிறாள்.
Mani et Ravi viennent *d'*Italie மணியும், ரவியும் இத்தாலியில் இருந்து வருகின்றார்கள்
*Exception:*
Siva vient *de l'* Inde. சிவா இந்தியாவிலிருந்து வருகிறான்.

# Le Nom
## பெயர்ச்சொல்

பெயர்ச்சொல் உயிருள்ளவற்றை (மனிதர்கள், விலங்குகள்) பொருட்களைக்(பொருட்கள், கருத்துகள், எண்ணங்கள், குணங்கள், நடவடிக்கைகள்) குறிக்கும்.

C'est un garçon
C'est une fleur

இவ்விருவசனங்களில் garçon, fleur பெயர்ச்சொல்லாகும்.
பெயர்ச்சொல்லை பிரஞ்சில் le nom அல்லது le substantif என்றும் அழைப்பர்.

1) பெயர்ச்சொற்களை பொதுப்பெயர் (noms communs), சிறப்புப்பெயர் (noms propres) என இருவகையாகப் பிரிக்கலாம்.

***Nom commun*** *பொதுப்பெயர்*
உயிருள்ளவற்றை, பொருட்களை பொதுவாகக் கூறின் அச்சொல் பொதுப்பெயர் என அழைக்கப்படும்.
Un ami ஒரு நண்பர்
Un pays ஒரு நாடு

***Nom propre*** *சிறப்புப்பெயர்*
Ravi ரவி
France பிரான்சு

*குறிப்பு:* பொதுவாக சிறப்புப்பெயரின் முதலெழுத்து பெரியஎழுத்தில் எழுதவேண்டும். சிறப்புப்பெயர் சில வேளைகளில் பொதுப்பெயராகவும் தொழிற்படும்.
*உ+ம்* : Un judas - ஒரு துரோகி, Une Renault - ஒரு ரேனொல்ட் கார்

2) பெயர்ச்சொற்கள் Nom concret, Nom abstrait எனவும் பிரிக்கப்படும்.

***Nom concret*** *உருவப்பெயர்*
தொடக்கூடிய, பார்க்கக்கூடிய, கேட்கக்கூடிய, உணரக்கூடிய பொருட்களை இது குறிக்கும்.
Un livre - புத்தகம், Du parfum - வாசனைத்திரவியம்

***Nom abstrait*** *பண்புப்பெயர்*
இது எண்ணங்களை, குணங்களை, கருத்துக்களை, நடவடிக்கைகளைக் குறிக்கும்.
La beauté - அழகு, Le désir - விருப்பம்

3) பெயர்ச்சொற்களை கூட்டுப்பெயர் (Nom collectif) என்றும் வகைப்படுத்தலாம். ஒரு கூட்டத்தை, குழுவை ஒருமையில் குறிக்கும்.
Le peuple - மக்கள், La douzaine - டசின்

4) இவ்வாறே எண்ணக்கூடிய பொருட்கள் (Nom comptable ou Nombrable) அல்லது எண்ணமுடியாத பொருட்கள் (Nom non comptable) எனவும் பிரிக்கலாம்.

***Noms comptables*** *எண்ணக்கூடிய பொருட்கள்*
Une bouteille - போத்தல்
Une voiture - கார்
***Noms non comptables*** *எண்ணமுடியாத பொருட்கள்*
La fumée - புகை
L'encre - மை

பெயர்ச்சொற்களுக்கு பால் (ஆண், பெண்) எண் (ஒருமை, பன்மை) உண்டு.

## *Le Genre* பால்

பிரஞ்சுமொழியில் எல்லா பெயர்ச்சொற்களும் பாலுடையன. தமிழிலும், ஆங்கிலத்திலும் உயர்திணைக்கு மட்டுமே பால் இடப்படும். ஆனால் பிரஞ்சுமொழியில் அ..றிணைக்கும் பால் இடவேண்டும். ஆண்பால் ஒருமையாயின் le அல்லது un உம், பெண்பால் ஒருமையாயின் la அல்லது une உம் இடவேண்டும்.

Le lit - கட்டில்
Un frère - ஒரு சகோதரன்
La table - மேசை
Une soeur - ஒரு சகோதரி

**பெயர்ச்சொற்களின் பால் அறியும்முறை**

***ஆண்பால்***
*ஆண்களை அல்லதுஆண்விலங்குகளை குறிக்கும் பெயர்ச்சொற்கள்...*
Le frère - சகோதரர்
Le mari - கணவர்
Kumar - குமார்
Le chien - நாய்
Le coq - சேவல்
*ஆனால்*
La victime - பாதிக்கப்பட்டவர்

மாதம், நாட்கள், காலங்கள், திசைகள்...
Le mois du janvier - தை மாதம்
Le dimanche - ஞாயிறு
L'été - கோடை
Le sud - தெற்கு

உலோகங்கள், மொழிகள், மரங்கள், அளவுகள் நாணயங்கள், எழுத்துகள், இலக்கங்கள்...
Le fer - இரும்பு
Le tamoul - தமிழ்
Le cocotier - தென்னைமரம்
Le gramme - கிராம்
Le dollar - டொலர்
Le V - வீ எழுத்து
Le cinq - 5 இலக்கம்
*ஆனால்*
La roupie - ரூபாய்
La livre - இறாத்தல், பவுண்நாணயம்
La vigne - திராட்சைமரம்

மெய்யெழுத்தில் முடியும் பெயர்ச்சொற்கள் பொதுவாக ஆண்பாலாகும்...
Le médicament - மருந்து
Le fruit - பழம்

***பெண்பால்***
*பெண்களை அல்லது பெண்விலங்குகளை குறிக்கும் பெயர்ச்சொற்கள்...*
La soeur - சகோதரி
La reine - அரசி
La vache - பசு
La poule - பேட்டுக்கோழி

Le mannequin - அலங்காரப்பொம்மை

திருவிழாப்பெயர்கள்...
La Noël - நத்தார்
Les Pâques - பாஸ்குப்பெருநாள்

விஞ்ஞானங்களின் பெயர்கள்...
La chimie - இரசாயனம்
La médecine - வைத்தியம்
*ஆனால்*
Le droit - சட்டம்

e,é,on,ion இல் முடிவன பொதுவாக பெண்பாலாகும்...
La maison - வீடு
La religion - சமயம்
La télévision - தொலைக்காட்சிப்பெட்டி
பொதுவாக சத்தமில்லாத e இல் முடியும் சொற்கள்
La boîte - பெட்டி
La gare - புகையிரதநிலையம்

*ஆனால் age இல் முடிவன ஆண்பாலாகும்...*

Le voyage - பயணம்
Le mariage - திருமணம்

**குறிப்பு** : சிலபெயர்ச்சொற்கள் இருபாலையும் ஏற்கும், பால்மாறும்போது அச்சொல்லின் கருத்துமாறும்.

| | | | |
|---|---|---|---|
| Le livre | - புத்தகம் | La livre | - பவுண் நாணயம், இறாத்தல் |
| Le moule | - அச்சு (ஒருவடிவத்தைஉருவாக்க) | La moule | - மட்டி (ஒரு வகைச்சிப்பி) |
| Le mousse | - இளம் மாலுமி | La mousse | - பாசி |
| Le poêle | - சூட்டடுப்பு | La poêle | - பொரிக்கப்பயன்படுத்தப்படும் சட்டி |
| Le somme | - நித்திரை, சிறுதுயில் | La somme | - தொகை |
| Le tour | - சுற்று | La tour | - கோபுரம் |
| Le voile | - முக்காடு | La voile | - கப்பற்பாய் |
| Le manche | - கைபிடி | La manche | - உடுப்பின் கைப்பாகம், ஆங்கிலக்கால்வாய் |
| Le mode | - முறை | La mode | - நாகரீகம் |
| Le vase | - பூச்சாடி | La vase | - சேறு |
| Un aide | - உதவிசெய்பவர் | Une aide | - உதவி, பெண்உதவியாளர் |
| Le physique | - ஒருவரின் வெளித்தோற்றம் | La physique | - பௌதீகம் |
| Le solde | - நிலுவை, மீதி | La solde | - போர்வீரர்களின் கூலி |
| Le vapeur | - நீராவிப்படகு | La vapeur | - நீராவி, ஆவி |
| Le poste | - பதவி | La poste | - தபால் |
| Le mémoire | - குறிப்புப்புத்தகம் | La mémoire | - ஞாபகம் |

*இச்சொற்களின் உச்சரிப்பு ஒரேமாதிரியானவை,ஆனால் எழுதும்முறை வேறானது...*

| | | | |
|---|---|---|---|
| Le col | - கொலர் (உடுப்பின்) | Le cours | - ஓட்டம் |
| La colle | - பிசின், கம் | La cour | - முற்றம் |
| | | Le court | - மைதானம் |
| Le faîte | - உச்சி, முகடு | Le foie | - ஈரல் |
| La fête | - கொண்டாட்டம், திருவிழா | La foi | - விசுவாசம் |
| Le maire | - நகரசபை முதல்வர் | Le mal | - வலி |
| La mer | - கடல் | La malle | - கூடை |
| La mère | - தாய், அம்மா | | |
| Le pair | - நிகரானவன் | La paie | - சம்பளம் |
| Le père | - தந்தை, அப்பா | La paix | - சமாதானம் |
| La paire | - சோடி | | |
| Le poids | - நிறை | Le roux | - கபிலம் |
| Le pois | - கடலை | La roue | - சக்கரம் |
| Le sel | - உப்பு | Le sol | - நிலம் |
| La selle | - சீட் (சைக்கிள்) | La sole | - ஒருவகை மீன் |

**பால் மாற்றும்முறை**

1) Féminin = Masculin + e

*பொதுவாக ஆண்பால் சொல்லுடன் e சேர்ந்தால் பெண்பாலாகும்.*

| | | | |
|---|---|---|---|
| Ami - | Amie | Avocat - | Avocate |
| *நண்பன்* | *நண்பி* | *சட்டத்தரணி* | *சட்டத்தரணி (பெண்)* |
| Marchand - | Marchande | | |
| *ஆண்வியாபாரி* | *பெண்வியாபாரி* | | |

2) ஆனால் e இல் முடியும் ஆண்பால்சொல் பெண்பாலாக மாறும்போது ஒருமாற்றமும் இல்லை.

| | | | |
|---|---|---|---|
| Un élève - | Une élève | Un avare - | Une avare |
| *மாணவன்* | *மாணவி* | *உலோபி* | *உலோபி (பெண்)* |
| Un adulte - | Une adulte | Un malade - | Une malade |
| *வயதுவந்தோர், முதிர்ந்தவர்* | | *நோயாளி* | *நோயாளி (பெண்)* |

3) en, on இல் முடியும் பெயர்ச்சொற்கள் n ஐ இரட்டித்து e ஐ எடுக்கும்.
Un indien - Une indienne Un patron - Une patronne
இந்தியநாட்டைச் சேர்ந்தவர் முதலாளி (பெண்)

4) et, at, ot இல் முடியும் கீழ்வரும் பெயர்ச்சொற்கள் t ஐ இரட்டித்து e ஐ எடுக்கும்.
Un cadet - Une cadette Un sot - Une sotte
இளையவன் இளையவள் மடையன் மடைச்சி

5) P அல்லது F இல் முடியும் பெயர்ச்சொற்கள் பெண்பாலாவதற்கு ve ஐ எடுக்கும்.
Un loup - Une louve Un veuf - Une veuve
ஓநாய் (பெண்) தபுதாரன் விதவை

6) er இல் முடியும் ஆண்பாற்சொற்கள் பெண்பாலாவதற்கு ère ஐ எடுக்கும்.
Un caissier - Une caissière
ஆண்காசாளர் பெண்காசாளர்

7) eur இன் முடியும் சொற்கள் euse ஆல் பெண்பாலாக மாறும்.
Un plongeur - Une plongeuse Un danseur - Une danseuse
சுழியோடி பெண்சுழியோடி நடனக்காரன் நடனமாது

8) teur இல் முடிவன பெண்பாலாவதற்கு trice ஐ எடுக்கும்.
Un lecteur - Une lectrice Un acteur - Une actrice
வாசகன் வாசகி நடிகன் நடிகை
ஆனால்
Un chanteur - Une chanteuse Un menteur- Une menteuse
பாடகன் பாடகி பொய்சொல்பவன் - சொல்பவள்

9) சில சொற்கள் பெண்பாலாவதற்கு esse ஐ சேர்க்கும்.
Un âne - Une ânesse Un prince - Une princesse
கழுதை இளவரசன்

10) ஆனால் சிலசொற்களில் பெண்பால்வடிவம் வித்தியாசமானது.அதாவது ஒழுங்கற்றது.
Un amant - Une maîtresse Un héros - Une héroïne
காதலன் காதலி கதாநாயகன் கதாநாயகி
Un bélier - Une brebis Un neveu - Une nièce
கடாஆடு மறிஆடு மருமகன் மருமகள்
Un copain - Une copine Un roi - Une reine
நண்பன் நண்பி அரசன் அரசி
ஆனால் பெண்பாலுக்கும் சிலசொற்களை ஆண்பாலில் உள்ளவாறே பயன்படுத்தலாம்.
Écrivain - எழுத்தாளர் Enfant - பிள்ளை
Professeur - ஆசிரியர் Bébé - குழந்தை

## *Le nombre* எண்

எண் ஒருமை, பன்மை என இருவகைப்படும். ஒரு பொருளை, உயிருள்ளதை அல்லது கூட்டுப்பெயர்ச்சொல்லை ஒருமையிலும் ஒன்றுக்குமேற்பட்ட பொருட்களை, உயிருள்ளவற்றை அல்லது கூட்டுப் பெயர்ச்சொல்லை பன்மையிலும் கூறப்படும்.
உ+ம் எண்ணமுடியாத பொருட்களையும் பெருந்தொகையில் கூறும்போது பன்மையை உபயோகிக்கலாம்.
Les eaux - நீர்
Les épinards - கீரை

சிலபெயர்ச்சொற்களை ஒருமையில் மட்டுமே கூறலாம்.
- கலை, விஞ்ஞானப்பெயர் - La peinture, La géographie
ஓவியம் புவியியல்
- உலோகங்கள் - L'or, L'argent
தங்கம், வெள்ளி

- திசைகள் - Le nord, L'ouest
  வடக்கு மேற்கு
- குணம் அல்லது தரம் - La fatigue, La fragilité
  களைப்பு உடையக்கூடியதன்மை

இவ்வாறே சிலசொற்கள் பன்மையில் மட்டுமே உபயோகப்படுத்தப்படும்.

Archives - களஞ்சியம் (பழையபத்திரங்களை பாதுகாக்குமிடம்)
Environs - சூழல், சுற்றுப்புறம்
Fiançailles - நிச்சயதார்த்தம்
Funérailles - மரணச்சடங்கு
Gens - சனம், ஆட்கள்

1) பொதுவாக ஒருமைப்பெயர்ச்சொல்லுக்கு S சேர்ப்பதன் மூலம் பன்மையாக்கலாம். Un பன்மையாக்கும்போது ஒருமைப்பெயர்ச்சுட்டையும் பன்மையில் இடவேண்டும்.

Un livre - Des livres    Une fleur - Des fleurs
புத்தகம் புத்தகங்கள்    பூ பூக்கள்

2) S, X, Z இல் முடியும் சொற்கள் பன்மையிலும் அவ்வாறே எழுதப்படும்.

Un mois - des mois    Un nez - Des nez
மாதம் மாதங்கள்    மூக்கு மூக்குகள்
Un prix - Des prix    Une croix - Des croix
விலை விலைகள்    புள்ளடி, சிலுவை(கள்)

3) Eu இல் முடியும் சொற்கள் X சேர்த்து பன்மையாகும்.

Un cheveu - Des cheveux    Un feu - Des feux
தலைமயிர் தலைமயிர்கள்    நெருப்பு நெருப்புகள்
ஆனால் bleu, pneu என்பவை பன்மையாவதற்கு S ஐ எடுக்கும்.
Un pneu - Des pneus    Un bleu - Des bleus
டயர் டயர்கள்    நீலம் நீலங்கள்

4) au, eau இல் முடியும் சொற்களும் பன்மையாவதற்கு X ஐ எடுக்கும்.

Un tuyau - Des tuyaux    Un seau - Des seaux
குழாய் குழாய்கள்    வாளி வாளிகள்
ஆனால் landau பன்மையாவதற்கு S ஐ எடுக்கும்.
Un landau - Des landaus
குழந்தை வண்டில்

5) Al இல் முடியும் பெயர்ச்சொற்கள் பன்மையாவதற்கு aux ஆக மாறும்.

Un cheval - Des chevaux
குதிரை(கள்)
Un journal - Des journaux
புதினப்பத்திரிகை(கள்)
*ஆனால்*
Bal - நடனம், கூத்து
Festival - திருவிழா, பெருநாள்
Carnaval - களியாட்டவிழா
Chacal - நிலக்கரி
போன்றவை S ஐச் சேர்த்து பன்மையாக மாறும்.

6) வித்தியாசமானமுறையில் பன்மையாக மாறுபவை.

Un ciel - Des cieux வானம்
Un oeil - Des yeux கண்
Madame - Mesdames திருமதி
Monsieur - Messieurs திருவாளர்
Mademoiselle - Mesdemoiselles செல்வி

7) கூட்டுப்பெயர்ச்சொற்கள் பொதுவிதிக்கமைய பன்மையாக S ஐ எடுக்கும்.
Un portefeuille - Des portefeuilles பத்திரங்கள் வைக்கும்பை

8) பெயருரிச்சொல்லுடன் சேர்ந்த பெயர்ச்சொல்லை பன்மையாக மாற்றும்போது சொற்களும் பன்மையாகும்.
Un grand père - Des grands pères
பாட்டன் பாட்டன்கள்

9) சிலபெயர்ச்சொற்களின் எண்மாறும்போது அதன் கருத்தும்மாறும்.

| | | | |
|---|---|---|---|
| Un ciseau | - உளி | Des ciseaux | - கத்தரிக்கோல் |
| Une lunette | - தொலைநோக்கி | Des lunettes | - மூக்குக்கண்ணாடி |
| Une vacance | - வெறுமை, காலி (உத்தியோகம்) | Des vacances | - விடுமுறை |

**பெயர்ச்சொல்லின் தொழிற்பாடு...**

பெயர்ச்சொல் எழுவாயாக பொதுவாக ஒருவசனத்தின் ஆரம்பத்தில்வரும். ஆனால் வினாவடிவத்தில் பயனிலைக்குப்பின் எழுவாய் இடலாம். பெயர்ச்சொல் செயப்படுபொருளாக வரும்போது பயனிலையையடுத்து இடவேண்டும்.

# L'adjectif
## பெயர் உரிச்சொல் அல்லது பெயரடைச்சொல்

பெயர்ச்சொல் அல்லது பிரதிப்பெயர்ச்சொல்லின் பண்பு, இயல்பைப்பற்றி கூறுவது பெயர் உரிச்சொல்லாகும். பெயர்ச்சொல்லின் பால் எண்ணுக்கேற்ப மாறும். இதை பெயர்ச்சொல்லை விசேடிக்கும் சொல் என்றும் கூறுவர். பெயர் உரிச்சொல் பொதுவாக ஆண்பாலிலே இருக்கும்.

**பெண்பாலுக்கு மாற்றும்முறை**

a) பொதுவாக ஆண்பால் சொல்லுக்கு e சேர்ப்பதன் மூலம் பெண்பாலாக்கலாம்.

petit — petite சிறிய
seul — seule தனியான

é, i, u என்ற உயிர்எழுத்துக்களில் முடிவன அநேகமாக பெண்பாலாக மாறுவதற்கு e ஐ எடுக்கும்.

carré — carrée சதுரமான
poli — polie மரியாதையான

*விதிவிலக்காக (Exception)*

gu இல் முடியும் சொற்கள் பெண்பாலாக மாறுவதற்கு e இன் மேல் le tréma இடவேண்டும்.
aigu — aiguë கூர்ந்த

b) ஆண்பால் சொல் e என்ற எழுத்தில் முடிந்தால் பெண்பாலுக்கு மாற்றமில்லை.

large — large அகலமான
fragile — fragile உடையக்கூடிய

c) பின்வரும் எழுத்துக்களில் முடியும் சொற்கள் மெய்எழுத்தை இரட்டித்து e ஐ எடுக்கும்.

1) **l, el, ul, - lle, elle, ulle**
nul - nulle பூச்சியம்
naturel - naturelle இயற்கையான
pareil - pareille ஒத்த

2) **en, on - enne, onne**
ancien - ancienne பழைய
bon - **bonne** நல்ல

3) **et - ette**
muet - muette ஊமையான

*குறிப்பு* : சில பெயர் உரிச்சொற்கள் accent grave ஐ எடுக்கும்.
complet - complète பூரணமான
secret - secrète இரகசியமான
incomplet, indiscret, inquiet, replet

4) **s - sse**
ஆண்பால் s இல் முடிந்தால் பெண்பால் sse இல் முடியும்.
gros - grosse மொத்த, மொத்தமான
bas - basse பதிவான

5) **ot - otte**
sot - sotte மடைத்தனமான
விதிவிலக்காக dévot, idiot போன்ற சொற்கள் பெண்பாலாகுவதற்கு e ஐ எடுக்கும்.
idiot - idiote முட்டாள்தனமான

d) ஆண்பாற்சொற்களின் இறுதி மெய்எழுத்தை கீழ்காணும் முறைப்படிமாற்றி பெண்பாலாக்கலாம்.

1) **f - ve**
f இல் முடியும் ஆண்பாற் சொல் பெண்பாலில் ve ஆக மாறும்.

neuf - neuve புதிய
actif - active துடிப்பான, தொழிற்பாடான

2) **x - se**
x இல் முடியுமானால் பெண்பாலில் se ஐ எடுக்கும்.
heureux - heureuse சந்தோசமான
jaloux - jalouse பொறாமையான
விதிவிலக்காக சிலசொற்கள் sse அல்லது ce ஐ எடுக்கும்.
faux - fausse பிழையான
doux - douce மெதுவான

3) **c - che**
c இல் முடிவானால் che ஐ எடுக்கும்.
blanc - blanche வெள்ளையான
franc - franche வெளிப்படையான

ஆனால் sec - sèche காய்ந்த
அல்லது c - que
c உச்சரிக்கப்படும் சொற்கள் பெண்பாலாகுவதற்கு que ஐ எடுக்கும். விதிவிலக்கு sec
public - publique மக்களின்
turc - turque துருக்கிய

joli(e) - அழகான
vrai(e) - உண்மையான
gai(e) - சந்தோஷமான
connu(e) - தெரிந்த, அறியப்பட்ட
déçu(e) - ஏமாற்றப்பட்ட
marié(e) - விவாகமான, திருமணமான
divorcé(e) - விவாகரத்தான
fatigué(e) - களைப்பான
grippé(e) - தடிமனான
couché(e) - படுத்த, சரித்துவைத்த

passionné(e) - ஆவலான
poli(e) - மரியாதையான
brun(e) - கறுப்பான (தலைமயிர்)
voisin(e) - அயல்
lointain(e) - தூரத்து
prochain(e) - அடுத்த, வருகின்ற
plein(e) - நிறைந்த
bon(ne) - நல்ல
mignon(ne) - அழகான
ancien(ne) - பழைய

| | |
|---|---|
| moyen(ne) | - நடுத்தரமான, மத்திம |
| dur(e) | - கடுமையான |
| clair(e) | - தெளிவான |
| noir(e) | - கறுப்பான |
| meilleur(e) | - சிறந்த |
| seul(e) | - தனியாக |
| mauvais(e) | - கூடாத, கெட்ட |
| assis(e) | - அமர்ந்திருக்கிற |
| fort(e) | - பலமான |
| grand(e) | - பெரிய, உயரமான |
| blond(e) | - வெள்ளையான (தலைமயிர்) |
| chaud(e) | - சூடான |
| froid(e) | - குளிரான |
| bavard(e) | - அலட்டுகிற |
| laid(e) | - அழகற்ற, அசிங்கமான |
| profond(e) | - ஆழமான |
| rond(e) | - வட்டமான |
| lourd(e) | - பாரமான |
| petit(e) | - சிறிய |
| plat(e) | - தட்டையான |
| haut(e) | - உயரமான |
| étroit(e) | - ஒடுக்கமான |
| élégant(e) | - ஆடம்பரமான |
| content(e) | - சந்தோஷமான |
| parfait(e) | - பூரணமான |
| excellent(e) | - மிகச்சிறந்த |
| principal(e) | - முக்கிய |
| original(e) | - ஆதி, ஆரம்ப |
| spécial(e) | - விசேட, முக்கிய |
| amical(e) | - நட்பான |
| sentimental(e) | - உணர்ச்சிவசப்பட்ட, உணர்ச்சியுடைய |
| national(e) | - தேசிய |
| bas(se) | - பதிவான |
| gros(se) | - மொத்தமான |
| épais(se) | - மொத்தமான, அடர்த்தியான |
| fin(e) | - மெல்லிய |
| mensuel(le) | - மாதாந்த |
| cruel(le) | - கொடூர |
| annuel(le) | - வருடாந்த |
| naturel(le) | - இயற்கையான |
| habituel(le) | - வழக்கமான |
| réel(le) | - உண்மையான |
| rapide | - விரைவான |
| jaune | - மஞ்சளான |
| jeune | - இளமையான |
| mince | - மெல்லிய, மெலிந்த |
| célibataire | - பிரமச்சாரி, கன்னி |
| libre | - ஓய்வான |
| large | - அகலமான |
| commode | - வசதியான |
| pratique | - கையாளத்தக்க, வசதியான |
| confortable | - சௌகரியமான |
| vide | - வெறுமையான |
| triste | - கவலையான |
| sale | - அழுக்கான |
| propre | - சுத்தமான |
| simple | - சாதாரணமான |
| utile | - உபயோகமான |
| drôle | - நகைச்சுவையான |
| superbe | - சிறந்த |
| autre | - வேறு |
| célèbre | - பிரபலமான |
| fragile | - உடையக்கூடிய |
| magnifique | - அழகான |
| extraordinaire | - அதிசிறந்த |
| fidèle | - விசுவாசமான |
| honnête | - நேர்மையான |
| sympathique | - அன்பான |
| agréable | - விரும்பத்தக்க |
| facile | - இலகுவான |
| riche | - பணக்கார, செல்வந்த |
| optimiste | - எதிலும் நன்மையை நினைக்கிற |
| pessimiste | - எதிலும் தீமையை நினைக்கிற |
| possible | - இயலுமான |
| malade | - வருத்தமான |
| fatigué(e) | - களைப்பான |
| frisé(e) | - சுருண்ட |
| bouclé(e) | - சுருள்சுருளாக |
| raide | - விறைப்பான |
| gratuit(e) | - இலவசமாக |
| comique | - நகைச்சுவையாக |
| coléreux | - கோபமாக |
| nu (e) | - பிறந்தமேனியாக, ஒன்றுமில்லாத |
| aucun(e) | - ஒன்றுமில்லாத |
| certain(e) | - சில, நிச்சயமான |
| chaque | - ஒவ்வொரு |
| demi(e) | - அரைவாசி, பாதி |

| | | |
|---|---|---|
| léger | - légère | - இலேசான (பாரம்), ஐதான |
| entier | - entière | - முற்றான |
| dernier | - dernière | - கடைசியான |
| régulier | - régulière | - வழமையான, ஒழுங்கான |
| cher | - chère | - விலையான |
| suivant | - suivante | - தொடர்ந்த |
| discret | - discrète | - மறைமுகமாக |
| complet | - complète | - பூரணமான |

| | | |
|---|---|---|
| inquiet | - inquiète | - கவலையான (பயம்கலந்த) |
| curieux | - curieuse | - ஆவலுடைய |
| amoureux | - amoureuse | - விரும்பிய |
| heureux | - heureuse | - சந்தோஷமான |
| pluvieux | - pluvieuse | - மழையான |
| affreux | - affreuse | - பயங்கரமான |
| furieux | - furieuse | - கோபமான |
| dangereux | - dangereuse | - ஆபத்தான |
| courageux | - courageuse | - உற்சாகமான |
| peureux | - peureuse | - பயமான |
| sérieux | - sérieuse | - கவனிப்பான |
| ennuyeux | - ennuyeuse | - தொந்தரவான |
| mystérieux | - mystérieuse | - அதிசயமான |
| merveilleux | - merveilleuse | - சிறந்த |
| délicieux | - délicieuse | - சுவையான |
| joyeux | - joyeuse | - சந்தோஷமான |
| jaloux | - jalouse | - பொறாமையான |
| blanc | - blanche | - வெண்மையான |
| frais | - fraîche | - குளிர்ச்சியான |
| franc | - franche | - வெளிப்படையான |
| actif | - active | - செயற்பாடான |
| sportif | - sportive | - உடற்பயிற்சி செய்கிற |
| vif | - vive | - உயிரோட்டமான |
| agressif | - agressive | - குழப்பத்தை உண்டுபண்ணுகின்ற |
| neuf | - neuve | - புதிய |
| bref | - brève | - சுருக்கமான |
| doux | - douce | - மென்மையான |
| faux | - fausse | - பிழையான |
| muet | - muette | - ஊமையான |
| gentil | - gentille | - அன்பான |
| menteur | - menteuse | - பொய் சொல்லுகின்ற |
| public | - publique | - பொதுஜன |
| favori | - favorite | - இஷ்டமாக, பிரியமாக |
| fou | - folle | - மடைத்தனமாக |
| long | - longue | - நீளமான |
| beau | - belle | - அழகான |
| nouveau | - nouvelle | - புதிய |
| vieux | - vieille | - பழைய |
| gros | - grosse | - மொத்த |

ஓர் உயிர்எழுத்தில் அல்லது சத்தமில்லாத h இல் தொடங்கும் **ஆண்பால்** ஒருமை பெயர்சொற்களுக்கு உச்சரிப்பு இனிமைக்காக பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| beau | - bel | - அழகான |
| fou | - fol | - பைத்தியமான |
| mou | - mol | - மெதுமெதுப்பான |
| nouveau | - nouvel | - புதிய |
| vieux | - vieil | - பழைய, வயோதிப |

un bel appartement ஒரு அழகான மாடிவீடு
un vieil homme ஒரு வயோதிப மனிதன்
un nouvel aéroport ஒரு புதிய விமானநிலையம்

பெண்பால் சொற்களில் ஒருவித மாற்றமுமில்லை.

## *Adjectifs numéraux cardinaux*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **un** | - | ஒன்று | six | - | ஆறு |
| **deux** | - | இரண்டு | sept | - | ஏழு |
| **trois** | - | மூன்று | huit | - | எட்டு |
| quatre | - | நான்கு | neuf | - | ஒன்பது |
| cinq | - | ஐந்து | dix | - | பத்து |

இவற்றை பெயர்ச்சொற்களுடன் எழுதும்போது ஒருபொழுதும் பெயர்ச்சுட்டு இடக்கூடாது.
Deux maisons ~~deux les maisons~~
இரண்டு வீடுகள் *(இது பிழையானது)*

ஒரு பெயர்ச்சொல் மெய்எழுத்தில் ஆரம்பித்தால் ஆறு, எட்டு, பத்தின் இறுதி எழுத்தை உச்சரிக்கக்கூடாது.
dix francs பத்து பிராங்குகள்
ஆனால் பெயர்ச்சொல் உயிர்எழுத்தில் அல்லது சத்தமில்லாத h இல் ஆரம்பித்தால் உச்சரிக்கவேண்டும்.
dix enveloppes பத்து கடிதஉறைகள்
இவை பெயர்ச்சொல்லுக்கு முன்னாலேயே பொதுவாக இடுவோம்.
ஆனால் page deux cent un

301 போத்தல்கள் trois cent une bouteilles பெண்பாலாதலால் un இற்குப் பதிலாக une இடுவோம்.

### *vingt et cent*

இவ்விரண்டு சொற்களும் எண்பது, நூறுகள் என்றுவரும்போது s ஐ எடுக்கும். ஆனால் 81, 82, 202, 303 என்று வரும்போது s ஐ எடுக்காது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 80 | - | quatre - vingts | 200 | - | deux cents |
| **81** | - | quatre - vingt un | 202 | - | deux cent deux |
| **82** | - | quatre - vingt deux | 300 | - | trois cents |
| | | | 303 | - | trois cent trois |

mille ஒருபோதும் பன்மையில் **s** ஐ எடுக்காது. **mille** ஒரு மாறாத சொல் ஆகும்.
2000 - deux mille
ஆனால் நீளத்தைக் குறிக்க பயன்படுத்தும்போது மட்டும் பன்மையில் s இடலாம்.
une distance de douze milles
இதில் mille பெயர்ச்சொல்லாக பயன்படுத்தப்படுகின்றது. அத்துடன் ஆங்கில நீளஅளவான மைல் என்பதைக் குறிக்கிறது.
வருடத்தை எழுத்தில் எழுதும்போது
1994 mille neuf cent quatre vingt - quatorze
அல்லது mil neuf cent quatre vingt - quatorze
**குறிப்பு :**
நடந்துகொண்டிருக்கும் வருடத்தை குறிப்பதற்கு மட்டும் mille இற்குப் பதிலாக mil எனப் பயன்படுத்தலாம்.

billion, milliard, million இம்மூன்றும் பெயர்ச்சொற்களாகும். இலக்கத்தைக் குறிக்கும்போது de இடவேண்டும்.
un million de francs
ஆனால் மற்றவை பெயர் உரிச்சொற்களாகும்.
cent mille francs

| | | | |
|---|---|---|---|
| Premier | முதலாவது | Deuxième | இரண்டாவது |
| Troisième | மூன்றாவது | Quatrième | நான்காவது |
| Cinquième | ஐந்தாவது | | |

பொதுவாக பெயர்ச்சொற்களுக்கு முன்னால் இடுவோம்.

Le premier enfant முதலாவதுபிள்ளை
La troisième année மூன்றாவது வருடம்

## *Le pluriel des adjectifs*
**பெயருரிச்சொற்களை பன்மையாக மாற்றும்முறை**

a) பெரும்பான்மையான பெயர்உரிச்சொற்கள் பன்மையாவதற்கு s ஐ எடுக்கும்.
*eg* : Un grand livre de grands livres

b) s அல்லது x இல் முடியும் பெயர் உரிச்சொற்கள் மாற்றமடைவதில்லை.
*குறிப்பு* : பெயருரிச்சொல் பெயர்ச்சொல்லுக்குமுன் இருப்பின் des இற்குப்பதிலாக de இடவேண்டும்.
Un enfant heureux des enfants heureux
ஒரு சந்தோஷமான பிள்ளை சந்தோஷமான பிள்ளைகள்
Un lit bas des lits bas
ஒரு பதிவான கட்டில் பதிவான கட்டில்கள்

c) eau இல் முடியும் பெயர் உரிச்சொற்கள் பன்மையாவதற்கு s இற்குப் பதிலாக x ஐ எடுக்கும்.
Un nouveau film des nouveaux films
ஒரு புதியபடம் புதியபடங்கள்

d) al இல் முடிவதாயின் பன்மையாவதற்கு aux ஐ எடுக்கும்.
Un voyage amical des voyages amicaux
நட்புரீதியான பயணம் நட்புரீதியான பயணங்கள்

e) demi, nu பெயர்ச்சொற்களுக்கு முன்னால் வரும்போது பால், எண் எடுப்பதில்லை.
Une demi - heure அரைமணித்தியாலம்
ஆனால் பெயர்ச்சொற்களுக்கு பின்னால் வரும்போது பெயர்ச்சொற்களின் பால், எண்ணுக்கேற்ப மாறும்.
Une heure et demie ஒன்றரை மணித்தியாலம்
*முக்கியகுறிப்பு* : *Demi எப்பொழுதும் ஒருமையில் எழுதவேண்டும்.*

சில பெயர் உரிச்சொற்கள் வினை உரிச்சொல்லாகவும் பயன்படுத்தப்படும்.
*eg* : bon, cher, plein, demi, mi, nu, demi

Tes fleurs sentent bon உனது பூக்கள் நல்லவாசனை அளிக்கின்றன.
ces vêtements coûtent cher இந்தஆடைகள் விலை மதிப்பானவை

*குறிப்பு* : mi et semi sont toujours invariables
mi உம் semi உம் ஒருபோதும் மாறாதவை
mi - hauteur பாதி உயரம்
semi - voyelle அரை உயிர்எழுத்து

## *Les adjectifs de couleur*
கீழ்காணப்படும் நிறங்கள் தாவரங்களின் சிறப்புப்பெயர்களைக் குறிக்கும்.

| | | | |
|---|---|---|---|
| marron | மண்ணிறம் | paille | வைக்கோல்நிறம் |
| orange | செம்மஞ்சள் | garance | சிவப்புநிறம் |
| cerise | செரிஸ்சிவப்பு | carmin | சிவப்புநிறம் |
| thé | தேயிலைச்சாயநிறம் | amarante | வாடாமல்லிகைநிறம் |
| olive | ஒலிவ்காய்நிறம் | | |

நிறப்பெயருரிச்சொற்கள் பெயர்ச்சொற்களின் பால், எண்ணை எடுக்கும். அத்துடன் இவை எப்போதும் பெயர்ச்சொற்களுக்கு பின்னால் இடவேண்டும்.
Une chaise noire des chaises noires
Un stylo noir des stylos noirs
நிறக்கூட்டு பெயர் உரிச்சொற்கள் ஒருபோதும் பெயர்ச்சொற்களின் பால், எண்ணுக்கேற்பமாறாது. இருபெயர் உரிச்சொற்கள் அல்லது ஒரு பெயர்ச்சொல்லுடன் பெயர்உரிச்சொல் சேர்ந்து கூட்டுப்பெயர்உரிச் சொற்களை உண்டாக்கும்.
des gants gris perle
Une voiture bleu foncé

ஒரு பெயர்ச்சொல் நிறத்தைக்குறிப்பதற்கு பெயர் உரிச்சொல்லாக பயன்படுத்தும்போது பால், எண்ணுக்கேற்ப மாறாது.
Un sari orange des saris orange

விதிவிலக்காக rose, écarlate, pourpre, mauve, fauve பெயர்ச்சொற்களின் பால், எண்ணை எடுக்கும்.

## *La place de l'adjectif*

பெரும்பாலான பெயருரிச்சொற்கள் பெயர்ச்சொற்களுக்கு பின்னால் வரும். ஆனால் பெயர்ச்சொற்களுக்கு முன்னால் பெயருரிச்சொற்களை இடலாம்.

### *Adjectifs placés avant le nom*

பின்வரும் சொற்களை பெயர்ச்சொற்களின் முன்னாலேயே இடுவோம்.
Haut, vrai, beau, joli, bon, double, jeune, vieux, petit, gros , gentil, mauvais, grand, meilleur, demi, prochain, dernier...
un beau film, un bon repas.

**குறிப்பு** :

1) ஆனால் சில பெயருரிச்சொற்களின் கருத்தை மாற்றுவதற்கு பெயர்ச்சொற்களின் பின்னால் இடுவோம்.
Un grand homme — Un homme grand
ஒரு பெரிய மனிதன் — ஒரு உயரமான மனிதன்
*இதில் மதிப்பைக் குறிக்கும்* — *இதில் உயரத்தைக்குறிக்கும்*

2) dernier, prochain பெயர்சொற்களுக்கு முன்னாலேயே இடுவோம்.
Le dernier train
Le prochain train
ஆனால் இவை ஒரு காலத்துடன் வரும்போது எப்பொழுதும் பின்னாலேயே இடவேண்டும்.
Le mois dernier சென்றமாதம்
L'année dernière சென்றவருடம்
Le mois prochain அடுத்தமாதம்
L'année prochaine அடுத்தவருடம்

### *Adjectifs placés après le nom*

**பெயர்ச்சொற்களுக்கு பின்னால் இடப்படும் பெயருரிச்சொற்கள்**

a) Le participe passé employé comme adjectif.
பெயர் உரிச்சொற்கள் மாதிரி பயன்படும் இறந்தகால வினையெச்சம்
Un verre cassé உடைந்த கிளாஸ்
Le travail fini முடிந்தவேலை

b) L'adjectif de couleur நிறப்பெயர் உரிச்சொற்கள்
La maison blanche வெள்ளை வீடு (மாளிகை)
Le drapeau rouge சிவப்புக்கொடி

c) L'adjectif qui exprime la nationalité
Une fille Srilankaise ஒரு இலங்கைச்சிறுமி
Une ville indienne ஒரு இந்தியக்கிராமம்

d) L'adjectif exprimant la forme
உருவத்தை விளக்கும் பெயர் உரிச்சொற்கள்
Une table carrée ஒரு சதுரமேசை
Une rue étroite ஒடுக்கமான தெரு

e) L'adjectif verbal
La page suivante அடுத்த பக்கம்
L'eau courante ஓடும் நீர்

## *Accords des adjectifs composés*
**கூட்டுப்பெயருரிச்சொற்கள்**

இரண்டு பெயர் உரிச்சொற்களினால் கூட்டு பெயர்ச்சொல் உருவாயின் இரண்டும் பால், எண்ணை எடுக்கும்.
Un enfant sourd-muet des enfants sourds-muets
ஒரு செவிட்டு ஊமைப்பிள்ளை செவிட்டு ஊமைப்பிள்ளைகள்
Une pomme aigre douce des pommes aigres douces
ஒரு புளிப்பு இனிப்பு அப்பிள் புளிப்பு இனிப்பு அப்பிள்கள்

Grand, large, frais, premier, dernier
இறந்தகால வினையெச்சத்துடன் மேற்கூறிய சொற்கள் வரும்போது மாறும்.
La fille dernière née les filles dernières nées
கடைசியாகப்பிறந்த மகள் கடைசியாகப்பிறந்த மகள்கள்
La porte grande ouverte les portes grandes ouvertes
பெரிதாகத்திறந்த கதவு பெரிதாகத்திறந்த கதவுகள்
*Exception*
des enfants nouveau nés
புதிதாகப்பிறந்த குழந்தைகள்

nouveau, neuf இவ்விரண்டு சொல்லும் புதிய என்றும்
vieux, ancien இவை பழைய என்றும் பொருள்படும்.
*ஆனால்*
Une nouvelle maison புதிய வீடு (வீடு பழையதாயிருக்கலாம்)
Une maison neuve புதிய வீடு (வீடு புதியது)

Une ancienne maison பழையவீடு (வீடு புதிதாக இருக்கலாம்)
Une vieille maison பழையவீடு (வீடு பழையது)

# Les Couleurs
**நிறங்கள்**

Vert - பச்சை
Vert pomme - அப்பிள் பச்சை
Vert bouteille - போத்தல் பச்சை *(மெல்லியபச்சை)*
Bleu - நீலம்
Bleu ciel - ஆகாயநீலம்
Bleu clair - தெளிவான பச்சை
Bleu foncé - கடும்நீலம்
Bleu marine - கடும்நீலம்
Bleu turquoise - மயில்நீலம்
Bleu roi - நீலம் *(பிரெஞ்சுக்கொடியில் இருக்கும்)*
Bleu canard - நீலப்பச்சை
Bleu outre mer - கடல்நீலம்
Jaune - மஞ்சள்
Jaune doré - பவுண் மஞ்சள், தங்கநிறம்
Jaune paille - வைக்கோல் மஞ்சள்
Jaune citron - எலுமிச்சை மஞ்சள்
Rouge - சிவப்பு
Rouge vermillon - கரும்சிவப்பு
Rouge bordeaux - சிவப்பு *(Bordeaux என்ற இடத்தில் செய்யப்படும் வைனின் நிறம்)*

Lie de vin - கடும்கபில நிறம் *(வினாகிரி)*
Rouge sang - இரத்தச்சிவப்பு
Gris - சாம்பல் நிறம்
Gris souris - சாம்பல் நிறம் *(எலியின் நிறம்)*
Ocre - மஞ்சளுக்கும் சாம்பலுக்கும் இடைப்பட்டநிறம்
Blanc - வெள்ளை
Gris perle - முத்தின் நிறம்
Noir - கறுப்பு
Rose - ரோஜாப்பூ நிறம், இளம்சிவப்பு
Orange - ஒரேஞ்பழ நிறம்
Marron - மண்ணிறம்
Mauve - மெல்லிய ஊதா
Violet - கத்தரிப்பூ நிறம், ஊதா
Couleur vive - கடும்நிறங்கள் *(சிவப்பு, மஞ்சள், நீலம், பச்சை)*
Couleur fondue - நிறம்கலந்த
Couleur pâle - மென்மையானநிறம் *(சாம்பல், வெள்ளை)*
Couleur foncée - கரும்நிறம்

<u>*Note*</u> :

- Avoir une peur bleue - அதிகபயம்
- Etre rouge de colère - கடும்கோபமாக இருத்தல்
- Blanc comme neige - பனிபோன்ற வெள்ளை

# Différents types de caractère ou de personnage
## வேறுபட்ட குணங்கள்

Joyeux - மகிழ்ச்சியாக
Ravi - மகிழ்ச்சி
Content - சந்தோஷமாக
Jaloux - பொறாமையாக
Innocent - குற்றமற்ற, அப்பாவியான
Idiot - முட்டாள்த்தனமான
Chaud - சூடான, கோபமான
Coupable - குற்றமான, குற்றவாளி
Horrible - பயங்கரமான
Agressif - குழப்பத்தை உண்டுபண்ணுகின்ற
Anxieux - மிகப்பயந்த
Arrogant - கர்வமான, அகந்தையான, செருக்கான
Timide - பயந்த, வெட்கமான
Béat - பக்தியான
Prudent - எச்சரிக்கையான, முன்யோசனையுள்ள
Froid - விறைப்பான
Modeste - அடக்கமான
Confiant - நம்பிக்கையான
Concentré - கவனிப்புள்ள (ஒருவிடயத்தை சுற்றிக்குவிந்த)
Incrédule - நம்பகமற்ற
Dégoûté - வெறுக்கத்தக்க
Indiscret - இரகசியமற்ற, அடக்கமற்ற
Désagréable - விரும்பத்தகாத
Enragé - கர்ச்சிக்கிற, கோபிக்கிற
Effrayé - பயங்கரமான
Epuisé - களைத்த
Paf - அதிக மதுவருந்திய, வெறியான
Amoureux - காதல்வயப்பட்ட
Misérable - வறுமையான
Méditatif - தியானிக்கிற, கட்டுப்பாடான
Optimiste - எதிலும் நன்மையை நோக்குகின்ற
Pessimiste - எதிலும் தீமையை நோக்குகின்ற
Paranoïaque - மனநோயாளியான
Prude - நாணமுள்ள
Méfiant - ஜாக்கிரதையாகவிருக்கின்ற
Surpris - ஆச்சரியமான
Soulagé - ஆறுதல்படக்கூடிய
Satisfait - திருப்தியான
Grognon - குறைகூறுகிற, புறுபுறுக்கிற
Obstiné - பிடிவாதமான
Hostile - விரோதமான, எதிரான
Désolé - வருந்துகிற
Peiné - களைப்படைந்த, துக்கமான
Embarrassé - தொந்தரவான
Intéressé - விரும்பத்தகுந்த
Seul - தனித்த
Décidé - தீர்மானித்த, திட்டமான
Positif - நேர்மறையான
Négatif - எதிர்மறையான

Curieux - அறியஆவலுடைய, விரும்புகின்ற
Affligé - துன்பமான, துயரமான
Hystérique - நரம்புத்தளர்ச்சியான
Ennuyeux - தொந்தரவான
Avoir la gueule de bois - அதிகபோதையுள்ள
Sentimental - உணர்ச்சிவசப்பட்ட
Sensuel - உணர்ச்சியுள்ள
Penaud - கலக்கமுள்ள, வெட்கமுள்ள
Fier - பெருமைப்படக்கூடிய
Gourmand - உணவுப்பிரியன் (உணவில் விருப்பமுள்ள)

# Qualités

## ஒருவரின் திறமை/தரம்

*Note :* எல்லா எழுவாய்க்கும் வினைச்சொற்களை மாற்றி அமைக்கலாம்.

**Etre + Adjectif** (பெயருரிச்சொல் அட்டவணையில் பெண்பால் சொற்களுக்கு ஒப்பிட்டுப் பார்க்கவும்)
Il est bon - அவன் சிறந்தவன்
Il est intelligent - அவன் கெட்டிக்காரன்
Il est habile - அவன் கைத்திறமையுள்ளவன்
Il est travailleur - அவன் வேலைசெய்பவன்
Il est studieux - அவன் மிகவும் சிறந்தவன் (படிப்பில)
Il est sage - அவன் பொறுமையானவன் (நற்குணமானவன்)
Il est courageux - அவன் ஊக்கமுள்ளவன்
Il est éveillé - அவன் விழிப்புணர்ச்சிமிக்கவன்
Il est doué d'intelligence - அவனுக்கு கெட்டித்தனம் ஒருகொடை
Il est calé - அவன் திறமைசாலி (familier நெருங்கியவர்களுக்கு மட்டுமே)

**Avoir + Nom**
Il a du talent - அவன் திறமையானவன்
Il a de l'instruction - அவன் கல்வித்தகமையுள்ளவன்
Il a de la sagesse - அவன் பொறுமையான, நற்குணமிகுந்தவன்
Il a de l'ardeur - அவன் உற்சாகமுள்ளவன்.

Un éclair de génie - மகாபுத்திசாலி
Homme de lettres - கல்விமான்
Homme d'esprit - புத்திமான்
Un(e) diplômé(e) - பட்டம்பெற்றவர்
Gens de lettres - கல்விமான்
Passer l'examen - பரீட்சை எடுத்தல்
Maître d'école - ஆசிரியர்
Maîtresse d'école - ஆசிரியை
Diriger une école - பாடசாலை வைத்திருத்தல் (நடத்துதல்)
Didactique - படிப்பிக்கும்முறை, கற்பிக்கும்முறை
Pédagogue - ஆசிரியர்
Pédagogie - கற்பிக்கும்முறை
Homme de fer - இரும்புமனிதன், பிடிவாதமானவர்
Bienfaiteur - நல்லது செய்பவர்
Homme de science - அறிஞன்
Il est savant - அவன் அறிஞன்
Il est instruit - அவன் கல்விமான்

# Folie/Anormalité/Etrangeté
## பைத்தியமானவர்

இச்சொற்கள் பைத்தியமான (ஆண், பெண்) என்ற அர்த்தத்தில் அன்றாட வாழ்க்கையில், நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ அதிகம் பாவிக்கப்படுவது (ஒருவருக்கு விளங்காத வகையில் தமிழில் கதைப்பது போன்றே பிரெஞ்சுமொழியிலும் பாவிக்கப்படுவது).

Il est fou - அவன் பைத்தியக்காரன்
Elle est folle - அவள் பைத்தியக்காரி
Il est anormal - அவன் வழமையாகவில்லை
Il n'est pas bien - அவன் சரியாகவில்லை
Il perd la tête - அவன் தலை குழம்பிவிட்டது
Il perd le nord - அவனுக்கு திக்கு தொலைந்துபோய்விட்டது (வடக்கு)

Il est piqué
Il est tapé
Il ne tourne pas rond
Il est détraqué
} அவனுக்கு தட்டிப்போய்விட்டது

C'est un imbécile
C'est un stupide
C'est un fada
Il est marteau
} மடையன் — இச்சொற்களை அதிகம்உபயோகித்தல் நன்றல்ல. மரியாதையற்ற, கோபத்தை உண்டாக்கும்சொல்.

*மேற்குறிப்பிட்ட நான்கு சொற்களையும் பேச்சுவழக்கில் தவிர்ப்பது நன்று.*

Il est bizarre - அவன் வழமையாகவில்லை
Il est à moitié fou - அரைப்பைத்தியம்
Il est complètement fou - முழுப்பைத்தியம்
Grain de folie - பைத்தியம்

# Les Antonymes
## எதிர்ப்பதங்கள்

| | | | |
|---|---|---|---|
| Ouvert | - திறந்த | Fermé | - மூடிய |
| Mauvais | - கூடாத, கெட்ட | Bon | - நல்ல |
| Désobéissant | - சாதுவற்ற, கீழ்ப்படியாத | Obéissant | - அடங்கிய, சாதுவான |
| Long | - நீளமான | Court | - கட்டையான |
| Vivant | - வாழ்வுள்ள, உயிருள்ள | Mort | - இறந்த |
| Sur | - மேல் | Sous | - கீழ் |
| Travailleur | - சுறுசுறுப்பான, தொழில்செய்பவர் | Paresseux | - சோம்பேறியான |
| Intelligent | - கெட்டித்தனமான | Sot | - கெட்டித்தனமற்ற |
| Actif | - தொழிற்பாடுடைய | Passif | - தொழிற்படுத்தப்படுகிற, செயற்பாடற்ற |
| Premier | - முதலாவது | Dernier | - இறுதியான |
| Beau | - அழகான | Laid | - அழகற்ற |
| Neuf | - புதிய | Ancien | - பழைய |
| Sombre | - மங்கலான | Clair | - தெளிவான |
| Dehors | - வெளியே | Dedans | - உள்ளே |
| Grand | - பெரிய | Petit | - சிறிய |
| Souple | - வளையக்கூடிய | Raide | - நேரான, கடினமான |
| Timide | - பயந்த | Audacieux | - துணிந்த, தைரியமான |

| | | | |
|---|---|---|---|
| Entier | - முழுவதும் | Partiel | - பகுதியான |
| Fragile | - உடையக்கூடிய | Solide | - திண்மையான |
| Sec | - காய்ந்த | Humide | - ஈரமான |
| Vrai | - உண்மையான | Faux | - பொய்யான |
| Droite | - வலமான | Gauche | - இடமான |
| Gros | - மொத்தமான | Maigre | - மெலிதான |
| Près | - கிட்ட | Loin | - தொலைவான |
| Riche | - பணக்கார, செழிப்பான | Pauvre | - ஏழை, செழிப்பற்ற |
| Chaud | - சூடான | Froid | - குளிரான |
| Peu | - குறைவான | Beaucoup | - அதிகமான |
| En haut | - மேலே | En bas | - கீழே |
| Si tôt | - மிகச்சீக்கிரம் | Si tard | - மிகத்தாமதம் |
| Etroit | - ஒடுங்கிய | Large | - அகலமான |
| Bas | - பதிவான | Haut | - உயரமான |
| Facile | - சுலபமான | Difficile | - கடின |
| Aisé | - வசதியான | Compliqué | - வசதியற்ற, சிக்கலான |
| Plein | - நிறைந்த | Vide | - வெறுமையான |
| Content | - மகிழ்ச்சியான | Mécontent | - துக்கம், மகிழ்ச்சியற்ற |
| Sale | - அழுக்கான | Propre | - தூய்மையான |
| Avare | - கஞ்சத்தனமான | Généreux | - பெருந்தன்மையான |
| Lent | - மெதுவான | Rapide | - வேகமான |
| Contre | - எதிராக | Pour | - ஆக, அதற்காக |
| Avec | - உடன் | Sans | - இல்லாமல் |
| Avant | - (நேரம்) முன் | Après | - (நேரம்) பின் |
| Devant | - (இடம்) முன் | Derrière | - (இடம்) பின் |

## Im

| | | | |
|---|---|---|---|
| Possible | - சாத்தியமான | Impossible | - சாத்தியமற்ற |
| Pair | - சோடியான | Impair | - சோடியற்ற |
| Parfait | - பூரணமான | Imparfait | - பூரணமற்ற |
| Patience | - பொறுமையான | Impatience | - பொறுமையற்ற |
| Payé | - செலுத்தப்பட்ட (கட்டணம்) | Impayé | - செலுத்தப்படாமை |
| Pitoyable | - இரக்கத்துக்குரிய | Impitoyable | - இரக்கமற்ற |
| Poli | - மரியாதையான | Impoli | - மரியாதையற்ற |
| Populaire | - பிரபல்யமான | Impopulaire | - பிரபல்யமற்ற |
| Praticable | - வசதியான, கையாளக்கூடிய | Impraticable | - தொடரமுடியாத, வசதியற்ற |
| Précis | - திட்டமான, குறித்த | Imprécis | - திட்டமற்ற, குறிப்பிடப்படாத |
| Prévisible | - முன்கூட்டியே பார்க்கக்கூடிய | Imprévisible | - முன்கூட்டியே அறியமுடியாத |
| Prudent | - கவனமாய், தீர்க்கமாகச்செய்தல் | Imprudent | - கவனமற்ற, தீர்க்கமற்ற |
| Puissance | - சக்திவாய்ந்த | Impuissance | - சக்தியற்ற |
| Pur | - தூய்மையான | Impur | - தூய்மையற்ற |
| Mobile | - நகர்த்தக்கூடிய | Immobile | - நகர்த்தமுடியாத |
| Modeste | - அடக்கமான | Immodeste | - அடக்கமற்ற |
| Moral | - நீதியான, மனச்சாட்சியான | Immoral | - நீதியற்ற, மனச்சாட்சியற்ற |
| Mortel | - அழியக்கூடிய | Immortel | - அழிவற்ற |

## In

| | | | |
|---|---|---|---|
| Actif | - தொழிற்பாடுடைய | Inactif | - தொழிற்பாடற்ற |
| Adapté | - ஏற்றுக்கொள்ளக்கூடிய | Inadapté | - ஏற்றுக்கொள்ளமுடியாத |
| Admissible | - அனுமதிக்கத்தக்க | Inadmissible | - அனுமதிக்கமுடியாத |
| Attaquable | - தாக்கக்கூடிய | Inattaquable | - தாக்கமுடியாத |
| Attendu | - முன்கூட்டியறிந்த, காத்திருந்த | Inattendu | - சடுதியான, முன்னறிவிப்பற்ற |
| Attention | - கவனம்மிக்க | Inattention | - கவனமற்ற |
| Calculable | - கணிக்கத்தக்க | Incalculable | - கணிக்கமுடியாத |

| | | | |
|---|---|---|---|
| Capable | - முடியுமான, தகுதியான | Incapable | - தகுதியற்ற, முடியாத |
| Cassable | - உடையக்கூடிய | Incassable | - உடையாத |
| Certain | - நிச்சயமான | Incertain | - நிச்சயமற்ற |
| Comparable | - ஒப்பிடத்தக்க | Incomparable | - ஒப்பிடமுடியாத |
| Complet | - நிரம்பிய, பூரணமான | Incomplet | - நிரம்பாத, பூரணமற்ற |
| Compris | - உள்ளடங்கிய | Incompris | - உள்ளடங்காத |
| Connu | - தெரிந்த, அறிந்த | Inconnu | - தெரியாத, அறியப்படாத |
| Conscience | - மனச்சாட்சியுடைய | Inconscience | - மனச்சாட்சியற்ற |
| Consolable | - ஆறுதலடைந்த | Inconsolable | - ஆறுதலடையாத |
| Constant | - மாறமுடியாத | Inconstant | - மாறக்கூடிய |
| Convenable | - பொருத்தமான, தகுந்த | Inconvenant | - பொருத்தமற்ற, தகாத |
| Correct | - சரியான | Incorrect | - சரியற்ற |
| Corrigible | - திருத்தக்கூடிய | Incorrigible | - திருத்தமுடியாத |
| Crédule | - நம்பத்தகுந்த | Incrédule | - நம்பமுடியாத |
| Défini | - முடிவான, தீர்க்கமான | Indéfini | - முடிவற்ற |
| Différent | - வித்தியாசமான | Indifférent | - வித்தியாசமற்ற |
| Direct | - நேரடியான | Indirect | - நேரடியற்ற |
| Disponible | - பாவிக்கக்கூடிய | Indisponible | - பாவிக்கமுடியாத |
| Egal | - ஒழுங்கான, சமமான | Inégal | - சமமற்ற, ஒழுங்கற்ற |
| Evitable | - தவிர்க்கக்கூடிய | Inévitable | - தவிர்க்கமுடியாத |
| Exact | - சரியான | Inexact | - சரியற்ற, பூர்த்தியில்லாத |
| Fidèle | - நம்பிக்கையான | Infidèle | - நம்பிக்கையற்ற |
| Humain | - மனிதத்தன்மையான | Inhumain | - மனிதத்தன்மையற்ற |
| Séparable | - பிரிக்கக்கூடிய | Inséparable | - பிரிக்கமுடியாத |
| Utile | - பிரயோசனமான | Inutile | - பிரயோசனமற்ற |
| Valide | - பெறுமதியான | Invalide | - பெறுமதியற்ற |
| Visible | - பார்க்கக்கூடிய | Invisible | - பார்க்கமுடியாத |

## Ir

| | | | |
|---|---|---|---|
| Réalisable | - செய்யக்கூடிய | Irréalisable | - செய்யமுடியாத |
| Réel | - உண்மையான | Irréel | - உண்மையற்ற |
| Réfléchi | - ஆலோசிக்கக்கூடிய | Irréfléchi | - ஆலோசிக்கமுடியாத |
| Régulier | - ஒழுங்கான | Irrégulier | - ஒழுங்கற்ற |
| Religieux | - சமயம்சார்ந்த | Irréligieux | - சமயச்சார்பற்ற |
| Réprochable | - அணுகக்கூடிய | Irréprochable | - அணுகமுடியாத |
| Responsable | - பொறுப்பான | Irresponsable | - பொறுப்பற்ற |
| Raisonné | - நியாயமான | Irraisonné | - நியாயமற்ற |
| Réductible | - சுருக்கக்கூடிய, மாற்றக்கூடிய | Irréductible | - சுருக்கமுடியாத |
| Respect | - மரியாதையான | Irrévérence | - மரியாதையற்ற |
| Résolu | - தீர்வுக்குட்பட்ட | Irrésolu | - தீர்க்கமுடியாத |

## Dés

| | | | |
|---|---|---|---|
| Accord | - உடன்பாடு | Désaccord | - உடன்படாமை |
| Agréable | - விரும்பத்தகுந்த | Désagréable | - விரும்பத்தகாத |
| Avantage | - நன்மை, அனுகூலமான | Désavantage | - தீமை, நன்மையற்ற, பிரதிகூலமான |
| Espéré | - எதிர்பார்ப்புடைய | Désespéré | - எதிர்பார்க்கப்படாத |
| Habillé | - அணிந்த, உடுத்த | Déshabillé | - உடைகழற்றிய, அணியாத |
| Espoir | - நம்பிக்கை | Désespoir | - நம்பிக்கையற்ற |
| Honneur | - மரியாதையான | Déshonneur | - மரியாதையற்ற |

# Les adjectifs possessifs
## உடமைப் பெயருரிச்சொற்கள்

ஒரு பொருளின் அல்லது உயிருள்ளவற்றின் உடமையைக் குறிக்க இச்சொற்கள் பயன்படும். பெயர்ச்சொல்லின் பால், எண்ணுக்கேற்ப இவை இடப்படும்.

| | *Pronom* [illegible] | *Singulier* | | *Pluriel* | |
|---|---|---|---|---|---|
| | | *masculin* | *féminin* | *masculin* | *féminin* |
| *1ère Personne Singulier* *தன்மை ஒருமை* | Je | mon என்னுடைய | ma என்னுடைய | mes என்னுடைய | mes என்னுடைய |
| *2ème Personne Singulier* *முன்னிலை ஒருமை* | Tu | ton உன்னுடைய | ta உன்னுடைய | tes உன்னுடைய | tes உன்னுடைய |
| *3ème Personne Singulier* *படர்க்கை ஒருமை* | Il / elle | son அவனுடைய அவளுடைய | sa அவனுடைய அவளுடைய | ses அவனுடைய அவளுடைய | ses அவனுடைய அவளுடைய |
| *1ère Personne Pluriel* *தன்மை பன்மை* | Nous | notre எங்களுடைய | notre எங்களுடைய | nos எங்களுடைய | |
| *2ème Personne Pluriel* *முன்னிலை பன்மை* | Vous | votre உங்களுடைய | votre உங்களுடைய | vos உங்களுடைய | |
| *3ème Personne Pluriel* *படர்க்கை பன்மை* | Ils / elles | leur அவர்களுடைய | leur அவர்களுடைய | leurs அவர்களுடைய | |

*உ+ம்* :
இவை பெயர்ச்சொற்களின் முன்னால் இடப்படும். இவற்றுடன் ஒருபோதும் பெயர்ச்சுட்டு இடக்கூடாது.

Mes parents — எனது பெற்றோர்கள் ~~Mes les parents~~ என்று இடக்கூடாது.
Le livre — புத்தகம்

புத்தகம் என்னுடையதெனின் (புத்தகம் ஒருமை ஆண்பாலாதலால்) mon livre எனது அல்லது என்னுடைய புத்தகம் என்போம்.

Mes livres — எனது புத்தகங்கள்
La maison — வீடு

வீடு உங்களுடையதெனின் (வீடு பெண்பால்ஒருமையாதலால்) votre maison உங்களுடைய வீடு என இடவேண்டும்.

vos maisons — உங்களுடைய வீடுகள்

தமிழிலும், ஆங்கிலத்திலும் உடமையாளரின் பாலுக்கேற்ப உடமைப்பெயருரிச்சொல்லை இடுவோம்.
*உ+ம்*: அவனது கார், அவளது கார்

ஆனால் பிரஞ்சில் உடமைச்சொல்லின் பால்,எண்ணுக்கேற்ப உடமைப் பெயருரிச்சொல்லை இடவேண்டும்

sa voiture — அவனது கார்.
sa voiture — அவளது கார்.

கார் பெண்பாலாதலால் படர்க்கை தன்மைக்கு sa இடவேண்டும். அவ்வாறே அவனது அல்லது அவளது கார்களாயின் ses voitures என இடுவோம்.

*உடமையாளர் பலர்*

ஒரு காரை வைத்திருப்பின் — leur voiture — அவர்களுடைய கார்.
பல கார்களை வைத்திருப்பின் — leurs voitures — அவர்களுடைய கார்கள்.

உயிரெழுத்தில் அல்லத சத்தமில்லாத H இல் தொடங்கும் பெண்பால் சொல்லிற்கு உச்சரிப்பு இனிமைக்காக ma ,ta, sa இற்கு பதிலாக mon ,ton, son இடுவோம்.

l'amie ~~ma amie~~ mon amie எனது நண்பி

l'adresse ~~ta adresse~~ ton adresse உனது விலாசம்
l'école ~~sa école~~ son école அவனுடைய /அவளுடைய பாடசாலை

குறிப்பு:
ma belle amie இச்சொற்கூட்டத்தில் மெய்யெழுத்தில் ஆரம்பிக்கும் சொல் இருப்பதால் ma ஐ இடலாம்.
Adjectif possessif உடமையை மட்டுமல்லாது சமூக உறவுகளையும் குறிக்கும்.

உ+ம்:
Mon frère உனது சகோதரன்
Mon chemin எனது பாதை
Ta classe உனது வகுப்பு

Votre village உங்களுடைய கிராமம்
Nos jours எங்களுடைய நாட்கள்

ஒருவருடைய உடம்பின் உறுப்புகளைக் கூறும்போது பெயர்உரிச்சொல் இடவேண்டியதில்லை.
J'ai mal à la tête. எனக்குத் தலைவலி.
Il a mal au ventre. அவனுக்கு வயிற்றுவலி.

Notre Jardin est beau. எங்களுடைய தோட்டம் அழகானது.
Votre voiture est bleue. உங்களுடைய கார் நீலநிறமானது.
J'ai vos numéros de téléphone. நான் உங்களுடைய தொலைபேசி இலக்கங்களை வைத்திருக்கிறேன்.
C'est notre pays. இது எங்களுடைய நாடு.
Ce ne sont pas leur maison. இது அவர்களுடைய வீடு அல்ல.

# Les Adjectifs Démonstratifs
## சுட்டுப்பெயர் உரிச்சொற்கள்

ஒரு பொருளை அல்லது நபரை சுட்டிக்காட்ட இச்சொற்கள் பயன்படும்.

| | *Singulier* | *Pluriel* |
|---|---|---|
| ***Masculin*** | Ce, Cet | Ces |
| ***Féminin*** | Cette | Ces |

ஒரு பெயர்ச்சொல்லுக்கு இச்சொற்களை இட்டால் இந்த அல்லது அந்த என்ற கருத்துப்படும். பெயர்ச்சொற்களின் பால், எண்ணுக்கேற்ப மாறும். இவை இடும்போது ஒருபொழுதும் பெயர்ச்சுட்டு பயன்படுத்தக்கூடாது.
Le train Ce train இந்தப் புகையிரதம்
Les trains Ces trains இந்தப் புகையிரதங்கள்
La bouteille Cette bouteille இந்தப் போத்தல்
Les bouteilles Ces bouteilles இந்தப் போத்தல்கள்

உயிர்எழுத்தில் அல்லது சத்தமில்லாத H இல் ஆரம்பிக்கும் ஒருமை ஆண்பால் பெயர் உரிச்சொல்லுக்கு உச்சரிப்பு இனிமைக்காக Cet இடவேண்டும்.
L'arbre (m) Cet arbre இந்த மரம்
L'hôpital Cet hôpital இந்த வைத்தியசாலை

மேலும் சில உதாரணங்கள்:
Cette radio est chère. இந்த ரேடியோ விலையானது.
Cet arbre est très haut. இந்த மரம் மிக உயரமானது.
J'ai cette chanson. நான் இந்தப் பாட்டு வைத்திருக்கின்றேன்.
Est-ce que vous avez ces films? நீங்கள் இந்தப்படங்களை வைத்திருக்கின்றீர்களா?

*குறிப்பு* : ஒன்றிற்கு மேற்பட்டவையை சுட்டிக்காட்ட அல்லது ஒப்பிட *இந்த* என்பதற்கு *Ci* உம், *அந்த* என்பதற்கு *Là* உம் இணைக்க வேண்டும். Ci உம் là உம் பால், எண்ணுக்கேற்ப மாறாது.

| | |
|---|---|
| Cette chambre-ci | இந்த அறை |
| Cette chambre-là | அந்த அறை |
| Cet homme-ci | இந்த மனிதன் |
| Cet homme-là | அந்த மனிதன் |
| Ces maisons-ci | இந்த வீடுகள் |
| Ces maisons-là | அந்த வீடுகள் |

| | |
|---|---|
| Ce pneu-ci est neuf | இந்தச் சக்கரம் புதியது |
| Ce pneu-là est ancien | அந்தச் சக்கரம் பழையது |
| Cette école-ci ou cette école-là | இந்தப் பாடசாலையா அல்லது அந்தப் பாடசாலையா |
| Il a ces fruits-ci et ces fruits-là | அவன் இந்தப்பழங்களும் அந்தப்பழங்களும் வைத்திருக்கின்றான். |

# Les Adjectifs Interrogatifs
## வினா பெயர்உரிச்சொற்கள்

இவை பெயர்ச்சொற்களை வினாவாக்க பயன்படும், ஒரு பெயர்ச்சொல்லின் அல்லது வாக்கியத்தின் முன்பொதுவாக பாவிக்கப்படும்.

| | *Singulier* | *Pluriel* |
|---|---|---|
| *Masculin* | Quel | Quels |
| *Féminin* | Quelle | Quelles |

வினா பெயர் உரிச்சொற்கள் என்ன அல்லது எந்த என்று பொருள்படும்.

| | | |
|---|---|---|
| La question | Quelle question | எந்தக் கேள்வி |
| Le tissu | Quel tissu | எந்தத் துணி |
| Les villes | Quelles villes | எந்த நகரங்கள் |
| Les tomates | Quelles tomates | எந்தத் தக்காளிகள் |

| | |
|---|---|
| Quelle couleur avez-vous? | நீங்கள் எந்த நிறம் வைத்திருக்கின்றீர்கள்? |
| Quel train est à la gare? | எந்த புகையிரதம் புகையிரதநிலையத்தில் உள்ளது? |
| Quel jour sommes-nous? | இன்றைக்கு என்ன கிழமை? |
| Quelle heure est-il? | என்ன நேரம்? |
| Quel âge avez-vous? | என்னவயது உங்களுக்கு? |

Adjectif interrogatif ஐ pronom interrogatif ஆகவும் பயன்படுத்தலாம்.

| | |
|---|---|
| Quel est votre nom? | உங்களுடைய பெயர் என்ன? |
| Quels sont vos livres? | உங்களுடைய புத்தகங்கள் எவை? |
| Quelle est votre adresse? | உங்களுடைய விலாசம் என்ன? |
| Quel est votre âge? | உங்களுடைய வயது என்ன? |
| Quelles sont tes cassettes? | உன்னுடைய கசெற்றுக்கள் எவை? |

சில ஆச்சரிய வெளிப்பாடுகளுக்கு இச்சொற்கள் பயன்படுத்தலாம்.

| | |
|---|---|
| Quelle beauté! | என்ன அழகு! |
| Quel courage! | என்ன உற்சாகம்! என்ன தைரியம்! |
| Quelle odeur! | என்ன வாசம்!, என்ன மணம்! |

# L'heure நேரம்

*நேரம் கேட்கும் முறை...*

| | |
|---|---|
| 1) Quelle heure est-il? | என்ன நேரம் ? |
| 2) L'heure s'il vous plaît! | தயவு செய்து நேரம் ? |
| 3) Avez -vous l'heure? | உங்களிடம் நேரமுள்ளதா? |
| 4) Vous avez l'heure? | உங்களிடம் நேரமுள்ளதா? |
| 5) Est-ce que vous avez l'heure? | உங்களிடம் நேரமுள்ளதா? |

*குறிப்பு* :2வது முறை பேச்சுவழக்கில் மட்டும் பயன்படுத்தப்படுகிறது.

| | |
|---|---|
| si tôt | சீக்கிரமாக |
| si tard | மிகத்தாமதமாக |
| en avance | முன்பாக |
| en retard | தாமதமாக |
| à l'heure | நேரத்திற்கு |
| de bonne heure | நல்ல நேரம் |
| heure précise | குறித்த நேரம் |
| heure pile | சரியான நேரம் |
| heure juste | சரியான நேரம் |
| décalage horaire | நேரவித்தியாசம்(இரு இடங்களுக்கிடையில்) |
| passer un sale quart d'heure | கஸ்டமான நேரத்தைக் கழித்தல் |
| passer le temps | நேரத்தைப் போக்கல் |
| tuer le temps | நேரத்தை வீணாக்குதல் |
| changement de temps | நேர மாற்றம்(குளிர்,கோடைகால நேரமாற்றம்) |
| le temps est écoulé | காலம் முடிந்துவிட்டது |
| Il a fait son temps | அவன் தனது நேரத்தை நல்ல முறையில் கழித்தான். |
| temps perdu | வீணாக்கிய நேரம் |
| On va essayer de rattraper le temps | இழந்த நேரத்தை நாம் மீட்க முயலப்போகிறோம்.. |

**நேரம் பார்க்கும் முறை**

| | | |
|---|---|---|
| 01.00 | Il est une heure | |
| 01.10 | Il est une heure dix | |
| 01.15 | Il est une heure quinze | |
| | Il est une heure et quart | |
| 01.30 | Il est une heure trente | |
| | Il est une heure et demie | |
| 01.35 | Il est une heure trente-cinq | |
| | Il est deux heures moins vingt-cinq | |
| 01.45 | Il est une heure quarante-cinq | |
| | Il est deux heures moins le quart | |
| 01.50 | Il est une heure cinquante | |
| | Il est deux heures moins dix | |
| 02.00 | Il est deux heures | |
| 12.00 | Il est midi | |
| 15.00 | Il est quinze heures | |
| 24.00 | Il est minuit | |
| 07.00 | Il est sept heures du matin | காலை ஏழு மணி. |
| 19.00 | Il est sept heures du soir | மாலை ஏழு மணி. |

# Ça

இது ஒரு பிரதிப்பெயர்ச்சொல் இது அல்லது அது என்று பொருள்படும். cela என்ற சொல் திரிபடைந்து ça வந்ததென்பர். இச்சொல் மிகக்கூடுதலாக பேச்சு மொழியில் பயன்படுத்தப்படுகின்றது.

*நலம் விசாரிக்க அதிகமாக உபயோகப்படுகின்றது.*

Ça va? Oui ça va.

*நலமா? ஆம் நலம்.*

| | |
|---|---|
| Comment ça va? | Ça va bien. |
| *எப்படிச் சுகம்?* | *மிக்க நலம் (நல்லசுகம்)* |
| | Ça va comme ci comme ça. |
| | Ah comme ci comme ça. |
| | *ஓ! அப்படி இப்படித்தான்.* |

***Ça* வின் வேறுதொழிற்பாடுகள்**

C'est ça *அது தான்*

| | |
|---|---|
| Ne mange pas la bouche ouverte | Ça ne se fait pas |
| வாயைத்திறந்து கொண்டு சாப்பிடாதே | அப்படிச்செய்வதில்லை. |
| Ça y est | அது சரி, முடிந்தது |
| Comment ça s'écrit? | அதை எவ்வாறு எழுதுவது? |
| C'est comme ça. | அது இப்படி |
| N'écris pas comme ça. | அப்படி எழுதாதே |
| Avec ça | இதனுடன் |
| Sans ça | இது இல்லாமல் |
| Ça me fait plaisir. | அது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது |
| Ça fait peur. | அது பயத்தை உண்டாக்குகின்றது |
| Ça ne fait rien | இது ஒன்றும் செய்யாது |
| Ça me fait grossir | அது என்னை மொத்தமாக்குகிறது |
| Ça te rendra malade | அது உனக்கு வருத்தத்தைத் தரும் |
| Ça sert à quoi? | அது எதற்குப் பயன்படுகிறது? |
| Ça fait combien? | அது எவ்வளவு? (மொத்தம் எவ்வளவு?) |
| Comment ça s'appelle? | அதனுடையபெயர் என்ன? (அதை எவ்வாறு அழைப்பது?) |
| Ça me plaît | அது எனக்குப் பிடிக்கிறது |
| Ça côute cher | அது விலையானது |
| Qui ça? | யார் அது? |
| Où ça? | அது எங்கேயிருக்கின்றது? |
| A part ça? | அதைத்தவிர |
| Pas de ça | அது இல்லை |
| Tout ça | அது முழுக்க, எல்லாம் |
| Ça depend | அது தங்கியிருக்கிறது (பொறுத்தது) |

# Tout

*இச்சொல்லின் தொழிற்பாடுகள்*

1) *Adjectif + (nom)*

இது பெயருரிச்சொல்லாக தொழிற்படும்.

| | *Singulier* | *pluriel* |
|---|---|---|
| *Masculin* | Tout | Tous |
| *Féminin* | Toute | Toutes |
| | (முழுக்க) | (எல்லா) |

ஆண்பால் ஒருமையாயின் Tout உம் பன்மையாயின் tous உம் ஆகும். அதேபோல் பெண்பால் ஒருமையில் Toute உம் பன்மையில் Toutes உம் ஆகும். பெயர்ச்சொல்லின் பால் எண்ணுக்கேற்ப இது மாறும்.

| | |
|---|---|
| Tout le livre | முழுப் புத்தகமும் |
| Tous les livres | எல்லாப் புத்தகங்களும் |
| Toute la nuit | முழு இரவும் |
| Toutes les nuits | எல்லா இரவுகளும் |
| Je lis tout le livre. | நான் புத்தகம் முழுக்க வாசிக்கின்றேன். |

Il travaille toute la nuit.    அவன் முழு இரவும் வேலை செய்கின்றான்.

a) ஆனால் பெயர்ச்சொற்களுக்கு பெயர்ச்சுட்டு இடாமல் tout எழுதுவோமாயின் பால் எண் இல்லை. இது ஒவ்வொரு என்று கருத்துப் பெறும். ஒருமாறிலியாகும்.
Tout étudiant possède un livre.
ஒவ்வொரு மாணவனும் ஒருபுத்தகம் வைத்திருக்கின்றான்.

b) *N'importe quel(le)*    எதுவானாலும்
à tout prix    எந்த விலையானாலும்
à toute heure    எந்த நேரமானாலும்

2) *Pronom பிரதிப்பெயர்ச் சொல்லாகும்.*
a) Tous (*தூஸ்*), Toutes (*தூத்*)
இங்கு பெயர்ச்சொல்லைப் பிரதியிடுகிறது. ஆண்பால் சொல்லை பிரதியிடுவோமாயின் s இற்கு உச்சரிப்பு உண்டு.
Tous les élèves sont dans la classe. எல்லாமாணவர்களும் வகுப்பறையினுள் உள்ளனர்.
Tous sont dans la classe.
Toutes sont dans la classe. (மாணவிகள்) எல்லோரும் வகுப்பறையினுள் உள்ளனர்.
*ou அல்லது*
Elles sont toutes dans la classe. அவர்கள் எல்லோரும் வகுப்பறையினுள் உள்ளனர்.
b) பால், எண் இல்லாத பிரதிப்பெயர்ச்சொல்லான Pronom neutre இதில் Tout ஒரு மாறிலியாகும். எல்லாவற்றையும் (எல்லாம்) என்று பொருள்படும்.
Il a tout mangé.    அவன் எல்லாவற்றையும் சாப்பிட்டான்.
Dans ce restaurant, tout est bon.
இந்த உணவுவிடுதியில், எல்லாம் நல்லது.
Il pense à tout.    அவன் எல்லாவற்றையும் நினைக்கின்றான்.

3) *Adverbe வினையுரிச்சொல்லாகத் தொழிற்படும்போது*
இங்கு Tout மிக, முற்றும், முழுவதும் என்று அர்த்தப்படும்.
Le ciel est tout bleu.    வானம் முற்றாக நீலமாகவிருக்கின்றது.
இங்கு Tout ஆண்பாற் சொல்லுடன் வரும்போது மாற்றமில்லை.
Les nuages sont tout blancs.    முகில்கள் முழுவெண்மையாகவிருக்கின்றன.
*குறிப்பு* : ஒரு மெய்எழுத்தில் அல்லது உச்சரிப்புடைய h இல் தொடங்கும் ஒருமை பெண்பாற்சொற்களுடன் Tout வரும் போது Tout, Toute இரண்டையும் பயன்படுத்தலாம்.
Elle est toute seule.    அவள் தனியாக இருக்கின்றாள்.
Une robe toute blanche. முழு வெண்மையான சட்டை.
Des robes toutes blanches. முழு வெண்மையான சட்டைகள்.
*ஆனால்*
Des papiers tout blancs. முழு வெண்மையான காகிதங்கள்.

4) *Nom பெயர்ச்சொல்லாக தொழிற்படும்போது*
Le tout = la totalité, l'ensemble
மொத்தமும், முழுமை, ஒருமிப்பு, சேர்க்கை
Donnez - moi le tout.    முழுவதையும் எனக்குத் தாருங்கள்.
Il a examiné le tout.    அவன் முழுவதையும் பரிசீலித்தான்.

5) *Tout*

| | | | |
|---|---|---|---|
| Par tout | எங்கும் | Tout à fait | நிச்சயமாக |
| Rien du tout | ஒன்றுமில்லை | Tout petit | மிகச்சிறிய |
| Plus du tout | பூரணமாகவில்லை | Tout jeune | மிகஇளமையான |
| C'est tout | அவ்வளவுதான் | Tout près | மிகக்கிட்ட |
| Pas du tout | ஒன்றுமில்லை | **Tout doucement** | மிகமெதுவாக |
| Tout à coup | சடுதியாக | | |

# Il y a (அங்கே, இங்கே இருக்கிறது)

Il y a ← *verbe avoir (troisième personne du singulier)*
- y: *adverbe de lieu*
- Il: *pronom impersonnel*

1) Il y a பேச்சுவழக்கில் அதிகம் பயன்படும் ஒரு வெளிப்பாடு ஆனால் எழுத்துவழக்கில பாவிப்பதை தவிர்ப்பது நன்று.
2) பேச்சுவழக்கில் ஓர் வசனத்தின் ஆரம்பத்தில் அதிகம் பாவிக்கப்படும்.
3) நடந்துமுடிந்தஒரு செயலின் காலக்கெடுவைக் குறிப்பதற்கு பாவிக்கப்படும்(வசனத்தொடக்கத்தில் அல்லது இறுதியில்).

## *Affirmative* உடன்பாட்டு வாக்கியம்

Il y a quel qu'un
யாரோ இருக்கின்றார்கள்
Il y a cinq étudiants
ஐந்து மாணவர்கள் இருக்கின்றார்கள்
Il y a une poste là-bas
அங்கே ஒருதபால் கந்தோர் இருக்கின்றது
Il y a un métro près d'ici
இதற்கு அண்மையில் ஒரு மெற்றோ உண்டு
Il y a une mairie devant le métro
மெற்றோவிற்கு முன்னால் ஒரு மாநகரசபை உண்டு
Il y a quelque chose à manger
ஏதாவது சாப்பிடுவதற்கு இருக்கின்றது
Il y a quelque chose à boire
ஏதாவது குடிப்பதற்கு இருக்கின்றது
Il y a une école dans cette rue
இந்த வீதியில் ஒரு பாடசாலை உண்டு

## *Négative* எதிர்மறை வாக்கியம்

Il n'y a personne
இங்கு ஒருவருமில்லை
Il n'y a pas d'étudiant
மாணவரில்லை
Il n'y a pas de poste
தபால் கந்தோர் இல்லை
Il n'y a pas de métro près d'ici
அண்மையில் மெற்றோ இல்லை
Il n'y a pas de mairie devant le métro
மெற்றோவிற்கு முன்னால் மாநகரசபை இல்லை
Il n'y a rien à manger
சாப்பிடுவதற்கு ஒன்றுமில்லை
Il n'y a rien à boire
குடிப்பதற்கு ஒன்றுமில்லை
Il n'y a pas d'école dans cette rue
இந்த வீதியில் பாடசாலை இல்லை

## *L'interrogation* வினா

Est-ce qu'il y a quelqu'un *ou* Y-a-t-il quelqu'un?
இங்கே யாராவது இருக்கின்றார்களா?
Est-ce qu'il y a cinq étudiants?
ஐந்து மாணவர்கள் இருக்கின்றார்களா?
Est-ce qu'il y a une poste là-bas?
அங்கே ஒருதபால்கந்தோர் உண்டா?
Est-ce qu'il y a un métro près d'ici
இதிலிருந்து அண்மையில் ஒருமெற்றோ உண்டா?
Est-ce qu'il y a une mairie devant le métro?
மெற்றோவுக்கு முன்னால் ஒரு மாநகரசபை உண்டா?
Est-ce qu'il y a quelque chose à manger
சாப்பிடுவதற்கு ஏதாவது உண்டா?
Est-ce qu'il y a quelque chose à boire?
குடிப்பதற்கு ஏதாவது உண்டா?
Est-ce qu'il y a une école dans cette rue?
இந்த வீதியில் ஒருபாடசாலை இருக்கின்றதா?

## *La réponse* விடை

Oui, il y a quelqu'un
ஆம், யாரோ ஒருவர் இருக்கின்றார்
Oui, il y en a cinq
ஆம், ஐந்து (மாணவர்கள்) இருக்கின்றார்கள்
Oui, il y en a une là-bas
ஆம், அங்கே ஒன்று (தபால்கந்தோர்) உண்டு
Oui, il y en a un près d'ici
ஆம், இதிலிருந்து அண்மையில் ஒன்று உண்டு
Oui, il y en a une devant le métro
ஆம், மெற்றோவுக்கு முன்னால்ஒன்று(மாநகரசபை)உண்டு
Oui, il y a quelque chose à manger
ஆம், சாப்பிடுவதற்கு (ஏதோ) உண்டு
Oui, il y a quelque chose à boire
ஆம், குடிப்பதற்கு (ஏதோ) உண்டு
Oui, il y en a une dans cette rue
ஆம், இந்தவீதியில் ஒன்று (பாடசாலை) இருக்கின்றது

**காலத்தைக்காட்டும் வாக்கியம்**

1) Il y a une semaine, j'ai vu un beau film.
நான் ஒரு நல்லபடம் பார்த்து ஒருகிழமை (யாகிறது).
2) Il y a trois ans, je suis allé au Srilanka.
நான் இலங்கைக்குப்போய் மூன்றுவருடம் (மாகின்றது).
3) Il a téléphoné il y a une heure.
அவன் தொலைபேசியழைப்பு செய்து ஒரு மணித்தியாலம் (மாகின்றது).
4) Ils se sont mariés il y a un an.
அவர்கள் திருமணம் செய்து ஒருவருடம் (மாகிறது).

குறிப்பு :

1) வசனத்தின் ஆரம்பத்தில் காலத்தை குறிக்கும் சொல் வருமாயின் (,) அடையாளம் இடப்படும்.
உ+ம் (1,2)
2) வசனத்தின் இறுதியில் காலத்தை குறிக்கும் சொல்வருமாயின், ஒருகுறியும் இடத்தேவையில்லை.
உ+ம் (3,4)

# Les structures interrogatives
## வினா வடிவங்கள்

1. பேச்சு மொழியில் தொனியின் மூலம் வசனத்தைக் கேள்வியாக்கலாம்.

உ+ம்

| | |
|---|---|
| Vous allez à Paris? | நீங்கள் பரிசுக்குப் போகின்றீர்களா? |
| C'est votre maison? | இது உங்களுடைய வீடா? |
| Tu viens avec moi? | நீ என்னுடன் வருகின்றாயா? |

2. Est - ce que + Sujet + Verbe இவ் வடிவத்திலும் ஒரு வசனத்தை கேள்வியாக்கலாம்.

உ+ம்

| | |
|---|---|
| Est - ce que vous allez à Paris? | நீங்கள் பரிசுக்குப் போகின்றீர்களா? |
| Est - ce que c'est votre maison? | இது உங்களுடைய வீடா? |
| Est - ce que tu viens avec moi? | நீ என்னுடன் வருகிறாயா? |

3. பயனிலையை எழுவாய்க்கு முன் எழுதுவதன் மூலமும் வினாவாக்கலாம்.

உ+ம்

| | |
|---|---|
| Allez- vous à Paris? | நீங்கள் பரிசுக்குப் போகின்றீர்களா? |
| Est-ce votre maison? | இது உங்களுடைய வீடா? |
| Viens-tu avec moi? | நீ என்னுடன் வருகின்றாயா? |

பொதுவாக பிரதிப்பெயர்ச்சொல் அல்லது ce எழுவாயாக வரும்போதே, இவ்வாறு எழுதலாம். இவ்வாறு பயன்படுத்தும் போது பயனிலையின் இறுதியெழுத்தும் எழுவாயின் முதல் எழுத்தும், உயிரெழுத்தாயின் உச்சரிப்பு இனிமைக்காக இரண்டெழுத்துக்களின் நடுவில் T இடவேண்டும்.

உ+ம்

| | |
|---|---|
| Cherche-t-il un travail? | அவன் ஒரு வேலை தேடுகின்றானா? |
| A-t-elle faim? | அவளுக்குப் பசியா? |
| A-t-il déjà écrit? | அவன் ஏற்கனவே எழுதிவிட்டானா? |

குறிப்பு: தன்மை ஒருமைக்கு இவ்வடிவம் பயன்படுத்துவது குறைவு. ஆனால் பின்வரும் வினைச்சொற்களுடன் இடலாம்.

***Avoir, Etre, Pouvoir, Devoir***

| | |
|---|---|
| Dois - je chanter? | நான் பாட வேண்டுமா? |
| Puis - je partir? | நான் போக முடியுமா? |

**வினாச் சொற்கள்**

***வினாவாக்க பின்வரும் சொற்கள் பயன்படும்.***

| | |
|---|---|
| Qui | யார் |
| Quoi | என்ன |
| Que | என்ன |
| Qu'est-ce que | என்ன |
| Quand | எப்போது |
| Comment | எப்படி |
| Pourquoi | ஏன் |
| Combien | எவ்வளவு, எத்தனை |
| Quel,Quels,Quelle,Quelles | எந்த, எது, எவை, என்ன |
| Où | எங்கே |

*குறிப்பு:*
பேச்சு வழக்கில் வினாச்சொற்களை வசனத்தின் இறுதியிலும் பயன்படுத்தலாம். ஆனால் எழுத்து வழக்கில் வசன ஆரம்பத்திலேயே வினாச்சொற்களை இடுவோம்.

*சில உதாரணங்கள்:*

Où அல்லது Quand உடன் Est-ce que என்ற சொல்லையும் சேர்க்கலாம்.

| | |
|---|---|
| Où est-ce que tu as vu ce film? | நீ எங்கே இந்தப்படத்தைப் பார்த்தாய்? |
| Quand est-ce que partons-nous? | எப்போது நாங்கள் புறப்படுகிறோம்? |

முன்னிடைச் சொற்களுடனும் இவை தொழிற்படும்.

| | |
|---|---|
| Jusqu'où vas-tu? | நீ எங்குவரை போகிறாய்? |
| Avec qui habitent-ils? | அவர்கள் யாருடன் வசிக்கின்றார்கள்? |
| Depuis quand es-tu en France? | நீ எப்போதிலிருந்து பிரான்சில் இருக்கின்றாய்? |

Combien உடன் பெயர்ச்சொல் வரும்போது de இட வேண்டும். ஆனால் பெயர்ச்சுட்டு இடக்கூடாது.

| | |
|---|---|
| Combien de chaises a-t -elle? | அவள் எத்தனை கதிரைகள் வைத்திருக்கின்றாள்? |
| Combien de couleurs? | எத்தனை நிறங்கள்? |

*ஆனால்*

| | |
|---|---|
| Combien coûte cette maison? | இந்த வீடு என்ன பெறுமதி? |

***Qui*** யார்

உயர்திணைக்குப் பயன்படும்.
எழுவாயாக, செயப்படுபொருளாகத் தொழிற்படும்.
முன்னிடைச் சொல்லுடன் வரும் போது மாற்றமில்லை.
*உ+ம்:* de qui → de qui

***Que*** **என்ன**

அஃறிணைக்குப் பயன்படும்.
செயற்படுபொருளாகத் தொழிற்படும்.
முன்னிடைச்சொல்லுடன் வரும் போது quoi ஆகமாறும்.
*உ+ம்:* de que → de quoi

| | |
|---|---|
| **Qui** (Sujet) a fait ça? | யார் அதைச் செய்தது? |
| **Qui** (COD) avez - vous aidé? | நீங்கள் யாருக்கு உதவினீர்கள்? |
| **De qui** (COI) avez - vous parlé? | நீங்கள் யாரைப்பற்றி பேசினீர்கள்? |
| **De quoi** (COI) avez - vous parlé? | நீங்கள் எதைப்பற்றி பேசினீர்கள்? |
| *இதில் COD நேரடிச்செயப்படுபொருள்* | *COI நேரடியற்ற செயப்படுபொருள்* |

| | **உயர்திணை** | **அஃறிணை** |
|---|---|---|
| *எழுவாய்* | Qui est -ce qui | Qu'est -ce qui |
| *செயப்படுபொருள்* | Qui est -ce que | Qu'est -ce que |
| *முன்னிடைச்சொல்* | à, de, avec qui | à, de, avec quoi |

***Qui est - ce qui*** a cassé cette machine? யார் இந்த இயந்திரத்தை உடைத்தது?
*Sujet*
***Qu' est - ce qui*** ne marche pas? எது இயங்காது?
*Sujet*
Qui est - ce que vous avez vu? நீங்கள் யாரைப்பார்த்தீர்கள்?
Qu' est - ce que vous avez vu? நீங்கள் எதைப்பார்த்தீர்கள்?
A qui as-tu écrit? நீ யாருக்கு எழுதினாய்?
A quoi penses-tu? நீ எதைப்பற்றி நினைக்கின்றாய்?

***Quoi***

1. ஒருவர் கூறியது சரியாக விளங்காவிடின் Quoi? (என்ன?) என்று கேட்போம். இச் சொல் மரியாதைக்குறைவானது. பெரியவர்களை அல்லது மரியாதையுடன் கேட்கும் போது comment என்ற சொல்லைப் பாவிக்க வேண்டும்.

2. பொதுவாக Préposition உடன் என்ன, என்று வரும்போது Quoi ஐ பயன்படுத்த வேண்டும்.
A quoi pensez-vous? நீங்கள் எதை யோசிக்கின்றீர்கள்?
Dans quoi as-tu mis ce papier? நீ எதற்குள் இந்தப்பேப்பரை வைத்தாய்?

3. ஒரு வாக்கியத்தில் தனியாகவும் பயன்படும்.
Quoi de neuf? என்ன புதினம்?
Quoi alors? அப்ப என்ன?

# Les prépositions
## முன்னிடைச்சொற்கள்

முன்னிடைச்சொல் ஓர்மாறாத சொல்லாகும். இது பெயர்ச்சொல், பிரதிப்பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றை இணைக்க அல்லது இரண்டிற்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்தப் பயன்படும். எமது தமிழ்மொழியில் முன்னிடைச்சொற்கள் வேற்றுமைஉருபுகள் ஆகும். தமிழில் வேற்றுமை உருபுகள் பெயர்ச்சொற்களுக்கு பின்னால் இடுவோம்.

*நாய் + உடன் = நாயுடன்*

ஆனால் பிரஞ்சுமொழியில் முன்னிடைச்சொற்களை பெயர்ச்சொற்களுக்கு முன்னால் இடுவோம். தமிழில் சொற்கள் வேற்றுமைஉருபுடன் சேர்ந்து மாற்றமடைகின்றது. ஆனால் பிரஞ்சுமொழியில் முன்னிடைச்சொல் ஒருமாற்றமும் அடையாது.

Avec + le chien = avec le chien

### முன்னிடைச்சொற்களின் பயன்பாடு

பெயர்ச்சொல், பிரதிப்பெயர்ச்சொல், வினைச்சொல், வினையுரிச்சொல், பெயருரிச்சொல் போன்றவற்றை நிறைவு செய்வதற்கு அல்லது சேர்ப்பதற்கு முன்னிடைச்சொற்கள் உதவும்.

| | | |
|---|---|---|
| *வினைச்சொல்லுக்கு* | Il pense à son pays. | அவன் தனது நாட்டை நினைக்கின்றான். |
| *பெயர்ச்சொல்லுக்கு* | La pomme de terre. | உருளைக்கிழங்கு |
| *பிரதிப்பெயர்ச்சொல்லுக்கு* | Un de vos amis. | உங்களுடைய நண்பர்களில் ஒருவர். |
| *வினையுரிச்சொல்லுக்கு* | Rien à faire. | செய்வதற்கு ஒன்றுமில்லை. |
| *பெயர் உரிச்சொல்லுக்கு* | Facile à dire. | சொல்வது சுலபம். |

*குறிப்பு* : முன்னிடைச்சொற்கள் பல அர்த்தங்களை உடையன.
*உ+ம்* : de - இருந்து, பற்றி, உடைய.....

## முக்கிய முன்னிடைச்சொற்கள்

à - இல், க்கு
Après - பிறகு, பின்பு
Avant - முன்னர்
Avec - உடன்
Chez - வீட்டில், வீட்டிற்கு
Contre - எதிராக
Dans - உள்ளே
De - இருந்து, உடைய, பற்றி
Depuis - இருந்து
Derrière - பின்னால்
Dès - இருந்து, உடனே
Devant - முன்னால்
Durant - போது, அளவில், காலத்தில்
Entre - இடையில்
Envers - மேல், மட்டில், மீது
Jusque - வரை
Par - ஊடாக, மூலம்
Parmi - மத்தியில்
Pendant - பொழுது
Outre - மேலும், அப்பால்
Pour - ஆக, க்கு
Sans - இல்லாமல்
Sauf - தவிர
Selon - போல, படியே, தக்கபடி
Sous - கீழே
Suivant - பிரகாரம், படியே
Sur - மேலே
Vers - நோக்கி
Voici - இதோ
Voilà - அதோ

## கூட்டு முன்னிடைச்சொற்கள்

à cause de - காரணமாக
à côté de - பக்கத்தில், அருகில்
Afin de - அதற்காக
Au milieu de - மத்தியில்
Au-dessus de - மேலாக
Au-dessous de - கீழே, கீழாய்
En raison de - பற்றி, குறித்து, காரணமாய்
En face de - எதிராக, முன்னால்
D'après - படியே, மாதிரியாய்
Face à - எதிராக
Faute de - இன்மையால், இல்லாமையினால்
Grâce à - காரணமாக (நன்மை)
Hors de - நீங்கலாக, தவிர, வெளியே
Jusqu'à - வரை
Loin de - தூரத்தில்
Par rapport à - பார்க்கிலும், மட்டில்
Près de - கிட்ட
Quant à - மட்டில்
Auprès de - கிட்ட, அருகில்

### சிலமுன்னிடைச்சொற்களின் பயன்பாடுகள்

பெயர்ச்சொல், வினைச்சொல், பெயருரிச்சொல், வினையுரிச்சொல் ஆகியவற்றிற்கு முன்னால் இவற்றையிடலாம்.

**à**

1. *இடத்துடன்*

| | |
|---|---|
| Habiter à Paris | பரிசில் வசித்தல் |
| Habiter au SriLanka | இலங்கையில் வசித்தல் |
| Habiter aux Pays Bas | ஒல்லாந்தில் வசித்தல் |

ஆனால் பெண்பால் நாடுகளாயின்...
à இற்குப் பதிலாக en இடுவோம்

| | |
|---|---|
| Habiter en Inde | இந்தியாவில் வசித்தல் |
| Aller à l'école | பாடசாலைக்குச் செல்லுதல் |
| être à l'hôpital | வைத்தியசாலையில் இருத்தல் |

2. நேரத்துடன், காலத்துடன்

| | |
|---|---|
| Arriver à six heures | ஆறுமணிக்கு வந்தடைதல் |
| Aller à la gare à midi | புகையிரதநிலையத்திற்கு நண்பகலில் போகுதல் |
| Venir à l'heure | நேரத்திற்கு வருதல் |

Les oiseaux reviennent au printemps வசந்தகாலத்திற்குப் பறவைகள் மீண்டும்வருகின்றன

3. உடையது

| | |
|---|---|
| Ce livre est à moi | இந்த புத்தகம் என்னுடையது |
| C'est à lui | இது அவனுடையது |

4. Jouer à உடன் எப்போதும் ஒரு விளையாட்டு இடவேண்டும்.

| | |
|---|---|
| Jouer au football | உதைபந்து விளையாடுதல் |
| Jouer aux cartes | சீட்டு விளையாடுதல் |

5. Tenir à என்று வரும்போது விரும்புதல் என்பதைக்குறிக்கும்.

| | |
|---|---|
| Tenir à quelque chose | பொருளை விரும்புதல் |
| Tenir à sa famille | தனது குடும்பத்தை விரும்புதல் |

6. சிலபெயர் உரிச்சொற்களுடன்

| | |
|---|---|
| Etre prêt à partir | புறப்படத் தயாராயிருத்தல் |
| C'est facile à faire | அது செய்வதற்குச் சுலபம் |

7.

| | |
|---|---|
| à pied | காலால் நடத்தல் |
| à cheval | குதிரையில் |
| à vélo | சைக்கிளில் |

8. பயன்படும் பொருளைக்குறிப்பதற்கு

| | |
|---|---|
| Une tasse à thé | தேனீர் அருந்தப் பயன்படும் கோப்பை |
| Une cuillère à soupe | சூப் அருந்தப் பயன்படும் கரண்டி |

9. வரை என்பதைக்குறிப்பதற்கு

| | |
|---|---|
| De Paris à Colombo | பாரிசிலிருந்து கொழும்புவரை |
| De 30 à 40 livres | (30, 40 புத்தகங்கள் ஏறத்தாழ) 30லிருந்து 40 புத்தகம்வரை |

10. இருசொற்களை இணைப்பதற்கு

| | |
|---|---|
| Petit à petit | கொஞ்சம் கொஞ்சமாக |
| Tout à l'heure | சிறிதுநேரத்திற்கு முன் அல்லது பின் |

**De**

1. இருந்து
   a) Venir de Rome — ரோமிலிருந்து வருதல்
   Venir d'Italie — இத்தாலியிலிருந்து வருதல்
   Venir de Suède — சுவீடனிலிருந்து வருதல்
   Venir des Etats-Unis — அமெரிக்காவிலிருந்து வருதல்
   b) Sortir de l'école — பாடசாலையிலிருந்து வெளியேறுதல்
   Sortir du bureau — அலுவலகத்திலிருந்து வெளியேறுதல்

2. உடைய
   Le livre de Ravi — ரவியினுடைய புத்தகம்
   La voiture de mes amis — எனது நண்பர்களின் கார்

3. Jouer என்ற வினைச்சொல்லுடன் இசைக்கருவி வரும்போது
   Jouer du piano — பியானோ வாசித்தல்
   Jouer de la guitare — கிட்டார் அடித்தல்
4. சிலவினைச்சொற்களுடன் பெயர்ச்சொற்களை இணைக்க
   Mourir de faim — பசியில் இறத்தல்
   Trembler de peur — பயத்தால் நடுங்குதல்

5. வினைச்சொற்களுடன் வினைச்சொற்களை இணைப்பதற்கு
   Décider d'aller à — செல்லத்தீர்மானித்தல்
   Finir de manger — சாப்பிட்டுமுடித்தல்

6. சிலபெயர் உரிச்சொற்களுடன்
   Il est dangereux de fumer — புகைத்தல் ஆபத்தானது
   Je suis content de vous voir — உங்களைப் பார்ப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

7. பற்றி
   Parler de quelqu'un — ஒருவரைப்பற்றி பேசுதல் (கதைத்தல்)
   Penser de son travail — தனது வேலையைப்பற்றி நினைத்தல்

8. பகுதிப்பெயர்ச்சுட்டில்
   De l'eau — தண்ணீர் (ஒருபகுதி)

9. கொள்பொருளைக் குறிக்க
   Une tasse de thé — ஒரு கோப்பை தேநீர் (ஒரு கப் தேநீர்)
   Une bouteille de vin — ஒரு போத்தல் வைன்

10. இருந்து
    De mai à août — மேயிலிருந்து ஓகஸ்ட்வரை
    Du lundi au vendredi — திங்களிலிருந்து வெள்ளிவரை

**Pour**

1) Partir உடன் இடம்பற்றி எழுதும்போது எப்போதும் pour இடுவோம்.
   Partir pour Paris — பாரிசிற்கு செல்லுதல் (புறப்படுதல்)
   Partir pour la Suisse — சுவிஸ்லாந்திற்கு புறப்படுதல்
   Partir pour faire son marché — சந்தைக்குப் புறப்படுதல் (செல்லுதல்)

2) க்கு
   Partir pour trois jours — மூன்றுநாளைக்குச் செல்லுதல்
   Acheter pour quelqu'un — ஒருவருக்கு வாங்குதல்
   Venir pour aider — உதவுவதற்கு வருதல்

**Chez** (வீட்டில், வீட்டிற்கு)

இச்சொல் வீட்டில் அல்லது வீட்டிற்கு என்ற பொருள்படும். இதனுடன் ஒரு நபரை இடலாம்.

Chez nous எங்கள் வீட்டில்
Chez Raja ராஜா வீட்டில்
Chez le professeur ஆசிரியர் வீட்டில்
Chez le coiffeur சிகையலங்காரம் செய்பவரின் வீட்டிற்கு (சலூனுக்கு)
ஆனால் இங்கு சிகையலங்காரம் செய்யும் இடத்திற்கு (சலூனில்) என்று பொருள்படும்.
பொதுவாக Chez உடன் ஒருதொழிலை இடும்போது தொழில்செய்யும் இடத்தைக்குறிக்கும்.
Chez le docteur வைத்தியர் அலுவலகத்திற்கு

**Jusque** வரை

இதனுடன் பலசொற்கள் சேரும்.

Jusqu'à Paris பாரிஸ் வரை
Jusque chez Raja ராஜாவீடு வரை
Jusqu'ici இங்கே வரை
Jusqu'où எங்கே வரை

**En**

1. ஒருபெண்பால் நாட்டுடன் (Aller, Etre போன்ற வினைச்சொற்களுடன்)
   Aller en Inde இந்தியாவிற்குச் செல்லுதல்

2. மாதம், வருடம், காலம் குறிக்கும்போது
   En 1994 1994ம் ஆண்டில்
   En septembre செப்டம்பரில்
   En automne இலையுதிர்காலத்தில்
   ஆனால் au printemps வசந்தகாலத்தில்

3. பிரயாணம் செய்யும் வாகனத்தைக் குறிக்கும்போது இயந்திரமாயின்
   En voiture காரில்
   En avion விமானத்தில்
   ஆனால் à cheval குதிரையில்

4. அதனால் செய்யப்பட்டது என்பதைக் (உற்பத்திப்பொருளை) குறிப்பதற்கு
   En laine கம்பளியினால்
   En bois மரத்தினால்
   En soie பட்டினால்

5. ஒரு எழுவாய் ஒரேநேரத்தில் இருசெயல்களைச் செய்தால்
   Parler en marchant நடந்துகொண்டு பேசுதல்
   Ecrire en écoutant கேட்டுக்கொண்டு எழுதுதல்

6. சில பெயர்ச்சொற்களுடன்
   Arriver en avance நேரத்திற்கு முன்னர் வந்தடைதல்
   Arriver en retard தாமதமாக வந்தடைதல்

7. சில வினைச்சொற்களுடன்
   Etre en colère கோபத்தில் இருத்தல்
   Etre en larmes கண்ணீரில் இருத்தல் (அழுதுகொண்டு இருத்தல்)

**La relation entre de** *et* **à - de** ற்கும் **à** ற்குமிடையிலான தொடர்பு
De - marque l'origine ou le point de départ ஒன்றின் மூலத்தை அல்லது புறப்பட்ட இடத்தைக்குறிக்க
à - marque la direction, le point d'arrivée திசையை அல்லது வந்துசேருமிடத்தைக்குறிக்க
*ex:* De 1989 à nos jours (temps) *1989 இலிருந்து இற்றைவரை (காலம்)*

De Paris à Madras (lieu) பாரிசிலிருந்து சென்னைவரை (இடம்)

**De *et* Depuis**

De - point de départ dans l'espace ஆரம்ப இடத்தைக் குறிக்கும்
Depuis - point de départ dans le temps ஆரம்பகாலத்தைக் குறிக்கும்
Je regarde le ciel de ma fenêtre. நான் யன்னலில் இருந்து வானத்தைப் பார்க்கின்றேன்.
Mon pays a changé depuis mon enfance. எனது பிள்ளைப்பிராயத்திலிருந்து எனது நாடு மாறிவிட்டது.

**à *et* pour**

à - direction (திசை)
pour - la fin d'un mouvement (இயக்கத்தின் முடிவு)
Partir pour Paris

**à *et* chez**

Chez - personne (நபர்)
à - lieu de la profession (தொழில் செய்யும் இடம்)
Aller chez le médecin
}
Aller au cabinet du médecin. வைத்தியரின் அலுவலகத்திற்குச் செல்லுதல்

**à *et* dans**

à - ஒருஇடத்தில் (புள்ளி மாதிரி)
Dans - ஒரு இடத்திற்குள்ளே
Je suis à Colombo. நான் கொழும்பில் இருக்கின்றேன்.
Je suis dans Colombo. நான் கொழும்புக்குள் இருக்கின்றேன்.

**à , en**

Aller à la mer கடல்எல்லை மட்டும் செல்லுதல்
Aller en mer (par bateau) கடலால் செல்லுதல்

**Contre** எதிராக

Il est contre moi. அவன் எனக்கெதிரானவன்
Tu restes contre le mur. நீ சுவருக்கு எதிராக நிற்கின்றாய்

**Dans** உள், உள்ளே

Elle est dans la chambre. அவள் அறைக்குள்ளே நிற்கின்றாள்.
Tu mets du sucre dans cette boîte. நீ இந்தப்பெட்டிக்குள் சீனியை இடுகின்றாய்.
Il finira dans trois jours. அவன் மூன்றுநாட்களுக்குள் முடித்துவிடுவான்.

**Depuis** இருந்து

J'attends depuis cinq heures. நான் ஐந்துமணியிலிருந்து காத்திருக்கின்றேன்.
Il est en France depuis mille neuf cent quatre vingt-sept. அவன் 1987 இலிருந்து பிரான்சில் இருக்கின்றான்.

**Derrière** பின்னால்

Le magasin est derrière la gare. புகையிரதநிலையத்திற்குப் பின்னால் கடை இருக்கின்றது.
Attention, il y a une voiture derrière toi. கவனம், உனக்குப்பின்னால் ஒரு கார்.

**Entre** இடையில்

L'herbe pousse entre les pierres. புல் கற்களுக்கிடையில் முளைக்கும்.
Vous venez entre 10 et 11 heures. நீங்கள் 10 க்கும் 11 மணிக்குமிடையில் வாருங்கள்.
Il est entre la vie et la mort. அவன் வாழ்வுக்கும் சாவுக்குமிடையில் இருக்கின்றான்.

**Envers**

Envers et contre tout, nous nous battons pour notre pays.

*என்னதான் எதிர்த்தாலும் நாங்கள் எங்கள் நாட்டிற்காகப் போராடுவோம்.*

**Jusque** *வரை*

Jusqu'à *வரை*

Jusque-là *அங்கே வரை*

Ce train va jusqu'à Paris. *இந்தப்புகையிரதம் பாரிஸ்வரை போகின்றது.*

Venez jusque chez nous. *எங்களுடைய வீடுவரை வாருங்கள்.*

Je ne te quitterai pas jusqu'à la mort. *இறப்புவரை உன்னைவிட்டு பிரியமாட்டேன்.*

**Par** *ஊடாக, மூலம்*

Par avion *விமானம் மூலம்*

Par coeur *மனத்தால், இதயத்தால்*

Il passera par la suisse. *அவன் சுவிஸ்லாந்து ஊடாகக் கடப்பான்*

Elle jette un coup d'oeil par la porte.

*அவள் கதவூடாக ஒரு கண்ணோட்டம் செலுத்துகின்றாள்.*

**Parmi** *மத்தியில்*

Leur maison est parmi les arbres. *மரங்களுக்கு மத்தியில் அவர்களுடைய வீடு உள்ளது.*

Qui peut répondre à cette question, parmi vous?

*உங்களுக்கு மத்தியில் யாரால் இந்தக்கேள்விக்குப் பதில் கூறமுடியும்?*

**Pendant**

Pendant les vacances, nous sommes allés à la plage.

*விடுமுறையின்போது, நாங்கள் கடற்கரைக்குச் சென்றோம்.*

Il n'a rien fait pendant le week-end.

*வாரவிடுமுறையின் போது அவன் ஒன்றும் செய்யவில்லை.*

**Outre** *மேலும், அங்காலே, அப்பால்*

Outre-mer *கடலுக்கு அப்பால்*

Outre mon frère, il y avait trois amis.

*எனது சகோதரனைவிட, மூன்று நண்பர்கள் இருந்தனர்.*

**Sans** *இல்லாமல்*

Je n'existe pas sans toi. *நீயில்லாமல் நானில்லை.*

Je ferai sans votre aide. *உங்களுடைய உதவியில்லாமல் நான் செய்வேன்.*

**Sauf** *தவிர*

Je suis là sauf le lundi. *திங்கள் தவிர நான் இங்கிருப்பேன்.*

Je n'aime personne sauf toi. *உன்னைத்தவிர எனக்கு ஒருவரிலும் விருப்பமில்லை.*

**Selon**

Il tourne selon le vent. *அது காற்றுக்கேற்ப திரும்புகின்றது.*

**Sous**

Le chien est sous le lit. *நாய் கட்டிலுக்குக் கீழே இருக்கின்றது.*

La ville est sous le canon des ennemis. *எதிரிகளின் பீரங்கியின்கீழ் நகரம் இருக்கின்றது.*

Sous les yeux. *கண்ணுக்கு முன்னால்*

Mettre sous enveloppe. *கடிதஉறையினுள் இடுதல்*

**Suivant = selon**

Suivant la loi. *சட்டப்படி*

Suivant son opinion. *அவனுடைய அபிப்பிராயப்படி*

**Sur** மேல், மேலே

Il met son chapeau sur la tête. அவன் தலைமீது தன்னுடைய தொப்பியைவைக்கின்றான்.
La clé est sur la porte. திறப்பு கதவில் உள்ளது.
Un doigt sur les lèvres. உதட்டின் மேல் ஒருவிரல் (அமைதியைக்குறிப்பதற்கு)

**Vers** நோக்கி, போல்

Revenez vers cinq heures. ஐந்துமணிபோல மீண்டும் வாருங்கள்.
Il vient vers moi. அவன் என்னை நோக்கி வருகின்றான்.

**Voici** இதோ

Voici ma fille. இதோ எனதுமகள்.
Voici des fruits, des fleurs. இதோ பூக்கள், பழங்கள்

**Voilà** அதோ

Voilà un brave homme. அதோ ஒருபுத்தியுள்ள மனிதன்.
Voilà qui est bien. நல்லது அதோ.

**à cause de** காரணமாக (தீமைக்கு அல்லது சாதகமாயிராவிடின்)

à cause de la pluie, nous n'avons pas joué au football.
மழைகாரணமாக நாங்கள் உதைபந்தாட்டம் விளையாடவில்லை.
à cause de toi, nous sommes en retard.
உன்னால்தான், நாங்கள் தாமதமாக இருக்கின்றோம்.

**à côté de** பக்கத்தில், அருகில்

Il marche à côté de vous. அவன் உங்களுக்கு அருகில் நடக்கின்றான்.
Ma maison est à côté de la gare. என்னுடையவீடு புகையிரதநிலையத்திற்குப் பக்கத்தில் உள்ளது.

**Afin de + infinitif**

Afin de gagner un peu d'argent, il a fait cela.
சிறிது பணம் உழைப்பதற்காக அவன் இதைச்செய்தான்.
Afin de pouvoir payer votre salaire, envoyez - nous votre numéro de compte.
உங்களுடைய சம்பளத்தைச்செலுத்துவதற்கு, உங்களுடைய கணக்கு இலக்கத்தை எங்களுக்கு அனுப்புங்கள்.

**Au milieu de + nom**

Il est au milieu des gens. சனங்களுக்கு மத்தியில் அவன் நிற்கின்றான்.
Elle vit au milieu du danger. அவள் ஆபத்திற்கு மத்தியில் வாழ்கின்றாள்.

**Au-dessus de + nom**

L'avion vole au-dessus de la mer. விமானம் கடலுக்கு மேலால் பறக்கின்றது.
Il est au-dessus de tout soupçon அவன் எல்லா சந்தேகங்களினதும் மேலாக இருக்கின்றான்.

**Au-dessous de + nom**

vous dites que cet objet est au-dessous de sa valeur.
இந்தப்பொருள் அதனுடையபெறுமதியிலும் விடக்குறைவானதென்று நீங்கள் சொல்கின்றீர்கள்.

**En raison de + nom**

En raison de la neige, le trafic est interrompu.
பனி காரணத்தினால் போக்குவரத்து இடைநிறுத்தப்பட்டுள்ளது.

**En face de**

Le magasin est en face de la gare. கடை புகையிரதநிலையத்தின் முன்னால் உள்ளது.
Je suis en face de toi. நான் உனக்கு முன்னால் நிற்கின்றேன். (முகம் ஒன்றையொன்று நோக்கியபடி)

**D'après**

D'après moi, Il a tort — என்னைப்பொறுத்தவரை அவன் நியாயமற்றவன்.

**Face à**

Il s'assied face à la mer. — அவன் கடலுக்கு எதிராக அமர்ந்திருக்கின்றான்.

**Faute de**

Faute d'argent, je suis allé à pied.
பணம் இல்லாததினால், நான் நடந்து சென்றேன்.
*குறிப்பு : Faute de + (nom) article இடக்கூடாது*

**Grâce à** (நன்மையான செயலுக்கு இச்சொல் பயன்படும்)

Grâce à toi, j'ai réussi. — உன்னால்தான் நான் வெற்றியடைந்தேன்.

**Hors de**

Il saute hors de l'eau. — அவன் தண்ணீருக்கு வெளியே பாய்கின்றான்.
Elle habite hors de Paris. — அவள் பாரீசுக்கு வெளியே வசிக்கின்றாள்.

**Jusqu'à**

Jusqu'à aujourd'hui, je n'ai pas de problème.
இன்றுவரை (இற்றைவரை), எனக்குப் பிரச்சனை இல்லை.
Il chante jusqu'à la fin. — அவன் இறுதிவரை பாடுகின்றான்.

**Loin de**

Colombo est loin de Paris. — கொழும்பு பாரீசிலிருந்து தூரத்தில் உள்ளது.
Ce n'est pas loin de chez moi. — அது எனது வீட்டிலிருந்து தூரத்தில் இல்லை.

**Par rapport à**

Par rapport à l'autre, ce jouet est moins cher.
இந்த விளையாட்டுப்பொருள் மற்றதிலும்விட விலைகுறைவானது.

**Près de**

Il est près de la porte. — அவன் கதவுக்கு அருகாமையில் உள்ளான்.
Venez près de moi. — எனக்கு அருகில் வாருங்கள்.

**Quant à**

Quant à cela, je ne sais rien. — அதையிட்டு எனக்கு ஒன்றும் தெரியாது.

**Auprès de**

Assieds-toi auprès de moi. — எனக்கு மிகஅருகில் இரு.

# L'adverbe

## வினைஉரிச்சொல் அல்லது வினைச்சொல்லை விசேடிக்கும்சொல்

வினை உரிச்சொல் ஒரு மாறாத சொல்லாகும். இது பெயருரிச்சொல், வினைச்சொல் அல்லது இன்னொரு வினையுரிச்சொல்லின் கருத்தை மாற்றும்.

| | | |
|---|---|---|
| D'un verbe | Il mange *bien* | அவன் *நன்றாகச்* சாப்பிடுகின்றான். |
| D'un adjectif | *Très* belle journée | *மிக* அழகான நாள். |
| D'un autre adverbe | *Très* bien | *மிக்க* நன்று. |

வினையுரிச்சொற்கள் தனிச்சொல்லாக அல்லது கூட்டுச்சொற்களாக இருக்கும்.

Le mot simple - ici , assez, bien
தனிச்சொல் இங்கே, போதிய, நன்றாக
Le mot composé - à peu près, tout de suite
கூட்டுச்சொற்கள் கிட்டத்தட்ட, உடனடியாக

வினைஉரிச்சொற்கள் மாறிலியாகும். இதற்கு பால், எண் இல்லை.

Il est *trop* petit. அவன் மிகச் சிறியவன்.
Ils sont *trop* petits. அவர்கள் மிகச் சிறியவர்கள்.

## *Les adverbes peuvent exprimer*

**வினையுரிச்சொல் பின்வரும் அர்த்தங்களை வெளிப்படுத்தும்**

| | |
|---|---|
| La manière | lentement, vite |
| விதம் | ஆறுதலாக, வேகமாக |
| La quantité | beaucoup, assez |
| எண்ணிக்கை | நிறைய, போதிய |
| L'intensité | très, tant |
| மிகைப்படுத்தப்பட்ட | மிக, அத்தனை (மிக) |
| La comparaison | autant, plus |
| ஒப்பீடு | அவ்வளவு, அதிக |
| Le temps | ensuite, autrefois |
| காலம் | பின்தொடர்ந்து, முன்னொருகாலத்தில் |
| Le lieu | là, ailleurs |
| இடம் | அங்கே, வேறெங்கிலும் |
| L'affirmation | oui, certainement |
| நிச்சயம் | ஆம், நிச்சயமாக |
| La négation | non, pas du tout |
| எதிர்மறை | இல்லை, முற்றாகவில்லை |
| L'opinion | sans doute, apparemment |
| எண்ணம், கருத்து | சந்தேகமில்லாமல், போல, சாயலாக |
| L'interrogation | quand?, où?, comment? |
| வினா | எப்போது, எங்கே, எப்படி |

1) ment இல் முடியும் வினையுரிச்சொற்களை ஆக்கும்முறை
பொதுவாக பெண்பால் ஒருமை பெயர் உரிச்சொல்லிற்கு ment சேர்ப்பதன் மூலம் வினையுரிச்சொல்லை உருவாக்கலாம். பெயர் உரிச்சொல் மெய்எழுத்தில் முடிந்தால் மட்டுமே மேற்கூறியவாறு மாற்றமுடியும்.
*Adjectif + e+ ment*

| | | | |
|---|---|---|---|
| lent *(masculin)* | lente *(féminin)* | lentement | ஆறுதலாக |
| direct | directe | directement | நேரடியாக |

2) பெயர் உரிச்சொல் e இல் முடிந்தால்
*Adjectif + ment*

rapide rapidement விரைவாக

3) e தவிர்ந்த வேறு உயிர்எழுத்தில் முடிந்தால்
*Adjectif + ment*

vrai vraiment உண்மையாக
poli poliment மரியாதையாக

4) ent, ant இல் முடியும் பெயர்உரிச்சொற்கள்
ent - emment
ant - amment

prudent - prudemment கவனமாக
suffisant - suffisamment போதுமளவு
*குறிப்பு : சிலசொற்கள் விதிவிலக்கானவை*
gentil - gentiment அன்பாக, கருணையாக
impuni - impunément தண்டிக்காமல்

ment இல் முடியும் சொற்கள் யாவும் வினையுரிச்சொற்கள் அல்ல.
*ex :* Le médicament மருந்து
Le vêtement உடுப்பு

## *Place de l'adverbe*
### வினையுரிச்சொல்லின் இடம்

- பொதுவாக வினைச்சொல்லுக்குப் பின் வினையுரிச்சொல்லை இடுவோம்.
Il parle bien le français. அவன் நன்றாக பிரஞ்சு கதைக்கின்றான்.
Tu fais vite. நீ விரைவாகச் செய்கின்றாய்.

- கூட்டுக்காலங்களின் போது உதவிவினைச்சொல்லுக்கும் இறந்தகால வினைஎச்சத்திற்கும் இடையில் இடுவோம்.
Il a bien bu. அவன் நன்றாகக் குடித்தான்.
J'ai tout compris. எனக்கு எல்லாம் விளங்கியது.

ஆனால் வினைஎச்சத்திற்குப் பின்னால் சில வினையுரிச்சொற்கள் (பல அசையுள்ள - Polysyllabe - சொற்கள்) இடலாம்.
Il l'a fait facilement அவன் அதை இலகுவாகச் செய்தான்.
பொதுவாக இடத்தைக்குறிக்கும் வினைஉரிச்சொற்களை வினை எச்சத்துக்கு பின்னே இடுவோம்.
Il est allé ailleurs அவன் வேறு இடம் சென்றான்.

ex : Mal ஒரு அசையுள்ளசொல்
Beaucoup இரு அசையுள்ளசொல்

## *Les adverbes de manière - comment*

| | | |
|---|---|---|
| bon<br>நல்ல | cher<br>விலையான | faux<br>பிழையான |
| fort<br>பலமாக | juste<br>சரியாக | ainsi<br>அப்படி |
| mieux<br>நன்றாக | aussi<br>கூட | exprès<br>வேண்டும் என்று |
| bien<br>நல்ல | comment<br>எப்படி | vite<br>விரைவாக |
| gratis<br>இலவசமாக | mal<br>பிழையாக | calmement<br>அமைதியாக |
| plutôt<br>அதிகபட்சம் | prudemment<br>கவனமாக | |
| méchamment<br>கோபமாக | gravement<br>கடினமாக | |

**ஒருசம்பவத்தை தொடர்ச்சியாக விளக்குவதற்கு இச்சொற்களைப்பாவிக்கலாம்**

| | | |
|---|---|---|
| auparavant<br>முன்னரே | premièrement<br>முதலாவதாக | d'abord<br>முதலில் |
| dernièrement<br>இறுதியில் | de suite<br>உடனடியாக,அடுத்து | deuxièmement<br>இரண்டாவதாக |
| ensuite<br>தொடர்ந்து | | |

## *Les adverbes de lieu - où*

| | | |
|---|---|---|
| à droite | là | dessous |
| வலதுபக்கமாக | அங்கே | கீழ் |
| à gauche | là - bas | dessus |
| இடதுபக்கமாக | அதற்கப்பால் | மேல் |
| ailleurs | en bas | ici |
| வேறெங்கிலும் | கீழே | இங்கே |
| au-delà | en haut | loin |
| அங்காலே, அப்பால் | மேலே | தூரம் |
| devant | dedans | nullepart |
| முன்னாலே | உள்ளே | ஒரு இடமுமில்லை |
| où | dehors | partout |
| எங்கே | வெளியே | எங்கும் |
| autour | hors | près |
| சுற்றி | வெளியே | கிட்ட |
| alentour | n'importe où | |
| சுற்றி, சூழ்ந்துள்ள | எங்கேயாவது | |

## *Les adverbes de temps*

| | | |
|---|---|---|
| après | désormais | aujourd'hui |
| பிறகு | தற்போதிலிருந்து | இன்று |
| encore | auparavant | ensuite |
| மேலும் | முன்னரே | தொடர்ந்து |
| autrefois | jadis | avant-hier |
| முன்னர் | முன்னர் | நேற்றுமுதல்நாள் |
| parfois | bientôt | puis |
| எப்போதாவது | வெகுவிரைவில் | பிறகு |
| demain | alors | hier |
| நாளை | ஆகவே | நேற்று |
| quand | déjà | enfin |
| எப்போது | ஏற்கனவே | இறுதியில் |
| jamais | soudain | souvent |
| ஒருபோதுமில்லை | திடீரென | அடிக்கடி |
| tard | tôt | toujours |
| தாமதமாக | சீக்கிரமாக | எப்போதும் |
| tout à l'heure | tout de suite | longtemps |
| கொஞ்சநேரத்தில் | உடனடியாக | வெகுகாலமாக |
| depuis | pendant | de temps en temps |
| இருந்து | பொழுது | சிலவேளை |
| dorénavant | tout à coup | rarement |
| இனிமேல், இனி | சடுதியாக | அரிதாக |

## *Les adverbes de négation*

| | | |
|---|---|---|
| non | nullement | ne |
| இல்லை | இல்லை | இல்லை |
| pas du tout | ne ... pas | ne plus |
| பூரணமாக இல்லை | இல்லை | இப்போது இல்லை |
| rien | jamais | ne que |
| ஒன்றும் இல்லை | ஒருபோதுமில்லை | மட்டும் |

## *Les adverbes d'opinion*

| | | |
|---|---|---|
| à peu près | environ | peut-être |
| கிட்டத்தட்ட | அண்ணளவாக | சிலவேளை |
| probablement | par hasard | |
| நம்பகமாக | அதிர்ஷ்டவசமாக | |

## *Les adverbes de quantité*

| | | |
|---|---|---|
| assez | autant | beaucoup |
| போதுமான | அதேயளவான | நிறைய |
| moins | entièrement | plus |
| குறைய | முற்றாக | கூட, அதிகம் |
| tout | trop | tellement |
| முழுக்க | அளவுக்கதிகமாக | மிக |
| à peu près | environ | tout à fait |
| கிட்டத்தட்ட | ஏறத்தாழ | பூரணமாக |
| presque | plus ou moins | pas du tout |
| கிட்டத்தட்ட | கூடக்குறைய | பூரணமாக இல்லை |
| seulement | suffisamment | |
| மட்டும் | போதுமாக | |

## *Les adverbes d'affirmation*

| | | |
|---|---|---|
| aussi | certainement | d'accord |
| கூட | நிச்சயமாக | சம்மதம் |
| en vérité | justement | oui |
| உண்மையில் | சரியாக | ஆம் |
| vraiment | sans doute | évidemment |
| உண்மையாக | சந்தேகமில்லாமல் | திடமாக, தெளிவாக |
| surtout | même | absolument |
| முக்கியமாக | அதே | முற்றாக, முழுதும் |

## *Expressions adverbiales*

| | | |
|---|---|---|
| à haute voix | à voix basse | sûrement |
| பலமானகுரலில் | தாழ்ந்தகுரலில் | நிச்சயமாக |
| n'importe comment | surtout | par coeur |
| எப்படியாயினும் | முக்கியமாக | மனதால் |
| n'importe où | par hasard | sain et sauf |
| எங்கேயாவது | அதிர்ஷ்டவசமாக | சௌக்கியமாக |
| n'importe quand | n'importe qui | n'importe quoi |
| எப்போதென்றாலும் | யாராவது | ஏதாவது |
| tête à tête | en cachette | comme ça |
| நேருக்குநேராக | மறைமுகமாக | அப்படி |
| de bon coeur | à coeur ouvert | |
| நல்லமனத்துடன் | திறந்தமனத்துடன் | |

# Les Verbes
## வினைச்சொற்கள்

*வினைச்சொல் என்றால் என்ன?*
வினைச்சொல் ஒரு மாறக்கூடிய வடிவங்கொண்ட சொல்லாகும். இச்சொல் எழுவாயின் செயலை, எழுவாய்க்கு ஏற்பட்ட செயலை அல்லது எழுவாயின் நிலையை விபரிக்கும்.

1. எழுவாயால் செய்யப்பட்டசெயல்
   Il écrit une lettre. அவன் ஒரு கடிதம் எழுதுகின்றான்.

2. எழுவாய் அனுபவிக்கும் அல்லது எழுவாய்க்கு ஏற்படும் செயல்
   La table sera remplacée. மேசை மாற்றப்படும்.

3. எழுவாயின் இருப்பு
   Il est à Paris. அவன் பாரீசில் இருக்கின்றான்.

4. எழுவாயின் நிலை
   L'arbre fleurit. மரம் பூக்கிறது.
   Il est content. அவன் மகிழ்ச்சியாக இருக்கின்றான்.

### வினைச்சொல்லின் பண்புகள்

1. இது காலத்தைக்குறிக்கும்.
   Je travaille. *நிகழ்காலத்தைக் குறிக்கிறது*
   நான் வேலை செய்கின்றேன்.
   J'ai travaillé. *இறந்தகாலத்தைக் குறிக்கின்றது*
   நான் வேலை செய்தேன்.
   Je travaillerai. *எதிர்காலத்தைக் குறிக்கின்றது*
   நான் வேலை செய்வேன்.

2. ஒருசெயலின் நிச்சயத்தை அல்லது நிச்சயமின்மையைக்குறிக்கும்.
   Il dira la vérité demain. நாளை அவன் உண்மையைச் சொல்வான்.
   S'il venait demain, je serais content நாளை அவன் வந்தால், நான் மகிழ்ச்சியாக இருப்பேன்.

3. வினைச்சொல் செய்வினையா அல்லது செயப்பாட்டுவினையா என்பதைக்குறிக்கும்.
   Elle bâtit une maison. அவள் ஒரு வீடு கட்டுகின்றாள்.
   Une maison est bâtie par elle. அவளால் ஒரு வீடு கட்டப்படுகின்றது.

4. எழுவாயின் எண், பால், இடம் (தன்மை, முன்னிலை, படர்க்கை) அறியலாம்.
   Je viens. நான் வருகின்றேன். தன்மை ஒருமை
   Nous venons. நாங்கள் வருகின்றோம். தன்மை பன்மை
   Elle est venue. அவள் வந்தாள். படர்க்கை ஒருமை,பெண்பால்

5. வினையுரிச்சொற்களால் வினைச்சொல் விசேடிக்க அல்லது விபரிக்கப்படலாம்.
   Il étudie bien. அவன் நன்றாகப் படிக்கின்றான்.
   Tu viens vite. நீ விரைவாக வருகின்றாய்.

## *Verbes transitifs et intransitifs*
### செயப்படுபொருள் குன்றாத, குன்றிய வினைச்சொற்கள்

ஒருவினைச்சொல் செயப்படுபொருள் குன்றிய அல்லது குன்றாத அமைப்பில் இருக்கும்.

## *le verbe transitif*
**செயப்படுபொருள் குன்றாத வினைச்சொல்**

ஒருசெயல் ஒருபொருளில் அல்லது உயிருள்ளதில் நிறைவேறுமாயின் அவ்வினைச்சொல் செயப்படுபொருள் குன்றாத வினைச்சொல்லாகும்.

Il tire la porte. அவன் கதவை இழுக்கின்றான்.

J'attends ma femme. நான் எனது மனைவிக்காக காத்திருக்கின்றேன்.

இதில் வினைச்சொற்களுடன் வரும் la porte, ma femme செயப்படுபொருளாகும். இதை complément d'objet செயப்படுபொருள் என்பர்.

a) நேரடியாக வினைச்சொல்லுடன், முன்னிடைச்சொல்லின் உதவியில்லாமல் செயப்படுபொருள் வருமாயின் complément d'objet direct என அழைக்கப்படும்.
Il lit un journal. அவன் ஒரு பத்திரிகை வாசிக்கின்றான்.
இதில் un journal என்பது lit என்ற வினைச்சொல்லின் complément d'objet direct ஆகும்.
வினைச்சொல் transitif direct என அழைக்கப்படும்.

b) ஒருமுன்னிடைச்சொல்லுடன் செயப்படுபொருள் வருமாயின் அது complément d'objet indirect எனப்படும்.
இதனுடன் வரும் வினைச்சொல் transitif indirect என அழைக்கப்படும்.
Il dit à sa mère. அவன் தனது தாயாரிடம் கூறுகின்றான்.
இதில் sa mère என்ற செயப்படுபொருள் à என்ற முன்னிடைச்சொல்லால் வினைச்சொல்லுடன் இணைகின்றது.
ஆதலால் sa mère ஒரு complément d'objet indirect ஆகும்.
dit என்ற வினைச்சொல் transitif indirect ஆகும்.

c) ஒரு வினைச்சொல் transitif direct ஆகவும் transitif indirect ஆகவும் இருக்கலாம்.

| | | |
|---|---|---|
| *transitif direct* | il montre des photos. | அவன் படங்களை காட்டுகின்றான். |
| *transitif indirect* | il montre à des amis. | அவன் நண்பர்களுக்கு காட்டுகின்றான். |

## *Le verbe Intransitif*
**செயப்படுபொருள் குன்றியவினை**

ஒருசெயல் செயப்படுபொருளில் நிறைவேறாதாயின் அவ்வினைச்சொல் intransitif என அழைக்கப்படும். அச்செயல் எழுவாய்க்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருக்கும்.

Je vais à la gare. நான் புகையிரதநிலையத்திற்கு செல்கின்றேன்.

இதில் aller ஒரு verbe intransitif ஆகும்.

a) நிலையைக்குறிக்கும் வினைச்சொற்கள் பொதுவாக intransitif ஆகும்.
Elle est belle. அவள் அழகி.
இதில் être ஒரு verbe intransitif ஆகும்.

b) சிலவினைச்சொற்களை இரண்டு வடிவத்திலும் transitif, intransitif பயன்படுத்தலாம்.
Elle mange une pomme. *(transitif)* அவள் ஒருஅப்பிள் சாப்பிடுகின்றாள்.
Elle mange. *(intransitif)* அவள் சாப்பிடுகின்றாள்.

*குறிப்பு :* Conjugaison புத்தகத்தில் வினைச்சொற்கள் வரிசையில் வினைச்சொற்களுக்குப் பக்கத்தில் I அல்லது T என இடப்பட்டுள்ளது.
இதில் I - verbe intransitif ஐயும்
T - verbe transitif ஐயும் குறிக்கும்

## *Les trois formes du verbe*
**வினைச்சொல்லின் மூன்றுவடிவங்கள்**

ஒரு வினைச்சொல் செய்வினை, செயப்பாட்டுவினை அல்லது தன் சம்பந்தவினை வடிவிலிருக்கலாம். இதில் transitif direct ஆன வினைச்சொற்கள் மட்டுமே இம்மூன்றுவடிவத்தை எடுக்கும். நிலையைக்குறிக்கும்

வினைச்சொற்கள் (intransitif) செய்வினையில் மட்டுமே உபயோகப்படுத்தலாம். transitif indirect வினைச்சொற்களுக்கு செயப்பாட்டுவினை வடிவம் கிடையாது.

1) Forme Active செய்வினைவடிவம்
எழுவாய் ஒருசெயலை புரியுமாயின் வினைச்சொல் செய்வினை வடிவம்பெறும்.
Il apprend le français. அவன் பிரஞ்சு கற்கின்றான்.
2) Forme Passive செயப்பாட்டுவினை வடிவம்
எழுவாய்க்கு ஒருசெயல் நிகழின் செயப்பாட்டுவினை வடிவம் பெறும்.
Le soleil est caché par les nuages. சூரியன் முகில்களால் மறைக்கப்படுகின்றது.
3) Forme Pronominale
எழுவாய் செயலை தனக்குத் தானே செய்யும்போது இவ்வடிவம் பயன்படும்.
Je me lave les mains. நான் கைகளைக் கழுவுகின்றேன்.

***வினைச்சொற்கள் காலம், வகைக்கேற்ப மாறும்.***

Le temps : Présent நிகழ்காலம்
*காலம்*

Futur எதிர்காலம்

Passé இறந்தகாலம்

Mode : Indicatif
*வகை* Impératif
Subjonctif
Conditionnel

*காலம் இருவகைப்படும்.*

1) Les temps simples
சாதாரண காலம் இதில் ஒருவினைச்சொல்லின் வடிவமே இருக்கும்.
*உ+ம்* : Il lit. அவன் வாசிக்கின்றான்.
2) Les temps composés கூட்டுக்காலம்
இது உதவி வினைச்சொல்லாலும் இறந்தகாலவினையெச்சத்தினாலும் ஆனது.
Il a lu. அவன் வாசித்தான்.

Les verbes auxiliaires - உதவிவினைச்சொற்கள்
avoir, être உதவி வினைச்சொற்களாகும். இவை கூட்டுக்காலங்கள் அமைக்க உதவி செய்கின்றன. அத்துடன் அரை உதவிவினைச்சொற்களும் உண்டு.
*ex* : Vouloir, pouvoir, aller, venir, savoir, faire, laisser, falloir

## *Verbes défectifs*
**குறைபாட்டு வினைச்சொற்கள்**

*உ+ம்* : Naître, Pouvoir, Résoudre....
இவ்வினைச்சொற்களை சிலகாலங்களில் உருமாற்ற முடியாது. இவற்றை குறைபாடுடைய வினைச்சொற்கள் என்போம்.

### *Personnes et nombres*
***நபர்களும் – எண்களும்***

| | *Singulier (ஒருமை)* | | *Pluriel (பன்மை)* | |
|---|---|---|---|---|
| *1ère personne* | Je | நான் | Nous | நாங்கள் |
| *2ème personne* | Tu | நீ | Vous | நீங்கள் |
| *3ème personne* | Il | அவன் | Ils | அவர்கள் |
| | Elle | அவள் | Elles | அவர்கள் (பெண்கள்) |

## *Verbes impersonnels*
படர்க்கை ஒருமை il இற்கு மட்டுமே சிலவினைச்சொற்கள் உருமாறும். சிலவேளைகளில் il அது என்று அர்த்தம் பெறும். verbes impersonnels இருவகைப்படும்.

1. இயற்கையின் செயல்களை குறிக்கும் வினைச்சொற்கள் pleuvoir, neiger....
   - il pleut மழைபெய்கின்றது
   - il neige பனி கொட்டுகின்றது (பெய்கிறது)

2. verbe impersonnel ஆக மட்டும் பயன்படும் வினைச்சொற்கள், முக்கியத்துவத்தை, பெறுமதியைக் குறிக்கும்சொற்கள்
   falloir (வேண்டும்), Valoir (பெறுமதியானது)
   அல்லது impersonnel முறையில் பயன்படுத்தக்கூடிய வினைச்சொற்கள்
   avoir, être, faire, pouvoir, etc..
   Il fait froid. குளிராக இருக்கின்றது
   Il est huit heures. எட்டுமணி

## La Conjugaison

**வினைச்சொல் உருமாற்றம்**

### Indicatif **சுட்டல்விதம்**

| | | | |
|---|---|---|---|
| Présent | நிகழ்காலம் | Passé composé | இறந்தகாலம் |
| Imparfait | தொடர்இறப்பு | Plus-que-parfait | பூரண இறந்தகாலம் |
| Passé simple | சாதாரணஇறந்தகாலம் | Passé antérieur | இறப்பிடை இறந்தகாலம் |
| Futur | எதிர்காலம் | Futur antérieur | இறப்பிடை எதிர்காலம் |

| | | | |
|---|---|---|---|
| Conditionnel Présent | நிகழ்கால நிபந்தனை | Conditionnel Passé | இறந்தகால நிபந்தனை |
| Subjonctif Présent | நிகழ்கால ஐயவினை | Subjonctif Passé | இறந்தகால ஐயவினை |
| Impératif Présent | நிகழ்கால ஏவல்முற்றுவினை | Impératif Passé | இறந்தகால ஏவல்வினை |
| Participe Présent | நிகழ்கால வினையெச்சம் | Participe Passé | இறந்தகால வினையெச்சம் |
| Infinitif Présent | நிகழ்கால முடிவிலி | Infinitif Passé | இறந்தகால முடிவிலி |

## Radical et Terminaison

ஒவ்வொரு வினைச்சொல் வடிவமும் மூலத்தையும் (Radical) முடிவையும் (terminaison) கொண்டிருக்கும்.

- **~~Le~~ Radical**
  ஒரு வினைச்சொல்லின் கருத்தை இது பிரதிபலிக்கும்.
- **La terminaison**
  இது விதம், காலம், நபரைச் சுட்டிக்காட்டும்.

உ+ம் - demandons இல் demand என்றபகுதி radical ஆகும். Ons என்றபகுதி terminaison ஆகும். இது காட்டல்விதம் (indicatif), நிகழ்காலம் (Présent) தன்மைப் பன்மையை (1ère personne du pluriel) குறிக்கின்றது.

Je demande, vous demandez
நான் கேட்கின்றேன், நீங்கள் கேட்கின்றீர்கள்.
le radical பொதுவாக மாறாது. ஆனால் காலங்கள் மாறும் போது சிலவினைச்சொற்களுக்கு இது மாறும்.

## La conjugaison du verbe

ஒரு வினைச்சொல் எடுக்கக்கூடிய எல்லாவடிவங்களும் conjugaison ஆகும். வினைச்சொற்கள் மூன்றுபிரிவுகளாக அல்லது மூன்றுகூட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

வினைச்சொற்கள்
ER இல் முடிந்தால் அவை 1 ம் கூட்டமெனவும்
IR இல் முடிந்தால் அவை 2 ம் கூட்டமெனவும்
RE இல்முடியும் சொற்களும் ER / IR காணப்படும் சிலவிதிவிலக்கு வினைச்சொற்களும் மூன்றாம்கூட்டமெனவும் பிரிக்கப்படும்.

முதலாம், இரண்டாம் கூட்டவினைச்சொற்கள் ஒழுங்கானமுறையில் விகுதிக்கிரமம் பெறும். ஆகவே இவை verbes réguliers ஒழுங்கான வினைச்சொற்கள் எனப்படும். ஆனால் 3ம் கூட்டவினைச்சொற்கள் ஒழுங்கானமுறையில் விகுதிக்கிரமம் அடையாது. ஆதலால் இக்கூட்டவினைச்சொற்கள் verbes irréguliers ஒழுங்கற்ற வினைச்சொற்கள் என அழைக்கப்படும்.

*முதலில் நாம் நிகழ்காலம் பற்றி கற்போம்....*

## *Le Présent*
### *நிகழ்காலம்*

**நிகழ்காலம் பின்வரும்சந்தர்ப்பங்களில் பயன்படும்.**

1) தற்போது ஒருசெயல் நடந்தால் அல்லது ஒருநிலையைக்குறிக்க.
   Je mange. நான் சாப்பிடுகின்றேன்.
   Mani est fatigué. மணி களைப்பாக இருக்கின்றான்.
2) ஒருவிஞ்ஞான அல்லது பொது உண்மையைக் குறிக்க.
   La terre est ronde. பூமி உருண்டையானது.
   Le fer est dur. இரும்பு கடினமானது.
3) வழமையாக நடக்கும் செயலைக்குறிக்க.
   Tu manges trois fois par jour. நீ ஒரு நாளைக்கு மூன்றுதடவை சாப்பிடுவாய்.
4) நிச்சயமான அல்லது தொடர்ச்சியான செயல்
   Mon frère revient demain. எனது சகோதரன் நாளை திரும்பி வருகின்றான்.
   Il apprend le français depuis deux ans. அவன் இரண்டு வருடமாக பிரஞ்சு கற்கின்றான்.
5) எதிர்கால செயலைக்குறிக்க.
   Je finis dans deux jours. நான் இரண்டு நாட்களில் முடிக்கின்றேன்.
   Vous allez fermer la porte. நீங்கள் கதவைபூட்டப்போகின்றீர்கள்.
6) சிலமாறாத வினாவெளிப்பாடுகளுக்கு.
   Est-ce que, C'est - à - dire - அப்படியென்றால் , C'est pourquoi - அதனால், ஆகவே
7) மிகஅண்மையில் முடிந்தசெயலுக்கு.
   Il vient de partir. அவன் இப்போதுதான் புறப்பட்டான்.

## *Les verbes du premier groupe*
### முதலாம்கூட்ட வினைச்சொற்கள்

ER இல் முடியும் வினைச்சொற்கள் யாவும் முதலாம் கூட்டமாகும்.
விதிவிலக்கு exception : Aller செல்லுதல், போகுதல்
பிரஞ்சுமொழியில் உள்ள வினைச்சொற்களில் பெரும்பான்மையானவை முதலாம் கூட்டமாகும். அத்துடன் புதிதாக சேர்க்கும் வினைச்சொற்களும் அநேகமானவை முதலாம் கூட்டமாகும்.

உ+ம் Informatiser கணணி மயப்படுத்தல்
Télécopier ou faxer தொலைப்பிரதி (fax) அனுப்புதல்

முதலாம்கூட்டவினைச்சொல்லின் இறுதி இருஎழுத்துக்களான er ஐ நீக்கினால் மிகுதி முதலாம்கூட்ட நிகழ்கால வினையடி Radical ஆகும்.
ex : Parler - Parl
பேசுதல்
இதனுடன் முதலாம்கூட்ட முடிவையும் சேர்த்தால் அது அவ்வினைச்சொல்லின் நிகழ்கால விகுதிக்கிரமமாகும்.

### *La terminaison*
**முதலாம்கூட்ட முடிவு**

| | |
|---|---|
| Je | **- e** |
| Tu | **- es** |
| Il | **- e** |
| Elle | **- e** |
| Nous | **- ons** |
| Vous | **- ez** |
| Ils | **- ent** |
| Elles | **- ent** |

***Parler*** - **பேசுதல்** என்ற வினைச்சொல்லின் நிகழ்கால விகுதிக்கிரமம் பின்வருமாறு:

| | |
|---|---|
| Je parle | நான் பேசுகின்றேன் |
| Tu parle**s** | நீ பேசுகின்றாய் |
| Il parle | அவன் பேசுகின்றான் |
| Elle parle | அவள் பேசுகின்றாள் |
| Nous parl**ons** | நாங்கள் பேசுகின்றோம் |
| Vous parl**ez** | நீங்கள் பேசுகின்றீர்கள் |
| Ils parl**ent** | அவர்கள் பேசுகின்றார்கள் |
| Elles parl**ent** | அவர்கள் பேசுகின்றார்கள் (பெண்கள்) |

***Aimer*** - **விரும்புதல்**

| | |
|---|---|
| J'aime | நான் விரும்புகின்றேன் |
| Tu aime**s** | நீ விரும்புகின்றாய் |
| Il aime | அவன் விரும்புகின்றான் |
| Elle aime | அவள் விரும்புகின்றாள் |
| Nous aim**ons** | நாங்கள் விரும்புகின்றோம் |
| Vous aim**ez** | நீங்கள் விரும்புகின்றீர்கள் |
| Ils aim**ent** | அவர்கள் விரும்புகின்றார்கள் |
| Elles aim**ent** | அவர்கள் விரும்புகின்றார்கள் (பெண்கள்) |

இவ்வாறே எல்லா முதலாம்கூட்ட வினைச்சொற்களுக்கும் எழுதலாம். பிரஞ்சுவாக்கியங்கள் எப்போதும் SVO என்ற வடிவிலேயே இருக்கும்.

| | |
|---|---|
| J'aime mon pays. | நான் எனது நாட்டை விரும்புகின்றேன் |
| Il aime la glace. | அவனுக்கு ஐஸ்கிறீம் விருப்பம் |
| Tu parles le français. | நீ பிரஞ்சு பேசுகின்றாய் |

*குறிப்பு* : ger இல் முடியும் எல்லாவினைச்சொற்களும் Nous இற்கு எழுதும் போது உச்சரிப்பு இனிமைக்காகஒரு E கூடுதலாகசேர்க்கப்படும். Manger, Partager, Nager, Changer, etc...

***Manger*** **சாப்பிடுதல்**

| | |
|---|---|
| Je mange | நான் சாப்பிடுகின்றேன் |
| Tu mange**s** | நீ சாப்பிடுகின்றாய் |
| Il / Elle mange | அவன் / அவள் சாப்பிடுகின்றான் (ள்) |
| Nous mange**ons** | நாங்கள் சாப்பிடுகின்றோம் |
| Vous mang**ez** | நீங்கள் சாப்பிடுகின்றீர்கள் |
| Ils / Elles mang**ent** | அவர்கள் சாப்பிடுகின்றார்கள் |

*(இதில் Il / Elle , Ils / Elles ஒரே சொல்லாதலால் சேர்த்து எழுதப்பட்டிருக்கின்றது)*

*குறிப்பு* : Cer இல் முடியும் வினைச்சொற்கள், Nous இற்கு cédille குறியை ஓசைநயத்திற்காக எடுக்கும்)

***Placer*** **வைத்தல்**

| | |
|---|---|
| Je place | நான் வைக்கின்றேன் |
| Tu place**s** | நீ வைக்கின்றாய் |
| Il / Elles place | அவன் / அவள் வைக்கின்றான் (ள்) |
| Nous plaç**ons** | நாங்கள் வைக்கின்றோம் |
| Vous plac**ez** | நீங்கள் வைக்கின்றீர்கள் |
| Ils / Elles plac**ent** | அவர்கள் வைக்கின்றார்கள் |

ex : commencer, prononcer, avancer, etc...

*குறிப்பு* : Yer இல் முடியும் எல்லா வினைச்சொற்களும் nous, vous தவிர் மற்றைய பிரதிப்பெயர்ச்சொற்களுக்கு Y இற்குப்பதிலாக I எடுக்கும்.

***Envoyer*** **அனுப்புதல்**

| | |
|---|---|
| J'envoie | நான் அனுப்புகின்றேன் |
| Tu envoie**s** | நீ அனுப்புகின்றாய் |
| Il / Elle envoie | அவன் / அவள் அனுப்புகின்றான் (ள்) |
| Nous envoy**ons** | நாங்கள் அனுப்புகின்றோம் |
| Vous envoy**ez** | நீங்கள் அனுப்புகின்றீர்கள் |
| Ils / Elles envoi**ent** | அவர்கள் அனுப்புகின்றார்கள் |

*குறிப்பு:* Eler ou Eter இல் முடியும் வினைச்சொற்களில் ஓசையில்லாத E இற்கு முன்னால் இருக்கும் மெய்யெழுத்துக்கள் L, T இரட்டிக்கும் (nous, vous தவிர).

| ***Jeter*** | **எறிதல்** | ***Appeler*** | **அழைத்தல்** |
|---|---|---|---|
| Je jette | நான் எறிகின்றேன் | J'appelle | நான் அழைக்கின்றேன் |
| Tu jettes | நீ எறிகின்றாய் | Tu appelles | நீ அழைக்கின்றாய் |
| Il / Elle jette | அவன்/அவள் எறிகின்றான்(ள்) | Il / Elle appelle | அவன்/அவள் அழைக்கின்றான் (ள்) |
| Nous jetons | நாங்கள் எறிகின்றோம் | Nous appelons | நாங்கள் அழைக்கின்றோம் |
| Vous jetez | நீங்கள் எறிகின்றீர்கள் | Vous appelez | நீங்கள் அழைக்கின்றீர்கள் |
| Ils / Elles jettent | அவர்கள் எறிகின்றார்கள் | Ils / Elles appellent | அவர்கள் அழைக்கின்றார்கள் |

*குறிப்பு :* acheter, crocheter, geler, congeler, modeler, peler போன்ற வினைச்சொற்கள் மெய்யெழுத்தை இரட்டிக்காமல் ஓசையில்லாத e இற்கு accent grave நெட்டோசைக்குறியீடு எடுக்கும் (nous, vous தவிர).

| ***Acheter*** | **வாங்குதல்** |
|---|---|
| J'achète | நான் வாங்குகின்றேன் |
| Tu achètes | நீ வாங்குகின்றாய் |
| Il / Elle achète | அவன்/அவள் வாங்குகின்றான் (ள்) |
| Nous achetons | நாங்கள் வாங்குகின்றோம் |
| Vous achetez | நீங்கள் வாங்குகின்றீர்கள் |
| Ils / Elles achètent | அவர்கள் வாங்குகின்றார்கள் |

*குறிப்பு*: ecer, emer, ener, eper, erer, eser, ever, evrer இல் முடியும் வினைச்சொற்கள் இறுதிஅசை (syllabe) க்கு முன்னால் உள்ள ஓசையற்ற e இற்கு நெட்டோசைக்குறியிடப்படும் (nous, vous தவிர).

| ***Lever*** | **உயர்த்துதல் / எழுப்புதல்** |
|---|---|
| Je lève | நான் உயர்த்துகின்றேன் |
| Tu lèves | நீ உயர்த்துகின்றாய் |
| Il / Elle lève | அவன்/அவள் உயர்த்துகின்றான் (ள்) |
| Nous levons | நாங்கள் உயர்த்துகின்றோம் |
| Vous levez | நீங்கள் உயர்த்துகின்றீர்கள் |
| Ils / Elles lèvent | அவர்கள் உயர்த்துகின்றார்கள் |

## *Deuxième Groupe*
### இரண்டாம் கூட்டம்

**Ir** இல் முடியும் வினைச்சொற்கள் அநேகமானவை இரண்டாம் கூட்டமாகும்.
உ+ம்: Finir, bâtir, Choisir, etc....
இது கிட்டத்தட்ட 300 வினைச்சொற்களைக் கொண்டவை. மிகக்குறைவான வினைச்சொற்களே எமது நாளாந்த வாழ்க்கையில் பயன்படும். ஆனால் Ir இல் முடியும் சிலவினைச்சொற்கள் மூன்றாம் கூட்டத்திலும் உண்டு.
உ+ம்: Sortir, dormir, servir, etc...
இரண்டாம் கூட்டவினைச்சொற்களின் இறுதி எழுத்தான R ஐ நீக்கினால் அது அவ்வினைச்சொற்களின் Radical ஆகும்.
Finir - Fini

### *la terminaison*
***இரண்டாம் கூட்டமுடிவு***

| | |
|---|---|
| Je | **- s** |
| Tu | **- s** |
| Il | **- t** |
| Elle | **- t** |
| Nous | **- ssons** |
| Vous | **- ssez** |
| Ils | **- ssent** |
| Elles | **- ssent** |

இரண்டாம் கூட்டவினைச்சொற்களின் Radical உடன் முடிவையும் சேர்த்தால் அது இரண்டாம் கூட்டவினைச் சொற்களின் விகுதிக்கிரமமாகும்.

| ***Finir*** | **முடித்தல்** |
|---|---|
| Je finis | நான் முடிக்கின்றேன் |
| Tu finis | நீ முடிக்கின்றாய் |
| Il / Elle finit | அவன் /அவள் முடிக்கின்றான் (ள்) |
| Nous finissons | நாங்கள் முடிக்கின்றோம் |
| Vous finissez | நீங்கள் முடிக்கின்றீர்கள் |
| Ils / Elles finissent | அவர்கள் முடிக்கின்றார்கள் |

| ***Bâtir*** | **கட்டுதல்** |
|---|---|
| Je bâtis | நான் கட்டுகின்றேன் |
| Tu bâtis | நீ கட்டுகின்றாய் |
| Il / Elle bâtit | அவன் /அவள் கட்டுகின்றான் (ள்) |
| Nous bâtissons | நாங்கள் கட்டுகின்றோம் |
| Vous bâtissez | நீங்கள் கட்டுகின்றீர்கள் |
| Ils / Elles bâtissent | அவர்கள் கட்டுகின்றார்கள் |

*குறிப்பு : நிலைமாற்றமடையும் வினைச்சொற்கள் பொதுவாக இரண்டாம் கூட்டத்திலே காணப்படும்.*
*உ+ம் : கறுத்தல், மெலிதல், வளர்தல்...*

Grossir - மொத்தமாகுதல்
Grandir - வளருதல், பெரிதாகவருதல்
Maigrir - மெலிதல்
Vieillir - முதிர்தல், வயதுபோகுதல்
Rougir - சிவப்பாகுதல்
Blanchir - வெள்ளையாகுதல்
Noircir - கறுப்பாகுதல்
Pâlir - வெளிறிப்போகுதல்
Mûrir - பழுத்தல்
Salir - அழுக்காக்குதல்
Jaunir - மஞ்சளாகுதல்
Démolir - இடித்தல், அழித்தல்
Nourrir - உணவுகொடுத்தல், ஊட்டுதல்
Remplir - நிரப்புதல்
Obéir - கீழ்ப்படிதல்
Désobéir - கீழ்ப்படியாமலிருத்தல்
Réunir - ஒன்றுகூடல்
Atterrir - தரைஇறங்கல்
Réfléchir - சிந்தித்தல்
Choisir - தெரிவுசெய்தல்
Réussir - வெல்லுதல், சித்தியடைதல்
Ralentir - வேகத்தைக்குறைத்தல்
Guérir - குணமடைதல்
Applaudir - கைதட்டுதல்
Fleurir - பூத்தல்
Punir - தண்டித்தல்
Agir - செய்தல், நடவடிக்கை எடுத்தல்
Mincir - மெலிதல்

Accomplir - நிறைவேற்றுதல்
Adoucir - தணித்தல்
Affaiblir - பலவீனமாக்குதல், பலவீனப்படுத்தல்
Affranchir - விடுதலையாக்கல், கடன் தீர்த்தல்
Amortir - குறைத்தல்
Haïr - வெறுத்தல்
Aplatir - தட்டையாக்குதல், சப்பளித்தல்
Bénir - ஆசீர்வதித்தல்
Bondir - துள்ளுதல், குதித்தல்
Convertir - மனம்மாற்றுதல், திருப்புதல்
Bleuir - நீலமாக்கல்
Définir - வரையறுத்தல், தெளிவாக்கல்
Rafraîchir - குளிர்ச்சியாக்கல், குளிரச்செய்தல்
Unir - ஒன்றுசேரல்
Investir - முதலிடல்
Durcir - கடினமாக்குதல், இறுகுதல்
Elargir - அகலமாக்கல், விசாலமாக்கல்
Etablir - நிலைநிறுத்தல், ஸ்தாபித்தல்
Faiblir - பலவீனமாக்கல்
Franchir - தாண்டுதல், கடத்தல் (எல்லையை)
Froidir - குளிரச்செய்தல்
Garantir - உத்தரவாதம் பண்ணுதல்
Munir - பத்திரப்படுத்தல், ஸ்திரப்படுத்தல்
Saisir - பறித்தல், கைப்பற்றுதல்
Trahir - துரோகமிழைத்தல், வஞ்சகம் செய்தல்
Verdir * - பச்சையாகுதல்
Rajeunir - மீள இளமையாதல்,வாலிபம் திரும்பல்

| | |
|---|---|
| Il remplit la bouteille. | அவன் போத்தலை நிரப்புகின்றான். |
| La voiture ralentit. | கார் வேகத்தை குறைக்கின்றது. |
| Les arbres fleurissent au printemps. | வசந்தகாலத்தில் மரங்கள் பூக்கின்றன. |
| L'avion atterrit à six heures. | விமானம் ஆறுமணிக்கு தரையிறங்குகின்றது. |
| Le fruit mûrit. | பழம் பழுக்கின்றது. |
| Les cheveux blanchissent. | தலைமயிர் நரைக்கின்றது (வெள்ளையாகின்றது). |

Il choisit ce livre. அவன் இப்புத்தகத்தை தெரிவுசெய்கின்றான்.
Le médecin guérit le malade. வைத்தியர் நோயாளியை குணப்படுத்துகின்றார்.
Tu choisis de rester au Srilanka. நீ இலங்கையில் தங்க தெரிவுசெய்கின்றாய்.
Il finit de lire. அவன் வாசித்து முடிக்கின்றான்.

**குறிப்பு** : Choisir / Finir } de + infinitif

## *Troisième Groupe*
**மூன்றாம் கூட்டம்**

மூன்றாம் கூட்டத்திலுள்ள வினைச்சொற்கள் பெரும்பாலும் ஒழுங்குமாறி விகுதிக்கிரமம் எடுக்கும். இக்கூட்டத்தில் மிகக்குறைவாகவே வினைச்சொற்கள் உள்ளன.
இவை பொதுவாக Dre, Re, Ir இல் முடியும்.

### *La terminaison*
**மூன்றாம் கூட்டமுடிவு**

Je - **s** *ou* **x**
Tu - **s** *ou* **x**
Il - **d** *ou* **t**
Elle - **d** *ou* **t**
Nous - **ons**
Vous - **ez**
Ils - **ent**
Elles - **ent**

மூன்றாம் கூட்டவினைச்சொற்களின் radical எல்லாபிரதிப்பெயர்ச்சொற்களுக்கும் ஓரேசொல்லாக இருக்காது. ஆகவே இவ்வினைச்சொற்களின் radical ஐ முற்றாக மனப்பாடமாக்கி வைத்திருப்பது நல்லது. Andre, Endre, Ondre, Ordre இவ்வாறு முடியும் வினைச்சொற்கள் யாவும் ஓரேமாதிரியாக விகுதிக்கிரமம் அடையும். இறுதி இருஎழுத்துக்களான Re ஐ நீக்கினால் Radical பெறப்படும்.

***Rendre*** — **திருப்பிக் கொடுத்தல்** *ou* **மீளளித்தல்**

Je rends — நான் திருப்பிக்கொடுக்கின்றேன்
Tu rends — நீ திருப்பிக்கொடுக்கின்றாய்
Il / Elle rend — அவன் / அவள் திருப்பிக்கொடுக்கின்றான் (ள்)
Nous rendons — நாங்கள் திருப்பிக்கொடுக்கின்றோம்
Vous rendez — நீங்கள் திருப்பிக்கொடுக்கின்றீர்கள்
Ils / Elles rendent — அவர்கள் திருப்பிக்கொடுக்கின்றார்கள்

Je rends des livres. நான் புத்தகங்களைத் திருப்பிக்கொடுக்கின்றேன்.
Il vend des chaises. அவன் கதிரைகளை விற்கின்றான்.
Vous répondez bien. நீங்கள் நன்றாகப் பதிலளிக்கின்றீர்கள்.
Ils attendent le train. அவர்கள் புகையிரதத்திற்காகக் காத்திருக்கின்றார்கள்.

ஆனால் Prendre, Apprendre, Comprendre, Surprendre, Réapprendre, Reprendre போன்ற Prendre உடன் சம்பந்தப்பட்ட வினைச்சொற்கள் பின்வருமாறு விகுதிக்கிரமம்பெறும்.

***Prendre*** — **எடுத்தல்**

Je prends — நான் எடுக்கின்றேன்
Tu prends — நீ எடுக்கின்றாய்
Il / Elle prend — அவன் /அவள் எடுக்கின்றான் (ள்)
Nous prenons — நாங்கள் எடுக்கின்றோம்
Vous prenez — நீங்கள் எடுக்கின்றீர்கள்
Ils / Elles prennent — அவர்கள் எடுக்கின்றார்கள்

Je prends le bus. நான் பஸ் எடுக்கின்றேன்.
Il apprend le français. அவன் பிரஞ்சு கற்கின்றான்.
Nous comprenons votre question. எங்களுக்கு உங்களுடைய கேள்வி விளங்குகின்றது.

***Mettre*** **வைத்தல், இடுதல், அணிதல்**

Je mets நான் வைக்கின்றேன்
Tu mets
Il / Elle met
Nous mettons
Vous mettez
Ils / Elles mettent

இவ்வாறு உருமாறும் வேறுவினைச்சொற்கள்
Admettre - அனுமதித்தல்
Commettre - செய்தல், குற்றத்தை ஒப்புக்கொள்ளல்
Omettre - தவறவிடல்
Permettre - அனுமதித்தல்
Promettre - சத்தியம் செய்தல்
Remettre - மீள வைத்தல்
Transmettre - அனுப்புதல்

*குறிப்பு* : இதில் பிரதிப்பெயர்கள் ஒருமையில் இருக்கும்போது ஒரு t இடுகின்றோம். பன்மையில் tt இடப்படுகின்றது.

Je mets sur la table. நான் மேசை மீது வைக்கின்றேன்.
Tu mets un chapeau. நீ ஒரு தொப்பி அணிகின்றாய்.
Ils mettent la bouteille dans le réfrigérateur.
அவர்கள் குளிர்சாதனப்பெட்டிக்குள் போத்தலை வைக்கின்றார்கள்.
Vous mettez une heure pour faire. நீங்கள் செய்வதற்கு ஒரு மணித்தியாலம் எடுக்கின்றீர்கள்.
ça met combien de jours pour aller à Paris? பரிசுக்கு செல்வதற்கு எவ்வளவு நாட்கள் எடுக்கும்?

***Lire*** **வாசித்தல்**

Je lis நான் வாசிக்கின்றேன்
Tu lis
Il / Elle lit
Nous lisons
Vous lisez
Ils / Elles lisent

Il lit un journal. அவன் ஒருபத்திரிகை வாசிக்கின்றான்.

***Rire*** **சிரித்தல்**

Je ris நான் சிரிக்கின்றேன்
Tu ris
Nous rions
Vous riez
Ils / Elles rient

Il rit sans arrêt.
அவன் நிறுத்தாமல் சிரிக்கின்றான். Il / Elle rit
இவ்வாறே Sourire - புன்னகைத்தல்

***Vivre*** **வாழ்தல்**

Je vis நான் வாழ்கின்றேன்
Tu vis
Il / Elle vit
Nous vivons
Vous vivez
Ils / Elles vivent

இவ்வாறே Survivre - உயிர்தப்பிவாழ்தல்

Il vit au Canada.
அவன் கனடாவில் வாழ்கின்றான்.

***Suivre*** **தொடரல்**

Je suis நான் தொடர்கின்றேன்
Tu suis
Il / Elle suit
Nous suivons
Vous suivez
Ils / elles suivent

Poursuivre - பின்தொடர்தல்

Il suit le guide dans la rue.
அவன் வீதியில் வழிகாட்டியைத் தொடர்கின்றான்.

## *Ecrire* எழுதுதல்

J'écris — நான் எழுதுகின்றேன்
Tu écris
Il / Elle écrit
Nous écrivons
Vous écrivez
Ils / Elles écrivent

இவ்வாறே
Inscrire - பதிவுசெய்தல்
Souscrire - அங்கத்தவராகுதல்
Récrire - மீள எழுதுதல்

| | |
|---|---|
| Il écrit une lettre. | அவன் ஒரு கடிதம் எழுதுகின்றான். |
| Il écrit à sa soeur. | அவன் தனது சகோதரிக்கு எழுதுகின்றான். |
| Il écrit de son école. | அவன் தனது பாடசாலையிலிருந்து எழுதுகின்றான். |

## *Dire* சொல்லுதல்

Je dis — நான் சொல்லுகின்றேன்
Tu dis
Il / Elle dit
Nous disons
Vous dites
Ils / Elles disent

Contredire - எதிர்த்துச்சொல்லுதல்
Interdire - தடைசெய்தல்
Prédire - முன்கூட்டியே சொல்லுதல்

*குறிப்பு* : பொதுவாக Vous - ez இல் முடியும். ஆனால் Dire என்ற வினைச்சொல்லில் es என முடியும். அவ்வாறே faire க்கும் முடியும்.

| | |
|---|---|
| Elle dit la vérité. | அவள் உண்மை சொல்லுகின்றாள். |
| Elle dit à sa mère. | அவள் தனது அம்மாவிடம் சொல்லுகின்றாள். |

## *Faire* செய்தல்

Je fais — நான் செய்கின்றேன்
Tu fais
Il / Elle fait
Nous faisons
Vous faites
Ils / Elles font

1) Faire உடன் நேரடியாகப் பெயர்ச்சொல் இடலாம்.

| | |
|---|---|
| Elle fait un voyage. | அவள் ஒரு பிரயாணம் செய்கின்றாள். |
| Elle fait une erreur. | அவள் ஒரு தவறு செய்கின்றாள். |
| Elle fait un sourire. | அவள் ஒரு புன்னகை செய்கின்றாள். |
| Je fais mon devoir. | நான் எனது கடமையைச் செய்கின்றேன். |

*ஒரு தொழில் செய்வதைக்குறிக்கவும் Faire பயன்படும். இதில் நேரடிஅர்த்தம் எடுக்கக்கூடாது.*

| | |
|---|---|
| Il fait la cuisine. | அவன் சமையல் செய்கின்றான். |
| Elle fait le lit. | அவள் கட்டில் விரிக்கின்றாள் (ஒழுங்குபடுத்துகின்றாள்) |
| Elle fait la vaisselle. | அவள் பாத்திரம் கழுவுகின்றாள். |
| Elle fait son droit. | அவள் சட்டம் படிக்கின்றாள். |
| Elle fait les chaussures. | அவள் சப்பாத்துக்கள் சுத்தம் செய்கின்றாள். |
| Elle fait la loi. | அவள் அரசாளுகின்றாள் (வீட்டில், வேலைத்தலத்தில் கட்டளையிடுதல்). |
| Elle fait le ménage. | அவள் சுத்தம் செய்கின்றாள். |
| Elle fait la malade. | அவள் நோயாளி மாதிரி நடிக்கின்றாள். |
| Elle fait sa médecine. | அவள் மருத்துவம் படிக்கின்றாள். |

*குறிப்பு* : Faire உடன் சிலசொற்களை பெயர்ச்சுட்டு இல்லாமல் எழுதவேண்டும்.

| | |
|---|---|
| Elle fait attention. | அவள் கவனமாக இருக்கின்றாள். |
| Elle fait peur. | அவள் பயத்தை உண்டாக்குகின்றாள். |

Elle fait mal (du mal). அவள் வலியை ஏற்படுத்துகின்றாள்.

Faire ஒரு infinitif உடன் வரும்போது செய்வித்தல் என்று பொருள்படும்.
Il fait acheter ce livre. அவன் இந்தப்புத்தகத்தை வாங்கச் செய்கின்றான்.
Elle fait venir sa famille. அவள் தனது குடும்பத்தை வருவிக்கின்றாள் (வரச்செய்கின்றாள்).
Tu fais écrire, lire et parler le français. நீ பிரஞ்சு எழுத, வாசிக்க, பேசச் செய்கின்றாய்.
Elle fait manger ses enfants. அவள் தனது பிள்ளைகளைச் சாப்பிடச்செய்கின்றாள்.

Elle fait la tête. அவள் முகத்தை உம்மென்று வைத்திருக்கின்றாள் (கோபத்தில்)
Elle fait la gueule. அவள் முகத்தை உம்மென்று வைத்திருக்கின்றாள் (கோபத்தில்)
Elle fait des grimaces. அவள் முகத்தைச்சுளித்துக் காட்டுகின்றாள்.
Deux et quatre font six. இரண்டும் நாலும் ஆறு.
Est-ce que vous faites le vêtement d'enfants?
*நீங்கள் பிள்ளைகளின் சட்டை விற்பதுண்டா?*
Il fait un poème. அவன் ஒரு கவிதை இயற்றுகின்றான்.
Il fait du bruit. அவன் சத்தம் செய்கின்றான்.
Il fait du tennis. அவன் டெனிஸ் விளையாடுகின்றான்.
Il fait de la musique. அவன் இசை வாசிக்கின்றான்.

*சிலபெயருரிச்சொற்களுடன்.... பேச்சுவழக்கில் இவ்வாக்கியம் அதிகம் பயன்படுத்தப்படுகின்றது.*
Elle fait jeune pour son âge.
அவளுடைய வயதிற்கு அவள் இளமையாகத் தோன்றுகின்றாள்.
*குறிப்பு* : வாயுமண்டல அல்லது சீதோஷ்ணநிலையைக் குறிக்க Faire பயன்படும். இதில் Il அவன் என்று பொருள்படாது.
Il fait froid. குளிராக இருக்கின்றது.
Il fait chaud சூடாக இருக்கின்றது.

### *Aindre, Eindre, Oindre* இல் முடியும் வினைச்சொற்கள்

### *Peindre* வர்ணம் பூசுதல்

Je peins நான் வர்ணம் பூசுகின்றேன்
Tu peins
Il peint
Nous peig**nons**
Vous peig**nez**
Ils / Elles peig**nent**
இவை பன்மைபிரதிப்பெயர்ச்சொற்களுக்கு ஒரு G ஐ கூடுதலாக எடுக்கும்.

இவ்வாறே
Atteindre - அடைதல் (இலக்கை, உச்சியை)
Teindre - சாயம் போடுதல்
Eteindre - அணைத்தல் (விளக்கை,ஒளியை)
Joindre - இணைத்தல்
Craindre - பயப்படுதல்
Plaindre - பரிதாபப்படுதல், முறையிடல்
Conjoindre - திருமணம் மூலம்இணைதல்

### *Boire* குடித்தல், அருந்துதல்

Je boi**s** நான் குடிக்கின்றேன்
Tu boi**s**
Il / Elle boit
Nous buv**ons**
Vous buv**ez**
Ils / Elles boi**vent**

Il boit du thé. அவன் தேநீர் குடிக்கின்றான்.
Qu'est-ce que vous buvez? நீங்கள் என்ன குடிக்கின்றீர்கள்?

### *Partir* புறப்படுதல், போகுதல்

Je par**s** நான் புறப்படுகின்றேன்
Tu par**s**
Il / Elle part
Nous part**ons**
Vous part**ez**
Ils / Elles part**ent**

இவ்வாறே Sentir - உணர்தல்
Sortir - வெளியேறுதல்
Mentir - பொய்கூறல்
Démentir - மறுத்தல்
Dormir - நித்திரை செய்தல்
Servir - பரிமாறுதல்

Il dort bien. அவன் நன்றாகத் தூங்குகின்றான்.
Le train part. புகையிரதம் புறப்படுகின்றது.
Il part pour l'Inde. அவன் இந்தியாவுக்கு புறப்பட்டுச் செல்கின்றான்.

*குறிப்பு* : VRIR அல்லது FRIR என்று முடியும் வினைச்சொற்கள் முதலாம்கூட்ட முடிவை எடுக்கும்.

### *Ouvrir* திறத்தல்

J'ouvre நான் திறக்கின்றேன்
Tu ouvre**s**
Il / Elle ouvre
Nous ouvr**ons**
Vous ouvr**ez**
Ils / Elles ouvr**ent**

இவ்வாறே Couvrir - மூடுதல், போர்த்தல்
Offrir - அன்பளிப்புச்செய்தல்
Souffrir - வருந்துதல்
Découvrir - கண்டுபிடித்தல்

Nous ouvrons la porte. நாங்கள் கதவைத் திறக்கின்றோம்.
Elle offre de belles roses. அவள் அழகான ரோஜாக்களை அன்பளிப்புச்செய்கின்றாள்.

*இவ்வாறே Cueillir என்ற வினைச்சொல்லும் முதலாம்கூட்ட முடிவை எடுக்கும்.*

### *Cueillir* பிடுங்குதல், பறித்தல்

Je cueille நான் பறிக்கின்றேன் (பிடுங்குகின்றேன்) இவ்வாறே Accueillir - வரவேற்றல்
tu cueille**s**
Il / Elle cueille
Nous cueill**ons**
Vous cueill**ez**
Ils / Elles cueill**ent**

Il cueille des pommes. அவன் அப்பிள்கள் பிடுங்குகின்றான்.
Tu accueilles des invités. நீ விருந்தினர்களை வரவேற்கின்றாய்.

### *Vouloir* விரும்புதல், வேண்டியிருத்தல்

Je veu**x** நான் விரும்புகின்றேன், எனக்கு வேண்டும்
**Tu veux**
Il / Elle veut
Nous voul**ons**
Vous voul**ez**
**Ils / Elles veulent**

1) Vouloir உடன் ஒரு பெயர்ச்சொல் இடலாம்.
Il veut un crayon. அவனுக்கு ஒரு பென்சில் வேண்டும் (தேவையாகவிருக்கின்றது).
Nous voulons la paix. எங்களுக்கு சமாதானம் வேண்டும்.
Je veux un café. எனக்கு ஒரு கோப்பி வேண்டும்.
Qu'est-ce qu'il veut? அவனுக்கு என்ன வேண்டும்?
Je veux de l'eau. எனக்கு தண்ணீர் வேண்டும்.
Nous ne voulons pas cette chambre. எங்களுக்கு இந்த அறை வேண்டாம்.

2) Vouloir உடன் நேரடியாக ஒரு வினைச்சொல்லை எழுதலாம்.
Il veut écouter votre chanson.
அவன் உங்களுடைய பாட்டைக்கேட்க விரும்புகின்றான்.
Tu veux acheter une voiture. நீ ஒரு கார் வாங்க விரும்புகின்றாய்.
Elle veut maigrir. அவள் மெலிய விரும்புகின்றாள்.

## *Pouvoir* இயலுதல், முடிதல்

Je peux என்னால் முடியும் (இயலும்)
Tu peux
Il / Elle peut
Nous pouvons
Vous pouvez
Ils / Elles peuvent

*குறிப்பு* : இவ் வினைச்சொல் எப்போதும் ஒரு வினைச்சொல்லுடனே எழுதவேண்டும். ஒரு போதும் பெயர்ச்சொல் இடக்கூடாது.
Il peut parler le tamoul. அவனால் தமிழ் பேசமுடியும்.
Vous pouvez nager. உங்களால் நீந்த முடியும்.
அனுமதி அல்லது உத்தரவு வழங்கவும் Pouvoir பயன்படும்.
Tu peux entrer. நீ நுழையலாம்.
Il peut partir. அவன் புறப்படலாம் (போகலாம்)

## *Devoir* வேண்டும், கடமைப்பட்டிருத்தல்

Je dois
Tu dois
Il / Elle doit
Nous devons
Vous devez
Ils / elles doivent

பொதுவாக *devoir* உடன் வினைச்சொல் இடுவோம்.
Je dois aller à Paris. நான் பரிசுக்கு போகவேண்டும்.
Il doit finir avant sept heures. அவன் ஏழுமணிக்கு முன்னால் முடிக்கவேண்டும்.

*எதிர்மறை, கட்டளை, உத்தரவு இடும்போது...*
Tu ne dois pas manger ce soir. நீ இன்று மாலை சாப்பிடக்கூடாது.
Il ne doit pas courir. அவன் ஓடக்கூடாது.

*குறிப்பு* : *Devoir* உடன் பெயர்ச்சொல் வரும்போது கடமைப்பட்டிருத்தல் அல்லது கொடுக்க வேண்டியிருத்தல் என பொருள்படும்.
Il doit cent francs à Mani. அவன் மணிக்கு நூறுபிராங்குகள் கடமைப்பட்டிருக்கின்றான் (கொடுக்கவேண்டும்).
Combien je vous dois? நான் உங்களுக்கு எவ்வளவு பணம் செலுத்தவேண்டும்?
Il doit rendre un livre à Raja. அவன் ராஜாவுக்கு ஒருபுத்தகம் திருப்பிக் கொடுக்கவேண்டும்.

### *Connaître* அறிதல்

Je connai**s** எனக்குத் தெரியும்
Tu connai**s**
Il / Elle connaî**t**
Nous connaiss**ons**
Vous connaiss**ez**
Ils / Elles connaiss**ent**

இவ்வாறே Paraître - வெளிவருதல்
Apparaître - தோன்றுதல்
Disparaître - மறைதல்
Naître - பிறத்தல்

Je connais votre adresse. எனக்கு உங்களுடைய முகவரி தெரியும்.
Est - ce que vous connaissez cet homme?
உங்களுக்கு அந்தமனிதனைத் தெரியுமா?

### *Tenir* பிடித்தல்

Je tien**s** நான் பிடிக்கின்றேன்
Tu tien**s**
Il / Elle tien**t**
Nous ten**ons**
Vous ten**ez**
Ils / Elles tien**nent**

இவ்வினைச்சொல் venir மாதிரியே விகுதிக்கிரமம் பெறும்.

இவ்வாறே Maintenir - பராமரித்தல்
Obtenir - அடைதல்
Soutenir - ஆதரித்தல்
Devenir - இன்னொரு நிலைக்குமாறுதல்
Intervenir - தலையிடுதல்
Prévenir - முன்கூட்டியே அறிவித்தல்

Je tiens votre main. நான் உங்களுடைய கையைப்பற்றுகின்றேன் (பிடிக்கின்றேன்).
Il tient un bout. அவன் ஒர் முனையைப் பிடிக்கின்றான்.
*குறிப்பு* : tenir, à உடன் வரும்போது ஆசையாகவிருத்தல், பிடித்தல் என்று பொருள்படும்.

Elle tient à ses parents. அவள் தனது பெற்றோர்களில் ஆசையாக இருக்கின்றாள்.
Elle tient à vous voir. அவள் உங்களைப்பார்க்க ஆசையாக இருக்கின்றாள்.
ஆனால் Tenir de உடன் வரும்போது சாயலாக, ஓரேமாதிரியாக இருத்தல் என்று பொருள்படும்.
Il tient de sa mère. அவன் தனது அம்மாவின் சாயலாக இருக்கின்றான்.

### *Savoir* தெரிதல், அறிதல் (ஆழமாய்)

Je sai**s** எனக்குத் தெரியும், நான் அறிவேன்
Tu sai**s**
Il / Elle sai**t**
Nous sav**ons**
Vous sav**ez**
Ils / Elles sav**ent**

Il sait votre nom. அவனுக்கு உங்களுடைய பெயர் தெரியும்.
Comment savez-vous? உங்களுக்கு எப்படித் தெரியும்?
*குறிப்பு* : *savoir* உடன் நேரடியாக பெயர்ச்சொல்லை அல்லது உருமாறாத வினைச்சொல்லை இடலாம்.

Elle sait nager. அவளுக்கு நீந்தத்தெரியும்.
Je ne sais pas écrire. எனக்கு எழுதத் தெரியாது.

*savoir* உடன் கேள்விகேட்கப் பயன்படும் சொல்லையும் உருமாறாத வினைச்சொல்லையும் உபயோகிக்கலாம்.
Est - ce que vous savez comment faire? உங்களுக்கு எப்படிச் செய்வதென்று தெரியுமா?
Elle sait comment répondre. அவளுக்கு எப்படிப் பதிலளிப்பதென்று தெரியும்.

*3ம் கூட்டவினைச்சொற்களில் சில ஒருவரையும் சுட்டிக்குறிக்காத சொல்லுடன்* (impersonnel) *உருமாறும்.*
*ex:* *Pleuvoir*
- Il pleut மழை பெய்கின்றது

*Falloir*
- Il faut வேண்டும், கட்டாயம்

# L'impératif
## ஏவல் வினைமுற்று

கட்டளையிட, அறிவுரை, ஆலோசனை கூற, வாழ்த்த, அழைப்புவிட ஏவல்வினைமுற்று பயன்படும். தன்மை பன்மைக்கு, முன்னிலை ஒருமை, பன்மைக்கு மட்டுமே இக்காலம் உபயோகிக்கப்படும். ஏவல் வினைமுற்று பயன்படுத்தும் போது ஒரு போதும் எழுவாய் இடக்கூடாது.

**வினைச்சொற்களை ஏவல் வினைமுற்றுக்கு உருமாற்றும் முறை**
ஏவல் வினைமுற்றில் நிகழ்காலம், இறந்தகாலம் என இரு காலங்கள் உண்டு. இறந்தகாலம் நடைமுறையில் உபயோகிப்பது வெகு அருமை. உடனடியாக அல்லாது வெகுவிரைவில் நடக்க இருக்கும் செயல்களை நிகழ்காலத்திலும், எதிர்காலத்தில், ஒரு குறிப்பிட்ட கணத்தில் முற்றுப்பெற்றிருக்கவேண்டிய செயல்களை இறந்த காலத்திலும் கூறலாம்.

**நிகழ்காலம்**
சுட்டு நிகழ்காலம் (Indicatif présent) போலவே இதன் உருமாற்றமுமாகும்.
முதலாம் கூட்டவினைச்சொற்களில் tu இற்கு s இடக்கூடாது. மற்றைய கூட்டங்களில் ஒரு மாற்றமுமில்லை.

| ***Manger*** | *சாப்பிடுதல்* | ***Finir*** | *முடித்தல்* | ***Prendre*** | *எடுத்தல்* |
|---|---|---|---|---|---|
| mange | சாப்பிடு | finis | முடி | prends | எடு |
| mangeons | சாப்பிடுவோம் | finissons | முடிப்போம் | prenons | எடுப்போம் |
| mangez | சாப்பிடுங்கள் | finissez | முடியுங்கள் | prenez | எடுங்கள் |

ஆனால் மூன்றாம் கூட்டத்திலுள்ள சில வினைச்சொற்கள் வித்தியாசமான வடிவத்தை எடுக்கும்.

| ***Avoir*** | *வைத்திருத்தல்* | ***Etre*** | *இருத்தல்* | ***Aller*** | *போதல்* |
|---|---|---|---|---|---|
| aie | வைத்திரு | sois | இரு | va | போ |
| ayons | வைத்திருப்போம் | soyons | இருப்போம் | allons | போவோம் |
| ayez | வைத்திருங்கள் | soyez | இருங்கள் | allez | போங்கள் |

| ***Savoir*** | *அறிதல்* | ***Vouloir*** |
|---|---|---|
| sache | அறி | veux (veuille) |
| sachons | அறிவோம் | voulons |
| sachez | அறியுங்கள் | voulez (veuillez) |

**தொழிற்பாடு**
உடனடியாக அல்லாத வெகுவிரைவில் நடக்க இருக்கும் செயல்களை நிகழ்காலத்தில் கூறலாம்.
Venez demain நாளை வாருங்கள்.
Regardez ces enfants இந்தப் பிள்ளைகளைப் பாருங்கள்

### *L'ordre* *கட்டளை அல்லது ஏவல்*
Sortez d'ici. இங்கிருந்து வெளியேறுங்கள்.
Faites ça. இதைச் செய்யுங்கள்.

***Le conseil*** *அறிவுரை*

| | |
|---|---|
| Sois gentil | அன்பாக இரு. |
| N'ayez pas peur | பயப்படவேண்டாம் அல்லது பயப்படாதீர்கள். |
| N'allez pas loin | தூரம் செல்ல வேண்டாம். |

***Le souhait*** *வாழ்த்து*

| | |
|---|---|
| Passez de bonnes vacances. | நன்றாக விடுமுறையைக் கழியுங்கள். |
| Dormez bien | நன்றாக உறங்குங்கள். |

***L'invitation*** *அழைப்பு*

| | |
|---|---|
| Entrez jeune homme. | உள்ளே வாருங்கள் இளைஞனே. |
| Asseyez-vous | அமருங்கள். |

***La politesse*** *மரியாதை*

| | |
|---|---|
| Veuillez m'envoyer. | எனக்கு அனுப்புங்கள். |
| Veuillez bien vous asseoir. | அமருங்கள். |

# Le passé récent
## அண்மித்த இறந்தகாலம்

அண்மையில் நடந்துமுடிந்த செயல்களை குறிப்பிடுவதற்கு இது பயன்படும்.

*இதன்வடிவம்*

***Sujet venir*** ***de infinitif***
*au présent*

Je viens de nager. நான் நீந்திவிட்டு வருகின்றேன்.
Il vient de partir. அவன் இப்போதுதான் புறப்பட்டான்.
Est-ce que vous venez de téléphoner au Srilanka?
நீங்கள் இப்போதுதான் இலங்கைக்கு தொலைபேசி செய்தீர்களா?
Tu viens de finir de lire. நீ இப்போதுதான் வாசித்து முடித்தாய்.
Il vient de pleuvoir. இப்போதுதான் மழைபெய்தது.
Nous venons de boire du café. நாங்கள் இப்போதுதான் கோப்பி அருந்தினோம்.
*குறிப்பு* : எமது நாளாந்தவாழ்க்கையில் இக்காலம் பேச்சுவழக்கில் அதிகம் உபயோகிக்கப்படுகின்றது.

# Le passé composé
## இறந்த காலம்

ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு செயல் நடந்து முடிந்திருந்தால் அந்தச்செயலை passé composé யில் கூறலாம். குறுகிய காலத்தில் அல்லது குறிப்பிட்ட காலத்திற்குள் ஒரு செயல் நடைபெற்றிருப்பின் அதற்கும் passé composé பயன்படும்.

*இதன் வடிவம்:*

***Sujet + Avoir*** *ou* ***Etre*** *au présent* ***+ Participe passé***

*Le participe passé* இவை உதவிவினைச்சொல்லுடன் கூட்டுக்காலங்களில் உபயோகப்படுத்தப்படும்.

## *Participe passé* உருவாக்கும் முறை

முதலாம் கூட்டவினைச்சொற்களின் இறுதி எழுத்துக்களான ER இல் R ஐ நீக்கி E மீது accent aigu இடவேண்டும்.

Parler - parlé
Laver - lavé
Ecouter - écouté

இரண்டாம் கூட்டவினைச்சொற்களின் இறுதி எழுத்துக்களான IR இல் R ஐ நீக்குவதன் மூலம் Participe passé பெறப்படும்

Finir - fini
Bâtir - bâti

### மூன்றாம் கூட்ட வினைச்சொற்களின் *Participe passé*

Prendre இல் முடிவன pris ஐ எடுக்கும்.

| | |
|---|---|
| Prendre | pris |
| Comprendre | compris |
| Apprendre | appris |

Mettre இல் முடிவன mis ஐ எடுக்கும்.

| | |
|---|---|
| Mettre | mis |
| Transmettre | Transmis |

Eindre இல் முடிவன eint ஐ எடுக்கும்.

| | |
|---|---|
| Peindre | peint |
| Eteindre | éteint |

Traire ல் முடிவன trait ஐ எடுக்கும்

| | |
|---|---|
| Traire | trait |
| Extraire | extrait |

Faire இல் முடிவன fait ஐ எடுக்கும்.

| | |
|---|---|
| Faire | fait |
| Satisfaire | satisfait |

Dire இல் முடிவன dit ஐ எடுக்கும்

| | |
|---|---|
| Dire | dit |
| Interdire | interdit |
| Contredire | contredit |

Crire இல் முடிவன crit ஐ எடுக்கும்

| | |
|---|---|
| Ecrire | écrit |
| Inscrire | inscrit |

Uire இல் முடிவன uit ஐ எடுக்கும்.

| | |
|---|---|
| Cuire | cuit |
| Conduire | conduit |

Nir இல் முடிவன nu ஐ எடுக்கும்

| | |
|---|---|
| Venir | venu |
| Obtenir | obtenu |

Endre இல் முடிவன endu ஐ எடுக்கும்.

| | |
|---|---|
| Attendre | attendu |
| Rendre | rendu |

Prendre இல் முடிவன விதிவிலக்கானவை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Aller | -allé | Joindre | -joint | Frire | -frit |
| Suffire | -suffit | Pleuvoir | -plu | Vouloir | -voulu |
| Devoir | -dû | Savoir | -su | Falloir | -fallu |
| Naître | -né | Recevoir | -reçu | Mordre | -mordu |
| Tordre | -tordu | Répondre | -répondu | Fondre | -fondu |
| Sentir | -senti | Mentir | -menti | Sortir | -sorti |
| Partir | -parti | Avoir | -eu | Etre | -été |
| Servir | -servi | Plaire | -plu | Boire | -bu |
| Croire | -cru | Taire | -tu | Craindre | -craint |
| Mourir | -mort | Vivre | -vécu | Coudre | -cousu |
| Moudre | -moulu | Voir | -vu | Connaître | -connu |

*குறிப்பு:* வினைச்சொற்கள் அட்டவணையில் தமிழ்க் கருத்துக்களை பார்க்கவும்.
இறந்த காலத்தில் Avoir உடன் உருமாறும் வினைச்சொற்கள். பெரும்பாலான செயப்படுபொருளை ஏற்கும் வினைச்சொற்கள் avoir உடனே உருமாறும்.

உ+ம் :

***DONNER***

| | | | |
|---|---|---|---|
| j' | ai | donné | நான் கொடுத்தேன் |
| tu | as | donné | நீ கொடுத்தாய் |
| elle | a | donné | அவள் கொடுத்தாள் |
| nous | avons | donné | நாங்கள் கொடுத்தோம் |
| vous | avez | donné | நீங்கள் கொடுத்தீர்கள் |
| ils | ont | donné | அவர்கள் கொடுத்தார்கள் |

***FINIR***

| | | | |
|---|---|---|---|
| j' | ai | fini | நான் முடித்தேன் |
| tu | as | fini | நீ முடித்தாய் |
| elle | a | fini | அவள் முடித்தாள் |
| nous | avons | fini | நாங்கள் முடித்தோம் |
| vous | avez | fini | நீங்கள் முடித்தீர்கள் |
| ils | ont | fini | அவர்கள் முடித்தார்கள் |

Avoir உடன் வரும் participe passé பால், எண் எடுக்காது.

Il a eu la carte de réfugié; அவனுக்கு அகதி அட்டை கிடைத்தது.
Elle a été première de sa classe. அவள் தனது வகுப்பில் முதலாவதாக இருந்தாள்.
Comment avez-vous trouvé cette adresse? எப்படி நீங்கள் இந்த விலாசத்தை கண்டுபிடித்தீர்கள்?
J'ai vu un bon film. நான் ஒரு நல்ல படம் பார்த்தேன்.
வினைச்சொல்லால் வினாவாக்கும் போது எழுவாய்க்கு முன் உதவி வினைச்சொல்லை இடுவோம்
Avez-vous pris mon stylo? நீங்கள் எனது பேனையை எடுத்தீர்களா?.

எதிர்மறையில் உதவி வினைச்சொல்லிற்கு மட்டுமே ne....pas இடுவோம்.

Nous n'avons pas pris votre stylo. நாங்கள் உங்களுடைய பேனையை எடுக்கவில்லை.
எதிர்மறை வினாவசனத்தில்
Pourquoi n'as-tu pas téléphoné? நீ ஏன் டெலிபோன் எடுக்கவில்லை?
பயனிலையால் வினாவாக்கப்பட்டிருப்பின் எழுவாய்க்கும் சேர்த்தே Ne ....pas இடவேண்டும்.
N'avez-vous pas pris mon stylo? நீங்கள் எனது பேனையை எடுக்கவில்லையா?

ETRE உடன் உருமாறும் வினைச்சொற்கள்

மிகக் குறைந்தளவிலான வினைச்சொற்களே ETRE உடன் உருமாறும்.

உ+ம்

Aller Venir Arriver Partir

| | | | |
|---|---|---|---|
| Entrer | Sortir | Monter | Descendre |
| Naître | Mourir | Rester | Tomber |
| Passer | Retourner | Décéder | Devenir etc.... |

***Aller*** **போதல்**

| | | |
|---|---|---|
| Je | suis allé(e) | நான் சென்றேன் |
| Tu | es allé(e) | நீ சென்றாய் |
| Il | est allé | அவன் சென்றான் |
| Elle | est allée | அவள் சென்றாள் |
| Nous | sommes allé(e)s | நாங்கள் சென்றோம் |
| Vous | êtes allé(e)s | நீங்கள் சென்றீர்கள் |
| Ils | sont allés | அவர்கள் சென்றார்கள் |
| Elles | sont allées | அவர்கள் சென்றார்கள் |

***Venir*** **வருதல்**

| | | |
|---|---|---|
| Je | suis venu(e) | நான் வந்தேன் |
| Tu | es venu(e) | நீ வந்தாய் |
| Il | est venu | அவன் வந்தான் |
| Elle | est venue | அவள் வந்தாள் |
| Nous | sommes venu(e)s | நாங்கள் வந்தோம் |
| Vous | êtes venu(e)s | நீங்கள் வந்தீர்கள் |
| Ils | sont venus | அவர்கள் வந்தார்கள் |
| Elles | sont venues | அவர்கள் வந்தார்கள் |

Etre உடன் உருமாறும் வினைச்சொற்களின் participe passé எழுவாயின் பால், எண்ணுக்கேற்ப மாற்றம் செய்ய வேண்டும்.

| | |
|---|---|
| Il est allé à l'école. | அவன் பாடசாலைக்குச் சென்றான். |
| Elle est allée à l'église. | அவள் கோயிலுக்குச் சென்றாள். |
| Où es-tu allé? | நீ எங்கே சென்றாய்? |
| Nous sommes allés au cinéma. | நாங்கள் சினிமாவிற்குச் சென்றோம். |
| Elle est née le 23 octobre 1977. | அவள் 23ஒக்டோபர் 1977 பிறந்தாள். |
| Kamala est retournée au Srilanka. | கமலா இலங்கைக்குத் திரும்பினாள். |

***Avoir*** **உடனும்** ***Etre*** **உடனும் உருமாறும் வினைச்சொற்கள்**

Etre உடன் உருமாறும் வினைச்சொற்கள் செயப்படுபொருளை எடுப்பின் அவற்றை avoir உடன் இடலாம்

<u>உ+ம்:</u>

Entrer, Rentrer, Sortir, Monter, Descendre, Passer, Retourner

| | |
|---|---|
| Elle est entrée par la fenêtre. | Nous avons entré cette table par la fenêtre. |
| அவள் யன்னலூடாக நுழைந்தாள். | நாங்கள் யன்னலூடாக மேசையை உள்ளே நுழைத்தோம். |
| Elle est sortie de la classe. | Elle a sorti une photo de sa poche. |
| அவள் வகுப்பறையிலிருந்து வெளியேறினாள். | அவள் தனது பாக்கட்டிலிருந்து ஒருபடத்தை வெளியில் எடுத்தாள். |
| Le train n'est pas encore passé. | Elle m'a passé ses livres. |
| புகையிரதம் இன்னும் கடக்கவில்லை. | அவள் தனது புத்தகங்களை எனக்குத் தந்தாள். |
| Elle est decendue avec ses amies | Elle a descendu la poubelle. |
| அவள் தனது நண்பிகளுடன் இறங்கினாள். | அவள் குப்பையை இறக்கினாள். |

# L'Imparfait
## இறந்தகாலத்தொடர் அல்லது தொடர் இறப்பு

Imparfait உம் ஒரு இறந்தகாலவடிவமாகும். ஒரு செயல் நடந்து கொண்டிருந்ததைக் குறிப்பதற்கு இது பயன் படுத்தப்படும். Passé composé இல் ஓர்செயலின் முடிவுகாலம் தெரியும். ஆனால் Impafait இல் முடிவு காலம் தெரியாது.

<u>உ + ம்:</u>

| | |
|---|---|
| அவன் நடந்து கொண்டிருந்தான். | இவ்வசனம் imparfait இல் கூறவேண்டும். |
| அவன் நடந்தான். | இவ்வசனம் Passé composé இல் கூறவேண்டும். |

*இதன் வடிவம் :*

ஒரு வினைச்சொல்லை நிகழ்காலத்தில் nous இற்கு உருமாற்றி அதில் ons ஐ நீக்கினால் imparfait இன் வினையடி (le Radical) உருவாக்கலாம். அத்துடன் முடிவையும் (la terminaison) சேர்த்தால் Imparfait இன் உருமாற்றம் பெறப்படும்.

## *La terminaison de l'imparfait*

| | |
|---|---|
| **Je** | **- ais** |
| **Tu** | **- ais** |
| **Il/Elle** | **- ait** |
| **Nous** | **- ions** |
| **Vous** | **- iez** |
| **Ils/Elles** | **- aient** |

### *Regarder*

| | |
|---|---|
| Je | regard***ais*** |
| Tu | regard***ais*** |
| Il/Elle | regard***ait*** |
| Nous | regard***ions*** |
| Vous | regard***iez*** |
| Ils/Elles | regard***aient*** |

### *Finir*

| | |
|---|---|
| Je | finiss***ais*** |
| Tu | finiss***ais*** |
| Ils/Elle | finiss***ait*** |
| Nous | finiss***ions*** |
| Vous | finiss***iez*** |
| Ils/Elles | finiss***aient*** |

### *Avoir*

| | |
|---|---|
| J' | av***ais*** |
| Tu | av***ais*** |
| Il/Elle | av***ait*** |
| Nous | av***ions*** |
| Vous | av***iez*** |
| Ils/Elles | av***aient*** |

### *Etre*

| | |
|---|---|
| J' | ét***ais*** |
| Tu | ét***ais*** |
| Ils/Elle | ét***ait*** |
| Nous | ét***ions*** |
| Vous | ét***iez*** |
| Ils/Elles | ét***aient*** |

## *Imparfait* இன் தொழிற்பாடுகள்

1) நடந்து கொண்டிருந்த செயலைக் குறிப்பதற்கு
உ+ம் Il pleuvait. மழை பெய்துகொண்டிருந்தது.

2) வர்ணனை,விவரணை செய்வதற்கு
உ+ம் Le ciel était bleu. வானம் நீலமாக இருந்தது.

3) வழக்கமாக நடந்த ஒரு செயலைக் குறிப்பதற்கு
உ+ம் Chaque dimanche, il allait au cinéma. ஒவ்வொரு ஞாயிறும் அவன் சினிமாவிற்குச் சென்றான்.

4) ஒரு செயல் நடந்துகொண்டிருந்தபோது இன்னொரு செயல் நடந்தால்
உ+ம் Quand elle regardait la télévision vous êtes venus.
அவள் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்த போது நீங்கள் வந்தீர்கள்.

*குறிப்பு:*
manger இல் nous,vous இற்கு மேலதிகமாக e இடக்கூடாது.
Je mangeais ஆனால் Nous mangions

J'avais soif. எனக்குத் தாகமாகஇருந்தது.
Il était à l'école. அவன் பாடசாலையில் இருந்தான்.
Le travail était dur. வேலை கடினமாக இருந்தது.

*வர்ணிப்பு*
Il faisait froid. குளிராக இருந்தது.
Le chien aboyait. நாய் குரைத்துக் கொண்டிருந்தது.
Il y avait beaucoup de monde. நிறையச் சனம் இருந்தார்கள்.

*ஒரு செயல் நடந்துகொண்டிருந்தபோது இன்னொரு செயல் நடத்தல்*

Quand tu lisais un roman je suis sorti . நீ ஒரு நாவல் வாசித்துக் கொண்டிருந்தபோது நான் வெளியேறினேன்.
Quand Le professeur est arrivé, nous n'étions pas là. ஆசிரியர் வந்த போது நாங்கள் அங்கு இருக்கவில்லை.
Quand je travaillais, le téléphone a sonné. நான் வேலை செய்து கொண்டிருந்தபோது தொலைபேசி அடித்தது.

*Si* உடன்
Si Vous rencontiez dieu qu'est-ce que vous lui demanderiez?
*நீங்கள் கடவுளைச் சந்தித்தால் என்ன கேட்பீர்கள்?*

# Être en train de + infinitif

பேச்சு வழக்கில் அநேகமாக இவ்வடிவத்தைப் பாவிப்பதுண்டு. தொடர்ந்து நடந்த, நடக்கின்ற, நடக்கவுள்ள ஒரு செயலை இவ்வடிவத்தில் கூறலாம். அதாவது ஆங்கிலத்தில் உள்ள Past, Present, Future Continuous போன்றது.

Il était en train de travailler — அவன் வேலை செய்துகொண்டிருந்தான்.
Il est en train de travailler — அவன் வேலை செய்துகொண்டிருக்கிறான்.
Il sera en train de travailler — அவன் வேலை செய்துகொண்டிருப்பான்
*Le verbe être இன் காலங்கள் மாற்றும்போது வசனங்களின் காலமும் மாற்றமடையும்.*

இதன் வடிவம் : **Le sujet +** *la conjugaison* **du verbe être + en train de + infinitif**

உ+ம்.
நிகழ்காலத்தைக் குறிக்க — être ஐ — Présent இல் இடவேண்டும்.
கடந்த காலத்தைக் குறிக்க — être ஐ — imparfait இல் இடவேண்டும்.
எதிர்காலத்தைக் குறிக்க — être ஐ — Futur இல் இடவேண்டும்.

உ+ம்.
Je suis en train de penser à vous — நான் உங்களை நினைத்துக்கொண்டிருக்கிறேன்.
Elle était en train d'écrire un roman. — அவள் ஒரு நாவல் எழுதிக்கொண்டிருந்தாள்.
Quand j'irai voir Balan, il sera en train de travailler.
நான் பாலனைப் பார்க்கப்போகின்ற பொழுது, அவன் வேலை செய்துகொண்டிருப்பான்.

# Le Plus-Que-Parfait
## இறந்தகாலத்தின் இறப்பு அல்லது இறப்பிடை இறந்தகாலம்

இக் காலம் இறந்தகாலத்தின் இறப்பு என அழைக்கப்படும். முடிந்த இரு செயல்களில் முதலில் நடந்த செயலுக்கு Plus-que-Parfait உம் பின்னர் நடந்த செயலுக்கு Passé composé அல்லது imparfait இடவேண்டும்.

இதன் வடிவம் :
Sujet **avoir** *ou* **être + participe passé**
*à l'imparfait*

| ***Donner*** | ***Venir*** |
|---|---|
| J'avais donné | J'étais venu(e) |
| Tu avais donné | Tu étais venu(e) |
| Il / Elle avait donné | Il / Elle était venu(e) |
| Nous avions donné | Nous étions venu(e)s |
| Vous aviez donné | Vous étiez venu(e)s |
| Ils / Elles avaient donné | Ils / Elles étaient venu(e)s |

இறந்தகாலத்தில் (Passé composé) கூறிய மாதிரியே எல்லா கூட்டவடிவிலும் être உடன் உருமாறும் வினைச்சொற்கள் அவ்வுதவி வினைச்சொல்லுடனே உருமாறும்.

### *Plus-que-parfait இன் உபயோகங்கள்*

(1) முதலில் நடந்த செயலைக் கூறுவதற்கு...

Il avait déjà vu le film Valli, mais il a voulu le revoir.
*அவன் ஏற்கனவே வள்ளி படத்தைப்பார்த்து விட்டான், ஆனால் மீண்டும் அதைப்பார்க்க விரும்பினான்.*
Quand je suis venu, ils étaient déjà partis.
*நான் வந்தபொழுது அவர்கள் ஏற்கனவே புறப்பட்டுவிட்டனர்.*
Depuis qu'il avait reçu cette lettre, il était nerveux.
*அவன் இந்தக்கடிதத்தை பெற்றுக்கொண்டதிலிருந்து உணர்ச்சிவசப்பட்டு இருந்தான்.*
Puisque tu n'avais pas mangé, tu avais faim.
*நீ சாப்பிடாததினால் உனக்கு பசியாக இருந்தது.*

*குறிப்பு : பின்வரும் சொற்கள் இரு வாக்கியத்தை இணைப்பதற்கு Plus-que-parfait இல் உபயோகிக்கப்படும்.*

| | | | |
|---|---|---|---|
| Après que | - பின், பிறகு | Comme | - காரணத்தினால் |
| Quand | - பொழுது | Puisque | - காரணத்தினால் |
| Lorsque | - பொழுது | Parceque | - ஏனென்றால் |
| Depuis que | - இருந்து | | |

(2) ஒரு நடந்த செயலின் முன் ஒழுங்காக, வழக்கமாக நடைபெற்ற செயல்களைக் குறிப்பதற்கு...
Lorsqu'il avait lu un livre, il en parlait souvent.
*அவன் ஒரு புத்தகத்தை வாசித்தவுடன் அவன் அடிக்கடி அதைப்பற்றி பேசிக்கொண்டிருந்தான்.*

(3) Si உடன் (நிபந்தனை)
Si plus-que-parfait, Conditionnel passé இவ்வடிவில் வசனங்கள் எழுதவேண்டும். ஒரு செயல் நடந்திருக்கச் சாத்தியமில்லாதிருந்திருப்பின் அதற்கு Si உடன் Plus-que-parfait இடவேண்டும்.
Si tu m'avais demandé mon stylo, Je te l'aurais donné.
*நீ என்னுடைய பேனையைக் கேட்டிருந்தால், நான் அதைத்தந்திருப்பேன்.*

(4) இறந்தகாலத்தின் இறந்தகாலமாக
தன்கூற்று இறந்தகாலத்தில் இருப்பின் அவ்வசனத்தைப் பிறர்கூற்றுக்கு மாற்றும்பொழுது அவ்வசனம் plus que parfait இல் கூறவேண்டும்.
Il a dit << J'ai bu du thé >>
*அவன் கூறினான் "நான் தேநீர் குடித்தேன்".*
Il a dit qu'il avait bu du thé.
*அவன் தான் தேநீர் அருந்தினானென சொன்னான்.*

# Le Futur
## எதிர்காலம்

எதிர்காலம் மூன்று வகைப்படும்.

| | |
|---|---|
| Le Futur simple | சாதாரண எதிர்காலம் |
| Le Futur proche | அண்மித்த எதிர்காலம் |
| Le Futur antérieur | எதிர்கால இறப்பு (இறப்பிடை எதிர்காலம்) |

## *Le Futur simple*
### சாதாரண எதிர்காலம்

நடக்கவிருக்கும் செயல் எதிர்காலத்தில் கூறப்படும்.
*இதன் வடிவம் -*

Sujet **verbe à** + **avoir**
*l'infinitif* *au présent*

எதிர்காலத்தில் ஒருவினைச்சொல்லின் infinitif வடிவமே radical ஆகும். முதலாம், இரண்டாம்கூட்ட வினைச்சொற்களை உருமாற்றாமல் அதனுடன் நிகழ்காலத்திற்கு உருமாற்றிய avoir இடவேண்டும்.

### Rester

Je rester***ai*** நான் தங்குவேன்
Tu rester***as***
Il / Elle rester***a***
Nous rester***ons***
Vous rester***ez***
Ils / Elles rester***ont***

### Bâtir

Je bâti***rai*** நான் கட்டுவேன்
Tu bâti***ras***
Il / Elle bâti***ra***
Nous bâti***rons***
Vous bâti***rez***
Ils / Elles bâti***ront***

இவ்வாறே எல்லா 1, 2 கூட்டவினைச்சொற்கள் உருமாறும்.
*குறிப்பு* : E இல் முடியும் மூன்றாம்கூட்ட வினைச்சொற்கள் அதை இழந்து எதிர்கால radical ஆக மாறும். அத்துடன் terminaison இணைக்க வேண்டும்.

### Boire

Je boi***rai*** நான் குடிப்பேன்
Tu boi***ras***
Il / Elle boi***ra***
Nous boi***rons***
Vous boi***rez***
Ils / Elles boi***ront***

### Rendre

Je rend***rai*** நான் திருப்பிக்கொடுப்பேன்
Tu rend***ras***
Il / Elle rend***ra***
Nous rend***rons***
Vous rend***rez***
Ils / Elles rend***ront***

*ஆனால் சிலவினைச்சொற்களின் எதிர்கால radical முற்றாக மாறும்.*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Avoir | - aur | Voir | - verr | Valoir | - vaudr |
| Etre | - ser | Savoir | - saur | Falloir | - faudr |
| Aller | - ir | Envoyer | - enverr | | |
| Venir | - viendr | Acquérir | - acquerr | | |
| Vouloir | - voudr | Mourir | - mourr | | |
| Pouvoir | - pourr | Faire | - fer | | |
| Devoir | - devr | Recevoir | - recevr | | |

### Avoir

*J'aurai* நான் வைத்திருப்பேன்
*Tu auras*
*Il / Elle aura*
*Nous aurons*
*Vous aurez*
*Ils / Elles auront*

### Être

*Je serai* நான் இருப்பேன்
*Tu seras*
*Il / Elle sera*
*Nous serons*
*Vous serez*
*Ils / Elles seront*

Nous parlerons français dans trois mois. — *நாங்கள் 3 மாதத்திற்குள் பிரஞ்சு பேசுவோம்.*
Il viendra demain. — *நாளை அவன் வருவான்.*
J'aurai un diplôme en français. — *நான் பிரஞ்சில் ஒரு டிப்ளோமா வைத்திருப்பேன்.*

## Le Futur proche
**அண்மித்த எதிர்காலம்**

*உடனடியாக நடக்கவிருக்கும் செயல்களை குறிப்பிட இக்காலம் பயன்படும்.*
*இதன் வடிவம் -*

Sujet **aller** + **infinitif**
*au présent*

Le train va partir. — புகையிரதம் புறப்படப்போகின்றது.
Est-ce que tu vas manger avec lui? — *நீ அவனுடன் சாப்பிடப்போகின்றாயா?*
Quand est-ce que vous allez déménager? — *எப்பொழுது நீங்கள் வீடு மாறப்போகின்றீர்கள்?*
Nous allons chanter une belle chanson. — *நாங்கள் ஒரு அழகானபாட்டு பாடப்போகின்றோம்.*

| | |
|---|---|
| Vous allez tout comprendre. | *உங்களுக்கு எல்லாம் விளங்கப்போகின்றது.* |
| Je vais maigrir. | *நான் மெலியப் போகின்றேன்.* |
| Tu vas avoir les résultats. | *உனக்கு பரீட்சை பெறுபேறுகள் கிடைக்கப்போகின்றன.* |
| Comment vas-tu nous expliquer? | *எப்படி நீ எங்களுக்கு விளங்கப்படுத்தப்போகின்றாய்?* |

### *Le Futur Antérieur*
**எதிர்கால இறப்பு அல்லது இறப்பிடை எதிர்காலம்**

*எதிர்காலத்தில் ஒருசெயல் முடிந்திருக்கும் என்பதைக்கூற இக்காலம் பயன்படுத்தப்படும் அல்லது நடைபெற இருக்கும் இருசெயல்களில் முதலில் நடக்கும் செயலுக்கும் இக்காலம் பயன்படுத்தலாம்.*
*இதன் வடிவம் -*

**Sujet avoir** *ou* **être + participe passé**
*au futur*

| ***Donner*** | | ***Partir*** | |
|---|---|---|---|
| J'aurai donné | *நான் கொடுத்துவிடுவேன்* | Je serai parti(e) | *நான் புறப்பட்டு விடுவேன்* |
| Tu auras donné | *நீ கொடுத்துவிடுவாய்* | Tu seras parti(e) | *நீ புறப்பட்டு விடுவாய்* |
| Il / Elle aura donné | *அவன் கொடுத்துவிடுவான்* | Il / Elle sera parti(e) | *அவன்(ள்) புறப்பட்டு விடுவான்(ள்)* |
| Nous aurons donné | *நாங்கள் கொடுத்துவிடுவோம்* | Nous serons parti(e)s | *நாங்கள் புறப்பட்டு விடுவோம்* |
| Vous aurez donné | *நீங்கள் கொடுத்துவிடுவீர்கள்* | Vous serez parti(e)s | *நீங்கள் புறப்பட்டு விடுவீர்கள்* |
| Ils / Elles auront donné | *அவர்கள் கொடுத்துவிடுவார்கள்* | Ils / Elles seront parti(e)s | *அவர்கள் புறப்பட்டு விடுவார்கள்* |

*இவ்வாறே எல்லாவினைச்சொற்களும் உருமாறும்.*
Tu arriveras à cinq heures; alors je serai déjà parti.
*நீ ஐந்துமணிக்கு வந்தடைவாய்: நான் ஏற்கனவே புறப்பட்டுவிடுவேன்.*
Dans un an, elle aura terminé ses études de médecine.
*இன்னும் ஒருவருடத்தில் அவள் தனது மருத்துவக்கல்வியை முடித்துவிடுவாள்.*
Bientôt, nous aurons fini. *விரைவில் நாங்கள் முடித்துவிடுவோம்.*
Chacun récoltera ce qu'il aura semé. *ஒவ்வொருவரும் தான் விதைத்ததை அறுவடைசெய்வார்கள்.*
Nous dépenserons l'argent que nous aurons reçu.
*எங்களுக்கு கிடைக்கும் பணத்தை நாங்கள் செலவு செய்வோம்.*
Je partirai quand j'aurai fini mon travail. *எனது வேலையை நான் முடித்தவுடன் நான் புறப்படுவேன்.*

## Les verbes pronominaux
***தன்வினைச்சொற்கள்***

*இவ்வடிவத்தில் உள்ள வினைச்சொற்கள் எழுவாயின் பிரதிப்பெயர்ச்சொல்லை எடுக்கும். அதாவது செயப்படுபொருளாக வரவேண்டிய சொல்லையும் எழுவாய்க்குப் பக்கத்தில் இடவேண்டும். இப்படியிடும் பிரதிப்பெயர்ச்சொற்களை* pronom personnel réfléchi *என்பர்.*

### *Pronom personnel réfléchi*

| | | | |
|---|---|---|---|
| Je | **me** | Nous | **nous** |
| Tu | **te** | Vous | **vous** |
| Il /Elle | **se** | Ils /Elles | **se** |

*எழுவாய் ஒருசெயலை தனக்குச் செய்தால் அதற்கு* verbe pronominal *பயன்படுத்துவோம். வினைச்சொல்* se *என்ற சொல்லுடன் எப்போதும் எழுதப்படும்.*

Se peigner *தலைசீவுதல்*
Elle se peigne *அவள் தனக்கு தலை சீவுகின்றாள்*
*இதில்* peigne *என்ற பயனிலையின் செயப்படுபொருள்* se *ஆகும்.*

## *Verbe pronominal* இன் வகைகள்

1. எழுவாய் செயலை தனக்குச் செய்தால் (les verbes pronominaux de sens réfléchi) இவ்வடிவத்தை பயன்படுத்தவேண்டும்.
   Il se lave — அவன் தன்னை கழுவுகின்றான்
2. ஒன்றிற்கு மேற்பட்டவர் ஒருவரையொருவர் அல்லது ஒருவர் மீது ஒருவரின் செயலைக் குறிக்கும்போது Les verbes pronominaux de sens réciproque பாவிக்கப்படும்.
   Ils s'aiment — அவர்கள் ஒருவரையொருவர் விரும்புகின்றனர்
   Ils se parlent — அவர்கள் ஒருவருடன் ஒருவர் அல்லது தங்களுக்குள் பேசுகின்றனர்

*verbes pronominaux இருவகைப்படும்.*

a) Verbe pronominal வடிவில் மட்டும் பயன்படுத்தப்படும் வினைச்சொற்களில் சில...

| | |
|---|---|
| S'abstenir | தவிர்த்தல், விடுதல் |
| S'en aller | செல்லுதல் |
| S'évader | தப்புதல் |
| S'évanouir | சோர்தல், மூர்ச்சித்தல் |
| Se méfier | நம்பாதிருத்தல் |
| Se moquer | கேலிபண்ணுதல் |
| Se réfugier | அடைக்கலம் புகுதல் |
| Se souvenir | ஞாபகத்திலிருத்தல் |
| S'établir | நிறுவுதல் |

b) Verbe pronominal வடிவிலும் பயன்படுத்தக்கூடிய வினைச்சொற்களில் சில...

| | |
|---|---|
| Se coucher | படுத்தல் |
| Se promener | உலாத்துதல் |
| S'asseoir | இருத்தல் (இருக்கையில்) |
| Se baigner | குளித்தல் |
| S'habiller | உடுத்தல் |

## *Verbes réfléchis*

### நிகழ்காலம்

### *Se réveiller* விழித்தெழுதல்

| | |
|---|---|
| Je me réveille | நான் விழித்தெழுகிறேன் |
| Tu te réveilles | நீ விழித்தெழுகின்றாய் |
| Il se réveille | அவன் விழித்தெழுகின்றான் |
| Elle se réveille | அவள் விழித்தெழுகின்றாள் |
| Nous nous réveillons | நாங்கள் விழித்தெழுகின்றோம் |
| Vous vous réveillez | நீங்கள் விழித்தெழுகின்றீர்கள் |
| Ils se réveillent | அவர்கள் விழித்தெழுகின்றார்கள் |
| Elles se réveillent | அவர்கள் விழித்தெழுகின்றார்கள் |

### *S'inscrire* பதிவுசெய்தல்

| | |
|---|---|
| Je m'inscris | நான் என்னைப் பதிவுசெய்கின்றேன் |
| Tu t'inscris | நீ உன்னைப் பதிவுசெய்கின்றாய் |
| Il s'inscrit | அவன் தன்னைப் பதிவுசெய்கின்றான் |
| Elle s'inscrit | அவள் தன்னைப் பதிவுசெய்கின்றாள் |
| Nous nous inscrivons | நாங்கள் எங்களைப் பதிவுசெய்கின்றோம் |
| Vous vous inscrivez | நீங்கள் உங்களைப் பதிவுசெய்கின்றீர்கள் |
| Ils s'inscrivent | அவர்கள் தங்களைப் பதிவுசெய்கின்றார்கள் |
| Elles s'inscrivent | அவர்கள் தங்களைப் பதிவுசெய்கின்றார்கள். |

சுட்டுநிகழ்காலத்தில் உருமாற்றுவது மாதிரியே இவ்வினைச்சொற்களையும் உருமாற்றவேண்டும். அத்துடன் பிரதிப் பெயர்ச்சொல்லையும் எழுவாயுடன் இடவேண்டும்.

| | |
|---|---|
| Je me couche | நான் படுக்கின்றேன் |
| Je me sens mal | நான் வலியை உணர்கின்றேன் |
| Il s'appelle ravi | அவனுடைய பெயர் ரவி (அவன் தன்னை ரவியென்று அழைக்கின்றான்) |
| Tu t'habilles vite | நீ விரைவாக உடுக்கின்றாய் |
| Je ne me sens pas bien | எனக்கு உடல்நிலை சரியில்லை |
| Il s'assied sur un banc | அவன் வாங்கின் மீது அமர்ந்திருக்கின்றான் |

*குறிப்பு* : எதிர்மறையில் பிரதிப்பெயர்ச்சொல்லுக்கும் சேர்த்தே Ne...pas இடவேண்டும்.

Je ne me couche pas l'après-midi. — நான் பிற்பகலில் படுப்பதில்லை

*வினாவாக்கும்போது...*

| | |
|---|---|
| Comment vous vous appelez? | உங்களுடைய பெயர் என்ன? |
| Comment vous appelez - vous? | உங்களுடைய பெயர் என்ன? |
| Te couches - tu? | நீ படுக்கின்றாயா? |

**இறந்தகாலம்**

Verbes pronominaux இறந்தகாலத்தில் எப்போதும் être உடனே உருமாறும்.
*குறிப்பு:* இயங்கும்வினைச்சொற்களுக்கு உபயோகிப்பது போன்றே எழுவாய் பெண்பாலாயின், இறந்தகால வினையெச்சங்களிற்கு "E" வும் பன்மையாயின் "S" உம் சேர்க்க வேண்டும்.

***Se lever* எழும்புதல்**

| | |
|---|---|
| Je me suis levé(e) | நான் எழும்பினேன் |
| Tu t'es levé(e) | நீ எழும்பினாய் |
| Il s'est levé | அவன் எழும்பினான் |
| Elle s'est levée | அவள் எழும்பினாள் |
| Nous nous sommes levé(e)s | நாங்கள் எழும்பினோம் |
| Vous vous êtes levé(e)s | நீங்கள் எழும்பினீர்கள் |
| Ils se sont levés | அவர்கள் எழும்பினார்கள் |
| Elles se sont levées | அவர்கள் எழும்பினார்கள் |

இவ்வாறே எல்லா வினைச்சொற்களும் உருமாறும்.

| | |
|---|---|
| Je me suis levé à 6 heures. | நான் 6 மணிக்கு எழும்பினேன் |
| Vous vous êtes lavé les mains. | நீங்கள் கைகளைக் கழுவினீர்கள் |
| Il s'est rasé | அவன் சவரம் செய்தான் |
| Nous nous sommes entraînés. | நாங்கள் பயிற்சி எடுத்தோம் |

இறந்தகாலத்தில் பிரதிப்பெயர்ச்சொல்லுக்கும் உதவிவினைச்சொல்லுக்கும் மட்டுமே Ne ..... pas இடவேண்டும்.

| | |
|---|---|
| Je ne me suis pas réveillé ce matin. | நான் இன்றுகாலை விழிக்கவில்லை |

*வினாவாக்கும்பொழுது...*

| | |
|---|---|
| A quelle heure tu t'es réveillé? | நீ எத்தனை மணிக்கு விழித்தாய்? |
| Me suis-je réveillé ce matin? | இன்றுகாலை நான் விழித்தேனா? |

**ஏவல்வினை**

உடன்பாட்டுவசனத்தில் எழுவாய்க்குப்பக்கத்தில் உள்ள பிரதிப்பெயர்சொல்லை வினைச்சொல்லின் பின்னால் இடுவோம். ஏவல்வினையின் போது எழுவாய் இடமாட்டோம். நிகழ்காலத்திற்கு இடுவதுமாதிரியே ஏவல்வினை வரும்.

***Se réveiller* விழித்தெழுதல்**

| | |
|---|---|
| Réveille - toi | விழித்தெழு |
| Réveillons - nous | விழித்தெழுவோம் |
| Réveillez - vous | விழித்தெழுங்கள் |

***Se reposer* ஓய்வெடுத்தல்**

| | |
|---|---|
| Repose - toi | ஓய்வெடு |
| Reposons - nous | ஓய்வெடுப்போம் |
| Reposez - vous | ஓய்வெடுங்கள் |

***Se coucher* படுத்தல்**

| | |
|---|---|
| Couche - toi | படு |
| Couchons - nous | படுப்போம் |
| Couchez - vous | படுங்கள் |

***S'asseoir* அமர்தல், இருத்தல்**

| | |
|---|---|
| Assieds - toi | அமரு |
| Asseyons - nous | அமருவோம் |
| Asseyez - vous | அமருங்கள் |

*குறிப்பு* : எதிர்மறையில் வரும்போது சாதாரணவசனத்தில் வருவதுமாதிரியே வினைச்சொல்லின் முன்னால் பிரதிப்பெயர்ச்சொல் இடுவோம்.

| | |
|---|---|
| Ne t'assieds pas | அமராதே, இருக்காதே |
| Ne vous levez pas | எழும்பாதீர்கள் |
| Ne te salis pas | அழுக்காக்காதே |
| Ne vous approchez pas | நெருங்கவேண்டாம், நெருங்காதீர்கள் |

## *Verbes réciproques*

**நிகழ்காலம்**

இவ்வடிவம் ஒருவரையொருவர், ஒருவர் மீது ஒருவர் என்று அர்த்தப்படும். எழுவாய் எப்போதும் பன்மையில் இருக்கவேண்டும்.

| | |
|---|---|
| Rama et Sita se séparent. | ராமாவும் சீதாவும் ஒருவரையொருவர் பிரிகின்றனர். |
| Ils se rencontrent pour la première fois. | அவர்கள் ஒருவரையொருவர் முதற்தடவையாக சந்திக்கின்றனர். |
| Elles se parlent. | அவர்கள் தங்களுக்குள் பேசுகின்றனர். |
| Ils s'aiment. | அவர்கள் ஒருவரையொருவர் விரும்புகின்றனர். |

**இறந்தகாலம்**

இறந்தகாலத்தின்போது நேரடிச் செயற்படுபொருளாயின் வினைச்சொல்லின் முடிவிடங்களை எழுவாயின் பால், எண்ணிற்கேற்ப மாற்றியமைக்க வேண்டும்.

Ils se sont vus (voir quelqu'un)
*அவர்கள் ஒருவரையொருவர் பார்த்தனர்.*
இதில் vu இற்கு எழுவாய் பன்மை ஆண்பாலாதலால் S இடப்பட்டது.

*குறிப்பு* : Ils se sont parlé (parler à quelqu'un).
*அவர்கள் ஒருவருடன் ஒருவர் பேசினர்.*
வினைச்சொல் parler எப்பொழுதும் முன்னிலைச்சொல்லுடன் வருவதினால் எழுவாய் பன்மையாக இருந்தும் வினைச்சொல்லின் முடிவிடத்திற்கு "S" சேர்க்கப்படவில்லை.

*உருமாறாத வடிவில் (infinitif) வரும்போது...* எழுவாய்க்கேற்ப பிரதிப்பெயர்ச்சொல்லை மாற்றவேண்டும்.

| | |
|---|---|
| S'asseoir | Nous allons nous asseoir |
| Se coucher | Je vais me coucher |
| Se promener | Il veut se promener |
| Se réveiller | Vous venez de vous réveiller |
| S'entraîner | Tu continues à t'entraîner |

*குறிப்பு*: *சிலவினைச்சொற்கள்* verbe pronominal *வடிவில் பயன்படுத்தப்படும்போது அர்த்தம் மாறும்.*

| | | | |
|---|---|---|---|
| Rendre | *திருப்பிக்கொடுத்தல்* | Mettre | *வைத்தல்* |
| Se rendre | *சரணடைதல்* | Se mettre | *தன்னை வைத்தல், ஆரம்பித்தல்* |
| Entendre | *கேட்டல்* | Trouver | *கண்டெடுத்தல்* |
| S'entendre | *ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளல்* | Se trouver | *காணப்படுதல், இருத்தல்* |
| Plaindre | *இரக்கப்படுதல்* | Sentir | *உணர்தல் (ஐம்பொறிகளால்)* |
| Se plaindre | *முறையிடுதல்* | Se sentir | *தன்னை உணர்தல்* |
| Battre | *அடித்தல், தோற்கடித்தல்* | Occuper | *தன்வசம் வைத்திருத்தல்* |
| Se battre | *சண்டைபிடித்தல்* | S'occuper | *கவனித்தல், அலுவலாகவிருத்தல்* |
| Lever | *உயர்த்துதல்* | Passer | *கடத்தல்* |
| Se lever | *எழும்புதல்* | Se passer | *சம்பவித்தல், முடிதல்* |

| | |
|---|---|
| a) Qu'est-ce qui se passe?<br>Que se passe t-il? | *என்ன நடக்கின்றது?* |
| b) Qu'est ce qui s'est passé? | என்ன நடந்தது |
| c) Je vais m'arrêter de fumer | நான் புகைப்பதை நிறுத்தப்போகின்றேன் |
| d) Je m'en vais! | நான் போகின்றேன்! |
| e) Taisez - vous!<br>Tais - toi! | *சத்தம் போடாதீர்கள்! (வாயைமூடுங்கள்)*<br>*சத்தம் போடாதே! (வாயைமூடு)* |

# Le Participe Présent
## நிகழ்கால வினையெச்சம்

ஒரு வினைச்சொல்லை நிகழ்காலத்தில் nous இற்கு உருமாற்றி ons ஐ நீக்கி அதற்குப்பதிலாக ant சேர்த்தால் அது Participe présent வடிவமாகும்.

உ+ம்:

Pleurer - Nous pleur~~ons~~
ஆகவே pleurer இன் participe présent - pleurant
Finir - Nous finiss~~ons~~
finir இன் participe présent - finissant
இவ்வாறே Boire - Buvant

*Participe présent பல வகைகளாக தொழிற்படும்.*

(1) Gérondif இன் வடிவமும் Participe présent இன் வடிவமும் ஒன்றாகும்.
Participe présent ஐ en உடன் சேர்த்து எழுதினால் அது Gérondif ஆகும்.
en + participe présent = Gérondif

ஒரு எழுவாய் ஒரே நேரத்தில் ஒன்றுக்குமேற்பட்ட செயலை செய்யின் அதற்கு Gérondif உபயோகப்படும் (தமிழில் இதை தொழிற்பெயர் என்பர்).

Il est sorti en riant. — சிரித்துக்கொண்டு அவன் வெளியேறினான்.
Il est tombé, en courant — ஓடும்போது அவன் விழுந்தான்.
Elle est venue en pleurant. — அவள் அழுதுகொண்டு வந்தாள்.

(2) Participe présent ஒரு வினைச்சொல்லாகவும் தொழிற்படும். இவ்வாறு தொழிற்படும்போது en இடக்கூடாது. பொதுவாக இது qui என்ற இணைப்புச்சொல்லை உபயோகிப்பதை தவிர்க்கும்.
Voyez-vous les élèves jouant dans la classe?
வகுப்புக்குள் விளையாடும் மாணவர்களை நீங்கள் பார்க்கின்றீர்களா?

Il a pris un sac contenant des livres.
புத்தகங்கள் அடங்கிய ஒரு பையை அவன் எடுத்தான்.

(3) Participe présent ஒரு பெயர் உரிச்சொல் (adjectif) ஆகவும் தொழிற்படும்.
La page suivante அடுத்த பக்கம்
La mémoire étonnante ஆச்சரியப்படக்கூடிய ஞாபகம்
Un visage souriant ஒரு சிரித்த முகம்
Elle est charmante அவள் வசீகரமானவள்

ஆனால் சிலபெயர் உரிச்சொற்களுக்கும் Participe présent இற்கும் எழுத்துக்கள் மாறும்.

உ+ம்:

| Participe présent | Adjectif |
|---|---|
| Fatiguant | Fatigant |
| Différant | Différent |
| Violant | Violent |
| Négligeant | Négligent |

# Infinitif
## உருமாறாத வினைச்சொல்

உருமாறாத வினைச்சொல் பலவடிவங்களில் பல இடங்களில் பயன்படுத்தலாம்.

1) எழுவாயாக....
Crier n'est pas chanter — கத்துவது பாடுவதாகாது.
Vouloir, c'est pouvoir — மனமுண்டானால் இடமுண்டு.
Aimer, c'est un art — நேசிப்பது ஒரு கலை.

2) செயப்படுபொருளாக....
Mieux vaut tenir que courir பெற்றுக்கொள்ளப்போவதைவிட கையிலிருப்பது மேல்.
(ஓடுவதற்கு முன் நடக்கத்தெரியவேண்டும்)
Il apprend à lire அவன் வாசிக்கக் கற்கிறான்.

3) பெயர்ச்சொல் அல்லது பெயர் உரிச்சொல்லிற்கு உதவியாக..
Une chambre à coucher படுக்கை அறை
Une salle à manger சாப்பாட்டு அறை
Appartement à louer வீடு வாடகைக்கு
Facile à dire சொல்வது சுலபம்

4) பெயர்ச்சொல்லாக...
Le savoir அறிவு
Le savoir - vivre வாழ்தல்பற்றி அறிவு
Le pouvoir அதிகாரம்
Le devoir கடமை, அலுவல், வீட்டுப்பாடம் அல்லது வேலை (மாணவர்களின்)
L'avoir உடமைப்பொருள், வாடிக்கையாளருக்கு கொடுக்கவேண்டிய பணத்தின் அத்தாட்சிப்பத்திரம்

5) ஆச்சரிய அல்லது வினா வாக்கியங்களாக.....
Que faire? என்ன செய்ய?
Que dire? என்ன சொல்ல?

6) கட்டளை, அறிவுரை அல்லது ஆலோசனை கூற..
Ne pas fumer புகைக்க வேண்டாம்
Ne pas aller loin தூரம்போக வேண்டாம்
Ne pas acheter வாங்க வேண்டாம்

## *Infinitif* இன் இடம்

1) அரை உதவி வினைச்சொற்களுடன் நேரடியாக இடலாம்.

| | |
|---|---|
| Pouvoir | இயலுதல் |
| Devoir | கடன்பட்டிருத்தல் |
| Savoir | தெரிதல் |
| Vouloir | விரும்புதல் |
| Falloir | வேண்டியதாயிருத்தல் |
| Aller | போதல், செல்லுதல் |
| Venir | வருதல் |
| Faire | செய்தல் |
| Laisser | விடுதல் |
| Voir | பார்த்தல் |
| Regarder | உற்றுப்பார்த்தல் |

Vous pouvez répondre நீங்கள் பதிலளிக்கலாம்
Il faut apprendre கற்கவேண்டும்
Ils viennent me voir அவர்கள் என்னைப்பார்க்க வருகின்றார்கள்

2) கேட்டல், விரும்புதல், நம்புதல், உணர்தல் போன்ற வினைச்சொற்களுடனும் நேரடியாக இடலாம்.

| | |
|---|---|
| Croire | நம்புதல் |
| Entendre | கேட்டல் |
| Sembler | தோன்றுதல், காணப்படுதல் |
| Paraître | தோன்றுதல் |
| Préférer | விரும்புதல் (ஒன்றைவிட அதிகமாய்) |
| Aimer | விரும்புதல் |
| Oser | துணிதல் |
| Sentir | உணர்தல் |
| Adorer | மிகவிரும்புதல் |
| Détester | வெறுத்தல் |
| Désirer | விரும்புதல் |
| Ecouter | கேட்டல் |

J'aime nager எனக்கு நீந்த விருப்பம்

3) சிலவெளிப்பாடுகளுடன்...
Il fait bon dormir en plein air. திறந்தவெளியில் நித்திரை செய்வது நல்லது.
Elle n'a pas de quoi vivre. அவளிடம் வாழ்வதற்கு போதியளவு இல்லை.

Il vaut mieux retourner au pays. நாட்டிற்கு திரும்பிப்போவது நல்லது.

4) வினாவாக்கப்பயன்படுத்தப்படும் சொற்களுடன்...
Où aller? எங்கே செல்ல?
Comment faire? எப்படிச்செய்ய?
A qui se fier? யாரை நம்புவது?

5) சில பெயர்உரிச்சொற்களுடன்..
Fier d'être tamoul தமிழனாயிருப்பதில் பெருமை
Difficile à comprendre விளங்குவது கடினம்

# Le passé simple
## இறந்த காலம்

ஒரு செயல் நடந்து முடிந்திருந்தால் அதை இக்காலத்தில் கூறலாம். Passé composé மாதிரியே இதுவும் தொழிற்படும். பொதுவாக எழுத்து வழக்கில் (இலக்கியத்திலும், பத்திரிகைகளிலும்) அதிகமாக பயன்படுத்தப்படும். ஆனால் பேச்சு வழக்கில் உபயோகிப்பதில்லை. (ஒரு சில மாவட்டங்களில் பாவனையிலுள்ளது) விவரணத்தில் Passé simple பயன்படுத்தப்படுவதுண்டு. ஒரு காலத்தின் தொடர்ச்சியான செயல்களை இதன் மூலம் கூறலாம். அச்செயல் நடந்து முடிந்ததென்று கருதப்படும்.

*குறிப்பு:* Imparfait இல் ஒரு செயல் மீண்டும் மீண்டும் நிகழ்ந்ததாக, அதன் காலத்தைக் குறிக்கும். ஆனால் Passé simple தொடர்ச்சியான செயல்களைக் குறிக்கும். ஆங்கிலத்தில் உள்ளது போலவே ஒரே சொல்லில் இறந்த காலத்தைக் குறிக்கும். He gave - Il donna - அவன் கொடுத்தான்

*இதன் வடிவம்:*
***LA TERMINAISON***

| Sujet | 1er Groupe | 2e Groupe | 3e Groupe | |
|---|---|---|---|---|
| Je | ai | s | is | us |
| Tu | as | s | is | us |
| Il / Elle | a | t | it | ut |
| Nous | âmes | îmes | îmes | ûmes |
| Vous | âtes | îtes | îtes | ûtes |
| Ils / Elles | èrent | irent | irent | urent |

முதலாம், இரண்டாம் கூட்ட வினைச்சொற்களுக்கு நிகழ்கால வினையடி (Radical) உம், மூன்றாம் கூட்ட வினைச்சொல்லுக்கு அவற்றின் Participe passé பொதுவாக வினையடியாகத்தொழிற்படும்.

*குறிப்பு:*
2ம் கூட்ட வினைச்சொல்லில் Nous, vous க்கு, I யின் மேல் Accent circonflexe இட வேண்டும்.

| *Aimer* | | *Finir* | | *Boire* | |
|---|---|---|---|---|---|
| J' | aimai | Je | finis | Je | bus |
| Tu | aimas | Tu | finis | Tu | bus |
| Il / Elle | aima | Il / Elle | finit | Il / Elle | but |
| Nous | aimâmes | Nous | finîmes | Nous | bûmes |
| Vous | aimâtes | Vous | finîtes | Vous | bûtes |
| Ils / Elles | aimèrent | Ils / Elles | finirent | Ils / Elles | burent |

Il demanda au gouvernement d'arrêter la guerre. அவன் சண்டையைநிறுத்தும்படி அரசாங்கத்தைக்கேட்டான்.

| | |
|---|---|
| Elle monta au sommet de la montagne. | அவள் மலையின் உச்சிக்கு ஏறினாள். |
| Ils finirent la discussion. | அவர்கள் பேச்சுவார்த்தையை முடித்தார்கள். |
| Il fut arrêté. | அவன் கைது செய்யப்பட்டான். |

# Le passé antérieur
## இறப்பில் இறப்பு

பொதுவாக இக்காலம் எழுத்து வழக்கில் மட்டுமே பயன்படும். நடந்து முடிந்த இரண்டு செயல்களை ஒப்பிடும் போது முதலில் முடிந்த செயலுக்கு Passé antérieur பாவிக்க வேண்டும். அடுத்து நடந்த செயலுக்கு Passé simple அல்லது Imparfait பயன்படுத்தப்படும்.




Plus-que-parfait மாதிரியே இதுவும் தொழிற்படும்.

இதன் வடிவம்: ***Sujet + Avoir ou Etre au passé simple + Participe passé***

| ***Avoir*** | | | ***Être*** | | | ***Aller*** | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| J' | eus | eu | J' | eus | été | Je | fus | allé (e) |
| Tu | eus | eu | Tu | eus | été | Tu | fus | allé (e) |
| Il / Elle | eut | eu | Il /Elle | eut | été | Il /Elle | fut | allé (e) |
| Nous | eûmes | eu | Nous | eûmes | été | Nous | fûmes | allés (es) |
| Vous | eûtes | eu | Vous | eûtes | été | Vous | fûtes | allés (es) |
| Ils / Elles | eurent | eu | Ils / Elles | eurent | été | Ils / Elles | furent | allés (es) |

Après qu'il fut parti, je fermai la porte.
*அவன் சென்ற பிறகு நான் கதவைப் பூட்டினேன்.*
Dès qu'il eut reçu le résultat, il commença à pleurer.
*அவனுக்கு முடிவு கிடைத்ததும் அவன் அழத்தொடங்கினான்.*
Quand elle eut fini de manger, elle partit.
*அவள் சாப்பிட்டு முடித்ததும் கிளம்பினாள்.*

# Le conditionnel présent
## நிகழ்கால நிபந்தனைவினை

ஒருவினைச்சொல்லின் எதிர்காலத்தின் வினையடியே இதனதும் வினையடியாகும். அத்துடன் இறந்த காலத்தொடரின் (Imparfait) விகுதியையும் (terminaison) சேர்த்தால் le conditionnel présent பெறப்படும்.

உ+ம்:

| ***Penser*** | | ***Avoir*** | ***Être*** |
|---|---|---|---|
| Je | penserais | J'aurais | Je serais |
| Tu | penserais | Tu aurais | Tu serais |
| Il / Elle | penserait | Il / Elle aurait | Il / Elle serait |
| Nous | penserions | Nous aurions | Nous serions |
| Vous | penseriez | Vous auriez | Vous seriez |
| Ils / Elles | penseraient | Ils / Elles auraient | Ils / Elles seraient |

### *Conditionnel présent* இன் உபயோகங்கள்

1) *Fiction கற்பனை (கட்டுக்கதை, பொய்)*
Je serais président d'un pays.
*நான் ஒருநாட்டின் ஜனாதிபதியாக இருப்பேன்.*

*குறிப்பு* : எதிர்காலத்திற்கும் நிபந்தனைவினைக்கும் உள்ள வித்தியாசம் எதிர்காலத்தில் செயல் நிச்சயமாக நடைபெறும். ஆனால் நிபந்தனைவினை நிச்சயமின்மையைக்குறிக்கும்.

2) *விருப்பு, ஆசை le désir ou le souhait*
விருப்பை, ஆசையைத் தெரிவிக்க இது பயன்படும்.
Il voudrait être professeur.
*அவன் ஆசிரியனாக இருக்க விரும்புகின்றான்.*
J'aimerais voyager avec toi.
*நான் உன்னுடன் பயணம் செய்ய விரும்புகின்றேன்.*

3) *Hypothèse ஊகம், எண்ணம்*
L'année prochaine, elle gagnerait à l'élection présidentielle.
*வருகிற வருடம், அவள் ஜனாதிபதிதேர்தலில் வெல்லலாம்.*
Tu irais au Srilanka bientôt.
*நீ விரைவில் இலங்கைக்குச் செல்லலாம்.*
Vous pourriez voir votre famille.
*நீங்கள் உங்களுடைய குடும்பத்தைப் பார்க்கலாம்.*

4) *Politesse மரியாதை, மரியாதையாக கேட்பதற்கு, பேசுவதற்கு, பொதுவாக avoir, pouvoir, aimer போன்ற வினைச்சொற்களுடன் பயன்படும்.*
Auriez - vous un timbre?
*உங்களிடம் ஒரு முத்திரை இருக்கின்றதா?*
Je voudrais une paire de chaussures.
*எனக்கு ஒருசோடி சப்பாத்துக்கள் வேண்டும்.*
Pourriez - vous me prêter votre journal?
*உங்களுடைய பத்திரிகையை எனக்கு இரவல் கொடுக்க முடியுமா?*

5) *Conseil ஆலோசனை, அறிவுரை கூறுவதற்கு*
Tu devrais lire ce livre.
*நீ இந்தப்புத்தகத்தை வாசிக்கவேண்டும்.*

6) *Futur du passé*
ஒரு இறந்தகால வசனத்தில் எதிர்காலத்தைக் குறிக்க conditionnel பயன்படும்.
Il dit que Kumar <u>*viendra.*</u>
*அவர் சொல்லுகின்றார் குமார் வருவானென்று. இந்த வசனத்தை இறந்தகாலத்திற்கு மாற்றும்பொழுது..*
Il a dit que Kumar <u>*viendrait*</u> *அவர் சொன்னார் குமார் வருவானென்று.*

*நிபந்தனை -*
Au cas où vous changeriez d'avis, prévenez - moi.
*நீங்கள் எண்ணத்தை மாற்றினால், எனக்கு அறிவியுங்கள்.*

# Le conditionnel passé
## இறந்தகால நிபந்தனை

இதன் வடிவம் *Sujet* ***avoir ou être*** *au conditionnel présent* ***+ participe passé***

| ***Manger*** | | ***Aller*** | |
|---|---|---|---|
| J'aurais | mangé | Je serais | allé(e) |
| Tu aurais | mangé | Tu serais | allé(e) |
| Il / Elle aurait | mangé | Il serait | allé |
| | | Elle serait | allée |
| Nous aurions | mangé | Nous serions | allé(e)s |
| Vous auriez | mangé | Vous seriez | allé(e)s |
| Ils / Elles auraient | mangé | Ils / Elles seraient | allé(e)s |

*குறிப்பு : Etre உடன் உருமாறும் வினைச்சொற்கள் பற்றி அறிய Passé composé பகுதியைப் பார்க்கவும்.*

1) Elle serait partie à Londres.
அவள் லண்டனிற்கு சென்றிருக்கலாம்.
Il aurait réussi à l'examen.
அவன் பரீட்சையில் சித்தியடைந்திருக்கலாம்.

2) இறந்தகாலத்தில் எதிர்கால இறப்புக்குப்பதிலாக conditionnel passé பயன்படுத்தலாம்.
உ+ம் : Il dit qu'à 8 heures elle aura déjà fini.
எட்டுமணிக்கு அவள் ஏற்கனவே முடித்திருப்பாள் என அவன் கூறுகின்றான்.
இவ்வசனத்தை இறந்தகாலத்தில் மாற்றும்போது..
Il a dit qu'à 8 heures elle aurait déjà fini.
எட்டுமணிக்கு அவள் ஏற்கனவே முடித்திருந்திருப்பாள் என அவன் கூறினான்.

*நிபந்தனைக்கு பொதுவாக **Si** (ஆல்) என்ற சொல் பயன்படுத்தப்படும்.*

1) ***Si présent, présent ou futur***
Si உடன் நிகழ்காலமும் அடுத்த வசனம் நிகழ்காலம் அல்லது எதிர்காலத்தில் மட்டுமே இடவேண்டும்.
இவ்வடிவத்தில் கூறும்போது ஒருசெயல் நிகழக்கூடிய சாத்தியமுண்டு.
Si tu ne manges pas, je mangerai.
நீ சாப்பிடாவிட்டால், நான் சாப்பிடுவேன்.
Si vous venez, nous serons contents.
நீங்கள் வந்தால், நாங்கள் மகிழ்ச்சியடைவோம்.

குறிப்பு : Si உடன் elle வரும்போது l'apostrophe இடக்கூடாது.
ஒருவழமையான செயலாயின் இரண்டுவசனத்திலும் நிகழ்காலம் பயன்படுத்தலாம்.
S'il fait beau, nous sortons.
காலநிலை நன்றாக இருந்தால், நாங்கள் வெளியே செல்வோம்.

2) ***Si imparfait, conditionnel présent.***
நிகழ்காலத்தில் ஒருசெயல் நிகழக்கூடிய சாத்தியக்கூறு இருந்தும், நிகழாதாயின் இவ்வடிவம் பயன்படும்.
எதிர்காலத்தில் சிலவேளை நடக்கலாம். ஆனால் நிச்சயமாக நிகழ்காலத்தில் சாத்தியமில்லை.

Si j'avais de l'argent, je viendrais. (mais je suis désolé, je n'ai pas d'argent.)
என்னிடம் பணமிருந்தால் நான் வருவேன். (மன்னிக்கவேண்டும் என்னிடம் பணமில்லை)
Si j'étais riche, je visiterais tous les pays.
நான் பணக்காரனாயிருந்தால் எல்லாநாடுகளுக்கும் விஜயம் செய்வேன். (என்னிடம் பணமில்லை)
S'il ne pleuvait pas, nous irions à la plage.
மழைபெய்யாவிடில் நாங்கள் கடற்கரைக்குச் செல்வோம் (ஆனால் மழைபெய்கின்றது)

3) ***Si plus que parfait, conditionnel passé***
சிலநிபந்தனைகள் இருந்திருந்தால் அல்லது இல்லாமலிருந்திருந்தால் ஒரு செயல் நடந்திருக்கலாம்
என்பதைக்குறிக்க இவ்வடிவம் பயன்படும்.

Si j'avais eu le temps, je serais venu.
எனக்கு நேரமிருந்திருந்தால் நான் வந்திருப்பேன்.
Si je n'avais pas été malade, j'aurais fini mes études cette année.
எனக்கு சுகயீனம் இல்லாதிருந்திருந்தால், இந்தவருடம் எனது கல்வியை முடித்திருப்பேன்.

# Le Subjonctif

Le Subjonctif வை ஐய அல்லது சந்தேகவினை என்பர். காரணம் ஒரு செயல் நிறைவேறுமா - நிறைவேறாதா அல்லது உண்மையா - உண்மையற்றதா என்று இவ்வினை கூறாது.

*Le Subjonctif இன் நான்கு காலங்கள்...*
Le présent நிகழ்காலம்
Le passé இறந்தகாலம்
L'imparfait
Le plus-que parfait } langue littéraire

L'imparfait உம் le plus que parfait உம் கூடுதலாக இலக்கியத்தில் பயன்படுத்தப்படும்.

## *Présent* (நிகழ்காலம்)

ஒருவினைச்சொல்லை Ils அல்லது Elles இற்கு நிகழ்காலத்தில் உருமாற்றி ent நீக்கினால் அது subjonctif இன் radical ஆகும். பொதுவாக இவ்வாறே எல்லாவினைச்சொற்களுக்கும் செய்யப்படும்.
உ+ம்.
Donner நிகழ்காலத்தில் Ils donnent இதில் ent ஐ நீக்கினால் மிகுதி donn அதுவே subjonctif இன் radical. இதனுடன் subjonctif இன் terminaison யும் இணைத்தால் அது subjonctif இன் நிகழ்காலமாகும்.

***La terminaison***
Je - ***e***
Tu - ***es***
Il /Elle - ***e***
Nous - ***ions***
Vous - ***iez***
Ils/Elles - ***ent***

*பொதுவாக Que என்ற சொல்லுடன் subjonctif உருமாற்றம்வரும்.*

| ***Donner*** | ***Finir*** |
|---|---|
| Que je donne | Que je finisse |
| Que tu donnes | Que tu finisses |
| Qu'il donne | Qu'il finisse |
| Qu'elle donne | Qu'elle finisse |
| Que nous donnions | Que nous finissions |
| Que vous donniez | Que vous finissiez |
| Qu'ils donnent | Qu'ils finissent |
| Qu'elles donnent | Qu'elles finissent |

குறிப்பு : Nous, Vous இற்கு Imparfait இல் இடுவது மாதிரியே இடவேண்டும். ils, elles இற்கு நிகழ்கால உருமாற்றம் வரும்.

| ***Venir*** | ***Boire*** |
|---|---|
| Que je vienne | Que je boive |
| Que tu viennes | Que tu boives |
| Qu'il vienne | Qu'il boive |
| Qu'elle vienne | Qu'elle boive |
| Que nous venions | Que nous buvions |
| Que vous veniez | Que vous buviez |
| Qu'ils viennent | Qu'ils boivent |
| Qu'elles viennent | Qu'elles boivent |

ஆனால் சிலவினைச்சொற்களின் Radical மாறுகின்றது இவற்றை மனப்பாடமாக்க வேண்டும்.

### *Etre*
Que je sois
Que tu sois
Qu'il soit
Qu'elle soit
Que nous soyons
Que vous soyez
Qu'ils soient
Qu'elles soient

### *Avoir*
Que j'aie
Que tu aies
Qu'il ait
Qu'elle ait
Que nous ayons
Que vous ayez
Qu'ils aient
Qu'elles aient

### *Aller*
Que j'aille
Que tu ailles
Qu'il aille
Qu'elle aille
Que nous allions
Que vous alliez
Qu'ils aillent
Qu'elles aillent

### *Savoir*
Que je sache
Que tu saches
Qu'il sache
Qu'elle sache
Que nous sachions
Que vous sachiez
Qu'ils sachent
Qu'elles sachent

### *Pouvoir*
Que je puisse
Que tu puisses
Qu'il puisse
Qu'elle puisse
Que nous puissions
Que vous puissiez
Qu'ils puissent
Qu'elles puissent

### *Vouloir*
Que je veuille
Que tu veuilles
Qu'il veuille
Qu'elle veuille
Que nous voulions
Que vous vouliez
Qu'ils veuillent
Qu'elles veuillent

### *Faire*
Que je fasse
Que tu fasses
Qu'il fasse
Qu'elle fasse
Que nous fassions
Que vous fassiez
Qu'ils fassent
Qu'elles fassent

### *Pleuvoir*
Qu'il pleuve

### *Falloir*
Qu'il faille

## *Le Passé* (இறந்தகாலம்)

*இதன் வடிவம்*
Sujet ***avoir*** *ou* ***être*** + ***participe passé***
*au subjonctif*

### *Envoyer*
Que j'aie envoyé
Que tu aies envoyé
Qu'il ait envoyé
Qu'elle ait envoyé
Que nous ayons envoyé
Que vous ayez envoyé
Qu'ils aient envoyé
Qu'elles aient envoyé

### *Aller*
Que je sois allé(e)
Que tu sois allé(e)
Qu'il soit allé
Qu'elle soit allée
Que nous soyons allé(e)s
Que vous soyez allé(e)s
Qu'ils soient allés
Qu'elles soient allées

## *Subjonctif* காலங்களின் தொடர்பாடு

முக்கியமான வினைச்சொல் (le verbe principal) நிகழ், எதிர், இறந்த காலத்தில் இருக்கும்போது, முக்கியமான வசனத்தில் தங்கியுள்ள வினைச்சொல் (verbe subordonné).

1) Subjonctif இன் நிகழ்காலம் நடக்க இருக்கும் அல்லது ஒரேகாலத்தில் நிகழும் செயலைக்குறிப்பிடுவதற்கு

| | |
|---|---|
| *நடக்கவிருக்கும் செயல்* | Je suis content que tu viennes demain.<br>நாளை நீ வருவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். |
| *ஒத்தகாலத்தில் நடக்கும் செயல்* | Je suis content que tu sois avec moi.<br>நீ என்னுடன் இருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். |

2) Subjonctif இன் இறந்தகாலம், முடிந்தசெயலைக் குறிப்பதற்கு...

Elle est heureuse qu'il ait fait un bon voyage.
அவன் நல்லபயணம் செய்தானென்று அவள் சந்தோஷமாயிருக்கின்றாள்.
Elle sera heureuse qu'il ait fait un bon voyage.
அவன் நல்லபயணம் செய்தானென்று அவள் சந்தோஷமாகவிருப்பாள்.
Elle était heureuse qu'il ait fait un bon voyage.
அவன் நல்லபயணம் செய்தானென்று அவள் சந்தோஷமாகவிருந்தாள்.

## *Subjonctif* இன் பயன்பாடு

1. *விருப்பு, ஆசை, சந்தேகம் இவற்றின் வினைச்சொல்லுடன் அல்லது பெயர் உரிச்சொல்லுடன்...*

***சந்தேகம் (le doute) - douter***
-Je ne suis pas sûr(e) qu'il ait assez d'argent
-Je ne suis pas certain(e) qu'il ait assez d'argent
-Je doute qu'il ait assez d'argent.
அவன் போதிய பணம் வைத்திருக்கின்றான் என்று எனக்கு சந்தேகமாகவிருக்கின்றது.

***விருப்பு (la volonté) - vouloir***
-Je veux que vous veniez ici. நீங்கள் இங்கு வருவதை நான் விரும்புகின்றேன்.

***ஆசை (le désir) - désirer***
-Elle désire qu'il vienne la voir. அவன் தன்னைவந்து பார்க்கவேண்டுமென அவள் விரும்புகின்றாள்.

***விருப்பு (souhaiter)***
-Il souhaite que tu réussisses à l'examen.
நீ பரீட்சையில் சித்தியடையவேண்டுமென அவன் விரும்புகின்றான்.
-Elle souhaite que nous répondions correctement.
நாங்கள் சரியாக பதிலளிக்கவேண்டுமென அவள் விரும்புகின்றாள்.

2. *கட்டளை, விண்ணப்பம், மன்றாட்டம், அனுமதி போன்றவற்றிற்கு....*

| | | | |
|---|---|---|---|
| Admettre | - சம்மதித்தல், ஏற்றுக்கொள்ளல் | Ordonner | - கட்டளையிடுதல் |
| Permettre | - அனுமதித்தல், உத்தரவுகொடுத்தல் | Prier | - வணங்குதல், வேண்டுதல் |
| Agréer | - ஏற்றுக்கொள்ளுதல், உடன்படுதல் | Souffrir | - வருந்துதல் |
| Demander | - கேட்டல் | Supplier | - மன்றாடுதல் |

*உ+ம்:* Il ordonne que tout le monde soit là.
எல்லோரும் அங்கிருக்கவேண்டுமென அவன் கட்டளையிடுகின்றான்.
Elle demande que vous restiez.
உங்களை தங்கச்சொல்லி அவள் கேட்கின்றாள்.
Vous permettez que nous vous aidions.
நாங்கள் உங்களுக்கு உதவிசெய்வதற்கு அனுமதியுங்கள்.

3. *உணர்வைக்குறிக்கும் வினைச்சொற்கள், உரிச்சொற்களுடன்...*

| | | | |
|---|---|---|---|
| Aimer | - விரும்புதல் | Préférer | - விரும்புதல் (ஒப்பிட்டு) |

| | | | |
|---|---|---|---|
| Détester | - வெறுத்தல் | Avoir peur | - பயம் உடையதாயிருத்தல் |
| Regretter | - கவலைப்படுதல் | Avoir honte | - வெட்கமாயிருத்தல் |
| Craindre | - பயப்படுதல் | Etre content | - சந்தோஷமாகவிருத்தல் |
| S'étonner | - ஆச்சரியப்படுதல் | Etre étonné | - ஆச்சரியமாகவிருத்தல் |
| Se fâcher | - கோபித்தல் | Etre triste | - கவலையாகவிருத்தல் |
| Trembler | - நடுங்குதல் | Etre heureux | - மகிழ்ச்சியாகவிருத்தல் |

உ+ம்: Il a honte que vous le sachiez.
உங்களுக்கு அது தெரிந்ததையிட்டு அவனுக்கு வெட்கம்.
Je suis heureuse qu'il ait eu un travail.
அவனுக்கு ஒருவேலை கிடைத்ததையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

4. *சில பால், எண்ணைக்குறிப்பிடாத எழுவாயுள்ள வெளிப்பாடுகளுடன்... (impersonnel)*

| | | | |
|---|---|---|---|
| Il faut | - வேண்டும் | Il est inutile | - உபயோகமற்றது |
| Il est nécessaire | - அவசியமானது | Il vaut mieux | - நல்லது / பெறுமதியானது |
| Il est probable | - நம்பகமானது | Il est préférable | - விரும்பத்தக்கது |
| Il est possible | - இயலுமானது | Il est rare | - அரிதானது |
| Il est impossible | - முடியாது, இயலாது | Il est important | - அது முக்கியமானது |
| Il est utile | - உபயோகமானது | C'est dommage | - அது வருந்தத்தக்கது |

உ+ம்: Il faut que tu fasses la cuisine.
நீ சமைக்க வேண்டும்.
Il faut que vous parliez le tamoul avec vos enfants.
நீங்கள் உங்கள் குழந்தைகளுடன் தமிழ்பேசவேண்டும்.
Il est nécessaire que vous partiez de bonne heure.
நீங்கள் நேரத்திற்கு முன்னர் புறப்படுவது அவசியமானது.
Il est utile que nous apprenions une langue.
நாங்கள் ஒருமொழி கற்பது உபயோகமானது.

5. *Espérer (எதிர்பார்த்தல்) எப்போதும் indicatif ஐ எடுக்கும்.*
J'espère que tu réussiras ton examen.
நீ உனது பரீட்சையில் சித்தியடைவாய் என நான் எதிர்பார்க்கின்றேன்.
அவ்வாறே Il est probable que
Il paraît que
Il me semble que
Il suppose que
Il est évident que என்பன indicatif ஐ எடுக்கும்.
ஆனால்..
Il est peu probable que
Il semble que
Supposons que (impératif இல்) என்பது subjonctifஐ எடுக்கும்.

6. *நினைத்தல், நம்புதல், நிச்சயப்படுத்தல், சொல்லுதல் போன்ற வினைச்சொற்களுடன் எதிர்மறையில் அல்லது வினாவடிவில் இருக்கும்போது... subjonctif பாவிக்கப்படும்.*

| | | | |
|---|---|---|---|
| Croire | - நம்புதல் | Raconter | - கதைகூறல் |
| Dire | - சொல்லுதல் | Expliquer | - விளக்குதல் |
| Espérer | - எதிர்பார்த்தல் | Savoir * | - தெரிதல், அறிதல் |
| Etre certain | - நிச்சயமாயிருத்தல் | Apprendre | - கற்றல் |
| Déclarer | - அறிவித்தல் | Supposer | - கருதுதல் |
| Affirmer | - உறுதிப்படுத்தல் | Voir | - பார்த்தல் |

மேற்கூறிய வினைச்சொற்கள் உடன்பாட்டு வாக்கியத்தில் indicatif எடுக்கும்.
Je crois que tu as faim. உனக்கு பசி என்று நான் நினைக்கின்றேன்.

ஆனால் எதிர்மறையில் அல்லது கேள்விவடிவத்தில் வரும்போது subjonctif இடவேண்டும். இவ்வேளையில் உச்சரிப்பு இனிமைக்காக Ne மட்டும் பயனிலைக்குமுன்னால் இடலாம். இது எதிர்மறை ஆகாது. இவ் Neஐ Ne explétif என்பர்.

| | |
|---|---|
| Evitez qu'ils ne vous voient. | அவர்கள் உங்களைக்காண்பதை தவிருங்கள். |
| Je crains qu'il ne vienne. | அவன் வருவான் என எனக்கு பயமாகவிருக்கிறது. |
| Je crains qu'il ne vienne pas. | அவன் வரமாட்டான் என எனக்கு பயமாகவிருக்கின்றது. |
| Je ne crains pas qu'il vienne. | அவன் வருவதையிட்டு எனக்கு பயமில்லை. |
| Je pense qu'il viendra. | அவன் வருவான் என்று நான் எண்ணுகின்றேன். |
| Penses-tu qu'il vienne? | அவன் வருவானென்று நீ நம்புகின்றாயா? |
| Je ne pense pas qu'il vienne. | அவன் வருவான் என்று நான் நம்பவில்லை. |

7. *Après le Superlatif*
Le meilleur, le seul, le plus, le premier, le dernier
இவற்றுடன் subjonctif அல்லது indicatif பயன்படுத்தலாம்.

1) C'est le meilleur film que vous pouvez / puissiez / pourriez voir en ce moment.
தற்போது நீங்கள் பார்க்கக்கூடிய மிகச்சிறந்தபடம் இது (தான்).
2) C'est l'homme le plus grand que nous ayons / avons rencontré.
நாம் சந்தித்த மிகவுயரமான மனிதன் இவர்.

8. *சிலவினைச்சொற்கள் ஏவல்வடிவத்தில் உள்ளபோது "கேட்டல்" (demander) என்ற கருத்தை குறிக்கும்போது...*
Dis - lui qu'il vienne à 9 heures.
*அவன் 9 மணிக்கு வரவேண்டுமென அவனுக்குச்சொல்.*
Ecris - lui qu'il vienne à 9 heures.
*அவன் 9 மணிக்கு வரவேண்டுமென அவனுக்கு எழுது.*
Téléphone - lui qu'il vienne à 9 heures.
*அவன் 9 மணிக்கு வரவேண்டுமென டெலிபோன் செய்.*

1) காரணம் பெறுபேறு அல்லது முடிவைத்தெரிவிக்கும்...

| | | |
|---|---|---|
| Afin que | Pour que | De peur que |
| De crainte que | De manière que | De sorte que |

a) Je vous enseigne le français afin que vous puissiez parler cette langue.
நீங்கள் இந்தமொழியை பேசுவதற்காக நான் உங்களுக்கு பிரஞ்சு கற்பிக்கின்றேன்.
b) Ils ont fermé la porte de crainte qu'on n'entende leur conversation.
அவர்களுடைய கலந்துரையாடல் கேட்காமலிருப்பதற்காக அவர்கள் கதவைப்பூட்டினார்கள்.

# Les pronoms possessifs
## உடமைப் பிரதிப்பெயர்ச்சொற்கள்

உடமைப்பிரதிப்பெயர்ச்சொற்கள் ஒரு சொல்லைப் பிரதியிடும். அதேநேரம் உயிருடைய அல்லது ஒரு பொருளுடைய உடமையையும் குறிக்கும்.

| | Pronom | Singulier masculin | Singulier féminin | Pluriel masculin | Pluriel féminin |
|---|---|---|---|---|---|
| *1ère Personne Singulier* | Je | Le mien<br>என்னுடையது | La mienne<br>என்னுடையது | Les miens<br>என்னுடையவை | Les miennes<br>என்னுடையவை |
| *2ème Personne Singulier* | Tu | Le tien<br>உன்னுடையது | La tienne<br>உன்னுடையது | Les tiens<br>உன்னுடையவை | Les tiennes<br>உன்னுடையவை |
| *3ème Personne Singulier* | Il / elle | Le sien<br>அவனுடையது<br>அவளுடையது | La sienne<br>அவளுடையது<br>அவனுடையது | Les siens<br>அவனுடையவை<br>அவளுடையவை | Les siennes<br>அவளுடையவை<br>அவனுடையவை |
| *1ère Personne Pluriel* | Nous | Le nôtre<br>எங்களுடையது | La nôtre<br>எங்களுடையது | Les nôtres<br>எங்களுடையவை | |
| *2ème Personne Pluriel* | Vous | Le vôtre<br>உங்களுடையது | La vôtre<br>உங்களுடையது | Les vôtres<br>உங்களுடையவை | |
| *3ème Personne Pluriel* | Ils / elles | Le leur<br>அவர்களுடையது | La leur<br>அவர்களுடையது | Les leurs<br>அவர்களுடையவை | |

Les pronoms possessifs எப்போதும் article défini உடன் இடவேண்டும். தன்மை, முன்னிலை பன்மையில் adjectifs possessifs இடுவது மாதிரியே ஆனால் article défini உடன் o இற்கு accent circonflexe இடவேண்டும். படர்க்கை பன்மையிலும் adjectif possessif இல் வருவது போலவே leur ஆனால் article défini உடன் இடவேண்டும்.

<u>Leurs</u> habits sont neufs *(இதில் leurs என்பது adjectif Possessif ஆகும்)*
அவர்களுடைய ஆடைகள் புதியவை.
Nos parents habitent au Srilanka. *<u>Les leurs</u>* habitent au Canada.
எங்களுடைய பெற்றோர்கள் இலங்கையில் வசிக்கின்றார்கள். அவர்களுடையவர்கள் கனடாவில் வசிக்கின்றார்கள்.
*முக்கியகுறிப்பு :* Pronom personnel இல் வரும் leur ஒரு மாறிலியாகும்.
Je leur parle. நான் அவர்களுடன் பேசுகின்றேன்.
எந்த leur என்று சந்தேகம் வரும்போது வசனத்தை ஒருமையில் மாற்றினால் வித்தியாசம் கண்டுபிடிக்கலாம்.

**தொழிற்பாடு**

1) உடமைப்பிரதிப்பெயர்ச்சொற்கள் பெயர்ச்சொல்லின் தொழிற்பாடுடையவை.
Ta voiture est grande. La mienne est belle.
உனது கார் பெரியது. என்னுடையது அழகானது.

2) பிரதியிடும் சொல்லின் பால் எண்ணுக்கேற்ப இது மாறும்.
Cette maison est plus confortable que ma maison.
இந்த வீடு எனது வீட்டிலும்விட மிக வசதியானது.
இந்த வசனத்தில் maison என்ற சொல் இருமுறை காணப்படுவதால் இரண்டாவது maison இற்குப்பதிலாக pronom possessif இடலாம்.

உடமையாளரைத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தால் மட்டுமே அச்சொல்லைப் பிரதியிடலாம்.

1. Cette maison est plus confortable que la mienne.
   இந்த வீடு என்னுடையதிலும்விட மிகவசதியானது.
2. Ce sont mes chaussures. இவை என்னுடைய சப்பாத்துக்கள்.

Ce sont les miennes. இவை என்னுடையவை.

3. C'est votre marteau. இது உங்களுடைய சுத்தியல்.
   C'est le vôtre. இது உங்களுடையது.
4. Mon père a quarante-cinq ans. Quel âge a ton père?
   எனது அப்பாவிற்கு நாற்பத்தைந்து வயது. உன்னுடைய அப்பாவிற்கு என்ன வயது?
   Mon père a quarante-cinq ans. Quel âge a le tien?
   எனது அப்பாவிற்கு நாற்பத்தைந்து வயது. உன்னுடையவருக்கு என்னவயது?
5. Vos parents sont à Colombo. Mes parents sont à Mannar.
   உங்களுடைய பெற்றோர்கள் கொழும்பில் இருக்கின்றார்கள். என்னுடைய பெற்றோர்கள் மன்னாரில் இருக்கின்றார்கள்.
   Vos parents sont à Colombo. Les miens sont à Mannar.
   உங்களுடைய பெற்றோர்கள் கொழும்பில் இருக்கின்றார்கள். என்னுடையவர்கள் மன்னாரில் இருக்கின்றார்கள்.

உடமைப்பிரதிப்பெயர்ச்சொற்களை tout உடனும் இடலாம்.
Donne-moi un bonbon. Raja a mangé tous les miens.
எனக்கொரு இனிப்புத்தா. ராஜா என்னுடையவற்றை எல்லாம் சாப்பிட்டான்.

ஆனால் நிச்சயமான பெயர்ச்சுட்டு இடாமலும் உடமைப்பெயர்ச்சொற்கள் சில இடங்களில் பயன்படுத்தப்படும்.
Cette opinion est mienne. இந்த அபிப்பிராயம் என்னுடையது.
Considérez cette école comme vôtre. இந்த பாடசாலையை உங்களுடையதைப்போல் என்று நினைக்கவும்.

பானம் அருந்தும்போது உங்கள் உடல்நலத்திற்காக என்றுகூறி அருந்துவர் அப்பொழுது...
à la vôtre என்று வாழ்த்துவர்
à la vôtre = à votre santé

# Les pronoms démonstratifs
## சுட்டுப்பிரதிப் பெயர்ச்சொற்கள்

ஒரு உயிருள்ளதை அல்லது ஒரு பொருளைச்சுட்டிக்காட்டச் சுட்டுப்பிரதிப்பெயர்ச்சொல் பயன்படும். இது பிரதியிடும் சொல்லின் பால், எண்ணுக்கேற்ப மாறும். சுட்டுப்பிரதிப்பெயர்ச்சொற்களில் இரண்டு வடிவங்கள் உண்டு.

1) Forme simple சாதாரண வடிவம்

| | ***Singulier*** | ***Pluriel*** |
|---|---|---|
| *Masculin* | Celui | Ceux |
| *Féminin* | Celle | Celles |
| *Neutre* | Ce, C' | |

Le frère de Raja est journaliste, Le frère de Ravi est professeur.
ராஜாவினுடைய சகோதரன் ஒரு பத்திரிகையாளர். ரவியினுடைய சகோதரர் ஒரு ஆசிரியர்.
இவ்விரு வசனத்திலும் பொதுச்சொல் Le frère ஆகும். அதை pronom démonstratif இனால் பிரதியிட்டால் ( frère ஒருமை, ஆண்பால் ஆகும்).
Le frère de Raja est journaliste, celui de Ravi est professeur.

2) Je n'aime pas ces gâteaux, je préfère les gâteaux de ma mère.
எனக்கு இந்த கேக்குகள் விருப்பமில்லை. எனக்கு அம்மாவினுடைய கேக்குகள் பிடிக்கும்.
Je n'aime pas ces gâteaux, je préfère ceux de ma mère.
கேக் ஆண்பால் பன்மையாதலால் ceux இடல் வேண்டும்.

## *Forme composée* கூட்டுவடிவம்

இவை forme simple உடன் இடத்தைக்குறிக்கும் வினையுரிச்சொற்களான ci (=ici) அல்லது là இணைப்புக்கோட்டின் (trait d'union) மூலம் இடவேண்டும். அண்மையில் உள்ளவற்றிற்கு ci உம் தூரத்தில் உள்ளவற்றிற்கு là உம் இடப்படும்.

| | *Singulier* | *Pluriel* |
|---|---|---|
| *Masculin* | Celui-ci<br>Celui-là | Ceux-ci<br>Ceux-là |
| *Féminin* | Celle-ci<br>Celle-là | Celles-ci<br>Celles-là |
| *Neutre* | Ceci, Cela , Ça | |

1) Cette photo-ci est belle, cette photo-là aussi.
இந்தப்படம் அழகானது அந்தப்படமும் கூட.
இவ்வசனத்தில் இரண்டாவதுமுறை படம் என்று பயன்படுத்துவதற்குப் பதிலாக (படம் ஒருமை - பெண்பால்) celle இடவேண்டும்.
Cette photo-ci est belle, celle-là aussi.

2) Quelle robe préférez-vous? Celle-ci ou celle-là?
எந்தச்சட்டையை நீங்கள் விரும்புகின்றீர்கள்? இதுவா? அல்லது அதுவா?

3) Choisissez des vêtements; Ceux-ci sont élégants ceux-là sont simples.
உடுப்புக்களைத் தெரிவுசெய்யுங்கள், இவை ஆடம்பரமானவை அவை சாதாரணமானவை.

## *Forme simple, forme composée* இன் தொழிற்பாடுகள்

1) Forme simple இணைப்புப்பிரதிப்பெயர்ச்சொல் (pronom relatif) அல்லது மேலதிக பெயர்ச்சொல்லுடனே préposition உடன் உள்ளபெயர்ச்சொல்லுடன் இணையும்.

Il a remercié ceux qui l'avaient aidé.
உதவி செய்தவர்களுக்கு அவன் நன்றி கூறினான்.

J'ai pris mon livre et celui de Raja.
நான் எனது புத்தகத்தையும் ராஜாவினுடையதையும் எடுத்தேன்.

Je t'ai donné le télégramme pour Kumar, voici celui pour Emile.
நான் குமாருக்கான தந்தியை உன்னிடம் தந்தேன். இதோ எமிலுக்கானது.

# Cela, ça

இவ்விரண்டு சொற்களும் ஒரே கருத்துடையவை. Cela இன் திரிபே ça என்பர். எழுத்துவழக்கில் cela உம் பேச்சுவழக்கில் ça உம் பயன்படுத்தப்படும். ஒரு உயிருள்ள அல்லது ஒருபொருளின் பெயர் கூறாமல் அதற்குப்பதிலாக cela அல்லது ça இடுவோம்.

Faites ça ( = ce travail)
செய்யுங்கள் இதை (இந்த வேலையை)
être உடன் cela எழுவாயாகப் பயன்படுத்தலாம்.
Cela est nécessaire. இது அவசியமானது.
Cela est dans les journaux. இது பத்திரிகைகளில் உள்ளது.

# Ceci et cela (ça)

நேரடியாகச் செயப்படுபொருளை பிரதியிட இவ்விரு சொற்களும் பயன்படும். நாளாந்தபேச்சுவழக்கில் கூடுதலாக பொருட்களை ஒப்பிட இவற்றைப் பயன்படுத்துவோம்.

Veux-tu ceci ou cela?
உனக்கு இது வேண்டுமா அல்லது அது வேண்டுமா?
Ceci est à moi, Cela est à toi.
இது என்னுடையது, அது உன்னுடையது.

பேச்சுமொழியில் ceci இற்குப்பதிலாக ci உம் பயன்படுத்துவதுண்டு.

Comme ci comme ça
இப்படி - அப்படி

Il faut faire ci, il faut faire ça.
இது செய்யவேண்டும், அது செய்யவேண்டும்.

# Ce

இது வினைச்சொல் être உடன் அல்லது இணைப்பு பிரதிப்பெயர்ச்சொற்கள் qui, que, dont, quoi போன்ற சொற்களுடன் தொழிற்படும்.

Réfléchissez à ce que vous allez dire!
நீங்கள் சொல்லப்போவதைச் சிந்தியுங்கள்!
Voici *ce* dont j'ai besoin.
இதோ எனக்குத் தேவையானது.
Epouser *ceux* qu'il hait et punir *ceux* qu'il aime.
அவன் வெறுப்பவர்களை திருமணம் செய்கின்றான், விரும்புபவர்களை அவன் தண்டிக்கின்றான்.
Il faut ce qu'il faut தேவையானது வேண்டும்.
Qui அல்லது que உடன் வினைச்சொல் முன்னால் வரும்வடிவம் (est-ce) வரும்போது கேள்வியாகும்.
Est-ce qu'il pleut? மழை பெய்கிறதா?
Qu'est-ce qui s'est passé? என்ன நடந்தது?

இலக்கியத்தில் ce வேறு வினைச்சொற்களுடன் அமையும்.
Cela pourrait se corriger à la plume.
பேனாவினால் அதைத் திருத்தலாம்.

# Les pronoms relatifs
## இணைப்புப் பிரதிப்பெயர்ச்சொல்

பெயர்ச்சொல்லை அல்லது பிரதிப்பெயர்ச்சொல்லைப் பிரதியிடப் பயன்படுத்துவோம். அடுத்தடுத்து வரும் இருவாக்கியங்களில் பொதுவான ஒருசொல் இருந்தால் அச்சொல்லை இணைப்புப் பிரதிப் பெயர்ச்சொல்லினால் பிரதியிட்டு ஒருவாக்கியமாக்கலாம்.

Vous avez acheté un parapluie.
*நீங்கள் ஒருகுடை வாங்கினீர்கள்.*
Je regarde ce parapluie.
*நான் அந்தக்குடையைப் பார்க்கின்றேன்.*
Je regarde ce parapluie ***que*** vous avez acheté.
*நீங்கள் வாங்கிய அந்தக்குடையை நான் பார்க்கின்றேன்.*

இருவசனத்திலும் குடை என்ற பொதுச்சொல் வருவதால் ஒருவசனத்தில் அச்சொல்லை நீக்கி அது Que என்ற சொல்லால் பிரதியிடப்படுகின்றது. இங்கு Que ஒரு இணைப்புப் பிரதிப்பெயர்ச்சொல்லாகும். அத்துடன் பிரதியிடப்படும் சொல்லிற்குப் பக்கத்திலேயே இணைப்புப் பிரதிப்பெயர்ச்சொல்லை இடவேண்டும்.
*கவனிக்க:* மேலேயுள்ள உதாரணத்தில் parapluie இற்குப் பக்கத்திலேயே Que இடப்பட்டுள்ளது.

### இணைப்புப்பிரதிச்சொற்கள்
*Qui, Que, Dont...*

1) பொதுச்சொல் எழுவாயாக இருக்கும்போது ***Qui*** என்ற சொல்லால் பிரதியிடுவோம்..
   a) Raja a un frère. *ராஜாவிற்கு ஒரு சகோதரன் உண்டு.*
   Ce frère est journaliste. *அந்த சகோதரன் ஒரு பத்திரிகையாளர்.*
   Raja a un frère ***qui*** est journaliste.
   *ராஜாவிற்கு இருக்கும் ஒரு சகோதரர் பத்திரிகையாளராவார்.*

   b) C'est moi, J'ai cassé cette assiette. *அது நான், நான் அந்தக் கோப்பையை உடைத்தேன்.*
   C'est moi ***qui*** ai cassé cette assiette. *அந்தக்கோப்பையை உடைத்தது நான் தான்.*

2) நாம் செயப்படுபொருளைப் பிரதியிடுவோமாயின் **Que** இடவேண்டும்.
   a) Il aime la chanson. *அவனுக்கு பாட்டு விருப்பம்.*
   Nous écoutons cette chanson. *நாங்கள் அந்தப்பாட்டைக் கேட்கின்றோம்.*
   Il aime la chanson ***que*** nous écoutons. *நாங்கள் கேட்கும் அந்தப்பாட்டை அவன் விரும்புகின்றான்.*
   *இவ் உதாரணத்தில் பொதுச்சொல் இரண்டும் செயப்படுபொருளாகும்.*

   b) Voilà un garçon. *அதோ ஒரு பையன்.*
   J'ai déjà rencontré ce garçon. *நான் ஏற்கனவே இந்தப்பையனைச் சந்தித்தேன்.*
   Voilà un garçon ***que*** j'ai déjà rencontré.
   *அதோ நான் ஏற்கனவே சந்தித்தபையன்.*

   இறந்தகாலத்தின்போது பிரதியிடப்படும் சொல்லின் பால், எண்ணுக்கேற்ப இறந்தகால வினைமுற்று (Participe passé) *மாற்றப்பட வேண்டும்.*

   c) Nous mangeons des gâteaux. *நாங்கள் கேக்குகள் சாப்பிடுகின்றோம்.*
   Elle a fait des gâteaux. *அவள் இந்தக்கேக்குகளைச் செய்தாள்.*
   Nous mangeons des gâteaux ***qu'***elle a faits.
   *நாங்கள் சாப்பிடும் கேக்குகள் அவள் செய்தவையாகும்.*
   *இங்கு des gâteaux பன்மை, ஆண்பாலாகையால் வினைமுற்றுக்கு "S" சேர்க்கப்பட்டுள்ளது.*

3) ***Dont***
   De உடன் ஒரு பெயர்ச்சொல் வரும்போது அதைப்பிரதியிட dont இடுவோம்.
   பெயர்ச்சொல் ஆண், பெண்பால், ஒருமை, பன்மை எதுவாயினும் Dont ஆல் பிரதியிடுவோம்.

குறிப்பு : Donc ஏறத்தாழ ஒரே மாதிரியான உச்சரிப்பு ஆனால், ஆகையால் என்ற அர்த்தத்தைக் குறிக்கும்.

1. a) Je ne connais pas ces amis. எனக்கு அந்த நண்பர்களைத் தெரியாது.
   Vous parlez de ces amis. நீங்கள் அந்த நண்பர்களைப்பற்றிப் பேசுகின்றீர்கள்.
   Je ne connais pas ces amis ***dont*** vous parlez.
   நீங்கள் பேசும் நண்பர்களைப்பற்றி எனக்குத்தெரியாது.

2. Adjectif Possessif வரும்போது அச்சொல்லை dont இனால் பிரதியிடலாம்.
   a) C'est un bon roman. அது ஒருநல்ல நாவல்.
   Sa fin est très triste. அதன் முடிவு மிக துக்கமானது.
   C'est un bon roman ***dont*** la fin est très triste.
   ஒருநல்ல நாவலான அதன் முடிவு மிக துக்கமானது.

பெயர்ச்சொல் De தவிர்ந்த வேறு ஒரு முன்னிடைச்சொல்லுடன் வருமாயின் dont இடமுடியாது. அதற்கு நாம் கூட்டுஇணைப்புப் பிரதிப்பெயர்ச்சொல் இடுவோம்.

**கூட்டு இணைப்புப்பிரதிப்பெயர்ச்சொற்கள்**

| | ***Singulier*** | ***Pluriel*** |
|---|---|---|
| *Masculin* | Lequel | Lesquels |
| *Féminin* | Laquelle | Lesquelles |

அவ்வாறே **à** உடன் வரும்போது

| | | | |
|---|---|---|---|
| à + lequel | = auquel | à + laquelle | = à laquelle |
| à + lesquels | = auxquels | à + lesquelles | = auxquelles |

**de** உடன் வரும்போது

| | | | |
|---|---|---|---|
| de + lequel | = duquel | de laquelle | = de laquelle |
| de + lesquels | = desquels | de lesquelles | = desquelles |

கூட்டு இணைப்புப்பிரதிப்பெயர்ச்சொற்களை முன்னிடைச்சொற்களுடனும் உபயோகிக்கலாம்.
dans lequel, sur laquelle, avec lesquels.

உ+ம்: 1) Ma soeur a des livres.
எனது சகோதரி புத்தகங்கள் வைத்திருக்கின்றாள்.
Elle tient beaucoup à ces livres.
அவள் அந்தப்புத்தகங்களை மிகவிரும்புகின்றாள்.
Ma soeur a des livres ***auxquels*** elle tient beaucoup.
எனது சகோதரி தான் வைத்திருக்கும் புத்தகங்களை மிகவிரும்புகின்றாள்.

2) La question est difficile. கேள்வி கடினமானது.
Tu dois répondre à cette question.
நீ இந்தக்கேள்விக்கு பதிலளிக்க வேண்டும்.
La question à ***laquelle*** tu dois répondre est difficile.
நீ பதிலளிக்கவேண்டிய கேள்வி கடினமானது.

3) Je connais ce pays. எனக்கு இந்தநாட்டைத் தெரியும்.
Tu parles de ce pays. நீ இந்தநாட்டைப்பற்றி பேசுகின்றாய்.
Je connais ce pays ***duquel*** tu parles.
நீ பேசும் நாட்டைப்பற்றி எனக்குத்தெரியும்.
இவ்வசனத்திற்கு duquel இற்குப் பதிலாக dont உம் இடலாம்.

இடத்தை, காலத்தைப் பிரதியிட ***Où*** பயன்படும்.
1) Je vais à Colombo. நான் கொழும்புக்குப் போகின்றேன்.

Mes parents habitent à Colombo. எனது பெற்றோர்கள் கொழும்பில் வசிக்கின்றார்கள்.
Je vais à Colombo ***où*** mes parents habitent.
*எனது பெற்றோர்கள் வசிக்கும் கொழும்பிற்கு நான் போகின்றேன்.*

2) Le jour où j'ai atterri à Paris, il neigeait. நான் பாரிசில் வந்து இறங்கிய நாளில் பனிபெய்தது.

3) Pourquoi arrivez-vous à l'heure ***où*** tout le monde part.
எல்லோரும் புறப்படும் நேரத்தில் நீங்கள் ஏன் வருகின்றீர்கள்?

*2,3 வது உதாரணத்தில் où காலத்தைப்பிரதியிடுகின்றது.*

***D'où***

1) Je ne connais pas la ville. எனக்கு நகரத்தைத் தெரியாது.
Il vient de cette ville. அவன் அந்த நகரத்தில் இருந்து வருகின்றான்.
Je ne connais pas la ville ***d'où*** il vient.
அவன் எந்த நகரத்திலிருந்து வருகின்றானோ அதை எனக்குத்தெரியாது.

*De உடன் ஒரு இடம் வரும்போது அதை d'où ஆல் பிரதியிடலாம்.*

***Où*** ஒரு இடத்தை அல்லது காலத்தைப் பிரதியிடும்.

1) ஒரு இடம்
D'où, où, jusqu'où, par où
2) காலம்
Le mois où, le moment où, le jour où

Dont = du qui
= duquel, de laquelle, desquels, desquelles

C'est......qui

| | |
|---|---|
| Je viendrai | C'est moi qui viendrai. |
| நான் வருவேன். | நான் தான் வருவேன். |
| Il nous aidera | C'est lui qui nous aidera. |
| அவன் எங்களுக்கு உதவுவான். | எங்களுக்கு உதவி செய்யப்போவது அவன்தான். |
| Ils ont raté le train. | C'est eux qui ont raté le train. |
| அவர்கள் புகையிரதத்தை தவறவிட்டார்கள். | புகையிரதத்தைத் தவறவிட்டது அவர்கள்தான். |
| Raja a téléphoné. | C'est Raja qui a téléphoné. |
| ராஜா தொலைபேசி செய்தார். | தொலைபேசி செய்தது ராஜா. |

C'est...... qui

இதில் பிரதிப்பெயர்ச்சொற்களாக moi, toi, lui, elle, nous, vous, eux, elles பயன்படுத்த வேண்டும்.
C'est ...... qui இடையில் உள்ள எழுவாயுடன் வினைச்சொல் பொருந்தும்.

C'est ..... que

| | |
|---|---|
| Il cherche la lettre bleue. | C'est la lettre bleue qu'il cherche. |
| அவன் நீலக்கடிதத்தைத் தேடுகின்றான். | அந்த நீலக்கடிதத்தையே அவன் தேடுகின்றான். |
| J'ai rencontré votre frère. | C'est votre frère que j'ai rencontré. |
| நான் உங்களுடைய சகோதரனைச் சந்தித்தேன். | நான் சந்தித்தது உங்களுடைய சகோதரனைத்தான். |

இதில் செயப்படுபொருளைப் பிரதியிடப்படுகின்றது : முன்னிடைச்சொல்லுடன் வரும்போது.

Il donne un cadeau à maman. C'est à maman qu'il donne un cadeau.
அவன் அம்மாவிற்கு ஒரு பரிசு கொடுக்கின்றான்.
Tu as mis le papier dans la corbeille à papier. C'est dans la corbeille à papier que tu l'as mis.
நீ பேப்பர் கூடைக்குள் பேப்பரை இட்டாய். நீ அதை இட்டது பேப்பர் கூடைக்குள்.

C'est ..... que இல்

1) Préposition + nom
2) Adverbe

3) Préposition + pronom இடலாம்.

Ce qui, Ce que, Ce dont

1) Ce qui இதை எழுவாயாகப் பயன்படுத்தலாம்.
   - Voilà ce qui m'intéresse. இதோ எனக்கு பிடித்தது.

2) Ce que இது செயப்படுபொருளாக வரும்.
   - Je donne ce que j'ai. என்னிடம் இருப்பதை நான் தருகின்றேன் (கொடுக்கின்றேன்).
   - Ce qu'il veut savoir, c'est la vérité. அவன் அறியவிரும்புவது, உண்மை.
   - Montre-moi ce que tu m'apportes. நீ எனக்குக் கொண்டுவந்ததைக் காட்டு.

3) Ce dont செயப்படுபொருள் de உடன் வரும்போது
   - Voilà ce dont il nous a parlé. இதோ இதைப்பற்றித்தான் அவன் எங்களுடன் பேசினான்.

   இதில் ce dont = de quoi ஆகும்.

***Préposition + quoi***

முன்னிடைச்சொற்களுடன் ***Quoi*** பொதுவாக பயன்படுத்துவோம்.

Je sais de quoi vous parlez. நீங்கள் எதையிட்டு பேசுகின்றீர்கள் என எனக்குத் தெரியும்.
Je sais avec quoi tu as fait ce gâteau. நீ எதனால் இந்தக்கேக்கை செய்தாய் என்று எனக்குத் தெரியும்.

# Les Pronoms Personnels
## தனிப்பிரதிப்பெயர்ச்சொற்கள்

ஒரு வசனத்தில் அல்லது சொற்கூட்டத்தில் ஒருபொருளை அல்லது ஒரு உயிருள்ளதை Pronom personnel மூலம் பிரதியிடலாம். பிரதியிடப்படும் சொல்லின் பால், எண்ணை இது ஏற்கும்.

ஒரு வாக்கியத்தில் அல்லது வாக்கியப்பகுதியில் உள்ள செயப்படுபொருளை பிரதியிடுவது பற்றி பார்ப்போம்.

Il donne une fleur அவன் ஒரு பூ கொடுக்கின்றான்.
Elle ferme la porte அவள் கதவைப்பூட்டுகின்றாள்.

இவ்விரு வாக்கியத்திலும் une fleur (ஒரு பூ), la porte (கதவு) ஆகிய சொற்கள் செயப்படுபொருளாகும். ஒரு வாக்கியத்தின் பயனிலையுடன் யாரை, எதனை என்னும் வினாவினைக் கேட்டால் அவ்வாக்கியத்தின் செயப்படுபொருளை அறியலாம். செயப்படுபொருள் பிரஞ்சில் l'objet எனப்படும். செயப்படுபொருளை ஏற்கும் வினைச்சொற்கள் செயப்படுபொருள் குன்றாவினை (verbe transitif) எனப்படும். செயப்படுபொருளை ஏற்காத வினைச்சொற்களை செயப்படுபொருள் குன்றியவினை (verbe intransitif) எனப்படும்.

pleuvoir, falloir etc...
Il pleut மழை பெய்கின்றது.

மேலுள்ள வசனங்களில் பயனிலையுடன் யாரை, எதனை என்று வினாவாக்கும்போது சரியான விடை கிடைப்பதில்லை. அவ்வாறான வினைச்சொற்கள் செயப்படுபொருள் குன்றியவினை (verbe intransitif) எனப்படும்.

**செயப்படுபொருள் இருவகைப்படும்.**

(1) நேரடிச் செயப்படுபொருள் Complément d'objet direct (C.O.D)
ஒரு பயனிலையுடன் நேரடியாகவரும் செயப்படுபொருள் நேரடிச் செயப்படுபொருள் எனப்படும்.
உ+ம் : Il écrit une lettre. அவன் ஒரு கடிதம் எழுதுகின்றான்.
இதில் une lettre என்பது Complément d'objet direct (C.O.D) ஆகும்.

(2) நேரடியற்ற செயப்படுபொருள் Complément d'objet Indirect (C.O.I)
செயப்படுபொருள் ஒருமுன்னிடைச்சொல்லால் பயனிலையுடன் இணைக்கப்பட்டால் அச்செயப்படுபொருள் நேரடியற்ற செயப்படுபொருள் எனப்படும்.
உ+ம் : Il écrit à son frère. அவன் தனது சகோதரனுக்கு எழுதுகின்றான்.

இதில் son frère à வினால் இணைக்கப்படுவதால் Complément d'objet indirect எனப்படும்.

Tu donnes à Ravi. நீ ரவிக்குக் கொடுக்கின்றாய்.
இதில் Ravi என்பது complément d'objet indirect ஆகும்.

| Pronom | Complément d'objet Direct (C.O.D) | | Complément d'objet Indirect (C.O.I) | |
|---|---|---|---|---|
| | பயனிலைக்குமுன் *Avant le verbe* | பயனிலைக்குப்பின் *Après le verbe* | பயனிலைக்குமுன் *Avant le verbe* | பயனிலைக்குப்பின் *Après le verbe* |
| Je | me | moi | me | moi |
| Tu | te | toi | te | toi |
| Il | le | le | lui | lui |
| Elle | la | la | lui | lui |
| Nous | nous | nous | nous | nous |
| Vous | vous | vous | vous | vous |
| Ils | les | les | leur | leur |
| Elles | les | les | leur | leur |

குறிப்பு : உடன்பாட்டு, எதிர்மறை வினைவாக்கியங்களுக்கு "பயனிலைக்குமுன்" வடிவம் உபயோகிக்கப்படும். ஆனால் ஏவல்வினைக்கு மட்டுமே "பயனிலைக்குப்பின்" வடிவம் பயன்படும்.

## *Complément d'Objet Direct (C.O.D)*
**நேரடிச் செயப்படுபொருள்**

(1) ஒருபொருள் அல்லது ஒரு உயிருள்ளது படர்க்கை ஒருமை ஆண்பாலாயின் le உம் பெண்பாலாயின் la உம் பன்மையாயின் les உம் இடவேண்டும்.

(2) Complément d'objet direct ஆனது article défini, Adjectif possessif அல்லது Adjectif démonstratif உடன் உள்ளபோது மட்டுமே le, la அல்லது les ஆல் பிரதியிடலாம்.

(3) முன்னர் article défini ஒரு பெயர்ச்சொல்லுக்கு இடவேண்டும் என பார்த்தோம். ஆனால் இப்போது அவை பெயர்ச்சொற்களை பிரதியிடவும் பயன்படும்.

(4) உயிரெழுத்துடன் அல்லது சத்தமில்லாத H உடன் me, te, le, la வரின் அவை l'apostrophe எடுத்து m',t',l' ஆகமாறும். செயப்படுபொருளை பிரதியிடும்சொல் பொதுவாக பயனிலைக்கு முன்னாலேயே இடவேண்டும்.
Il prend le train. அவன் ரயில் எடுக்கின்றான்.
இவ்வசனத்தில் le train என்ற சொல் ஆண்பால் ஒருமை ஆகவே le train என்ற சொல்லுக்குப்பதிலாக le இடவேண்டும்.
Il le prend அவன் இதை எடுக்கின்றான்.
Elle chante cette chanson அவள் இந்தப்பாட்டை பாடுகின்றாள்.
இதில் cette chanson என்றசொல் பெண்பால் ஒருமையானதால் la என்ற சொல்லால் பிரதியிடவேண்டும்.
Elle la chante அவள் இதைப்பாடுகின்றாள்.

(5) எதிர்மறையின்போது பிரதிப்பெயர்ச்சொல்லுக்கும் சேர்த்தே Ne ... pas இடவேண்டும்.

(6) செயப்படுபொருளை நேரடியாக எடுக்கும் வினைச்சொற்களுடன் me, te, nous, vous பயன்படுத்தும்முறை.
J'aime Bharathan. நான் பரதனை விரும்புகின்றேன்.
Je l'aime. நான் அவனை விரும்புகின்றேன்.
J'aime Kamala. நான் கமலாவை விரும்புகின்றேன்.
Je l'aime. நான் அவளை விரும்புகின்றேன்.
Je t'aime நான் உன்னை விரும்புகின்றேன்.
Je vous aime. நான் உங்களை விரும்புகின்றேன்.

Il m'aime அவன் என்னை விரும்புகின்றான்.
Est-ce que tu m'aimes? என்னை நீ விரும்புகின்றாயா?
Je te cherche. நான் உன்னைத் தேடுகின்றேன்.
Je vous attends. நான் உங்களுக்காக காத்திருக்கின்றேன்.
Je cherche Raja. நான் ராஜாவைத் தேடுகின்றேன்.
~~Je cherche toi~~. இவ்வடிவில் தான் எழுதியிருக்கவேண்டும். ஆனால் இப்படி எழுதக்கூடாது. (இவ்வடிவம் பிழை) செயப்படுபொருளை நேரடியாக எடுக்கும் வினைச்சொற்களுடன் பிரதிப்பெயர்ச்சொற்களை எப்போதும் வினைச்சொல்லின் முன்னால் இடவேண்டும். சரியான வடிவம் Je te cherche.

(7) வினாவாக்கியத்தில் பிரதிப்பெயர்ச்சொல் பயனிலையுடனே வரும்.
Voilà ton café, le bois-tu maintenant? இதோ உனது கோப்பி, நீ அதை இப்போது குடிக்கின்றாயா?
Ton livre est là, le vois-tu? உனது புத்தகம் அங்கே இருக்கின்றது. நீ அதைப்பார்க்கின்றாயா?
(a) Croyez-vous cette personne? நீங்கள் இந்தமனிதனை நம்புகின்றீர்களா?
Oui, je la crois. ஆம், நான் அவனை/அவளை நம்புகின்றேன்.
Non, je ne la crois pas. இல்லை, நான் அவனை/அவளை நம்பவில்லை.
(b) Il mettait son chapeau. அவன் தனது தொப்பியை அணிந்து கொண்டிருந்தான்.
Il le mettait. அவன் அதை அணிந்து கொண்டிருந்தான்.
Il ne le mettait pas. அவன் அதை அணிந்து கொண்டிருக்கவில்லை.
இனி ஒருவசனம் இறந்தகாலத்தில் இருக்கும்போது பார்ப்போம்.
Tu as pris cette chemise. நீ இந்த சேர்ட்டை எடுத்தாய்.
Tu l'as prise. நீ அதை எடுத்தாய்.
Tu ne l'as pas prise. நீ அதை எடுக்கவில்லை.

இறந்தகாலத்தில் அல்லது கூட்டுக்காலங்களில் (temps composés) பிரதியிடப்படும் சொல்லின் பால், எண்ணுக்கேற்ப Participe passé மாற்றப்படவேண்டும். பிரதிப்பெயர்ச்சொல் எப்போதும் உதவிவினைச்சொல்லுக்கு (verbe auxiliaire) முன்னால் இடவேண்டும்.

1. Il a fermé la porte. அவன் கதவை பூட்டினான்.
   Il l'a fermée. அவன் அதைப் பூட்டினான்.
   Il ne l'a pas fermée. அவன் அதைப் பூட்டவில்லை.
2. Est-ce que vous avez envoyé mes lettres? நீங்கள் எனது கடிதங்களை அனுப்பினீர்களா?
   Oui, je les ai envoyées. ஆம், நான் அவற்றை அனுப்பினேன்.
   Non, je ne les ai pas envoyées. இல்லை, நான் அவற்றை அனுப்பவில்லை.

## *Complément d'Objet Indirect (C.O.I)*
**நேரடியற்ற செயப்படுபொருள்**

ஒரு வினைச்சொல் à என்ற முன்னிடைச்சொல்லின் மூலம் செயப்படுபொருளை ஏற்றால் அட்டவணையில் உள்ள பிரதிப்பெயர்ச்சொற்களையும் சேர்த்தே இது பிரதியிடும். à ஐயும் செயப்படுபொருளையும் இது பிரதியிடும்.

(1) Je parle à Kumar. நான் குமாருடன் பேசுகின்றேன்.
Je lui parle. நான் அவனுடன் பேசுகின்றேன்.
Je ne lui parle pas. நான் அவனுடன் பேசுவதில்லை.
(2) Je parle à Kamala. நான் கமலாவுடன் பேசுகின்றேன்.
Je lui parle. நான் அவளுடன் பேசுகின்றேன்.
Je ne lui parle pas. நான் அவளுடன் பேசுவதில்லை.
(3) Tu as écrit à tes copains. நீ உனது நண்பர்களுக்கு எழுதினாய்.
Tu leur as écrit. நீ அவர்களுக்கு எழுதினாய்.
Tu ne leur as pas écrit. நீ அவர்களுக்கு எழுதவில்லை.

குறிப்பு (a) இறந்தகாலத்தில் பிரதியிடப்படும் பெயர்ச்சொல்லின் பால், எண்ணுக்கேற்ப participe passé இல் மாற்றமில்லை.
(b) ஆண்பாலாயினும் பெண்பாலாயினும் படர்க்கை ஒருமையாயின் lui ஆலும், பன்மையாயின் leur ஆலும் பிரதியிடவேண்டும்.

(c) பொதுவாக à உடன் உயிருள்ள பொருள்வரும் போதே அட்டவணையில் உள்ள பிரதிப்பெயர்ச் சொற்களால் பிரதியிடுவோம்.

*பிரதிப்பெயர்ச்சொற்கள் je, tu, il, elle, nous, vous, ils, elles வரும்போது...*

Je téléphone à Mani. நான் மணிக்கு டெலிபோன் செய்கின்றேன்.
~~Je téléphone à toi~~. இவ்வடிவம் தவறானது
Je te téléphone என்பதே சரியானது.
நான் உனக்கு டெலிபோன் செய்கின்றேன்.

மேற்கூறிய பிரதிப்பெயர்ச்சொற்கள் (pronoms) வரும்போது பயனிலைக்கு முன்னால் அவற்றை இடவேண்டும்.

| | |
|---|---|
| Tu nous écris. | நீ எங்களுக்கு எழுதுகின்றாய். |
| Il vous a dit la vérité. | அவன் உங்களுக்கு உண்மை கூறினான். |
| Il m'a dit. | அவன் எனக்கு சொன்னான். |
| Il ne m'a pas dit. | அவன் எனக்கு சொல்லவில்லை. |

ஆனால் சிலவினைச்சொற்கள் இவற்றை ஏற்காது. அவற்றுடன் pronom tonique இடவேண்டும்.
*அவ்வினைச்சொற்கள்..*

Penser à    Faire attention à
Tenir à    Songer à
S'intéresser à

(1) Elle tient à son mari. அவள் தனது கணவனை விரும்புகின்றாள்.
Elle tient à lui. அவள் அவனை விரும்புகின்றாள்.

*குறிப்பு* : De உடன் உயிருள்ள பொருள் வரும்போது எப்போதும் pronom tonique ஐ பயன்படுத்தவேண்டும்.

(1) Tu parles souvent de ton frère. நீ அடிக்கடி உனது சகோதரனைப்பற்றி பேசுகின்றாய்.
Tu parles souvent de lui. நீ அடிக்கடி அவனைப்பற்றி பேசுகின்றாய்.
(2) As-tu peur de cet homme? உனக்கு அந்தமனிதனையிட்டு பயமா?
Oui, j'ai peur de lui. ஆம், எனக்கு அவனையிட்டு பயம்.
Non, je n'ai pas peur de lui. இல்லை, எனக்கு அவனையிட்டு பயமில்லை.
(3) Elle parle de moi. அவள் என்னைப்பற்றி பேசுகின்றாள்.
(4) Il est fier de nous. அவனுக்கு எங்களையிட்டு பெருமை.

*குறிப்பு* : ஏவல்வினையின்போது உடன்பாட்டுவாக்கியமாயின் வினைச்சொல்லிற்கு பின்னால் பிரதியீடு செய்யப்படவேண்டும்.

A. **C.O.D**

(a) Fermez la porte! கதவைப்பூட்டுங்கள்
Fermez-la! அதைப்பூட்டுங்கள்
(b) Mets tes chaussures! உனது சப்பாத்துக்களை இடு
Mets - les! அவற்றை இடு

ஆனால் எதிர்மறையில் ஒருவாக்கியம் அமையின் மீண்டும் பிரதிப்பெயர்ச்சொல்லை வினைச்சொல்லின் முன்னால் இடவேண்டும்.

(a) Prends ce timbre! அந்த முத்திரையை எடு
Prends - le! அதை எடு
Ne le prends pas! அதை எடுக்காதே
(b) Attends tes amis! உனது நண்பர்களுக்கு காத்திரு
Attends - les! அவர்களுக்கு காத்திரு
Ne les attends pas! அவர்களுக்கு காத்திராதே

*குறிப்பு* : *Pronom (பிரதிப்பெயர் வரும்போது)*

| | | | |
|---|---|---|---|
| Attends - moi | எனக்காக காத்திரு | Ne m'attends pas | எனக்காக காத்திராதே |
| Aidez - nous | எங்களுக்கு உதவுங்கள் | Ne nous aidez pas | எங்களுக்கு உதவாதீர்கள் |
| Regarde - moi | என்னைப்பார் | Ne me regarde pas | என்னைப்பார்க்காதே |

B. **C.O.I**

அட்டவணையில் உள்ள மாதிரி வினைச்சொல்லிற்கு பின்னால் வரும்வடிவம் இடவேண்டும்.

(a) écris à tes parents உனது பெற்றோருக்கு எழுது
écris - leur அவர்களுக்கு எழுது
Ne leur écris pas அவர்களுக்கு எழுதாதே

(b) Réponds à ton amie உனது நண்பிக்கு பதிலளி
Réponds - lui அவளுக்கு பதிலளி
Ne lui réponds pas அவளுக்கு பதிலளியாதே

Téléphonez - moi எனக்கு டெலிபோன்செய்யுங்கள் Ne me téléphonez pas எனக்கு டெலிபோன்செய்யாதீர்கள்
Parle - moi என்னுடன் பேசு Ne me parle pas என்னுடன் பேசாதே

ஆனால் முன்னிடைச்சொல்லான à ஐ இழக்காத வினைச்சொற்களுக்கு pronom tonique இடவேண்டும்.
Pensez à moi என்னை நினையுங்கள் Ne pensez pas à moi என்னை நினையாதீர்கள்
Faites attention à lui அவனையிட்டு கவனம் Ne faites pas attention à lui அவனைப்பற்றி கவனம் தேவையில்லை

# En

ஒரு பெயர்ச்சொல் article indéfini அல்லது article partitif உடன் இருந்தால் அப்பெயர்ச்சொல் En இனால் பிரதியிடப்படும். De உடன் ஒருபொருள் அல்லது இடம்வரும்போதும் அவற்றை En இனால் பிரதியிடலாம்.

(1) Article indéfini உடன் பெயர்ச்சொல் வரும்போது
Un, Une அல்லது des உடன் ஒருபெயர்ச்சொல்வரின் அச்சொல் en இனால் பிரதியிடப்படும். அத்துடன் எண்ணிக்கையை குறிக்கும்சொல் வினைச்சொல்லின் பின் இடவேண்டும்.
Il mange une pomme. அவன் ஒருஅப்பிள் சாப்பிடுகின்றான்.
Il en mange une. அவன் அதில் ஒன்று சாப்பிடுகின்றான்.
Tu prends un parapluie. நீ ஒருகுடை எடுக்கின்றாய்.
Tu en prends un. நீ அதில் ஒன்று எடுக்கின்றாய்.
Il a des livres. அவன் புத்தகங்கள் வைத்திருக்கின்றான்.
Il en a. அவன் அவற்றை வைத்திருக்கின்றான்.
ஆனால் des உடன் வரும்போது அதை பயனிலையின் பின்னால் இடக்கூடாது. எதிர்மறையின் போதும் எண்ணிக்கையை பயனிலையின் பின்இடக்கூடாது.
Nous voyons un film. நாங்கள் ஒருபடம் பார்க்கின்றோம்.
Nous en voyons un. நாங்கள் அவற்றில் ஒன்று பார்க்கின்றோம்.
Nous n'en voyons pas. நாங்கள் அவற்றை பார்ப்பதில்லை.

(2) எண்ணிக்கையுடன் பெயர்ச்சொற்கள் வரும்போது..
Il a plusieurs cassettes. அவன் பலகசெட்டுகள் வைத்திருக்கின்றான்.
Il en a plusieurs. அவன் அவற்றில் பலவைத்திருக்கின்றான்.
Il n'en a aucune. அவன் அவற்றில் ஒன்றும் வைத்திருக்கவில்லை.

ஆனால் ஒருவசனத்தில் மீண்டும் அதேசொல்லைப் பயன்படுத்தும்போது எண்ணிக்கை இடலாம்.
Avez - vous trois places? நீங்கள் மூன்று இடங்கள் வைத்திருக்கின்றீர்களா?
Non, je n'en ai pas trois mais j'en ai deux.
இல்லை, என்னிடம் மூன்று இடங்கள் இல்லை. ஆனால் இரு இடங்கள் உள்ளன.

(3) Article partitif உடன் ஒரு பெயர்ச்சொல்வரும்போது...
(a) Il achète de la farine. அவன் மா வாங்குகின்றான்.
Il en achète. அவன் அதை வாங்குகின்றான்.
Il n'en achète pas. அவன் அதை வாங்குவதில்லை.
(b) Vous prenez du café. நீங்கள் கோப்பி எடுக்கின்றீர்கள்.
Vous en prenez. நீங்கள் அதை எடுக்கின்றீர்கள்.

Vous n'en prenez pas. நீங்கள் அதை எடுப்பதில்லை.

(4) Beaucoup de, Trop de, Peu de, Assez de போன்ற சொற்களுடன் வரும்போது...
(a) Elle a beaucoup de livres. அவள் நிறையபுத்தகங்களை வைத்திருக்கின்றாள்.
Elle en a beaucoup. அவள் அவற்றில்நிறைய வைத்திருக்கின்றாள்.
Elle n'en a pas du tout. அவளிடம் அவற்றில் ஒன்றுமில்லை.
(b) Avez - vous assez de temps? உங்களுக்கு போதியநேரம் இருக்கின்றதா?
Oui, j'en ai assez. ஆம், எனக்கு அது போதியளவுண்டு.
Non, je n'en ai pas du tout. இல்லை, எனக்கு நேரமே இல்லை.

(5) De உடன் ஒரு இடம் வரும்போது...
(a) Je viens du Srilanka. நான் இலங்கையிலிருந்து வருகின்றேன்.
J'en viens. நான் அங்கிருந்து வருகின்றேன்.
Je n'en viens pas. நான் அங்கிருந்து வரவில்லை.
(b) Il sort de sa chambre. அவன் தனது அறையிலிருந்து வெளியேறுகின்றான்.
Il en sort. அவன் அங்கிருந்து வெளியேறுகின்றான்.
Il n'en sort pas. அவன் அங்கிருந்து வெளியேறவில்லை.

# Y

ஒருவினைச்சொல் à என்ற முன்னிடைச்சொல்லுடன் ஒரு பொருளைக்குறிக்கும் பெயர்ச்சொல்வருமாயின் அப்பெயர்சொல்லை y ஆல் பிரதியிடலாம்.

(1) Il pense à son travail. அவன் தனது வேலையை சிந்திக்கின்றான்.
Il y pense. அவன் அதை சிந்திக்கின்றான்.
Il n'y pense pas. அவன் அதைப்பற்றி சிந்திப்பதில்லை.
(2) J'ai réfléchi à ce problème. நான் இந்தப்பிரச்சனையை சிந்தித்தேன்.
J'y ai réfléchi. நான் அதைப்பற்றி சிந்தித்தேன்.
Je n'y ai pas réfléchi. நான் அதைப்பற்றி சிந்திக்கவில்லை.

எங்கே என்றகேள்விக்கு ஒரு இடம் விடையாயின் அவ்விடத்தை y ஆல் பிரதியிடலாம்.
(1) Vous êtes à Paris. நீங்கள் பாரிசில் இருக்கின்றீர்கள்.
Vous y êtes. நீங்கள் அங்கே இருக்கின்றீர்கள்.
Vous n'y êtes pas. நீங்கள் அங்கே இருப்பதில்லை.
(2) Est-ce que mon stylo est sur la table? எனது பேனை மேசைமேல் உள்ளதா?
Oui, il y est. ஆம், அது அங்கே இருக்கின்றது.
Non, il n'y est pas. இல்லை, அது அங்கே இல்லை.

குறிப்பு: aller என்பது futur இல்வரும்போது பிரதிப்பெயர்ச்சொல் இடக்கூடாது.
Est-ce que tu iras à la gare? நீ புகையிரத நிலையத்திற்கு செல்வாயா?
Oui, j'irai à la gare. ஆம், நான் புகையிரதநிலையத்திற்கு செல்வேன்.
Non, je n'irai pas à la gare. இல்லை, நான் புகையிரதநிலையத்திற்கு செல்வதில்லை.

**ஏவல்வினையில் En, y இன் இடம்.**

En முதலாம்கூட்ட வினைச்சொற்களில் முன்னிலை ஒருமைக்கு உடன்பாட்டு வாக்கியத்தில் உச்சரிப்பு இனிமைக்காக S இடவேண்டும். ஆனால் எதிர்மறையில் இடக்கூடாது.

(1) Mange du riz. சோறு சாப்பிடு.
Manges-en அதைச்சாப்பிடு.
N'en mange pas. அதைச்சாப்பிடாதே.
(2) Donne une pomme. ஒரு அப்பிள் கொடு.
Donnes-en une. அதில் ஒன்று கொடு.
N'en donne pas. அதைக்கொடாதே.

En இற்கு மாதிரியே y இடும்போது முன்னிலை ஒருமை முதலாம்கூட்டவினைச்சொற்களுக்கு S இடவேண்டும். அத்துடன் aller இற்கும் அவ்வாறே. ஆனால் எதிர்மறையில் S இடக்கூடாது.

| | |
|---|---|
| (1) Va à l'école. | பாடசாலைக்குச்செல். |
| Vas-y. | அங்கே செல். |
| N'y va pas. | அங்கே செல்லாதே. |
| (2) Allons en Italie. | இத்தாலிக்குச் செல்வோம். |
| Allons-y. | அங்கே செல்வோம். |
| N'y allons pas. | அங்கே செல்லவில்லை. |

ஒரு வினைச்சொல் à என்ற முன்னிடைச்சொல்லின் மூலம் ஒருபெயர்ச்சொல்லை இணைக்குமாயின் அப்பெயர்ச் சொல்லை y ஆல் பிரதியிடலாம்.

| | |
|---|---|
| (1) Pense à tes études. | உனது கல்வியை நினை. |
| Penses-y. | அதை நினை. |
| N'y pense pas. | அதை நினையாதே. |
| (2) Croyez au progrès. | முன்னேற்றத்தை நம்புங்கள். |
| Croyez-y. | அதை நம்புங்கள். |
| N'y croyez pas. | அதை நம்பவேண்டாம். |

## *Place des différents pronoms personnels*

ஒரு வசனத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிப்பெயர்ச்சொற்கள் வரும்போது அவற்றை எவ்வொழுங்கில் இடவேண்டும்? ஏவல்வினை இல்லாத வசனங்களை முதலில் கவனிப்போம்.

1.

| | |
|---|---|
| Me | Le ( l' ) |
| Te | La ( l' ) |
| Nous | Les |
| Vous | |

எப்போதும் me, te, nous, vous இற்கே முன்னுரிமை வழங்கப்படும். அது COI ஆயினும் அவற்றிற்கு முதலிடம்.

| | |
|---|---|
| (a) Vous me dites votre adresse. | நீங்கள் எனக்கு உங்களுடைய விலாசத்தைச்சொல்லுகின்றீர்கள். |
| Vous me la dites. | நீங்கள் எனக்கு அதை சொல்கின்றீர்கள். |
| (b) Raja nous prêtera sa voiture. | ராஜா எங்களுக்கு தனது காரை இரவல் தருவான். |
| Raja nous la prêtera. | ராஜா எங்களுக்கு அதை இரவல் தருவான். |
| Raja ne nous la prêtera pas. | ராஜா எங்களுக்கு அதை இரவல் தரமாட்டான். |

2.

| | |
|---|---|
| Le | Lui |
| La | |
| Les | Leur |

நேரடிச்செயப்படுபொருளை பிரதியிடும் le, la les இற்குப் பின்னரே lui, leur இடவேண்டும்.

(a) Il donne ce journal à son frère. அவன் இப்பத்திரிகையை தனது சகோதரனுக்கு கொடுக்கின்றான்.
*le* *lui*
Il le lui donne. அவன் அதை அவனுக்கு கொடுக்கின்றான்.
Il ne le lui donne pas. அவன் அதை அவனுக்கு கொடுக்கவில்லை.

(b) Elle a offert cette chemise à sa soeur. அவள் இந்த சேர்ட்டை தனது சகோதரிக்கு அன்பளிப்புச்செய்தாள்.
*la* *lui*
Elle la lui a offerte. அவள் அதை அவளுக்கு அன்பளிப்புச் செய்தாள்.
Elle ne la lui a pas offerte. அவள் அதை அவளுக்கு அன்பளிப்புச்செய்யவில்லை.

3.

| | |
|---|---|
| m'<br>t'<br>l'<br>Nous<br>Vous<br>Les<br>s' | y |

y ஐ எப்போதும் நேரடிசெயப்படுபொருளை பிரதியிடும் சொற்களின் பின்னரே இடவேண்டும்.
Vous m'attendez à la gare. நீங்கள் எனக்காக புகையிரதநிலையத்தில் காத்திருக்கின்றீர்கள்.
Vous m'y attendez. நீங்கள் எனக்காக அங்கே காத்திருக்கின்றீர்கள்.
Vous ne m'y attendez pas. நீங்கள் எனக்காக அங்கே காத்திருக்கவில்லை.

4.

| | |
|---|---|
| m'<br>t'<br>lui / l'<br>Nous<br>Vous<br>Les<br>s' | en |

(a) Tu as donné de l'argent à Ravi. நீ ரவிக்கு பணம் கொடுத்தாய்.
en lui
Tu lui en as donné. நீ அவனுக்கு அதை கொடுத்தாய்.
Tu ne lui en as pas donné. நீ அவனுக்கு அதைக் கொடுக்கவில்லை.
(b) Je me souviens de cette photo. எனக்கு இந்தப்படம் ஞாபகம் இருக்கின்றது.
*en*
Je m'en souviens. எனக்கு அது ஞாபகம் இருக்கின்றது.
Je ne m'en souviens pas. எனக்கு அது ஞாபகம் இல்லை.

y உடன் en வரும்போது y இற்கு முதலிடம் வழங்கப்படும்.
(a) Il y a un café. அங்கே ஒரு கோப்பி இருக்கின்றது.
Il y en a un. அங்கே அதில் ஒன்று இருக்கின்றது.
Il n'y en a pas. அங்கே அது இல்லை.
(b) Il y a assez de sucre. போதுமான சீனி இருக்கின்றது.
Il y en a assez. அது போதுமான அளவு இருக்கின்றது.
Il n'y en a pas assez. அது போதுமான அளவு இல்லை.

**சுருக்கம்**

| | | | | |
|---|---|---|---|---|
| Me (m')<br>Te (t')<br>Se (s')<br>Nous<br>Vous | devant le (l')<br>la (l')<br>les | devant lui<br>leur | devant y | devant en |

*இவ்வரிசையில் எப்போதும் செயப்படுபொருளின் பிரதிப்பெயர்ச்சொற்களை இடவேண்டும்.*

**ஏவல்வினையின் போது...**
*உடன்பாட்டு வாக்கியமாயின் பின்வருமாறு இடவேண்டும்.*

| | |
|---|---|
| Le<br>La<br>Les | Moi<br>Toi<br>Lui<br>Nous<br>Vous<br>Leur |

(1) Donne-moi ton verre. *உன்னுடைய கிளாசை எனக்குத்தா.*
Donne-le moi *அதை எனக்குத்தா.*
*ஆனால் எதிர்மறையில் சாதாரண வசனத்தில் இடுவதுபோலவே பிரதிப்பெயர்ச்சொற்களின் இடம்அமையும்.*
Ne me le donne pas. *எனக்கு அதைத் தராதே.*
(2) Montrez-nous vos photos. *உங்களுடைய படங்களை எங்களுக்கு காட்டுங்கள்.*
Montrez-les nous. *எங்களுக்கு அவற்றைக்காட்டுங்கள்.*
Ne nous les montrez pas. *எங்களுக்கு அவற்றைக்காட்டவேண்டாம்.*

| | |
|---|---|
| m'<br>t'<br>Nous<br>Vous<br>Les | en |

en *ஆல் பிரதியிடும்போது உச்சரிப்பு இனிமைக்காக* moi, toi *இற்குப் பதிலாக* me, te *இடுவோம்.*
(a) Achète-nous du pain. *எங்களுக்கு பாண் வாங்கு.*
Achète-nous-en. *எங்களுக்கு அதை வாங்கு.*
Ne nous en achète pas. *எங்களுக்கு அதை வாங்காதே.*
(b) Donne-moi de l'eau. *எனக்குத் தண்ணீர் தா.*
Donne-m'en. *எனக்கு அதைத்தா.*
Ne m'en donne pas. *எனக்கு அதைத்தரவேண்டாம்.*
*ஆனால் உயிருள்ளபொருள் வருமாயின்...*
(a) Parle-moi de tes frères. *உனது சகோதரர்களைப்பற்றி என்னுடன்பேசு.*
Parle-moi d'eux. *அவர்களைப்பற்றி என்னுடன் பேசு.*
Ne me parle pas d'eux. *அவர்களைப்பற்றி என்னுடன் பேசாதே.*
(b) Occupe-toi de ton fils. *உனது மகனைக்கவனி.*
Occupe-toi de lui. *அவனைக்கவனி.*
Ne t'occupe pas de lui. *அவனைக்கவனியாதே.*

ஒரு வாக்கியத்தில்வரும் இரண்டாவது வினைச்சொல்லின் செயப்படுபொருளைப் பிரதியிடும்சொல்லை அவ்வினைச் சொல்லின் முன்னால் இடவேண்டும்.

(a) Elle veut ouvrir cette fenêtre. அவள் இந்த யன்னலை திறக்க விரும்புகின்றாள்.
Elle veut l'ouvrir. அவள் இதை திறக்க விரும்புகின்றாள்.
Elle ne veut pas l'ouvrir. அவள் இதை திறக்க விரும்பவில்லை.
(b) Vous savez répondre aux questions. உங்களுக்கு கேள்விகளுக்கு பதிலளிக்கத் தெரியும்.
Vous savez-y répondre. உங்களுக்கு இவற்றிற்கு பதிலளிக்கத் தெரியும்.
Vous ne savez pas y répondre. உங்களுக்கு இவற்றிற்கு பதிலளிக்கத் தெரியாது.
(c) Je vais vous téléphoner. நான் உங்களுக்கு டெலிபோன் செய்யப்போகின்றேன்.
(d) Tu dois m'attendre. நீ எனக்காக காத்திருக்க வேண்டும்.
(e) Il vient de me dire. அவன் இப்போது தான் எனக்குச் சொன்னான்.
(f) Personne ne veut me croire. ஒருவரும் என்னை நம்பவிரும்பவில்லை.

ஆனால் faire, laisser உடன் ஒருவினையெச்சம் (infinitif) வருமாயின் மேற்கூறிய இருவினைச்சொல்லிற்கும் முன்னாலே பிரதிச்சொல்லை இடவேண்டும். இவ்வாறே envoyer, regarder, voir, écouter, entendre, sentir போன்ற வினைச்சொற்களுக்கும் பிரதிச்சொல்லை முன்னாலே இடவேண்டும்.

(a) Il laisse partir les enfants. அவன் பிள்ளைகளைப் புறப்படவிடுகின்றான்.
Il les laisse partir. அவன் அவர்களை புறப்படவிடுகின்றான்.
Il ne les laisse pas partir. அவன் அவர்களை புறப்படவிடவில்லை.
(b) Tu fais attendre cet homme. நீ அந்த மனிதனை காத்திருக்கச்செய்கின்றாய்.
Tu le fais attendre. நீ அவரைக் காத்திருக்கச் செய்கின்றாய்.
Tu ne le fais pas attendre. நீ அவரைக் காத்திருக்கச் செய்யவில்லை.
(c) Le professeur nous regarde travailler. ஆசிரியர் நாங்கள் வேலைசெய்வதை பார்க்கின்றார்.

*ஒன்றிற்கு மேற்பட்ட பிரதிச்சொல் வருமாயின்...*

(a) Je peux écrire cette lettre à Ramu. என்னால் இந்தக்கடிதத்தை ராமுக்கு எழுதமுடியும்.
Je peux la lui écrire. என்னால் இதை அவனுக்கு எழுதமுடியும்.
Je ne peux pas la lui écrire. என்னால் இதை அவனுக்கு எழுதமுடியாது.
(b) Il va donner un cadeau à Kamala. அவன் கமலாவிற்கு ஒரு பரிசுப்பொருள் கொடுக்கப்போகின்றான்.
Il va lui en donner un. அவன் அவளிற்கு ஒன்று கொடுக்கப்போகின்றான்.
Il ne va pas lui en donner. அவன் அவளிற்கு அதைக்கொடுக்கப்போவதில்லை.
(c) Elle doit dire la vérité à ses parents. அவள் தனது பெற்றோருக்கு உண்மை சொல்லவேண்டும்.
Elle doit la leur dire. அவள் அவர்களுக்கு அதை சொல்லவேண்டும்.
Elle ne doit pas la leur dire. அவள் அவர்களுக்கு அதை சொல்லக்கூடாது.

# La négation
## எதிர்மறை

### எதிர்மறைவடிவங்கள்

1) **Non** - ஒரு வசனத்தை எதிர்மறையாக்கப் பயன்படும்.
*(இல்லை)*

Tu restes ici? Non, je viens avec toi.
*நீ இங்கு தங்குகின்றாயா? இல்லை, நான் உன்னுடன் வருகின்றேன்.*
Tu viens ce soir? Non.
*நீ இன்றிரவு வருகின்றாயா? இல்லை.*
Vous partez? mais non.
*நீங்கள் புறப்படுகின்றீர்களா? சீ, இல்லை.*

*பிரஞ்சுப்பேச்சுமொழியில் pas இற்குப்பதிலாக Non வைப்பயன்படுத்துவோம்.*

Il comprend l'anglais mais non (=pas) le tamoul.
*அவன் ஆங்கிலம் விளங்கிக்கொள்கின்றான். ஆனால் தமிழ் இல்லை.*

2) உருமாற்றப்பட்ட வினைச்சொல்லின் முன்னால் *Ne* உம் பின்னால் *pas* வும் இடுவதன் மூலம் வசனத்தை எதிர்மறையாக்கலாம்.

Je ne dis pas நான் சொல்வதில்லை.

Il ne va pas அவன் போவதில்லை.

ஆனால் *pas* இற்குப் பதிலாக *plus, jamais, personne, rien, que, guère, point, nulle part, aucun (e)* போன்ற சொற்களும் *Ne* உடன் இடலாம்.

*குறிப்பு* : இச்சொற்கள் Ne விற்குப்பின் வருமாயின் ஒருபோதும் pas இடப்படமாட்டாது.

a) ***Ne ..... plus*** (இனிமேல் இல்லை)

Il ne vient plus. அவன் வருவதில்லை.

(முன்னர் அவன் வந்துகொண்டிருந்தான் தற்பொழுது வருவதில்லை என்று அர்த்தம்பெறும்)

நடந்துகொண்டிருந்த செயல் தற்பொழுது நடக்காவிடின் Ne ... plus பயன்படுத்துவோம்.

b) ***Ne ...... jamais*** (ஒருபொழுதுமில்லை)

Vous ne fumez jamais நீங்கள் ஒருபோதும் புகைப்பதில்லை.

ஒருபோதும் ஒருசெயல் நடக்காதாயின் அதற்கு Ne..... jamais பயன்படுத்துவோம்.

Je n'ai jamais vu நான் ஒருபொழுதும் பார்த்ததில்லை.

c) ***Ne ...... personne*** (ஒருவருமில்லை)

Il n'attend personne அவன் ஒருவருக்காகவும் காத்திருக்கவில்லை.

Elle ne va chez personne அவள் ஒருவரின் வீட்டுக்கும் செல்வதில்லை.

d) ***Ne ....... rien*** (ஒன்றுமில்லை)

Tu ne dis rien நீ ஒன்றும் சொல்வதில்லை.

Ils ne font rien அவர்கள் ஒன்றும் செய்வதில்லை.

e) ***Ne ....... que*** (மட்டும்) = Seulement

Raja n'a que deux enfants. இராஜாவுக்கு இரண்டுபிள்ளைகள் மட்டும் உள்ளனர்.

(Raja a seulement deux enfants)

Il ne parle que tamoul அவன் தமிழ் மட்டும் கதைப்பான்.

(Il parle seulement tamoul)

*குறிப்பு* : Ne .... que இற்குப் பதிலாக seulement இடலாம். ஆனால் வசனம் உடன்பாட்டுவடிவத்தில் வரும்.

f) ***Ne ........ point*** (=pas)

Il ne vient point அவன் வருவதில்லை.

pas இற்குப்பதிலாக point இடலாம்.

குறிப்பு : XVII ம் XVIII ம் நூற்றாண்டில் அதிகம் பாவிக்கப்பட்டது. புதிய இலக்கணமுறையில் Ne .... point உபயோகிக்கப்படுவதில்லை.

g) ***Ne ...... nulle part*** (ஒரு இடமுமில்லை)

Nous n'irons nulle part. நாங்கள் ஒரு இடமும் செல்வதில்லை.

h) ***Ne ....... aucun (e)*** (ஒன்றுமில்லை)

Il n'a aucun livre. அவனிடம் ஒரு புத்தகமும் இல்லை.

Tu n'as attrapé aucune étoile. நீ ஒரு நட்சத்திரத்தையும் பிடிக்கவில்லை.

3) a) ஒரு வசனத்தில் ஒன்றுக்கும்மேற்பட்ட சொற்களை அல்லது வினைச்சொற்களை எதிர்மறையாக மாற்றுவதற்கு *pas, jamais, plus* மீண்டும் மீண்டும் உபயோகிப்பதற்கு பதிலாக *Ni* பயன்படுத்தலாம்.

Tu ne vas jamais au théâtre, tu ne vas jamais au cinéma.

நீ நாடக அரங்கிற்கு ஒருபோதும் செல்வதில்லை, நீ ஒருபோதும் சினிமா அரங்கிற்குச்செல்வதில்லை.

Tu ne vas jamais au théâtre ni au cinéma.

நீ ஒருபோதும் நாடக, சினிமா அரங்குகளுக்கோ செல்வதில்லை.

*உருமாற்றப்பட்டுள்ள வினைச்சொல்லுடன் வரும்பொழுது........*

Il ne boit plus, il ne mange plus.

**அவன் குடிப்பதில்லை, அவன் சாப்பிடுவதில்லை.**

Il ne boit (plus) ni ne mange.
*அவன் குடிப்பதும் சாப்பிடுவதுமில்லை.*

b) ***Ne ...... ni .... ni***
ஒன்றுக்கு மேற்பட்ட செயப்படுபொருள்களை எதிர்மறையாக்க இவ்வடிவம் பயன்படுத்தப்படும்.

1) Il parle l'anglais et l'allemand.
*அவன் ஆங்கிலமும் ஜேர்மனும் பேசுகின்றான்.*
Il ne parle ni l'anglais ni l'allemand.
*அவன் ஆங்கிலமும் பேசமாட்டான், ஜேர்மனும் பேசமாட்டான்.*
2) Je prends votre livre et mon livre.
நான் உங்களுடைய புத்தகத்தையும் என்னுடைய புத்தகத்தையும் எடுக்கின்றேன்.
Je ne prends ni votre livre ni mon livre.
நான் உங்களுடைய புத்தகத்தையும் எடுக்கவில்லை என்னுடைய புத்தகத்தையும் எடுக்கவில்லை.

பெயர்ச்சொல்லுடன் *Article défini, Adjectif possessif, Adjectif démonstratif* வரும்போது எதிர்மறையில் அப்படியே எழுதுவோம்.

குறிப்பு : *Article indéfini* அல்லது *Article partitif* உடன் வரும்போது பெயர்ச்சுட்டு இடக்கூடாது.
Il porte un chapeau et une cravate.
*அவன் ஒருதொப்பியையும் ஒரு கழுத்துப்பட்டியையும் அணிந்திருக்கின்றான்.*
Il ne porte ni chapeau ni cravate.
அவன் தொப்பியும் அணிந்திருக்கவில்லை, கழுத்துப்பட்டியும் அணிந்திருக்கவில்லை.
(அவன் தொப்பியோ, கழுத்துப்பட்டியோ அணிந்திருக்கவில்லை)

Elle boit du café et du thé
*அவள் கோப்பியும் தேநீரும் குடிக்கின்றாள்.*
Elle ne boit ni café ni thé.
அவள் கோப்பியும் குடிப்பதில்லை தேநீரும் குடிப்பதில்லை.
(அவள் கோப்பியோ, தேநீரோ குடிப்பதில்லை)

Tu lis des romans et des livres d'histoire.
*நீ நாவல்களும் சரித்திர புத்தகங்களும் வாசிக்கின்றாய்.*
Tu ne lis ni romans ni livres d'histoire.
நீ நாவல்களும் வாசிப்பதில்லை சரித்திரப் புத்தகங்களும் வாசிப்பதில்லை.
(நீ நாவல்களோ, சரித்திரப்புத்தகங்களோ வாசிப்பதில்லை)

c) இரண்டு எழுவாய்கள் வரும்போது....
1) Raja et Siva sont venus.
*இராஜாவும் சிவாவும் வந்தார்கள்.*
Ni Raja ni Siva ne sont venus.
இராஜாவும் வரவில்லை, சிவாவும் வரவில்லை. (சிவாவோ, ராஜாவோ வரவில்லை)

2) Mon père et mon frère vont à l'école.
*எனது அப்பாவும் எனது சகோதரனும் பாடசாலை செல்கின்றார்கள்.*
Ni mon père ni mon frère ne vont à l'école.
எனது அப்பாவும் பாடசாலை செல்வதில்லை, எனது சகோதரனும் பாடசாலை செல்வதில்லை.
3) Ni toi ni moi n'irons au cinéma.
*நீயும் சினிமா செல்லமாட்டாய், நானும் சினிமா செல்லமாட்டேன்.*
(நீயோ, நானோ சினிமாசெல்லமாட்டோம்)

குறிப்பு : விடையளிக்கும் போது *Ne* இல்லாமல் எதிர்மறையாக்கலாம்.
Irez - vous au marché? Non, pas aujourd'hui.
*சந்தைக்குச் செல்வீர்களா? இல்லை, இன்றில்லை.*
A qui penses - tu? A personne.
*யாரை நினைக்கின்றாய்? ஒருவரையும் இல்லை.*
Où vas-tu? Nulle part.
*நீ எங்கே போகின்றாய்? ஓரிடமும் இல்லை.*

Combien de livres as - tu? Aucun.
எத்தனை புத்தகங்கள் வைத்திருக்கின்றாய்? ஒன்றுமில்லை.
Tu bois de l'alcool? Jamais.
நீ மதுபானம் அருந்துவாயா? ஒருபோதும் இல்லை.

4) உருமாற்றப்படாத வினைச்சொல்லுடன் எதிர்மறைவரும்போதும் எப்பொழுதும் வினைச்சொல்லுக்கு முன்னாலேயே இடவேண்டும்.
J'aime ne pas déranger.
தொந்தரவு செய்யாமல் இருப்பதை நான் விரும்புகின்றேன்.
Pour ne pas oublier, notez.
மறக்காமல் இருப்பதற்காகக் குறியுங்கள்.
Il veut ne rien dire.
அவன் ஒன்றும் சொல்லாமலிருக்க விரும்புகின்றான்.
Ne pas fumer ici.
இங்கு புகைப்பிடிக்க வேண்டாம்.
Ne pas aller loin.
தூரம் செல்லவேண்டாம்.

5) *pas* உடன் *encore, souvent, toujours* போன்ற வினையுரிச்சொற்கள் இடலாம்.
1) Je prends toujours le train.
நான் எப்பொழுதும் புகையிரதம் எடுப்பேன்..
Je ne prends pas toujours le train.
நான் எப்பொழுதும் புகையிரதம் எடுப்பதில்லை.
2) Tu parles souvent de ton pays.
நீ அடிக்கடி உனது நாட்டைப்பற்றிப் பேசுவாய்.
Tu ne parles pas souvent de ton pays.
நீ அடிக்கடி உனது நாட்டைப்பற்றி பேசுவதில்லை.

6) *Personne, rien, aucun* எழுவாயாக வரும்போது எதிர்மறையைக்குறிக்கும்.
1) Personne ne......
Personne n'a téléphoné.
ஒருவரும் தொலைபேசி செய்யவில்லை.
Personne n'est venue ce matin.
இன்றுகாலை ஒருவரும் வரவில்லை.
2) Rien ne .......
Rien n'est vrai.
ஒன்றும் உண்மையில்லை.
3) Aucun (e) ne.......
Aucun élève n'a répondu.
ஒரு மாணவனும் பதில் சொல்லவில்லை.
Aucun (e) n'est mort (e).
ஒருவரும் இறக்கவில்லை.

7) *Pas du tout, plus du tout, rien du tout......*
பூரணமாக, முற்றாகவில்லை என்பதைக்குறிக்கும்.
1) Il a très froid. அவனுக்கு மிககுளிர்.
Il n'a pas du tout froid. அவனுக்கு குளிரேயில்லை.
2) Elle a beaucoup d'amis. அவளுக்கு நிறையநண்பர்கள் உண்டு.
Elle n'a plus du tout d'amis. அவளுக்கு நண்பர்களே இல்லை.

8) *Sans* (இல்லாமல்)
இம் முன்னிடைச்சொல் தனியாக எதிர்மறையாக்கும்.
Il est parti sans rien dire.
அவன் ஒன்றும் சொல்லாமல் புறப்பட்டான்.
Je bois sans sucre.
நான் சீனியில்லாமல் குடிக்கின்றேன்.

9) a) *சில வினைச்சொற்களுடன் எதிர்மறைவரும் போது pas இடுவதில்லை, Ne மட்டுமே இடுவோம்.*
*வினைச்சொற்கள் Oser, Cesser, pouvoir, savoir.*
Je n'ose vous répondre.
எனக்கு உங்களுக்குப் பதிலளிக்கத் துணிவில்லை.
Je ne sais si vous comprenez.
உங்களுக்கு விளங்குகிறதாவென்று எனக்குத்தெரியவில்லை.

b) *Subjonctif* சில ஐயவினைச்சொற்களுக்கு முன் ஓசைக்காக *Ne* இடுவோம். இதில் எதிர்மறையைக் குறிப்பதில்லை. (ஐயவினைச்சொல்லில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது)
Verbes exprimant la crainte (பயத்தைகுறிக்கும் வினைச்சொற்களிலும் உடன்பாட்டு, வினாவாக்கியங்களில் மட்டும்)
Je crains qu'il ne vienne.
அவன் வருவானென்று எனக்கு பயமாக இருக்கின்றது.
Il a peur qu'il ne soit trop tard.
தான் மிகத்தாமதமாகிவிடுவேன் என்று அவனுக்கு பயமாகவிருக்கிறது.

10) *Non plus* எதிர்மறையில் பதில்கூறுவதற்கு இது பயன்படுத்தப்படும்.
Raja n'a pas d'argent ni moi non plus.
இராஜாவிடம் பணம் இல்லை. என்னிடமும் இல்லை.

# Les Comparaisons
## ஒப்பீடுகள்

**பெயர் உரிச்சொல் அல்லது வினையுரிச்சொல் மூலம் பொதுவாக ஒப்பீடு செய்யலாம்.**

A) *பெயர் உரிச்சொல்லுடன்* - *Comparatif de superiorité*

1) Plus adjectif que *(மிக, கூடுதலான, அதிக)*
- Il est plus gentil que sa soeur.
  அவன் தனது சகோதரியைவிட மிக அன்பானவன்.
- La matinée est plus fraîche que la soirée.
  காலை மாலையைவிட மிக குளிர்ச்சியானது.
- Le Srilanka est plus petit que l'Inde.
  இலங்கை இந்தியாவை விட மிகச்சிறியது.

2) *(ஒரேயளவு, ஒரே, ஒத்த)* - *Comparatif d'égalité*
- Il est aussi riche que vous.
  அவன் உங்களை ஒத்த பணக்காரன்.
- Rani est aussi belle que Kamala.
  ராணி கமலாவை ஒத்த அழகுடையவள்.

3) *(குறைய, குறைவான)* - *Comparatif d'infériorité*
- Raja est moins fort que Siva.
  ராஜா சிவாவைவிட பலம் குறைந்தவன்.
- Elle est moins jalouse que sa mère.
  அவள் தனது தாயைவிட பொறாமை குறைந்தவள்.

B)

1) Plus adverbe que *(மிக, அதிக)*
- Vous parlez plus vite que votre frère.
  நீங்கள் உங்கள் சகோதரனைவிட மிகவேகமாகப் பேசுகின்றீர்கள்.

2) *Aussi adverbe que*
- Tu parles aussi bien que lui.
  நீ அவனை மாதிரி நன்றாகப் பேசுகின்றாய்.

3) *Moins ........ que*
- Il conduit moins vite que toi.
  அவன் உன்னைவிட வேகம்குறைவாக வாகனம் செலுத்துகின்றான்.

C) ஒப்பீட்டுச்சொற்கள் ஒரு பெயர்ச்சொல்லுடன் வரும்போது.

| | | |
|---|---|---|
| Plus de | | மிக |
| Autant de | | அதேயளவான, ஒத்த |
| Moins de | *nom + que* | குறைய |
| Un peu plus de | | கொஞ்சம் கூட |
| Beaucoup moins de | | மிகக்குறைய |

இவற்றுடன் பெயர்ச்சொல் எழுதும்போது ஒருபோதும் பெயர்ச்சுட்டு இடக்கூடாது, அவ்வாறே

| | |
|---|---|
| Beaucoup de | நிறைய |
| Assez de | போதிய |
| Peu de | குறைவான |

போன்ற சொற்களுடன் பெயர்ச்சொல் எழுதும்போது பெயர்ச்சுட்டு இடக்கூடாது.

உ+ம் : Beaucoup de voitures நிறையக் கார்கள்
Assez de livres போதிய புத்தகங்கள்

1) *Plus de ....... que*
- Il a plus d'assurance que moi.
  அவன் என்னைவிட அதிக பாதுகாப்பாய் (நிச்சயமாய்) இருக்கின்றான்.

2) *Autant de .........que*
- Tu écris autant de romans que lui.
  நீ அவன் எழுதிய நாவல்கள் அளவு எழுதுகின்றாய்.

3) *Moins de ........ que*
- Vous avez pris moins de riz que nous.
  எங்களைவிட நீங்கள் கொஞ்சச்சோறு தான் எடுத்தீர்கள்.

4) *Un peu plus de ........ que*
- Elle a un peu plus de courage que toi.
  அவள் உன்னைவிட கொஞ்சம் அதிகம் உற்சாகமானவள்.

5) *Beaucoup moins de ......... que*
- Cette année, il y a beaucoup moins de touristes que l'année dernière.
  சென்றவருடத்தைவிட இவ்வருடம் மிகக்குறைவான உல்லாசப்பயணிகள்.

D) *Meilleur que* சிறந்த, நல்ல
- Ton idée est meilleure que la mienne.
  உன்னுடையகருத்து என்னுடையதைவிட சிறந்தது.
- Laurent est en meilleure santé que son médecin.
  லோறன் அவனது வைத்தியரைவிட நல்லஆரோக்கியமாக இருக்கின்றான்.

E) *Mieux que*
ஏதாவது ஒன்றை, ஒருவரைவிட இன்னொன்று, இன்னொருவர் பரவாயில்லை, சிறந்தது நன்றாக என்பதற்கு இது பயன்படும்.
- Il parle mieux que toi.
  அவன் உன்னைவிட நன்றாகப் பேசுகின்றான்.
- Tu fais la cuisine mieux que ta femme.
  உனது மனைவியைவிட நீ நன்றாகச்சமையல் செய்கின்றாய்.

F) ***Plus** அல்லது **moins**ஐ தொடர்ந்து பயன்படுத்தும்போது*

- Plus je mange, plus je grossis.
  நான்நிறையச் சாப்பிட்டால், நான் மிக மொத்தமாவேன்.
- Moins tu travailles, moins tu gagnes.
  நீ கொஞ்ச வேலைசெய்வாயாயின், நீ கொஞ்சமாகவே சம்பாதிப்பாய்.

G) *Le même*
*La même* } *+ nom + que*

- Les mêmes
  அதே, ஒத்த என்பதைக்குறிப்பதற்கு même பயன்படுத்தப்படும்.
- Tu as le même âge que ton ami.
  உனது நண்பனுடைய வயதுதான் உனக்கும் உண்டு.
- Il met toujours le même parfum que son frère.
  தனது சகோதரன் இடும் வாசனைப்பொருளையே அவனும் எப்போதும் இடுகின்றான்.
- Vous avez donné la même réponse que Raja.
  நீங்கள் ராஜா அளித்த அதே பதிலையே அளித்தீர்கள்.

H) *Comme..*
போல என்பதைக்குறிக்கும்.

Il est malin comme un renard. ஒரு நரியைப்போல் அவன் தந்திரமானவன்.
Comme ça இதுபோல

### *Le Superlatif*

I) Le
La plus, moins + adjectif
Les
மிக, அதி என்ற அர்த்தத்தைப்பெறும்.

La loire est le plus long fleuve de France.
பிரான்சின் அதிநீளமான நதி லுவார் ஆகும்.

C'est la moins belle maison. இதுவே மிக அழகுகுறைந்த வீடு.
Le plus bas prix மிகக்குறைந்த விலை
La plus haute montagne மிகஉயரமான மலை

# Le discours Direct et Le discours Indirect
## தன்கூற்றும் பிறர்கூற்றும்

### *Le Discours Direct*

ஒருவரின் கூற்றை அப்படியே கூறுதல் தன்கூற்றாகும். எழுத்தில்கூறும்போது ஒருவரின் கூற்றை எப்போதும் அடைப்புக்குறிக்குள் (les guillemets) இடவேண்டும்.
பிரஞ்சுமொழியில் அடைப்புக்குறி << >> இவ்வாறு இடப்படும்.
Il dit << je vais à Colombo >> அவன் சொல்கின்றான் "நான் இலங்கைக்குப் போகின்றேன்".

### *Le Discours Indirect*

ஒருவரின் கூற்றை நாம் இன்னொருவருக்குக் கூற, பிறர்கூற்று வடிவத்தைப் பயன்படுத்துகின்றோம். தன்கூற்றிலுள்ள வசனத்தைப் பிறர்கூற்றிற்கு மாற்றும்போது சிலமாற்றங்கள் செய்யவேண்டும்.

1) பிறர்கூற்று வசனத்தில் அடைப்புக்குறியை நீக்கவேண்டும்.
2) பிறர்கூற்றில் சொற்களின் இடம்மாறும்.

உ+ம்: << Comment vas-tu? >> demande-t-elle. "நீ எப்படி இருக்கின்றாய்?" அவள் கேட்கின்றாள்.

*பிறர்கூற்றில்...*
**Elle demande comment je vais.**
*நான் எப்படி இருக்கின்றேன் என அவள் கேட்கின்றாள்.*

3) *பிரதிப்பெயர்ச்சொற்கள் மாறலாம்.*
Il dit<< je vais travailler >>.
Il dit qu'il va travailler.
*தான் வேலை செய்யப்போகின்றான் என அவன் கூறுகின்றான்.*

4) *சிலசொற்களும் மாறும்.*
Hier - la veille
நேற்று அன்றுமுதல் நாள்

**தொகுப்பு**

ஒருவரின் கூற்றை பிறர்கூற்றாக மாற்ற ஒரு வினைச்சொல் பயன்படும். அவ்வாறு பயன்படும் சில வினைச்சொற்கள்..

| | | | |
|---|---|---|---|
| Dire | - சொல்லுதல் | Ordonner | - கட்டளையிடுதல் |
| Répondre | - பதிலளித்தல் | Écrire | - எழுதுதல் |
| Demander | - கேட்டல் | Annoncer | - அறிவித்தல் |
| Conseiller | - அறிவுரை கூறல் | Répéter | - திருப்பிக்கூறல் |

ஒருவரின் கூற்று ஏவல்வினைவடிவத்தில் இருப்பின் பின்வருமாறு பிறர்கூற்றிற்கு மாற்றலாம்.
உ+ம் : Il dit << venez demain >>
Il dit de venir demain.

கூற்று ஏவல்வினைவடிவத்தில் இருப்பின் பிறர்கூற்றிற்கு மாற்றும்போது de உம் அவ்வினைச்சொல்லின் infinitif வடிவமும் இடவேண்டும்.
Il demande << mangez vite >>
Il demande de manger vite.
*அவன் விரைவாகச் சாப்பிடச்சொல்லுகின்றான்.*
Elle m'a dit << attendez une minute >>.
Elle m'a dit d'attendre une minute.
*அவள் என்னை ஒருநிமிடம் காத்திருக்கச்சொன்னாள்.*

உடன்பாட்டு அல்லது எதிர்மறை வசனங்களை பிறர்கூற்றில் மாற்றும்போதுque என்ற சொல்லைப் பயன்படுத்துவோம்.
Le docteur dit << vous devez prendre ce médicament deux fois par jour >>
Le docteur dit que nous devons prendre ce médicament deux fois par jour.
*ஆனால் வினாவாக்கியங்களைப் பிறர்கூற்றுக்கு மாற்றும்போது...*

1) Est-ce que அல்லது பயனிலையால் வினாவாக்கப்பட்டிருந்தால் கூற்றையும் முக்கிய வினைச்சொல்லையும் இணைக்க si பயன்படுத்தவேண்டும்.
   a) Il me demande << Est-ce que tu es fatigué? >>
   Il me demande si je suis fatigué.
   *நான் களைப்பாக இருக்கின்றேனாவென்று அவன் என்னிடம் கேட்கின்றான்.*
   b) Elle nous demande << Voulez-vous du thé? >>
   Elle nous demande si nous voulons du thé.
   *எங்களுக்கு தேநீர் வேண்டுமா என்று அவள் எங்களிடம் கேட்கின்றாள்.*

2) Qu'est-ce que அல்லது que வினாவாக்கப் பயன்படுத்தப்பட்டிருப்பின் பிறர்கூற்றில் இவற்றிற்குப் பதிலாக ce que இடவேண்டும்.
   a) Il me demande << Qu'est-ce que tu achètes? >>
   Il me demande ce que j'achète.
   *நான் என்ன வாங்குகின்றேன் என்று அவன் கேட்கின்றான்.*
   *இங்கு Qu'est-ce qui வருமாயின் ce qui எனமாறும்.*
   Raja demande << Qu'est-ce qui se passe? >>

Raja demande ce qui se passe.
என்ன நடக்கின்றது என்று ராஜா கேட்கின்றான்

b) மற்றைய வினாச்சொற்கள் நேர்கூற்றில் இருப்பின் பிறர்கூற்றில் அப்படியே இடுவோம்.
Kamala demande << Pourquoi pars-tu? >>
Kamala demande pourquoi je pars.
நான் ஏன் போகின்றேன் என கமலா கேட்கின்றாள்.
Raja demande << Combien de livres as-tu lu? >>
Raja demande combien de livres j'ai lu.
நான் எத்தனை புத்தகங்கள் வாசித்துவிட்டேன் என்று ராஜா கேட்கின்றான்.

Que, Qu'est-ce que, Qu'est-ce qui, Est-ce que என்பவற்றைத்தவிர வேறு வினாச்சொற்கள் பயன்படுத்தப் பட்டிருப்பின் பிறர்கூற்றிலும் அச்சொல்லையே இடவேண்டும்.

*பிரதிப்பெயர்கள் உடமைப்பெயருரிச்சொல்லின் மாற்றங்கள்...*

Je dis << Je n'aime pas ce film >>
<< Tu viens chez moi >>
<< Ravi a une fille >>

| | |
|---|---|
| Je dis que je n'aime pas ce film. | எனக்கு இந்தப்படம் விருப்பமில்லைஎன நான் சொல்கின்றேன். |
| tu viens chez moi. | நீ எனது வீட்டிற்கு வருவாய் என நான் சொல்லுகின்றேன். |
| Ravi a une fille. | ரவிக்கு ஒரு மகள் என நான் சொல்கின்றேன். |

முக்கியவசனத்தில் நான், நாங்கள் (தன்மை) இருப்பின் தன்கூற்றை பிறர்கூற்று ஆக்கும்போது ஒரு மாற்றமுமில்லை.

Tu dis << Je n'aime pas ce film >>.
<< Tu viens chez moi >>
<< Ravi a une fille >>

*பிறர்கூற்று...*

| | |
|---|---|
| Tu dis que tu n'aimes pas ce film. | உனக்கு இந்தப்படம் விருப்பமில்லை என்று நீ சொல்கின்றாய். |
| je viens chez toi. | நான் உனது வீட்டிற்கு வருகின்றேன் என நீ சொல்கின்றாய். |
| Ravi a une fille. | ரவிக்க ஒரு மகள் என நீ சொல்கின்றாய். |

| **முக்கியவசனம்** | **பிறர்கூற்று** |
|---|---|
| *எழுவாய் தன்மையிலிருப்பின்* | *ஒரு மாற்றமுமில்லை* |
| *எழுவாய் முன்னிலையிலிருப்பின்* | *தன்மை முன்னிலைக்கு மாறும்.* |
| | *படர்க்கையில் மாற்றமில்லை.* |
| | *முன்னிலை தன்மைக்கு மாறும்.* |
| *எழுவாய் படர்க்கையிலிருப்பின்* | *தன்மை படர்க்கைக்கு மாறும்.* |
| | *முன்னிலை, படர்க்கையில் மாற்றமில்லை.* |

இவ்வாறே உடமைப்பெயருரிச்சொல்லும் மாறும்.

1) Il dit << Mes parents habitent à Jaffna >>
Il dit que ses parents habitent à Jaffna.
தனது பெற்றோர் யாழ்ப்பாணத்தில் வசிப்பதாக அவன் கூறுகின்றான்.
2) Il dit << Tu es mon professeur >>.
Il dit que je suis son professeur.
நான் தனது ஆசிரியர் என்று அவன் கூறுகின்றான்.

*குறிப்பு:* ஒருவரின் கூற்றை இறந்தகாலத்தில் பிறர்கூற்றில் கூறும்போது பின்வருமாறு காலங்களை மாற்றவேண்டும்.
Présent இருப்பின் Imparfait க்கு மாற்றவேண்டும்.
Passé composé - plus-que-parfait
Futur - Conditionnel présent

முக்கியவினைச்சொல்லை இறந்தகாலத்திற்கு மாற்றும்போதுதான் மேற்கூறியவாறுகாலங்களை மாற்றவேண்டும்.
Il dit << Je bois du thé >>

*முக்கியவினைச்சொல் இறந்தகாலத்தில் பிறர்கூற்றுக்கு மாற்றும்போது...*

Il a dit qu'il buvait du thé. அவன் தேநீர் அருந்துவதாக கூறினான்.

Il me demande << As-tu faim? >>

Il m'a demandé si j'avais faim. எனக்குப் பசித்ததா என அவன் கேட்டான்.

*இவ்வாறு இறந்தகாலத்தில் மாற்றும்போது சிலசொற்களும் மாறும்...*

| | | |
|---|---|---|
| Hier | - | La veille |
| நேற்று | | முதல்நாள்(குறிப்பிட்டதிகதிக்கு) |
| Avant-hier | - | L'avant-veille |
| நேற்றுமுன்தினம் | | இருநாள் முன்னர் |
| Demain | - | Le lendemain |
| நாளை | | அடுத்தநாள் |
| Après-demain | - | Le surlendemain |
| நாளைமறுதினம் | | இருநாள் பின்னர் |
| Aujourd'hui | - | Ce jour-là |
| இன்று | | அன்று |
| Ceci | - | Cela |
| இது | | அது |
| Ici | - | Là |
| இங்கே | | அங்கே |
| Jusqu'ici | - | Jusque là |
| இதுவரை | | அதுவரை |
| Prochain | - | Suivant |
| அடுத்த | | வருகின்ற, அடுத்த |
| Dernier | - | Précédent |
| கடைசி | | சென்ற, கடந்த |
| Il y a quatre jours | - | Quatre jours avant |
| நான்கு நாட்களுக்கு முன்னர் | | |

Il a dit << Je partirai demain >>

Il a dit qu'il partirait le lendemain.

அடுத்தநாள் தான் புறப்படுவதாக அவன் கூறினான்.

Elle a dit << Je suis arrivée chez moi hier >>.

Elle a dit qu'elle était arrivée chez elle la veille.

முதல்நாள் தனது வீட்டை வந்தடைந்தாக அவள் கூறினாள்.

# La voix active et La voix passive
## செய்வினையும், செயப்பாட்டு வினையும்

ஒரு செயலை எழுவாய் புரிந்தால் அதை செய்வினையிலும், ஒருசெயல் எழுவாய்க்கு நிகழ்ந்தால் அதை செயப்பாட்டு வினையிலும் கூறப்படும்.

Raja déchire une lettre ராஜா ஒரு கடிதத்தைக் கிழிக்கின்றான்.

இவ்வசனத்தில் ராஜா ஒரு செயலைச் செய்கிறான். ஆகவே இவ் வசனம் செய் வினையில் உள்ளது.

Une lettre est déchirée par Raja ஒரு கடிதம் ராஜாவால் கிழிக்கப்படுகிறது

இவ்வசனத்தில் எழுவாய் ஒரு கடிதம். கடிதத்திற்கு நடக்கும் செயல் கிழிக்கப்படுதல். ஆகவே இவ் வசனம் செயப்பாட்டு வினையில் உள்ளது.

**செய் வினையிலிருந்து செயப்பாட்டு வினைக்கு மாற்றும் விதம்.**

***செய்வினை** :-*

**Rani** tire la **porte** ராணி கதவை இழுக்கிறாள்

*செயப்பாட்டு **வினை** :-*



**La porte** est tirée par **Rani** ராணியால் கதவு இழுக்கப்படுகிறது

செய்வினை வசனத்திலுள்ள செயப்படு பொருள் செயப்பாட்டு வினை வசனத்தில் எழுவாயாக வரும். பின் செய்வினை வாக்கியத்தின் காலத்தில் வினைச்சொல் être ஐ உருமாற்ற வேண்டும். தொடர்ந்து செய்வினையின் முக்கிய வினைச்சொல்லின் Participe Passé இடவேண்டும். பின் Par (மூலம்) உடன் செய்வினை வாக்கியத்தின் எழுவாய் இடலாம்.

ஆகவே செயப்படுபொருள் உள்ள செய்வினை வாக்கியங்களை மட்டுமே செயப்பாட்டுவினைக்கு மாற்றலாம். அதாவது செய்வினை வாக்கியத்தின் வினைச் சொற்கள் Transitif direct (செயப்படுபொருள் குன்றா வினைச்சொல்) ஆக இருக்க வேண்டும்.

**செயப்பாட்டுவினைவடிவம்**

வினைச்சொல் ETRE இன் விரும்பிய வடிவம் + முக்கிய வினைச்சொல்லின் participe passé

முக்கிய குறிப்பு:
இறந்தகாலத்தில் ETRE உடன் உருமாறும் வினைச்சொற்களுள்ள வசனங்களை செயப்பாட்டுவினைக்கு மாற்ற முடியாது. குறிப்பாக பத்திரிகைகளிலும், செய்தித் தொடர்பு சாதனங்களிலும் பொதுவாக செயப்பாட்டு வினை வடிவம் பயன்படுத்தப்படும்.

| | ***Forme active*** | | ***Forme passive*** | |
|---|---|---|---|---|
| *indicatif* | | | | |
| présent | j'aime | நான் விரும்புகின்றேன் | je suis aimé | நான் விரும்பப்படுகின்றேன் |
| imparfait | j'aimais | நான் விரும்பிக்கொண்டிருந்தேன் | j'étais aimé | நான் விரும்பப்பட்டுக்கொண்டிருந்தேன் |
| futur | j'aimerai | நான் விரும்புவேன் | je serai aimé | நான் விரும்பப்படுவேன் |
| passé composé | j'ai aimé | நான் விரும்பினேன் | j'ai été aimé | நான் விரும்பப்பட்டேன் |

Bharathiraja réalise un nouveau film. — பாரதிராஜா ஒரு புதிய படம் இயக்குகின்றார்.
Un nouveau film est réalisé par Bharathiraja — ஒரு புதியபடம் பாரதிராஜாவினால் உருவாக்கப்படுகிறது.

Le gouvernement baisse le prix du pain. — அரசாங்கம் பாணின் விலையைக் குறைக்கிறது.
le prix du pain est baissé par le gouvernement. — பாணின் விலை அரசாங்கத்தால் குறைக்கப்படுகிறது.

செயப்பாட்டுவினையில் எழுவாயின் பால் எண்ணுக்கேற்ப participe passé இல் மாற்றங்கள் செய்ய வேண்டும்.
Tu fermes la porte. — நீ கதவைப் பூட்டுகிறாய்
La porte est fermé<u>e</u> par toi. — கதவு உன்னால் பூட்டப்படுகிறது.
மேற்கூறிய வசனத்தில் la porte ஒருமை பெண்பாலாதலால் fermé இற்கு e அதிகமாகச் சேர்க்க வேண்டும்
Maman fait ces gâteaux. — அம்மா இந்த கேக்குகளைச் செய்கிறார்.
Ces gâteaux sont fait<u>s</u> par Maman. — இந்த கேக்குகள் அம்மாவினால் செய்யப்படுகின்றன.

**இறந்த காலத்தில்**
Marconi a inventé la radio; — மார்க்கோணி வானொலியைக் கண்டுபிடித்தார்.
La radio a été inventée par Marconi. — வானொலி மார்க்கோணியால் கண்டு பிடிக்கப்பட்டது.
செய்வினை இறந்த காலத்தில் இருப்பதனால் செயப்பாட்டுவினை வசனத்தில் ETRE ஐ இறந்தகாலத்தில் இடவேண்டும்.
Elle a bâti une maison. — அவள் ஒரு வீடு கட்டினாள்.
Une maison a été bâtie par elle. — ஒரு வீடு அவளால் கட்டப்பட்டது.

**எதிர் காலத்தில்**
Elle bâtira une maison. — அவள் ஒரு வீடு கட்டுவாள்.
Une maison sera bâtie par elle. — அவளால் ஒரு வீடு கட்டப்படும்.

செயப்பாட்டுவினையில் மூலம் இல்லாதபோது செய்வினையாக மாற்ற ON ஐ எழுவாயாகப் பயன்படுத்தலாம்.
Ce bâtiment a été construit en 1982 — இந்தக் கட்டிடம் *1982* இல் கட்டப்பட்டது.
*செய்வினையில்...*
On a construit ce bâtiment en 1982. — இந்தக் கட்டிடம் *1982* இல் கட்டப்பட்டது.
மூலம் தெரிவிக்காமல் செயப்பாட்டுவினையிலோ அல்லது ON பாவித்து செய்வினையிலோ கூறலாம்.

**உதவி வினைச்சொல்லுடன் இருக்கும் வினைச்சொல்லை செயப்பாட்டுவினைக்கு மாற்றும் முறை**

Tu va réparer cette voiture. — நீ இந்தக் காரைத் திருத்தப் போகிறாய்.
Cette voiture va être réparée par toi. — இந்தக் கார் உன்னால் திருத்தப்படப் போகிறது.

Le gouvernement vient de signer l'accord. — அரசாங்கம் இப்போதுதான் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது.
L'accord vient d'être signé par le gouvernement.
ஒப்பந்தம் இப்பொழுது தான் அரசாங்கத்தால் கைச்சாத்திடப்பட்டது.

La paix peut être regagnée au Srilanka — இலங்கையில் மீண்டும் சமாதானம் நிலவலாம்.

# EXPRESSIONS
**வெளிப்பாடுகள்**

## Les expressions concernant l'habillement
**உடுப்பணிதல் சார்ந்த வெளிப்பாடுகள்**

| | | |
|---|---|---|
| S'habiller | - | உடையணிதல் |
| Se vêtir | - | உடையணிதல் |
| Tu es chic aujourd'hui! | - | நீ இன்று அலங்காரமாய் இருக்கின்றாய் |
| Tu es élégant | - | நீ ஆடம்பரமாய் இருக்கின்றாய் (உடுத்தி) |
| Vous êtes endimanché | - | நீங்கள் ஒருதரமும் அணியாத ஆடையை அணிந்திருக்கின்றீர்கள் (கேலியாக நண்பர்கள் மத்தியில் உபயோகித்தல) |
| Vous vous habillez de noir | - | நீங்கள் கறுப்பில் அணிந்திருக்கின்றீர்கள் |
| Se mettre sur son trente et un | - | ஒருவர் தன்னிடமுள்ள மிகச்சிறந்த உடுப்பை அணிதல் |
| Prendre l'habit | - | சன்னியாசியாதல் |
| Habits de deuils | - | துக்க உடுப்பு (மரணச்சடங்கிற்குச் செல்லும்போது கறுப்பு உடை அணிவது வழமை) |
| Habit de travail | - | வேலையுடுப்பு |
| Habit du dimanche | - | ஞாயிற்றுக்கிழமை உடை |
| Habit de prêtre | - | பாதிரியாரின் உடை |
| S'habiller à l'indienne | - | இந்தியஉடை அணிதல் |
| S'habiller à la parisienne | - | பாரீஸ் மக்களைப்போல் உடுத்தல் |
| S'habiller légèrement | - | மெல்லிய உடுப்பு அணிதல் |
| S'habiller chaudement | - | தடித்த உடுப்பு (குளிர்காலத்தில் அணிதல்) |
| (Se) déshabiller | - | ஆடைகளைக்களைதல் |
| (Se) dévêtir | - | ஆடைகளைக்களைதல் |
| Mettre un vêtement | - | ஒரு ஆடைஅணிதல் |
| Porter un vêtement | - | ஒரு ஆடையை அணிந்திருத்தல் |

*Note*: Un torse nu - வெறும்மேல்
Tout(e) nu(e) - நிர்வாணமாக

### *Expressions*
**வெளிப்பாடுகள்**

1) *கண், காது, மூக்கு, வாய், தலை, இதயம் என்பனவற்றுடன் வரும் சொற்தொடர்களின் நேரடியான அர்த்தங்களும், வர்ணிப்புக்களும் காணப்படுகின்றன.*
2) *சில தொடர்கள் பேச்சுவழக்கில் மட்டுமே உபயோகிக்கப்படுகின்றது இன்னும் பலவெளிப்பாடுகள் (Argot) கூடாத வார்த்தைகள் அல்லது கோபமூட்டக்கூடிய சொற்களும் உள்ளன. அடைப்புக்குறிக்குள்ளேயுள்ள விளக்கத்தை தருணத்திற்கேற்ப பயன்படுத்தவும்.*

3) *வினைச்சொற்கள் முடிவிலி அமைப்பிலே தரப்பட்டுள்ளது. எழுவாய்களுக்கு ஏற்ப வினைச்சொற்களை மாற்றி அமைத்துக் கொள்ளவும்.*

4) *எழுவாய் பெண்பாற் சொல்லில் அமையும் போது பெயருரிச்சொல்லின்* (Adjectif) முடிவுகளை மாற்றி அமைக்க வேண்டும்.

## *Expressions à partir des yeux*

**கண்பற்றிய வெளிப்பாடு**

- Faire les gros yeux à quelqu'un
  ஒருவரை கோபத்துடன் நோக்குதல்
- Ouvrir de grands yeux
  பிரமித்தல்
- Entre quatre yeux
  இருவர்மட்டும் சம்பந்தப்பட்ட
- Avoir bon pied bon oeil
  நல்ல உடல்நலமாயிருத்தல்
- Fermer les yeux
  கண்ணைமூடுதல், காணாததுபோலிருத்தல்
- Dévorer des yeux
  ஆவலாய் ஒன்றைப்பார்த்தல்
- Yeux bridés
  இருகரையும் இழுபட்டகண் (சீனமக்களுக்கு இருப்பதுபோன்று - வர்ணிப்புக்குமட்டும் வெளிப்பாடல்ல)
- Faire un oeil doux
  மெதுவாய்ப்பார்த்தல் (தன்மையாய்ப்பார்த்தல்)
- Jeter les yeux sur quelque chose
  நோக்குதல், கண்ணோக்குதல்
- Fixer les yeux
  உற்றுப்பார்த்தல்
- Sous les yeux
  கண்ணுக்குமுன்னால் காணுதல்
- Etre tout yeux
  எல்லாவற்றையும் பார்த்தல்
- Avoir l'oeil sur quelque chose/quelqu'un
  ஒருவரை, ஒருபொருளைக் கண்காணித்தல்
- Voir d'un bon oeil
  அன்புடன் நோக்குதல்
- Clin d'oeil
  கண்ணடிப்பு, கண்சிமிட்டு
- Avoir de bons yeux
  நல்லபார்வையான கண்களைக்கொண்டிருத்தல்
- Accepter quelque chose les yeux fermés
  ஒருவிடயத்தில் முழுநம்பிக்கை வைத்திருத்தல் (எல்லாவற்றையும் முன்யோசனையின்றி ஏற்றுக்கொள்ளல்)

L'oeilleton - கதவில் இடப்படும் சிறுதுவாரம் (வெளியே நிற்பவரைப்பார்ப்பதற்கு)

<u>*Note*</u> : L'oeillade - கடைக்கண்பார்வை
Regarder du coin de l'oeil - கடைக்கண்பார்வை

## *L'oreille*

**காது**

- Faire la sourde oreille
  காதுகேளாதது போலிருத்தல்
- Flatter (l'oreille)
  காதுக்கு இனிமையாகவிருத்தல்

- Avoir l'oreille fine
  கூர்மையான காது
- Prêter l'oreille
  காது கொடுத்துக்கேட்டல்
- Etre tout oreilles
  கவனத்துடன் எல்லாவற்றையும் கேட்டல்
- Ouvrir les oreilles
  காதுகொடுத்து ஆவலாய் கேட்டல்
- Etre dur d'oreille
  செவிட்டுத்தன்மையாய் இருத்தல்
- Tirer l'oreille
  காதை இழுத்தல், கண்டித்தல்
- Dans le creux de l'oreille
  காது கேளாதிருத்தல், காதில் ஓட்டை
- Se faire tirer l'oreille
  ஒருவிடயத்தைசெய்யப் பலதடவை கேட்டல்
- Avoir mal à l'oreille
  காதுக்குத்து, காதுவலி
- Etre tout ouïe
  எல்லாவற்றையும் கவனித்தல்
- Fermer l'oreille (faire la sourde oreille)
  ஒருவிடயத்தை கேளாதிருக்க காதைமூடுதல் (கேளாததுபோல் நடித்தல்)

## *Nez*
**மூக்கு**

- Nez long
  நீண்டமூக்கு
- Nez aquilin
  கிளியைப்போன்று வளைந்தமூக்கு
- Nez en trompette
  விரிந்தமூக்கு
- Nez au vent
  நோக்கமற்றுத் திரிபவர்
- Nez à nez
  நேரடியாக (ஒருவருக்கு ஒருவர்)
- Faire un pied de nez
  வெட்கப்படல்
- Avoir quelqu'un dans le nez (Argot : நண்பர்களுக்கு மட்டும்)
  ஒருவரை வெறுத்தல்
- Mettre le nez dans un livre
  புத்தகத்தை வாசிக்கத்தொடங்குதல்
- Avoir le nez fin
  முன்யோசனைப்படி நடத்தல்
- Nez épaté
  சளிந்த மூக்கு (சப்பட்டைமூக்கு)
- Nez pointu
  கூர்மூக்கு
- Nez écrasé
  சளிந்தசிறிய மூக்கு
- Mettre son nez partout
  சகலதிலும் தலையிடுபவர் (மற்றவர்களின் விஷயத்தில்)
- Mener quelqu'un par le bout du nez
  தன்னிச்சைப்படி எல்லாவற்றையும் இன்னொருவரின் மூலம் செய்தல்
- Un faux nez
  பொய்மூக்கு

- Tirer les vers du nez à quelqu'un
  ஒருவர் தகவல்தரமறுத்தாலும் அவரிடமிருந்து எல்லாவற்றையும் அறிதல்
- Parler du nez
  மூக்கினால் கதைத்தல்
- Avoir du nez
  புத்திக்கூர்மை உடையவர் (மெல்லியமாற்றத்தையும் உணரக்கூடியவர்)
- Se trouver nez à nez
  திடீரென ஒருவரைச்சந்தித்தல்

- Mettre le nez dehors
  வெளியேறுதல்

*Note* : Un saignement de nez
மூக்கிலிருந்து இரத்தம்வடிதல்

## *La tête*
**தலை**

- Il a une bonne tête
  புத்திக்கூர்மையான (ஞாபகசக்தியான) ஒருவர்
- C'est une tête brûlée
  எதையும் செய்யத்துணிந்த
- C'est une tête à claques
  கோபம் கொண்டமுகம் (அடிக்கக்கூடிய)
- Tête à tête
  நேருக்கு நேராய், இருவருக்கிடையில்
- Perdre la tête
  மூளைகுழம்புதல் (பைத்தியமாதல் - பேச்சுவழக்கில் மட்டும்)
- Elle / Il est têtu(e)
  அடங்காத, பிடிவாதமான (சுபாவம்)
- Faire la tête
  எதிர்த்தல்
- Monter à la tête
  தலைமயக்குதல்
- Casse tête
  மண்டைஉடைத்தல் (கடினவேலை - நெருக்கமானவர்களுக்கிடையில் உபயோகிக்க)
- Il est à la tête
  முதலாவதாக இருப்பவர்
- Tête nue
  வெறும்தலை (தொப்பிபோடாத தலை)
- Forte tête
  மரமண்டை (பிடிவாதமான)

## *Bouche*
**வாய்**

- Avoir une grande bouche
  அதிகம்கதைத்தல்
- Dire de bouche à oreille
  வாய்மொழியாக ஒருசெய்தியை ஒருவரிடமிருந்து மற்றவருக்குச்சொல்லுதல் (வதந்தியைப் பரப்புதல்)
- Faire la fine bouche
  கொஞ்சமாய்ச்சாப்பிடுதல்
- Avoir la mauvaise bouche (haleine)
  நோயினால் வாய்கசத்தல்
- Faire venir l'eau à la bouche
  வாயில் உமிழ்நீர்வருதல் (ஒருபொருளுக்கு ஆசைப்படுதல்)

- Avoir l'eau à la bouche
  ஒரு பொருளுக்கு ஆசைப்படுதல்
- Bouche cousue
  வாய்பேசாதிருத்தல் (திறக்காமல்)
- Bouche fermée
  வாய்மூடியிருத்தல்

Note :

- Bouche de métro
  பாதாள இரயில்நிலையத்தின் வாசல்பகுதி
- Bouche bée
  திறந்தவாய், பெரியவாய்
- Bouchée de pain
  ஒருவாய் பாண் (நேரடி அர்த்தம்)
  ஒருபொருளைக் குறைந்தவிலைக்கு வாங்குதல் (மறைமுக அர்த்தம்)

### *Coeur*
**இதயம்**

- Bourreau des coeurs
  அதிகபெண்களை நேசிப்பவர் (நேரடியாகஒருவருக்கு உபயோகிப்பதைத்தவிர்க்கவும்)
- Coeur vide
  உறவுகள் அற்றவர்
- Coeur d'or
  நல்லஇதயம்
- Avoir le coeur à l'ouvrage
  வேலையிலிருத்தல்
- Ouvrir son coeur
  தன் மனதைத்திறந்துகாட்டுதல்
- Soulever le coeur
  வாந்திவரச்செய்தல், வயிற்றைக்குமட்டுதல்
- Avoir un coeur de pierre
  கல்நெஞ்சுள்ளவர்
- Savoir quelque chose par coeur
  மனப்பாடம் செய்தல்
- Parler à coeur ouvert
  திறந்த இதயத்துடன் கதைத்தல்
- Etre au coeur de l'hiver
  குளிர்காலத்தில் இருத்தல் (துக்கமாயிருத்தல்)
- Avoir mal au coeur en auto
  வாகனங்களில் போகும்போது தலைசுத்துதல், வாந்திஎடுத்தல்
- Serrer quelqu'un sur son coeur
  ஒருவரை எப்போதும் அன்பு செலுத்துதல், இதயத்தில் வைத்திருத்தல்
- Avoir le coeur sur la main
  பெருந்தன்மையுள்ளவர் (எல்லோருக்கும் உதவக்கூடியவர்)

## Expressions diverses
**வேறுபட்ட வெளிப்பாடுகள்**

Coucher à la belle étoile - வெளியில் படுத்தல்
Hausser les épaules - ஆச்சரியப்படுதல்
Passer du coq à l'âne - பிதற்றுதல், தொடர்பில்லாமல் கதைத்தல்
Aller au feu - போருக்குப் போதல்
Tenir ferme - உறுதியாய் நிற்றல்
Etre écrasé de travail - அதிகவேலைப்பழுவினால் நசுக்கப்படுதல்

Couver un enfant - பிள்ளையை கவனமாக வளர்த்தல்
Etre singulier - மற்றவர்களிலிருந்து சிறிது வேறுபடுதல்
Tomber dans les pommes - மயங்கிவிழுதல்
Recevoir une bonne raclée - அடிவாங்குதல், அடித்தல்
Couper les cheveux en quatre - சிறுவிடயத்தில் கவனம் எடுத்தல் (முட்டையில் மயிர்புடுங்குதல்)
Se rendre compte de quelque chose - ஆலோசித்தல், மறுயோசனை செய்தல்
Danser devant le buffet (rien à manger) - உண்பதற்கு ஒன்றும் இல்லாதநிலை
Jeter la pierre à quelqu'un - ஒருவரின்மேல் குற்றம் சுமத்துதல்
Manger son pain blanc, en premier - ஒருவர் முதல்நன்மையும், பிறகு தீமையும் அடைதல்
Avoir une dent contre quelqu'un - தீங்குசெய்ய எப்பொழுதும் விரும்புதல்
Mordre la vie à pleine dent - வாழ்க்கையை நேசித்தல், விரும்பல்
Avoir les dents lonques - இலட்சியத்துடன், நோக்கத்துடன் இருத்தல்
C'est la femme qui porte le pantalon - குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்
Rendre les armes - ஆயுதங்களைக் கொடுத்தல் (தோல்வியை ஒப்புக்கொள்ளுதல்)
Relever la tête - துணிவு கொள்ளுதல்
Tirer le rideau sur quelque chose - ஒரு விடயத்தைபற்றிக் கதைப்பதை விட்டுவிடல்
Revenir à l'avis d'un autre - தன்கருத்தை மாற்றி இன்னொருவரின் ஆலோசனையை கேட்டல்
Manger ses mots - சொற்களை விழுங்கி விழுங்கிக் கதைத்தல்
Trouver la mort - இறத்தல், மரணமடைதல்
Ouvrir la marche - முதல் போதல்
Perdre pied - நிலைதவறுதல்
Prendre la parole - பேசத்தொடங்குதல்
Demander la parole - கதைக்க உத்தரவு கேட்டல்
Perdre la tête - புத்திகெடுதல்
Perdre de vue - காணாமல் போகுதல்
Prendre la mouche - நியாயமின்றிக் கோபித்தல்
Perdre l'esprit - புத்தி மயங்குதல்
Prendre la garde - எச்சரிக்கையாய் இருத்தல்
Prendre son vol (très haut) - அதிகம் செலவழித்தல்
Gagner sa vie - வாழ்வதற்கு சம்பாதித்தல்
Vêtir un enfant - பிள்ளைக்கு முதல்தடவையாக உடுப்புஅணிதல்
Tenir sa parole - வார்த்தையை (சொன்னதை) காப்பாற்றுதல்
Ecouter en sourdine - ஒட்டுக்கேட்டல்
Prêter à la petite semaine - அதிகவட்டிக்கு (கொஞ்சநாட்களிற்கு) கடனாய் கொடுத்தல்
*(à très court terme et à taux très élevé)*
Donner sa parole - வார்த்தை கொடுத்தல், வாக்குக்கொடுத்தல்
Donner sa main à quelqu'un - ஒத்தாசை செய்தல்
Donner un coup de main - ஒத்தாசை செய்தல், உதவிசெய்தல்
Se frapper la tête contre le mur - தலையை சுவரில் மோதுதல்
Donner un coup de poing à quelqu'un - ஒருவரைக் குத்துதல்
Laisser la vie à son ennemi - ஒருவர் தனதுஎதிரியை வாழவிடுதல்
Donner une gifle à quelqu'un - கன்னத்தில் அறைதல்
Prendre des notes - குறிப்பு எழுதுதல்
Prendre ses jambes **à son cou** - ஓடிப்போகுதல்
Prendre la liberté - துணிதல்
Prendre le masque - வேஷமணிதல்
Prendre l'air - வெளியில் போகுதல்
Chercher des éclaircissements - விசாரணை செய்தல்

## Expressions avec le mot coup

**அடி–தட்டு–உதை என்பனவற்றுடன் வரும் வெளிப்பாடுகள்**

(Coup உடன்)

Coup de langue - அவதூறுப்பேச்சு
Coup de dent - வடுச்சொல், கடும்சொல்
Coup de feu - துப்பாக்கிவெடி

Coup de fusil - துப்பாக்கிவெடி
Coup de poing - குத்து, அடி
Coup de sang - இரத்தப்பெருக்கு
Coup de foudre - திடீரென சம்பவித்தல்
Coup de soleil - வெயில்அடித்தல்
Coup de hasard - தற்செயலாக, சடுதியாக
Coup de coude - முழங்கையால் அடித்தல்
Coup de pied - காலால் அடித்தல்
Coup d'oeil - கண்ணால் பார்வையிடல்
Coup de main - ஓர் உதவி, கைகொடுத்தல்
Coup d'épaule - தோள் கொடுத்தல்
Coup de pouce - உதவிசெய்தல்
Coup d'éponge - சிறியஅழுக்கை துணியால் துடைத்தல்
Coup de fil - ரெலிபோன் அழைப்பு
Coup de téléphone - ரெலிபோன் அழைப்பு
Coup de peigne - சீப்பால் தலையை இருதரம்வாருதல்
Coup de gueule - கத்துதல்
Coup de chapeau - மரியாதைசெய்தல்
Coup d'Etat - அரசாங்கக் கவிழ்ப்பு
Tout à coup - சடுதியாக
Coup sur coup - இடைவிடாமல்
Sur le coup - உடனடியாக

# La porte
## கதவு

Porte à deux battants - இரட்டைக்கதவு
Porte battante - தானாகஅடித்துச் சாத்தும்கதவு
Mettre à la porte - தள்ளிவைத்தல் *(விலக்கி)*
Les portes d'un pays - ஓர்தேசத்தின் எல்லைகள்
Claquer la porte - கதவை அடித்துசாத்துதல் *(திறப்பு இல்லாமல்)*
Porte blindée - கதவை பாதுகாப்பிற்கு நான்கு பக்கமும் தடித்த இரும்பினால் பிணைத்திருத்தல் *(பாதுகாப்புக்கதவு)*
Recevoir quelqu'un entre deux portes - ஒருவரையும் உள்ளேவரவிடாமல் வேகமாய் கதைத்து திருப்பியனுப்புதல்
Faire du porte à porte - வீடுவீடாகச் செல்லுதல்
Fermer la porte à quelqu'un - ஒருவர் உள்ளேவரவிடாமல் கதவைச் சாத்துதல்

***Exception* - விதிவிலக்கு**

Porte bonheur - நல்லஅதிஸ்டத்தை கொண்டுவரக்கூடிய கல், மணி (அதிஷ்டப்பொருள்)
Porte voix - ஒலிபெருக்கி
Porter plainte - முறைப்பாடு கொடுத்தல் *(பொலீஸ்)*

Note : Porte உடன் சிலபெயர்ச்சொற்களின் சேர்க்கைகளை பெயர்ச்சொல் அட்டவணையில் காணலாம்.

Porte-bagages - கரியர் (சைக்கிளில்)
Porte-monnaie - சில்லறைப்பணம் வைத்துள்ள பை
Porte feuille - துண்டுகள், மட்டைகள், பணச்சீட்டுகள் வைக்கக்கூடிய பை
Porte-parole - பேச்சாளர்

# Chaud
## வெக்கை~சூடு

Il fait chaud - சூடாக இருக்கின்றது (காலநிலை)
Il brûle - எரிக்கும் வெக்கை
C'est la canicule - மிகக்கடும் வெக்கை

Une chaude discussion - சூடான வாக்குவாதம்
Un manteau tient chaud - சூட்டைத்தாங்கிக்கொள்ளும் தடித்தமேலங்கி
Une tête chaude - கோபத்தில் இருத்தல்
Prendre un bain chaud - சூடான நீரில் குளித்தல்
Un repas chaud - சூடான சாப்பாடு
Pleurer à chaudes larmes - மிகுந்த கண்ணீருடன் அழுதல்
Il fait une chaleur torride - மிக வெக்கையாகவிருத்தல்
La chaleur est accablante - சகிக்கமுடியாத வெக்கை (காற்று இல்லாமல்)

# Froid
## குளிர்

Il fait froid - குளிராகவிருக்கிறது
Il fait très froid - மிகக்குளிராகவிருக்கின்றது
Il gèle à pierre fendre - கல்லை உடைப்பதுபோன்ற கடும்குளிர்
Il fait frisquet - சடுதியாகத் தாக்கும்குளிர்
On caille - உறைவிக்கும்குளிர் *(பேச்சுவழக்கில் (argot) மட்டும்)*
Un froid de canard - கடும்குளிர் *(நேரடியாக தமிழில் அர்த்தமில்லை)*
Un froid de gueux - அதிககுளிர்
Le temps est froid - காலநிலை குளிராகவிருக்கின்றது
Un froid de chien - கடும்குளிர் *(நாய்க்குளிர்)*
La lune rousse - சந்திரன் சிவப்புக்கும், மஞ்சளுக்கும் இடையில் (கபிலம்) இருந்தால் அன்று அதிககுளிராகவிருக்கும்
On garde son sang froid - எந்தபிரச்சனையிலும் தன்னைக்கட்டுப்படுத்தக்கூடியவர்
La guerre froide - ஆயுதம் ஏந்தாமல் பேச்சுவார்த்தையில் நடைபெறும் சண்டை
Un homme froid - உணர்ச்சிகள் இல்லாத அல்லது வெளிக்காட்டாத மனிதன்
Glacer - பனிக்கட்டியாகுதல், உறைதல்
Congeler - உறைதல்

# Expressions relatives à la pluie
## மழைபற்றிய வெளிப்பாடுகள் (சொற்றொடர்கள்)

Une pluie battante - பெருமழை
Sortie banlieue
*புறநகர்களுக்கு வெளியேறும் பாதை.*

Correspondance
*தொடர்புப்பாதைகள், வேறுவழிகள்.*

Conservez votre billet jusqu'à la sortie.
*உங்கள் பிரயாணச்சீட்டுக்களை வெளியேறும்வரை வைத்திருங்கள்.*

Ce train ne prend pas de voyageurs.
*இந்தப்புகையிரதம் பிரயாணிகளை எடுக்கமாட்டாது.*

## Circulation sur la route
## வழிப்போக்குவரத்து

| | |
|---|---|
| Rond - point | - பலவழிகள் சந்திக்கும் வட்டமானஇடம் |
| Routier | - வழிகாட்டும் புத்தகம் |
| Tramway | - வீதிகளில் இருக்கும்இரும்புப்பாதை |
| Route | - பாதை, வழி |
| Rue | - தெரு, வீதி |
| Ruelle | - சந்து, ஒழுங்கை |
| Faubourg | - நகரத்தினூடாகச் செல்லும்வீதி |
| Jonction | - சந்தி |
| Impasse | - பாதைகளில்லாத சிறுவீதி |
| Feu rouge | - சிவப்புவிளக்கு |
| Feu orange | - ஓரேஞ் விளக்கு |
| Feu vert | - பச்சைவிளக்கு |
| Pont | - பாலம் |
| Panneau | - அறிவிப்புப் பலகை |
| Métropolitain | - பாதாளப் புகையிரதம் |
| Passage | - கடவை |
| Passage piéton | - பாதசாரிக்கடவை |
| Carrefour | - சந்தி |
| Boulevard | - நெடுஞ்சாலை, நகரச்சாலை |
| Avenue | - அகலமானவீதி |
| Allée | - சிறு சந்து, ஒழுங்கை |
| Chemin | - பாதை |
| Déviation | - பாதைமாற்றம் |

Embouteillage - ஒரேபாதையில் அதிகவாகனப்போக்குவரத்தால் ஏற்படும்தடங்கல்
Circulation fluide - போக்குவரத்து சாதாரணமாகவிருத்தல்
Bouchon de 2 Km - 2 கிலோமீற்றருக்கு வாகனநெருசல்
Autoroute - வாகனம் மட்டும் செல்லும்பாதை
File de voitures - வாகனத்தொடர்
Péage - வழிப்பாதைக்கட்டணம்
Vitesse limitée contrôlée - வேகம் மட்டுப்படுத்தப்பட்டது
Parking - வாகனம் நிறுத்துமிடம்
Transport en commun - பொதுப்போக்குவரத்து
Voiture particulière - தனியார்வாகனம்
Sentier - ஒற்றையடிப்பாதை (காடு, மலைகளுக்கு)
Sens unique - தனிப்பாதை
Sens interdit - தடைசெய்யப்பட்டபாதை
Route départementale - மாகாணப்பாதை
Camions poids lourds - பாரவாகனம்
Voiture légère (VL) - பலம்குறைந்த வாகனம்
Chemin de terre - நிலப்பாதை
Contravention - சட்டவிரோதம்
Conduite à droite - வலப்பக்கமாக வாகனம்ஓட்டுதல்
Conduite à gauche - இடப்பக்கமாக வாகனம்ஓட்டுதல்
Alcootest = ballon pour vérifier le taux d'alcool மதுபானம் அருந்தியதை அளக்கும்கருவி
Accident corporel, dommages corporels. உடல்ரீதியான விபத்து
Accident matériel, dommages matériels பொருட்சேதம்
Un constat d'accident வாகனவிபத்து பற்றிய விளக்கம்

# Préfixes d'origine grecque
## கிரேக்க பகுதிகள்

*(அநேக பிரெஞ்சு விஞ்ஞான, மருத்துவ தொழில்நுட்பசொற்கள் கிரேக்கமொழியில் இருந்து உருவாகியன)*

Aéro - ஆகாய
Anthropo - மனித
Arché - பழைய, புராதன
Auto - தானாகவே, சுயமாக
Baro - நிறுக்கிற
Biblio - புத்தகம்
Bio - உயிர்
Chrom - நிறம்
Chrono - நேர
Dacty - விரல்
Dynam(o) - பலம், விசை
Gaster - வயிறு
Géo - நிலம்
Hémat / Hémo - இரத்தம்
Hydr - தண்ணீர்
Macro - பெரிய
Néo - புதிய
Neuro / Nevr - நரம்பு
Penta - ஐந்து
Phon (o) - குரல்
Photo - வெளிச்சம்
Poly - பல
Pseud (o) - போலி, பிழையான
Pyr (o) - நெருப்பு
Thermo - வெப்பம்
Zoo - விலங்கு
Télé - தொலை
Démo - மக்கள்
Métr(o) - அளவு
Ped - குழந்தை
Thé(o) - கடவுள்
Tech(o) - கலை
Ortho - சரியான
Psycho - ஆத்மா
Chir(o) - கை

# Suffixes d'origine grecque
## கிரேக்க விகுதிகள்

Algie - வலி
Bar - அமுக்கம்
Crate - நிர்வகிப்பவர்
Cratie - அதிகாரம்
Cycle - டயர், சக்கரம்
Gramme - எழுத்து
Graphe - எழுதுபவர்
Graphie - எழுதும்கலை

| | | | |
|---|---|---|---|
| Logie | - விஞ்ஞானம் | Gamie | - திருமணம் |
| Manie | - ஈடுபாடு | Logue | - கற்பவர், ஆராய்பவர் |
| Onyme | - பெயர்ச்சொல் | Scopie | - பார்வை |
| Pode | - கால் | Thèque | - அலுமாரி |
| Scope | - பார்க்க உதவும்கருவி | Thérapie | - குணமடைதல் |

# Conversations:
## Le premier jour du cours de français
**முதல்நாள் பிரஞ்சுவகுப்பு** (Il est neuf heures 9மணி)

*Professeur* / *ஆசிரியர்*
Aujourd'hui, c'est notre premier cours de français n'est-ce pas?
இன்று எங்களது முதலாவது பிரஞ்சுவகுப்பு, இல்லையா?

*Les élèves* / *மாணவர்கள்*
Oui madame.
ஆம் அம்மணி.

*Professeur*
J'espère que tout le monde parle un peu français?
எல்லோரும் சிறிது பிரஞ்சு கதைப்பீர்களென நான் எண்ணுகின்றேன்.
La première chose, vous vous présentez.
முதலாவதாக, நீங்கள் உங்களை அறிமுகப்படுத்துங்கள்.

*Un élève*
Je ne comprends pas le mot "présenter".
எனக்கு "présenter" என்ற சொல் விளங்கவில்லை.

*Professeur*
Ça c'est bien, quand vous ne connaissez pas un mot, vous me le demandez, je pourrai l'expliquer par un autre mot.
அது நல்லது, உங்களுக்கு ஒரு சொல் விளங்காதபோது நீங்கள் என்னிடம் அதைக் கேளுங்கள். நான் வேறு ஒரு சொல் மூலம் அதை விளங்கப்படுத்துவேன்.

*Une élève*
Madame s'il vous plaît, pouvez-vous parler lentement?
அம்மணி தயவுசெய்து ஆறுதலாகக் கதைக்கமுடியுமா?

*Professeur*
Bien sûr! Chacun de vous dit son nom, son prénom, son pays d'origine. C'est ça se présenter
நிச்சயமாக! உங்களில் ஒவ்வொருவரும் தங்களுடைய குடும்பப்பெயரையும், பெயரையும், சொந்த(மூல) நாட்டையும் சொல்வது தான் சுய அறிமுகப்படுத்துதல்....

*Une élève*
C'est la première fois que j'entends ce mot-là.
முதன்முறையாக நான் இந்தச்சொல்லைக் கேட்கின்றேன்.

*Professeur*
D'abord, qui veut se présenter?
முதலில் யார் தன்னை அறிமுகப்படுத்த விரும்புகின்றீர்கள்?
Grand silence, peut être.... vous monsieur?
comment vous appelez-vous?
இங்கு பெரிய அமைதி நிலவுகின்றது. சிலவேளை ......
எப்படி உங்களை அழைப்பது? *(ஒரு மாணவரை நோக்கி)*

*Paul*
Je m'appelle Paul.
என்னுடைய பெயர் போல்.

*Professeur*
Maintenant, nous allons écouter Paul.
இப்போ, நாங்கள் போல் கதைப்பதை கேட்கப்போகின்றோம்.

| | |
|---|---|
| *Paul* | Je m'appelle Paul Devier, je viens d'Italie, je suis en France depuis trois mois; je viens de passer mon bac, j'attends mes résultats, en attendant, j'aime bien apprendre le français.<br>எனது பெயர் போல் தெவியே, நான் இத்தாலி நாட்டைச்சேர்ந்தவன், நான் பிரான்சில் மூன்று மாத காலமாக இருக்கின்றேன், நான் என்னுடைய Bac பரீட்சை எடுத்துவிட்டு மறுமொழிக்கு காத்திருக்கின்றேன், காத்திருக்கும் வேளையில் பிரஞ்சுமொழி படிக்க விரும்புகின்றேன். |
| *Professeur* | Vous vous débrouillez très bien. Merci beaucoup Paul.<br>நன்றி போல், நீங்கள் மிகநல்லாக சமாளிக்கின்றீர்கள் (கதைக்கின்றீர்கள்). |
| *Les élèves* | ........................................(Ils sont calmes)<br>(மாணவர்கள் அமைதியாக இருக்கின்றார்கள்) |
| *Professeur* | Qui veut prendre la parole? Vous êtes Srilankaise?<br>யார் கதைக்க விரும்புகின்றீர்கள்? (பேச்சை எடுக்க), நீங்கள் இலங்கையைச்சேர்ந்தவரா?<br>(ஒரு மாணவியை நோக்கி) |
| *Rubi* | Oui madame, je suis Srilankaise, je m'appelle Rubi.<br>ஆம் அம்மணி, நான் இலங்கையைச் சேர்ந்தவள் எனது பெயர் றூபி. |
| *Professeur* | Ne voulez-vous pas vous présenter un peu?<br>நீங்கள் உங்களை அறிமுகப்படுத்த விரும்பவில்லையா? |
| *Rubi* | Non madame, je n'arrive pas à parler, peut-être d'autres élèves, j'essayerai après.<br>இல்லை அம்மணி, எனக்கு கதைக்க வராது, சிலவேளை வேறு மாணவர்கள்... நான் பின்னர்... முயற்சிக்கின்றேன். |
| *Professeur* | Ce n'est pas grave, essayez de parler un peu; même si vous n'y arrivez pas bien.<br>அது பறவாயில்லை. உங்களுக்கு நன்றாகக் கதைக்க வராவிடினும் நீங்கள் கொஞ்சம் கதைக்க முயற்சிக்கவும். |
| *Rubi* | J'ai honte madame.<br>எனக்கு வெட்கம். |
| *Professeur* | Regardez-moi, je suis française, je ne connais pas votre langue, c'est normal; mais je n'ai pas honte.<br>என்னைப்பாருங்கள்! நான் பிரஞ்சுக்காரி, எனக்கு உங்களுடைய மொழி தெரியாது, ஆனால் எனக்கு வெட்கமில்லை, அது சாதாரணமானது. |
| *Rubi* | Je ne sais pas.<br>எனக்கு தெரியாது. |
| *Professeur* | Alors, Rubi vous allez entendre les autres élèves, vous parlerez en dernier.<br>அப்போ றூபி, நீங்கள் மற்ற மாணவர்களை கவனியுங்கள், நீங்கள் இறுதியாகக் கதைக்கலாம். |
| *Rubi* | Merci madame.<br>நன்றி அம்மணி. |

**Pendant la pause - entre les élèves....**
இடைவேளையில் இரண்டு மாணவிகளுக்கிடையில். . .

Il est midi
நேரம் - 12 மணி

| | |
|---|---|
| *Sophie* | Salut Rubi,<br>வணக்கம் றூபி. |
| *Rubi* | Salut Sovi<br>வணக்கம் "செவி". |

<u>Sophie</u> Ce n'est pas Sovi, mon prénom est "Sophie".
"செவி"யில்லை, எனது பெயர் "சோபி".

<u>Rubi</u> Tu peux épeler s'il te plaît.
தயவுசெய்து உன்னுடைய பெயரை எழுத்துக்கூட்டமுடியுமா?

<u>Sophie</u> S-O-P-H-I-E
எஸ்-ஓ-பே-ஆஷ்-ஈ-எ

<u>Rubi</u> Sophie... c'est ça.
சோபி.. அது தானே!

<u>Sophie</u> C'est clair, c'est la première fois que je rencontre une Srilankaise.
இப்போ தெளிவாகவிருக்கின்றது (பெயர்சரி), முதல்தடவையாக நான் ஒரு இலங்கைப் பெண்ணைச் சந்திக்கின்றேன்.

<u>Rubi</u> Tu connais notre pays?
உனக்கு எங்களுடைய நாட்டைத்தெரியுமா?

<u>Sophie</u> Justement, mes parents étaient là-bas pour un séjour.
ஆக, என்னுடைய பெற்றோர்கள் சிறிதுகாலம் அங்கே இருந்தவர்கள்.

<u>Rubi</u> Qu'est-ce que le mot "séjour", je ne comprends pas ce mot-là.
எனக்கு "Séjour" என்ற சொல் விளங்கவில்லை.

<u>Sophie</u> ça veut dire passer quelques jours dans un endroit ou dans un pays.
"Séjour" என்றால் சிலநாட்கள் ஒரு இடத்தில் அல்லது ஒரு நாட்டில் கழிப்பது.

<u>Rubi</u> Grâce à toi, j'ai appris un mot.
உன்னால் (உனது நன்மையினால்) நான் ஒரு (புதிய) சொல்லை அறிந்தேன்.

<u>Sophie</u> Quel est l'ancien nom de ton pays? je ne me le rappelle pas.
எனக்கு ஞாபகம் வரவில்லை, உன்னுடைய நாட்டின் பழையபெயர் என்ன?

<u>Rubi</u> C'est Ceylan.
அது சிலோன்.

<u>Sophie</u> Vous étiez colonisés par les anglais.
நீங்கள் ஆங்கிலேயரால் காலனித்துவப்பட்டிருந்தீர்கள்.

<u>Rubi</u> C'est pour cela que les anglais l'ont appelé Ceylan.
ஆங்கிலேயர் அதனால் தான் எங்களுடைய நாட்டை "சிலோன்" என்று அழைத்தார்கள்.

<u>Sophie</u> Il est déjà midi et demi. On va chercher quelque chose.
ஏற்கனவே பன்னிரெண்டு முப்பது ஆகிவிட்டது. நாங்கள் ஏதாவது சாப்பிடப்போவோம் (சாப்பாடு தேடுவதற்கு)

<u>Rubi</u> Non merci, j'ai apporté quelque chose à manger.
இல்லை நன்றி, நான் சாப்பிடுவதற்கு கொண்டு வந்துள்ளேன்.

<u>Sophie</u> C'est le premier jour, je n'ai rien.
இன்று முதலாம்நாள், என்னிடம் ஒன்றுமில்லை.

<u>Rubi</u> Si tu veux, je vais prendre un café, en bas, il y a une machine à café.
நீ விரும்பினால் கீழே ஒரு கோப்பி இயந்திரம் இருக்கின்றது, நான் ஒரு கோப்பி எடுக்கப் போகிறேன்.

*Sophie* Alors, on y va.
அப்போ, நாங்கள் போவோம்.
Tu parles bien avec moi, pourquoi n'as-tu pas osé parler pendant le cours?
நீ என்னுடன் நன்றாகக் கதைக்கின்றாய் (அலம்புதல்) ஏன் வகுப்புநேரத்தில் கதைக்கத் துணியவில்லை?

*Rubi* J'ai peur, peut être......
சிலவேளை... எனக்குப்பயம்?

*Sophie* Peur de quoi......?, Il faut oser.
எதைப்பற்றிப் பயம்..... துணியவேண்டும்....

*Rubi* Tu es courageuse.
நீ ஊக்கமானவள்.

*Sophie* Chez vous, les femmes ont des cheveux longs, c'est bien joli.
உங்களுடைய நாட்டுப்பெண்களுக்கு நீண்ட தலைமுடி, அது நல்லஅழகு.

*Rubi* Merci, tu es vraiment gentille.
நன்றி, நீ உண்மையில் நற்குணமுள்ளவள்.

*Sophie* Voici la machine à café.
இதோ கோப்பி இயந்திரம்.

*Rubi* Comment prends-tu le café?
(எது) என்னமாதிரி நீ எடுக்கப்போகின்றாய், கோப்பி?

*Sophie* Un café noir.
ஒரு கறுப்புக்கோப்பி.

*Rubi* J'aime bien le chocolat.
நான் சொக்கிலேட் பானத்தை விரும்புகின்றேன்.

*Sophie* ça y est c'est l'heure (Il est une heure), on va retourner en cours.
நேரம் சரி, நாங்கள் வகுப்பிற்குத் திரும்புவோம்.

*Rubi* Je suis prête.
நான் தயார்.

**Note :** *Tutoyer* - ஓரேவகுப்பில் கற்கும் மாணவர்கள் அல்லது ஒன்றாக வேலைசெய்பவர்கள் பொதுவாக நீ என்ற நேசபாவனையில் உரையாடுவர்.
- ஒருவருடன் சம்பாஷிணைசெய்யும் போது, திறமைசாலி, அழகானவர், அன்பானவர் என்ற வாழ்த்துச் சொற்களை யாராவது உங்களுக்குக் கூறினால் நீங்கள் எப்பொழுதும் **நன்றி** தெரிவிக்க வேண்டும்.

## A Lourdes - லூர்த்திற்கு

(Dans un restaurant)
**உணவுவிடுதியில் விடுமுறைக்குச்செல்வது பற்றி...**

*Pierre* Mani, quand pars-tu en vacances?
மணி, நீ எப்போது விடுமுறையில் போகின்றாய்?

*Mani* A la mi-août, à partir du 13 août.
ஆவணி நடுப்பகுதியில், பதின்மூன்றாம் திகதியிலிருந்து....

*Pierre* Où vas-tu?
*எங்கே நீ போகின்றாய்?*

*Mani* Je pars à Lourdes pour trois jours.
*மூன்று நாட்களிற்கு லூட்ஸ்க்கு புறப்படுகின்றேன்.*

*Pierre* Où est Lourdes?
*"லூட்ஸ்" அது எங்கே இருக்கின்றது?*

*Mani* Tu ne connais pas! C'est une ville, à 800 Km de Paris.
*உனக்குத் தெரியாதா? பாரிசில் இருந்து 800 கி.மீ இல் இருக்கும் ஒருநகரம்.*

*Pierre* C'est Lourdes, Oh là là, tu le prononces très mal, On ne prononce pas "S", on dit Lourdes.
*"லூர்த்" அய்யய்யோ, நீ அதை பிழையாக உச்சரிக்கின்றாய், "S" சை உச்சரிப்பதில்லை. அதன் உச்சரிப்பு "லூர்த்".*

*Mani* Excuse-moi, Tu connais bien ma prononciation.
*என்னை மன்னி, உனக்குத் தெரியும் தானே எனது உச்சரிப்பு.*

*Pierre* Tu y vas par quel moyen de transport?
*நீ எந்த வகையான போக்குவரத்துச் சாதனத்தின் மூலம் போகின்றாய்?*

*Mani* En voiture.
*காரில்.*

*Pierre* Juste pour trois jours? C'est très très loin d'ici!
*மூன்று நாட்களுக்காக, அது இங்கிருந்து சரியான தூரம்.*

*Mani* Chaque année, on y va avec ma famille pour prier.
*ஒவ்வொரு வருடமும் குடும்பத்துடன் போவோம் கும்பிடுவதற்காக.*

*Pierre* Toi, tu es pratiquant?
*நீ சாமி கும்பிடுகிறனியா?*

*Mani* Surtout croyant. Est-ce que tu y es allé?
*நிச்சயமாக நம்புகிறவன், நீ ஏற்கனவே அங்கே (ஆலயத்திற்கு) சென்றிருக்கின்றாயா?*

*Pierre* Non, je ne m'intéresse pas à ça. Seule ma grand mère y est allée deux fois.
*இல்லை, எனக்கு அதில் ஈடுபாடில்லை, எனது அம்மம்மா தான் இருதடவை சென்றார்.*

*Mani* Tu connais "Chartres"?
*உனக்கு "சார்த்"தை தெரியுமா? (சார்த் கோவில்)*

*Pierre* Oui, je connais.
*ஆம், எனக்குத்தெரியும்.*

*Mani* Il y a une vierge noire là-bas, des pèlerins y vont chaque année à pied.
*அங்கு கறுப்பு மாதா இருக்கின்றது. யாத்திரிகர்கள் (பக்தர்) கால்நடையாக ஒவ்வொரு வருடமும் போகின்றவர்கள்.*

*Pierre* Il y a des étudiants qui y vont.
*மாணவர்கள் அங்கு போகின்றவர்கள்.*

*Mani* On l'a construite au 10ème siècle.
*அது பத்தாம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.*

<u>Pierre</u> C'est assez ancien.
(சரியான) பழையது.

<u>Mani</u> J'ai entendu dire que des malades qui vont à pied là bas sont guéris.
கால்நடையாகச் செல்லும் நோயாளிகள் சுகப்பட்டிருப்பதாக நான் கேள்விப்பட்டிருக்கின்றேன்.

<u>Pierre</u> Je trouve que c'est merveilleux.
எனக்கு அது அற்புதமாகப்படுகின்றது.

<u>Mani</u> Tu ne crois pas en Dieu?
நீ கடவுளை நம்பவில்லை?....

<u>Pierre</u> Si, j'y crois.
ஆம், நான் நம்புகின்றேன்.

## Comment prend-on un rendez-vous?
### ஓர் சந்திப்பை எடுத்துக்கொள்வது எப்படி?

<u>Mani</u> *மணி* Bonjour mademoiselle, Je voudrais avoir un rendez-vous pour une consultation avec le Docteur x.
வணக்கம் செல்வி, நான் வைத்தியர் x வுடன் ஆலோசனைக்கான ஓர் சந்திப்பினை வைத்துக்கொள்ள விரும்புகின்றேன்.

<u>Secrétaire</u> *காரியதரிசி* Patientez un instant s'il vous plaît, Je regarde l'agenda.
தயவுகூர்ந்து ஒருகணம் இருங்கள் நான் தினக்குறிப்பு புத்தகத்தைப் பார்க்கின்றேன்.

<u>Mani</u> Prenez votre temps, Je ne suis pas pressé.
உங்கள் நேரத்தை எடுங்கள், எனக்கு அவசரமில்லை.

<u>Secrétaire</u> Je suis navrée, Tout est pris cette semaine.
நான் வருந்துகின்றேன், இந்தக்கிழமை எல்லாம் நிரம்பியுள்ளது (சந்திப்பிற்கு எடுக்கப்பட்டுவிட்டது).

<u>Mani</u> Excusez-moi, Je ne me sens vraiment pas bien. J'aimerais bien avoir un rendez-vous cette semaine.
என்னை மன்னியுங்கள், நான் உண்மையிலேயே நன்றாக இல்லை (சுகவீனமாய்) இந்தக்கிழமை (வைத்தியருடன்) ஒரு சந்திப்பை வைத்துக் கொள்ளவிரும்புகின்றேன்.

<u>Secrétaire</u> Si vous voulez, il y a une place; aujourd'hui une personne vient de se désister, midi et demi, ça vous convient?
நீங்கள் விரும்பினால், இன்று ஒருவர் தனது சந்திப்பை நீக்கியுள்ளார் (ரத்துச்செய்துள்ளார்) மத்தியானம் 12.30 உங்களுக்குப் பொருந்துமா?

<u>Mani</u> J'ai le temps; cette heure-là me convient très bien.
எனக்கு நேரமிருக்கின்றது, இந்தநேரம் எனக்கு நன்றாகச் சரிவரும்.

<u>Secrétaire</u> Quel est votre nom?
என்ன உங்களது பெயர்?

<u>Mani</u> C'est Mani.
அது மணி.

<u>Secrétaire</u> C'est entendu à midi et demi.
அது 12.30 இற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Mani — Entendu.
தீர்மானமாக.

Secrétaire — Merci au revoir monsieur, à tout à l'heure.
நன்றி, மீண்டும் சந்திப்போம், சிறிதுநேரத்தில்.

Mani — Au revoir mademoiselle, à plus tard.
மீண்டும் சந்திப்போம் செல்வி.

## Comment parle-t-on avec une assistante sociale
**எப்படி சமூகஉதவிப்பெண்ணுடன் கதைப்பது,,,**

Kumar
குமார் — Bonjour madame, J'ai rendez - vous avec Madame Isabelle DOUVIER à 9h30.
வணக்கம் அம்மணி, எனக்கு 9.30க்கு திருமதி Isabelle DOUVIER வுடன் ஓர் சந்திப்புண்டு.

Secrétaire
செயலாளர் — Je vais voir mon cahier, comment vous appelez-vous?
எனது கொப்பியைப் பார்க்கின்றேன். எப்படி உங்களை அழைப்பது?

Kumar — Je m'appelle Kumar, ça commence par K.
எனது பெயர் குமார், அது கே யில் ஆரம்பமாகின்றது.

Secrétaire — Quand avez-vous pris rendez-vous?
எப்பொழுது தாங்கள் சந்திப்பதற்கு நேரம் எடுத்தீர்கள்?

Kumar — Je crois que c'est vendredi dernier.
கடந்த வெள்ளிக்கிழமையென்று நான் நினைக்கின்றேன்.

Secrétaire — Ça y est! Votre nom je l'ai trouvé, c'est Kumar, c'est bien ça?
சரி, உங்களது பெயரைக் கண்டு பிடித்துவிட்டேன், அது குமார், அது தானே?

Kumar — Voilà.
அதுதான்.

Secrétaire — Madame Isabelle est avec quelqu'un, elle va vous prendre dans cinq minutes.
Madame Isabelle வேறுஒருவருடன் அலுவலாக இருக்கின்றார், ஐந்து நிமிடத்துக்குள் உங்களைச் சந்திப்பார்.

Kumar — Merci madame, j'attends dans le couloir.
நன்றி, நான் ஓடையில் காத்திருக்கின்றேன்.

*(10 மணிபோல்.. Madame Isabelle வுடன் குமாருக்கு நீண்டநாள் பழக்கமுண்டு)*

Madame Isabelle — Monsieur Kumar, vous pouvez entrer s'il vous plaît.
திரு. குமார், நீங்கள் உள்ளே வரலாம்.

Kumar — Bonjour madame.
வணக்கம் அம்மணி.

Isabelle — Bonjour, bonjour. Aujourd'hui vous n'avez pas bonne mine.
வணக்கம், வணக்கம், இன்று உங்களிற்கு நல்லதோற்றமாகவில்லை.

Kumar — Je n'ai aucun espoir; ça fait deux mois que je suis sans visa.
எனக்கு ஒரு நம்பிக்கையும் இல்லை, இரண்டுமாதமாக விசா இல்லாமல் இருக்கின்றேன்.

*Isabelle* En me téléphonant, vous avez dit que vous avez adressé une deuxième demande à la commission des recours.
நீங்கள் எனக்கு தொலைபேசி அழைப்புச்செய்யும் பொழுது இரண்டாம்தடவையாக commission க்கு விண்ணப்பித்துள்ளீர்கள் என கூறினீர்கள்.

*Kumar* Ça fait déjà deux mois mais je n'ai même pas reçu une réponse.
அது ஏற்கனவே இரண்டு மாதமாகின்றது. இன்னும் ஒரு பதிலையும் காணோம்.

*Isabelle* Effectivement, c'est votre deuxième demande à la commission des recours. Parfois, on n'envoie aucun courrier.
இது உங்களுடைய இரண்டாவது விண்ணப்பம், சிலவேளை commission ஒரு தபாலும் அனுப்புவதில்லை.

*Kumar* Qu'est-ce que je peux faire sans recours?
பதில் இல்லாமல் நான் என்ன செய்யமுடியும்?

*Isabelle* Ne vous cassez pas la tête pour rien, tout de même, vous travaillez?
நீங்கள் ஒன்றுமில்லாதற்கு தலையைஉடைக்கவேண்டாம். எப்படியாயினும் நீங்கள் வேலைசெய்கின்றீர்கள் தானே?

*Kumar* Je ne travaille qu'à mi-temps, vingt heures par semaine.
பகுதிநேர வேலைதான் செய்கின்றேன். கிழமைக்கு 20 மணித்தியாலங்கள்.

*Isabelle* Dans ce cas là, on va essayer d'avoir une carte d'immigrant.
இந்தக்கட்டத்தில் குடிபுகுதல் விசாவிற்கு முயற்சிக்கலாம்.

*Kumar* Je veux bien, j'ai déjà demandé à mon patron, mais il ne veut pas me garder.
நானும் விரும்புகின்றேன், ஆனால் எனது முதலாளியை ஏற்கனவே கேட்டேன், அவர் என்னை வைத்திருக்க விரும்பவில்லை.

*Isabelle* A-t-il une raison précise?
அவர் ஏதும் குறிப்பிட்ட காரணம் வைத்திருக்கின்றாரா?

*Kumar* Il m'a dit qu'à cause des problèmes économiques, il n'a pas assez de clients. Le fonctionnement du restaurant est compromis.
பொருளாதாரப்பிரச்சனையால் போதியளவு வாடிக்கையாளர்கள் இன்மையால், உணவகம் நன்றாக நடக்கவில்லையென அவர் கூறினார்.

*Isabelle* Cette année-ci, on a beaucoup de licenciements.
இந்த வருடம், அதிகமான வேலை நீக்கங்கள்தான்.

*Kumar* A-t-on le droit de téléphoner à la commission?
எங்களுக்கு commission க்கு தொலைபேசி அழைப்புச்செய்ய உரிமையுண்டா?

*Isabelle* Malheureusement, on n'a pas le droit de le faire. Si vous voulez, je pourrais parler à l'O.F.P.R.A pour vous obtenir un entretien.
துரதிஸ்டவசமாக உரிமையில்லை, நீங்கள் விரும்பினால் ஓர் சந்திப்பை எடுப்பதற்கு O.F.P.R.A விற்கு என்னால் கதைக்கமுடியும்.

*Kumar* En écrivant à la commission, peut-on avoir un entretien?
commission க்கு எழுதிக்கொண்டு, O.F.P.R.A வில் ஓர் சந்திப்பை எடுக்கலாமா?

*Isabelle* Trouvez-vous qu'il est bizarre de téléphoner à l'OFPRA.
உங்களுக்கு அது புதினமாகப்படுகின்றதா ஒப்ராவிற்கு தொலைபேசியழைப்பு செய்வது? (வழமையில் இல்லாததைப்போன்று)

<u>*Kumar*</u> Je ne crois pas ça, je ne connais pas bien les règles.
நான் அதை நம்பவில்லை, எனக்கு சரியாக ஒழுங்குகள் தெரியாது.

<u>*Isabelle*</u> En fin de semaine, j'essayerai de contacter quelqu'un. Téléphonez-moi à la fin de la semaine, ou au début de la semaine suivante.
இவ்வாரமுடிவில் ஒருவருடன் தொடர்புகொள்ள முயல்கின்றேன், கிழமைமுடிவில் அல்லது அடுத்தவார ஆரம்பத்தில் எனக்குத் தொலைத்தொடர்பு செய்யுங்கள்.

<u>*Kumar*</u> Vous avez vraiment bon coeur madame.
உங்களுக்கு நல்ல இதயம் உண்டு.

<u>*Isabelle*</u> Il n'y a pas de quoi, je suis à votre service.
அப்படி ஒன்றுமில்லை, நான் உங்களது சேவைக்காகவே இருக்கின்றேன்.

# S'inscrire au cimade...
## 'சீமாட்டில்' பதிதல்...

(பிரெஞ்சுபடித்த மாணவன் மேலும் நன்றாக இலக்கணம் கற்பதற்காகச் செல்கின்றார். அவரது உரையாடல்....)

<u>*Bala*</u> Bonjour madame, je voudrais apprendre la langue française.
வணக்கம், நான் பிரெஞ்சு கற்றுக்கொள்ள விரும்புகிறேன்.

<u>*Madame*</u> C'est bien ici, vous parlez déjà pas mal.
அது இங்கேதான், நீங்கள் ஏற்கனவே சுமாராகக் (பிழையில்லை) கதைக்கின்றீர்கள்.

<u>*Bala*</u> Oui madame, j'ai déjà appris le français.
நான் ஏற்கனவே பிரெஞ்சு படித்தேன்.

<u>*Madame*</u> C'est pratique comme ça, comment avez-vous trouvé cette adresse?
அது பிரயோசனமானது. எப்படி இந்த முகவரியைத் தெரியும் (கண்டுபிடித்தீர்கள்)?

<u>*Bala*</u> Mon ami me l'a donnée, avant il était étudiant ici.
எனது நண்பர் தான் (அதை) தந்தார், முன்பு அவர் இங்கே மாணவராக இருந்தவர்.

<u>*Madame*</u> Je dois le connaître, comment s'appelle- t - il?
எனக்கு அவரைக் கட்டாயம் தெரிந்திருக்கவேண்டும், எப்படி அவரைஅழைப்பது (பெயர்என்ன).

<u>*Bala*</u> Il s'appelle Siva.
அவரது பெயர் சிவா.

<u>*Madame*</u> Oui, Oui, je le connais, il est vraiment travailleur.
ஆம், ஆம், எனக்கு அவரைத் தெரியும். அவர் உண்மையிலேயே வேலைசெய்கிறவர்(ஊக்கம்).

<u>*Bala*</u> Il est toujours avec des livres.
அவர் எப்போதும் புத்தகங்களுடன் இருக்கின்றவர்.

<u>*Madame*</u> J'espère que vous êtes comme lui.
நீங்களும் அவரைப்போல்தான் என எதிர்பார்க்கின்றேன்.

<u>*Bala*</u> Je crois que oui, madame *(en souriant)*
அப்படித்தானென நம்புகின்றேன். *(புன்சிரிப்புடன்)*

<u>*Madame*</u> A la rentrée il y a beaucoup d'inscriptions, un mois après il y a beaucoup d'absents.
ஆரம்பத்தில் நிறையப்பதிவுகள், ஒரு மாதத்தின்பின் அதிகமானவர்கள் வராதிருப்பர்.
*பாலா புன்னகை செய்கின்றார்...*

| | |
|---|---|
| <u>*Madame*</u> | Savez-vous quel était votre niveau?<br>*என்னதரத்தில் இருந்தீர்கள் என்று தெரியுமா? (பிரெஞ்சு வகுப்புநிலை)* |
| <u>*Bala*</u> | J'étais niveau moyen, j'ai juste appris à parler un peu.<br>*நான் நடுத்தரத்தில் (வகுப்பு) இருந்தேன். ஆக நான் கொஞ்சம்கதைப்பதற்குப் படித்தேன்.* |
| <u>*Madame*</u> | Je trouve que vous avez une bonne prononciation.<br>*உங்களுக்கு ஒரு நல்ல உச்சரிப்பு இருக்கின்றதாக எனக்குப்படுகின்றது (காண்கின்றேன்).* |
| <u>*Bala*</u> | Vous êtes très aimable madame, merci beaucoup.<br>*நீங்கள் மிகவும் விரும்பத்தகுந்தவர், மிக்கநன்றி.* |

# La décision de l'ofpra
## ஒவ்றாவினுடைய தீர்மானம்

| | |
|---|---|
| <u>*Kumar*</u> | J'ai entendu dire que tu étais convoqué par l'O.F.P.R.A, Est-ce que ça c'est bien passé?<br>*நான் கேள்விப்பட்டேன் நீ ஒவ்பிறாவால் அழைக்கப்பட்டாய் என (OFPRA உன்னைக் கூப்பிட்டதாக) அது நன்றாக முடிந்ததா?* |
| <u>*Ravi*</u> | On ne m'a pas posé beaucoup de questions, simplement on m'a demandé pourquoi j'ai choisi de venir en France.<br>*அவர்கள் என்னை அதிககேள்விகள் கேட்கவில்லை, ஏன் பிரான்சுக்குவரத் தெரிவு செய்தேன் என்றுதான் கேட்டவர்கள்.* |
| <u>*Kumar*</u> | Tu étais accompagné par un interprète?<br>*நீ ஒரு மொழிபெயர்ப்பாளருடன் சென்றாயா?* |
| <u>*Ravi*</u> | Non, non, j'y suis allé tout seul, j'ai apporté tous les dossiers.<br>*இல்லை, நான் தனியாகவே சென்றேன், என்னுடைய எல்லாஆவணங்களையும் கொண்டு சென்றேன்.* |
| <u>*Kumar*</u> | Pour toi, il n'y a pas de problème puisque tes deux frères ont la carte de réfugié.<br>*உனக்கு பிரச்சனையில்லை, ஏனென்றால் உன்னுடைய இரண்டுசகோதரர்களும் அகதி அடையாள அட்டை வைத்திருக்கின்றார்கள் தானே.* |
| <u>*Ravi*</u> | Je n'y crois pas, tout le monde dit comme toi, maintenant, que tu aies de la famille déjà réfugiée ou non, on n'en tient pas compte.<br>*நான் நம்பவில்லை, எல்லோரும் உன்னை மாதிரித்தான் சொல்லுகின்றார்கள், தற்பொழுது குடும்பத்தில் யாராவது அகதியாய் இருந்தாலும் அதை கணக்கிலெடுப்பதில்லை (கருதுவதில்லை).* |
| <u>*Kumar*</u> | Aujourd'hui, nous sommes le cinq; il faut attendre encore une semaine.<br>*இன்று ஐந்தாம் திகதி, இன்னும் ஒரு கிழமை காத்திருக்கவேண்டும்.* |
| <u>*Ravi*</u> | On verra.....<br>*இருந்து பார்ப்போம்.* |
| <u>*Kumar*</u> | Même si tu es refusé par l'OFPRA, tu peux écrire à la commission.<br>*நீ ஒவ்பிறாவினால் நிராகரிக்கப்பட்டாலும் கொமிசனுக்கு எழுதமுடியும்.* |
| <u>*Ravi*</u> | Je le sais.<br>*எனக்குத்தெரியும்.* |
| <u>*Kumar*</u> | Il vaut mieux que tu aies un avocat très réputé.<br>*நீ ஒரு (பிரபலமான) நல்லவழக்கறிஞர் வைத்திருப்பது நல்லது (பெறுமதியானது).* |

*Ravi* Mes frères m'ont dit la même chose.
என்னுடைய சகோதரர்களும் அதைத்தான் சொன்னார்கள்.

*Kumar* En tout cas, je te passerai un coup de fil pour connaître la décision de l'OFPRA.
எப்படியிருந்தாலும், நான் உனக்கு தொலைபேசி அழைப்புச்செய்கின்றேன் (ஒப்பிறாவின்) மறுமொழி அறிய.

*Ravi* Merci Kumar.
நன்றி குமார்.

*Kumar* Au revoir Ravi.
போய்வருகின்றேன் ரவி.

## L'inscription à l'université
**பல்கலைக்கழகத்தில் பதிதல்**

*Kala* Bonjour monsieur.
*கலா* வணக்கம் திருவாளர்.

*Monsieur* Bonjour mademoiselle. Vous voulez savoir quelque chose?
*திருவாளர்* வணக்கம் செல்வி, நீங்கள் ஏதாவது அறிந்து கொள்ளவிரும்புகின்றீர்களா?

*Kala* Je voudrais m'inscrire à Paris X.
நான் பல்கலைக்கழகம் X இல் என்னைப்பதிந்து கொள்ளவிரும்புகின்றேன்.

*Monsieur* Quel est votre niveau d'études?
என்ன உங்கள் படிப்பின் தரம்?

*Kala* J'ai eu mon Bac, puis j'ai suivi pendant un an un cour de science à l'université de Jaffna.
நான் எனது Bac (பரீட்சையின்) பின் ஒருவருடம் யாழ்பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானம் படித்தேன்.

*Monsieur* Quel Bac avez-vous passé?
எந்த Bac பரீட்சையை எடுத்தீர்கள்?

*Kala* J'ai eu le Bac science.
நான் எனது Bac இற்கு (A/L) விஞ்ஞானத்தை எடுத்தேன்.

*Monsieur* La rentrée est début septembre; il faut attendre encore deux mois.
நல்லது, புரட்டாதி மாதத்தொடக்கத்தில் வகுப்புகள் ஆரம்பமாகும், இன்னும் இரண்டு மாதங்கள் காத்திருக்கவேண்டும்.

*Kala* Oui monsieur, Actuellement, je suis en train de suivre un cours de français à Paris XII.
ஆம், நான் இப்போது பாரீஸ்பல்கலைக்கழகம் XII இல் ஓர் பிரெஞ்சுவகுப்பைத் தொடர்கின்றேன்.

*Monsieur* Vous parlez déjà bien. tout de même il y aura un examen d'entrée, ce sera difficile.
நீங்கள் ஏற்கனவே நன்றாகக் கதைக்கின்றீர்கள், எப்படியாயினும் வகுப்புத்தொடக்கத்தில் இருக்கும் பரீட்சை போதியளவு கடினமாகத்தான் இருக்கும்.

*Kala* En attendant, je suis un cours de français, c'est bien utile.
காத்திருக்கும் நேரம், நான் ஒரு பிரெஞ்சு வகுப்பு தொடர்கின்றேன் அது பிரயோசனமாகவிருக்கும்.

*Monsieur* En tout cas, je vous donne une fiche d'inscription à remplir et à rapporter avec votre dossier.
எப்படியாயினும் நான் ஓர் நிரப்பும் படிவத்தை தருகின்றேன். உங்களுடைய ஆவணங்களுடன் அவற்றை மீண்டும் கொண்டுவரவும்.

<u>Kala</u> Oui Monsieur.
ஆம் திருவாளர்.

<u>Monsieur</u> Je veux juste savoir en quelle langue vous avez passé votre Bac.
நீங்கள் எந்தமொழியில் உங்கள் Bac பரீட்சையை எழுதினீர்கள் என்று மாத்திரம் அறியவிரும்புகின்றேன்.

<u>Kala</u> J'ai passé le bac en tamoul.
தமிழ்மொழியில் எழுதினேன்.

<u>Monsieur</u> En revenant ici, vous apportez votre diplôme du Bac, s'il vous plaît.
இங்கு திரும்பிவரும்போது உங்களது Bac பட்டத்தையும் தயவுசெய்து கொண்டுவரவும்.

<u>Kala</u> Les frais d'inscription, c'est combien?
பதிவதற்கு எவ்வளவு பணம் கட்டவேண்டும்?

<u>Monsieur</u> 800 F par an.
வருடத்திற்கு 800 பிராங்குகள்.

<u>Kala</u> Merci, au revoir.
நன்றி, போய்வருகின்றேன்.

## Dans une entreprise: deux femmes très proches l'une de l'autre
## ஒரு தொழிலகத்தில் இரு பழகியபெண்கள்

*தங்களுடைய குழந்தைகளைப்பற்றி....*

<u>Sylvie</u> Pendant ton travail, qui garde tes enfants? Vont-ils à la crèche?
சில்வி உன்னுடைய வேலைநேரத்தில் உன்னுடையபிள்ளைகளை யார் பார்ப்பது? அவர்கள் குழந்தைக் காப்பகத்திற்கா போகின்றார்கள்?

<u>Kamala</u> Non, une de mes voisines reste à la maison, c'est elle qui les garde.
கமலா இல்லை, என்னுடைய அயல்வீட்டு பெண்ணொருவர் வீட்டில் இருக்கின்றார், அவர்தான் எனது பிள்ளைகளைப்பார்ப்பது.

<u>Sylvie</u> C'est payant ou pas?
அதற்காக சம்பளம் கொடுக்கின்றாயா? இல்லையா?

<u>Kamala</u> Non, pas vraiment, mais je lui offre quelque chose.
இல்லை, உண்மையில் சம்பளம் கொடுப்பதாகவில்லை ஆனால் ஏதாவது கொடுப்பேன்.

<u>Sylvie</u> Elle a aussi des enfants?
அவளுக்கும் குழந்தைகள் இருக்கின்றனரா?

<u>Kamala</u> Elle a deux enfants, avec les miens, ça fait quatre.
அவளுக்கு இருபிள்ளைகள், என்னுடையவர்களுடன் சேர்த்து நான்கு.

<u>Sylvie</u> Tu ne cherches pas une crèche?
நீ ஒரு குழந்தைக்காப்பகம் தேடவில்லை?

<u>Kamala</u> Je n'aime pas laisser mes enfants à la crèche.
என்னுடையபிள்ளைகளை நான் அங்குவிட விரும்பவில்லை.

<u>Sylvie</u> Pour quelle raison?
என்ன காரணத்திற்காக?

<u>*Kamala*</u> Mes amies m'ont dit que si on y laisse les enfants, ils attrapent des maladies infantiles.
என்னுடைய நண்பிகள் எனக்கு கூறினவர்கள், பிள்ளைகளை அங்கு விட்டால் தொற்றுவருத்தங்கள் (குழந்தைப்பிள்ளை வருத்தம்) பிடிக்குமாம்.

<u>*Sylvie*</u> C'est sans doute vrai, cependant il vaut mieux avoir les maladies infectieuses infantiles étant enfant; car généralement elles ne sont pas graves.
அது நிச்சயமாக உண்மைதான். ஆயினும் சிறியவர்களாக இருக்கும்போது தொற்று வருத்தங்கள் வருவது நல்லதுதான், ஏன் என்றால் அந்தநோய்கள் கொடிய வருத்தங்களில்லை.

<u>*Kamala*</u> Tu as raison, mais pour notre salaire, ça nous coûte cher.
நீ சொல்வது சரி, எங்களுடைய சம்பளத்திற்கு அது மிகவும் விலை (கட்டுப்படியாகாது).

<u>*Sylvie*</u> Ton mari, lui aussi travaille. Ce n'est pas vraiment cher, ça dépend des endroits.
உன்னுடைய கணவரும் வேலைசெய்வதால் அது உண்மையில் விலையில்லை. அது இடங்களைப் பொறுத்தது (குழந்தை பார்க்குமிடம்).

<u>*Kamala*</u> Comment vont tes enfants?
எப்படி உன்னுடைய பிள்ளைகள்?

<u>*Sylvie*</u> Ils vont bien; Ils apprennent à peindre avec la main et le pied, ils font même du bricolage, et ils écoutent aussi de la musique.
அவர்கள் நன்றாகவிருக்கின்றார்கள். கையால், காலினால் சித்திரம் வரைவதையும், திருத்த வேலையையும் பழகுவதுடன் சங்கீதத்தையும் கேட்கின்றார்கள்.

<u>*Kamala*</u> C'est intéressant.
அது விரும்பத்தக்கது.

<u>*Sylvie*</u> Ta grande fille a deux ans? A son âge, elle doit commencer à parler?
உன்னுடைய பெரியமகளுக்கு இரண்டுவயதில்லையா, அவளுடைய வயதிற்கு கதைக்கத் தொடங்கவேண்டுமே?

<u>*Kamala*</u> Elle ne sait pas vraiment encore dire un mot.
உண்மையிலே அவளுக்கு ஒரு சொல்லுக்கூடச் சொல்லத்தெரியாது.

<u>*Sylvie*</u> Ton deuxième va bien?
உன்னுடைய இரண்டாவது எப்படி?

<u>*Kamala*</u> Il est maintenant insupportable. Il devient pénible.
அவனைத் தற்பொழுது தாங்கமுடியாது (சகிக்க). அவன் குழப்படியாக (தொந்தரவாக) வருகின்றான்.

<u>*Sylvie*</u> Le week-end prochain, si tu as le temps, tu les amèneras chez moi. Nous irons au parc.
அடுத்தகிழமை, உனக்குநேரமிருப்பின் அவர்களை என்னுடைய வீட்டிற்கு அழைத்துவா. நாங்கள் பூங்காவிற்குப் போவோம்.

<u>*Kamala*</u> Je vais demander à mon mari. Après, je te passerai un coup de fil.
என்னுடைய கணவனிடம் கேட்டுவிட்டு உனக்கு தொலைபேசி அழைப்புச்செய்கின்றேன்.

<u>*Sylvie*</u> Si tu trouves un travail à mi-temps, tu peux garder tes enfants à la maison.
நீ ஒரு பகுதிநேரவேலை எடுத்தால் உன்னுடைய பிள்ளைகளை வீட்டிலேயே வைத்துப்பார்க்க முடியும்.

<u>*Kamala*</u> J'aime bien travailler à mi-temps. Actuellement, c'est dur de trouver un travail, d'avoir un contrat à durée indéterminée.
நான் பகுதிநேரவேலை செய்யவே விரும்புகின்றேன், ஆனால் தற்சமயம் வேலைஎடுத்து நிரந்தர ஒப்பந்தம் செய்வது கடினமானது.

Sylvie — Ça y est, le train arrive. Je te laisse. A demain.
சரி, புகையிரதம் வருகின்றது நான் உன்னை விடுகின்றேன், நாளை சந்திப்போம்.

Kamala — Au revoir, bonne soirée.
சென்றுவருகின்றேன், நல்ல மாலையாகட்டும்.

Sylvie — Merci, toi aussi, au revoir.
நன்றி, உனக்கும் அதுவே, சென்றுவருகின்றேன்.

## Dans une boutique...

(Kamala veut acheter une chemise)

**ஓர் கடையில்...** *(கமலா ஒரு சேட்டு வாங்க விரும்புகின்றாள்)*

La vendeuse (பெண் விற்பனையாளர்) — Bonjour mademoiselle!
வணக்கம் செல்வி!

Kamala (கமலா) — Bonjour, madame!
வணக்கம்! அம்மணி

Vendeuse — Qu'est-ce que vous désirez?
என்ன நீங்கள் விரும்புகின்றீர்கள்?

Kamala — Je voudrais savoir s'il y a des soldes sur les chemises pour femmes.
நான் பெண்களின் சேட்டுக்கள் மலிவுவிலையில் (போட்டிருக்க) இருக்கிறதா என்பதை அறியவிரும்புகின்றேன்.

Vendeuse — Bien sûr, A part ces nouvelles collections, tout est soldé à 50 %.
நிச்சயமாக, புதிய தெரிவுகள் (வகைகள்) தவிர, மிகுதி எல்லாம் ஐம்பது வீதம் கழிவில் உள்ளன.

Kamala — Ah bon!
நல்லது.

Vendeuse — Alors, avez-vous une idée?
அப்போ, உங்களுக்கு ஒருஎண்ணம் (திட்டம்) உண்டா?

Kamala — J'aimerais une chemise.
ஒரு சேட்டைத்தான் அதிகம் விரும்புகின்றேன்.

Vendeuse — Une chemise comment? Sans manches ou avec manches?
எப்படியான சேட்டு, கை இல்லாததா அல்லது கையுள்ளதா?

Kamala — Une chemise avec des manches, je n'aime pas trop sans manches.
கை வைத்த சேட்டுத்தான், நான் கையில்லாத சேட்டுக்களை அதிகம் விரும்புவதில்லை.

Vendeuse — J'ai encore des manches bouffantes, ça vous plaît?
நான் இன்னும் பொங்குகை சேட்டுகள் வைத்திருக்கின்றேன். அது உங்களுக்கு விருப்பமா?

Kamala — Pour l'été, c'est très pratique.
கோடைகாலத்திற்கு அது மிகவும் வசதியானது.

Vendeuse — Quelle est votre taille?
*என்ன அளவு உங்களுக்கு?*

Kamala — Je fais du 38.
*நான் 38ம் அளவு (எனக்கு 38ம் நம்பர்).*

Vendeuse — Voulez-vous l'essayer?
*நீங்கள் இதை போட்டுப்பார்க்க விரும்புகின்றீர்களா?*

Kamala — Oui d'accord...
ça me va bien, n'est-ce pas?
*ஆம் நல்லது. இது எனக்கு நல்லாக இருக்கின்றது, இல்லையா?*

Vendeuse — Surtout cette couleur, elle vous va très très bien.
*முக்கியமாய் (குறிப்பாக) இந்த நிறம் உங்களிற்கு நன்றாக இருக்கின்றது.*

Kamala — Je vais la prendre.
*நான் இதை எடுக்கப்போகின்றேன்.*

Vendeuse — Désiriez-vous autre chose?
*நீங்கள் இன்னும் ஏதாவது விரும்புகின்றீர்களா?*

Kamala — Non, non, ça fait combien?
*இல்லை, இல்லை, இது என்ன விலை?*

Vendeuse — ça fera cent francs.
*இதன் விலை நூறு பிராங்குகள்.*

Kamala — Je peux régler par chèque?
*நான் காசோலைமூலம் பணம் செலுத்தலாமா?*

Vendeuse — Tout à fait. Avez-vous une pièce d'identité? Merci.
*நிச்சயமாக, உங்களிடம் ஒரு அடையாளஅட்டையுண்டா? நன்றி.*

## Conversation téléphonique entre un patron et un employé
**முதலாளி தொழிலாளிக்கிடையிலான நட்புரீதியான தொலைத்தொடர்பு**

*Le téléphone sonne....(தொலைபேசி ஒலிக்கின்றது.)*

*Le patron* *(Dupont)* — Allo! Qui est à l'appareil?
*யார் தொலைபேசியில்?*

*L'employé* *(Mani)* — Bonjour monsieur, c'est Mani.
*வணக்கம் ஐயா, அது மணி.*

*Dupont* — Bonjour Mani, c'est vous, comment allez-vous? Est-ce que ça va mieux?
*வணக்கம் மணி, அது நீங்கள்? எப்படி உங்கள் சுகம்? நன்றாக இருக்கிறீர்களா?*

*Mani* — Je ne me sens pas encore très bien. Je prends toujours des médicaments.
*நான் இன்னும் நன்றாகவில்லை. எப்பொழுதும் மருந்து எடுத்துக்கொண்டிருக்கின்றேன்.*

*Dupont* — Soignez-vous bien.
*(நீங்கள்) உங்களை நன்றாகச் சுகப்படுத்துங்கள்.*

*Mani* Avez-vous reçu ma demande de congé maladie?
தங்களுக்கு எனது மருத்துவலீவு எடுப்பதற்கான பத்திரம் கிடைத்ததா?

*Dupont* Non, Je ne l'ai pas encore reçue.
இல்லை, அதை நான் இன்னும் பெற்றுக்கொள்ளவில்லை.

*Mani* Pourtant je l'ai envoyée avant-hier.
ஆயினும், நான் நேற்றுமுன்தினம் அனுப்பிவிட்டேன்.

*Dupont* Ne vous inquiétez pas, peut-être je l'aurai ce soir ou demain.
நீங்கள் அதற்குக்கவலைப்படவேண்டாம், சிலவேளை இன்றுமாலை அல்லது நாளையோ பெற்றுக்கொள்வேன்.

*Mani* Merci beaucoup monsieur, Avez-vous trouvé un remplaçant?
மிக்க நன்றி ஐயா, நீங்கள் பிரதியாளைக் கண்டுபிடித்துவிட்டீர்களா?

*Dupont* Ce n'est pas facile à trouver un bon employé comme vous.
உங்களைப்போல் நல்லதொழிலாளியைக் கண்டுபிடிப்பது சுலபமல்ல.

*Mani* C'est vrai? Je crois que vous êtes en train de chercher un cuisinier.
உண்மையாகவா? நீங்கள் ஒரு சமையல்காரரைத்தேடிக் கொண்டிருக்கின்றீர்களென நான் நினைக்கின்றேன்.

*Dupont* Sûrement, il y a deux étudiants français qui ont travaillé ici; comme souvent ils travaillent un jour ou deux après ils s'en vont.
நிச்சயமாக, இங்கு இரு பிரெஞ்சுமாணவர்கள் வேலைசெய்தனர். வழமையாக நடப்பதுபோன்று ஒரு நாளோ இரண்டு நாளோ வேலைசெய்வது பின் காணோம்.

*Mani* Un de mes amis cherche du travail, si vous voulez, je l'enverrai chez vous.
என்னுடைய நண்பர்களில் ஒருவர் வேலை தேடுகின்றார், நீங்கள் விரும்பினால் அவரை உங்கள் வீட்டிற்கு அனுப்புகின்றேன்?

*Dupont* D'accord, Je veux bien embaucher des srilankais, Ils ne parlent pas beaucoup mais ils sont gentils.
உடன்படுகின்றேன், நான் இலங்கையரை வேலைக்கு அமர்த்தவிரும்புகின்றேன், அவர்கள் அதிகம் கதைக்கமாட்டார்கள். ஆனால் நல்லவர்கள்.

*Mani* Vous avez une bonne opinion de nous.
உங்களுக்கு எங்களைப்பற்றி நல்ல அபிப்பிராயம்.

*Dupont* Je vous fais confiance.
நான் உங்களில் நம்பிக்கை வைத்திருக்கின்றேன்.

## Comment aborder le français courant?
### நடைமுறையில் எப்படி பிரெஞ்சுகதைப்பது?

*Professeur* Aujourd'hui, chacun va parler des coutumes de son pays.
ஆசிரியர் இன்று, ஒவ்வொருவரும் தங்களது நாட்டுவழக்கங்களைப்பற்றி கதைக்கப்போகின்றீர்கள்.

*Victor* Oui, oui madame, nous n'apprenons que la grammaire, mais nous voudrions apprendre les usages de la vie courante.
ஆம், நாங்கள் இலக்கணம்தான் கற்கின்றோம், ஆனால் நாங்கள் நடைமுறை வாழ்க்கையில் பிரயோகப்படுத்தப்படுவதை அறிய விரும்புகின்றோம்.

<u>*Patricia*</u> C'est vrai, il a raison; souvent même pour faire une petite phrase, je n'y arrive pas bien.
அது உண்மை, அவர் நியாயமானவர்(சொல்வது சரி), ஒரு சின்னவசனத்தைக்கூட எனக்கு உருவாக்க முடியாதிருக்கின்றது.

<u>*Professeur*</u> J'aperçois quel est votre problème il faut pratiquer; même si vous n'y arrivez pas bien.
என்ன உங்கள் பிரச்சனை என்பதை அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றது. வராவிட்டாலும் (வசனம்) பயிற்சி செய்யவேண்டும்.

<u>*Paul*</u> Est-ce qu'on peut poser des questions sur la politique?
நாங்கள் அரசியல் கேள்விகள் கேட்கலாமா?

<u>*Professeur*</u> Normalement, on n'a pas le droit de parler de politique à l'école.
பொதுவாக, எங்களுக்கு பாடசாலையில் அரசியல் கதைக்கஉரிமையில்லை.

<u>*Sophie*</u> Non madame, non, non nous voulons plutôt bavarder.
இல்லை, இல்லை நாங்கள் அலம்பத்தான் விரும்புகின்றோம் (அரட்டையடிக்க).

<u>*Professeur*</u> Qui veut parler le premier? peut-être Paul....?
யார்முதல் கதைக்கவிரும்புகின்றீர்கள்? சிலவேளை போல்...?

<u>*Paul*</u> Je m'exprime très mal, surtout pas aujourd'hui, pourrais-je parler un autre jour s'il vous plaît madame.
நான் பிழையாக விளங்கப்படுத்துவேன், முக்கியமாக இன்றில்லை, தயவுசெய்து இன்னுமொரு நாளைக்கு என்னால் முடியும்.

<u>*Professeur*</u> Tout de même, tous les élèves doivent discuter.
எப்படியாயினும் எல்லாமாணவர்களும் விவாதிக்கவேண்டும்.

<u>*Sophie*</u> Dans notre classe Siva écrit bien; peut-être a-t-il beaucoup de facilité pour parler?
எங்கள் வகுப்பில் சிவா நன்றாக எழுதுவார், சிலவேளை அவருக்கு கதைப்பதற்கு சுலபமாக இருக்கும்?

<u>*Professeur*</u> En effet, Sophie, vous avez raison Siva écrit bien, silence! silence s'il vous plaît. Nous allons écouter Siva...
உண்மை சோபி, நீங்கள் சொல்வதுசரி (நீங்கள் காரணம் வைத்திருக்கின்றீர்கள்) சிவா நன்றாக எழுதுவார், தயவுசெய்து அமைதி, அமைதி நாங்கள் சிவாவைக் கேட்கப்போகின்றோம்.

## *Coutumes de son pays...* நாட்டுவழக்கம்

<u>*Note*</u>: *பிரெஞ்சு கற்பிக்கப்படும் பாடசாலைகளில், தமிழ் மாணவர்கள் இருப்பார்களாயின் அவர்களிடம், வேறு நாட்டு அல்லது பிரெஞ்சு மாணவர்கள் ஏன் உங்கள் நாட்டுபெண்கள் சிவப்புநிறப்பொட்டு, சேலைகள் அணிவது பற்றியே அதிகம் (கலாச்சாரம் பற்றி!) அறிந்து கொள்ள விரும்புவது. மிகச்சுலபமாக விளங்கிகொள்ளும் முறையில் ஓர் தமிழ் மாணவனுக்கும், அவருடைய சகமாணவர்களுக்கும் நடக்கும் உரையாடல் இது.*

<u>*Siva*</u> Je ne sais pas quoi dire! vous me posez des questions?
எனக்கு என்ன சொல்வதென்று தெரியாது, நீங்கள் என்னை கேள்விகள் கேட்கின்றீர்களா?

<u>*Professeur*</u> Chez vous, les femmes mettent un point rouge ou noir, Qu'est-ce que ça signifie?
உங்கள் நாட்டில் பெண்கள் சிவப்பு அல்லது கறுப்புப்பொட்டு இடுகின்றார்களே அதற்கு என்ன அர்த்தம்?

<u>*Siva*</u> Si une femme est mariée, elle peut mettre un point rouge, si elle est célibataire on peut mettre un point noir.
ஒருபெண் திருமணம்செய்தால்,அவர் சிவப்புப்பொட்டும், திருமணமாகாதவராயின் கறுப்புப்பொட்டும் இடுகின்றார்கள்.

<u>Une élève</u> C'est obligatoire ou pas?
அது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளதா? அல்லது இல்லையா?

<u>Siva</u> Ce n'est pas du tout obligatoire, on en met un si on veut.
அது நிச்சயமாகக் கட்டாயப்படுத்தப்படவில்லை, விரும்பம்போல போடலாம் (கறுப்போ, சிவப்போ)

<u>Sophie</u> Je trouve que c'est vraiment joli.
எனக்கு உண்மையாக அது அழகாகப்படுகின்றது.

<u>Paul</u> S'il te plaît Sophie, tu arrêtes de bavarder comme ça.
தயவுசெய்து சோபி, நீ இப்படி அலம்புவதை நிற்பாட்டு.

<u>Professeur</u> Dans le métro j'ai vu des femmes qui s'habillent avec des vêtements ayant beaucoup de plis, c'est ça le sari?
மெற்றோவுக்குள் அதிகம் சுருக்குவைத்த உடுப்பணிந்தபெண்களைப் பார்த்திருக்கின்றேன், அது தானே சேலை?

<u>Siva</u> Tout à fait! quand on va à la fête, les femmes s'habillent avec un sari de couleur vive (rouge,bleu, jaune)
சரியாக, கொண்டாட்டத்திற்கு பெண்கள் போகும்பொழுது கடும்வர்ணச்சேலைகளை அணிகின்றார்கள் (சிவப்பு, நீலம், மஞ்சள்).

<u>Professeur</u> L'achète-t -on avec les plis? comment fait-on?
சுருக்குகளுடன் வாங்குவதா? எப்படிச்செய்வது?

<u>Siva</u> On achète simplement, le tissu (le sari) mesurant cinq mètres à peu près.
சாதாரணமாக துணியாக ஐந்துமீற்றர் அளவில் வாங்குவது.

<u>Sophie</u> A mon avis, c'est assez long, cinq mètres comment la pauvre femme peut-elle s'habiller avec tout ça toute seule?
எனது எண்ணம், 5 மீற்றர் மிகவும் நீளமானது, எப்படித் தனியாக(பாவம்) ஒருபெண் அவ்வளவு துணியையும் அணிவது.

<u>Professeur</u> Pouvez-vous nous expliquer comment on s'habille?
எப்படி அணிவதென்று நீங்கள் விளங்கப்படுத்த முடியுமா?

<u>Siva</u> Il faut dix minutes pour s'habiller, on met d'abord une jupe longue comme sous-vêtement. Ensuite, on roule le sari une fois autour des hanches; on fait huit ou neuf plis qui tiennent soit avec une épingle soit avec la ceinture de la jupe. enfin on jette le reste du tissu, par-dessus l'épaule gauche.
உடுத்துவதற்கு பத்துநிமிடம் தேவையானது. முதல் உள்ஆடையாக நீண்ட பாவாடையணிதல், அடுத்து ஒருதடவை இடுப்பை சுற்றி, 8 அல்லது 9 சுருக்குகள் செய்து (ஒருஊசியால்) பாவாடையின் நாடாவில் செருகவேண்டும். இறுதியாக மிஞ்சியிருக்கும் துணியை இடது பக்க தோள் மூட்டில் விடவேண்டும் (எறியவேண்டும்).

<u>Paul</u> Je trouve que c'est assez compliqué.
எனக்கு இது சரியான கரைச்சலாகப்படுகின்றது.

<u>Professeur</u> Pourquoi choisit-on une couleur vive? Chez nous en France, les femmes pour leur mariage s'habillent en blanc.
எதற்கு பிரகாசமான ஒரு நிறத்தைத் தெரிவுசெய்கின்றார்கள்? பிரான்சில் பெண்கள் தங்களது திருமணத்திற்கு வெள்ளையில் தான் உடுத்துவது.

<u>Siva</u> Chez nous, après la mort du mari, la femme s'habille en blanc (normalement).
எங்கள் நாட்டில், கணவனை இழந்தபெண்கள் பொதுவாக வெள்ளையில்தான் அணிவது.

<u>*Professeur*</u> Est-ce qu'il y a encore des signes de ce genre?
இன்னும் இப்படி அடையாளங்கள் உண்டா?

<u>*Siva*</u> Pas tellement, mais si les femmes sont veuves, elles ne mettent ni point rouge, ni point noir.
அதிகமில்லை, ஆனால் பெண்கள் விதவையாக இருந்தால், அவர்கள் சிவப்போ, கறுப்போ (பொட்டு) அணிவதில்லை.

<u>*Professeur*</u> Distingue-t-on ainsi les femmes mariées, des femmes veuves?
திருமணம்செய்த பெண்களை, விதவைப்பெண்களிலிருந்து வேறுபடுத்த முடியுமா?

<u>*Siva*</u> Actuellement, ça change beaucoup j'aimerais que ça disparaisse complètement.
தற்சமயம், அது அதிகம் மாறுகிறது. அது முழுதாக மறைவதை நான் விரும்புகின்றேன்.

<u>*Professeur*</u> J'espère que vous êtes optimiste?
நான் எதிர்பார்க்கின்றேன், நீங்கள் எதிலும் நன்மையை நினைப்பவர் என்று.

<u>*Siva*</u> Tout à fait, tout à fait.
பூரணமாக, பூரணமாக.

*(Victor, Patricia, Paul, Siva, Sophie - les élèves)*

# Envoyer une lettre
## ஒரு கடிதம் அனுப்புதல்

(நிர்மலா ஒரு கடிதமும், ஒரு பொதியும் அனுப்புவதற்காகத் தபால் அலுவலகத்திற்குச் செல்கின்றார்)

<u>*Nirmala*</u> Bonjour monsieur! Je voudrais envoyer cette lettre au Srilanka.
நிர்மலா வணக்கம் திருவாளரே, நான் இந்தக்கடிதத்தை இலங்கைக்கு அனுப்பவிரும்புகின்றேன்.

<u>*Le postier*</u> Bonjour! Par avion?
அலுவலகர் வணக்கம், விமானமூலமா?

<u>*Nirmala*</u> Oui, par avion.
ஆம், விமானமூலம்.

<u>*Le postier*</u> Il faut l'affranchir à 5 francs 20.
5,20 பிராங்குகள் பெறுமதியான முத்திரை ஒட்டவேண்டும்.

<u>*Nirmala*</u> Avec ça, je voudrais envoyer ce paquet en Inde s'il vous plaît.
அத்துடன், நான் இந்தப்பார்சலை இந்தியாவுக்கு அனுப்பவேண்டும் தயவுசெய்து.

<u>*Le postier*</u> Par avion ou en ordinaire?
விமானமூலமா அல்லது சாதாரணமாகவா?

<u>*Nirmala*</u> C'est combien par avion?
விமானமூலம் எவ்வளவு?

<u>*Le postier*</u> (Le postier pèse le paquet) Ça vous fera soixante francs.
(தபால் அலுவலகர் பார்சலை நிறுக்கின்றார்) அறுபது பிராங்குகள்.

<u>*Nirmala*</u> Ah non, alors, c'est trop cher!
இல்லை, அது சரியான விலை.

<u>*Le postier*</u> Tarif ordinaire, alors? Dans ce cas, c'est trente francs. Remplissez la fiche de douane, s'il vous plaît.
அப்போ சாதாரணகட்டணம்? இச்சந்தர்ப்பத்தில் முப்பது பிராங்குகள். சுங்கப்படிவத்தை தயவுசெய்து நிரப்புங்கள்.

*Nirmala* Et je voudrais trois aérogrammes et une télécarte à cinquante unités, s'il vous plaît.
*தயவுசெய்து எனக்கு 3 ஏரோகிராமும் 50 யுனிட்டுகள் கொண்ட ஒரு தொலைபேசிக் காட்டும் வேண்டும்.*

*Le postier* Vous avez rempli la fiche pour les objets en recommandé?
*பொருட்களுக்கான பதிவுத்தபால் படிவத்தை நிரப்பிவிட்டீர்களா?*

*Nirmala* Oui, voilà monsieur, et en plus je voudrais cinq timbres à deux francs quatre-vingts (2,80 F).
*ஆம், இந்தாருங்கள் அத்துடன் எனக்கு 2,80 பிராங்குகள் பெறுமதிகொண்ட 5 முத்திரைகள் வேண்டும்.*

*Le postier* Tenez vos aérogrammes, timbres et votre télécarte.
*இந்தாருங்கள் உங்களுடைய ஏரோகிராம்களும், முத்திரைகளும், தொலைபேசிக் காட்டும்.*

*Nirmala* Merci, monsieur, je voudrais téléphoner; est-ce qu'il y a une cabine téléphonique?
*நன்றி, நான் தொலைபேசிசெய்யவேண்டும். இங்கு தொலைபேசிஅறை உள்ளதா?*

*Le postier* Oui mademoiselle! Donnez-moi votre carte d'identité. Vous pouvez utiliser la cabine n° 2.
*ஆம் உங்களுடைய அடையாளஅட்டையை தந்துவிட்டு, நீங்கள் 2ம் இலக்கஅறையை உபயோகிக்கலாம்.*

*நிர்மலா தொலைபேசியில் தொடர்புசெய்து முடிந்ததன்பின்பு....*

*Nirmala* Ça fait combien en tout monsieur?
*மொத்தம் எவ்வளவு?*

*Le postier* Ça vous fait cent francs (100 F).
*100 பிராங்குகள்.*

*Nirmala* Tenez monsieur, 100 francs Et ma carte d'identité s'il vous plaît?
*இந்தாருங்கள் 100 பிராங்குகள், தயவுசெய்து எனது அடையாளஅட்டையைத் தாருங்கள்.*

*Le postier* Merci! et Tenez, votre carte.
*நன்றி, இந்தாருங்கள் உங்களுடைய அட்டை.*

*Nirmala* Merci! Au revoir, monsieur.
*நன்றி, மீண்டும் சந்திப்போம்.*

*Le postier* Au revoir, mademoiselle.
*மீண்டும் சந்திப்போம்.*

# A la préfecture de la police
**பொலிஸ்நிலையத்தில்...**

*Sri* Bonjour madame.
*வணக்கம் அம்மணி.*

*Madame* Bonjour monsieur.
*வணக்கம் ஐயா.*

*Sri* C'est pour le renouvellement de ma carte de séjour.
*எனது வதிவிட அட்டையை மீளப்புதுப்பித்தலுக்காக.*

*Madame* Voyons voir, puis-je avoir votre récépissé?
*பார்ப்போம், நான் உங்கள் விசாவை வைத்திருக்கலாமா?*

*Sri* Bien sûr.
*நிச்சயமாக.*

| | |
|---|---|
| Madame | Oui, c'est exact c'est le dernier jour de validité.<br>*ஆம், நிச்சயமாக, அது இறுதிப் பெறுமதிநாள்.* |
| Sri | C'est bien ça.<br>*அதுதான்.* |
| Madame | Vous avez apporté tout ce qu'il faut?<br>*நீங்கள் தேவையானவற்றைக் கொண்டுவந்துள்ளீர்களா?* |
| Sri | J'espère... (en souriant)<br>*நான் எதிர்பார்க்கின்றேன் அப்படித்தான் (சிரித்தபடி)* |
| Madame | Il n'y a pas de certificat d'hébergement.<br>*இங்கே வசிப்பதற்கான அத்தாட்சிப்பத்திரம் இல்லை.* |
| Sri | Non; madame, J'habite mon propre logement. Peut-être n'avez -vous pas encore vu mon dossier?<br>*இல்லை, நான் எனது வீட்டில்தான் வசிக்கின்றேன். சிலவேளை நீங்கள் எனது ஆவணங்களை இன்னும் பார்க்கவில்லையா?* |
| Madame | Excusez-moi monsieur ! Je le regarde maintenant.<br>*என்னை மன்னியுங்கள், நான் இப்போதுதான் அதைப் பார்க்கின்றேன்.* |
| Sri | Madame, je suis pressé, car je travaille dans un restaurant.<br>*எனக்கு அவசரமாக உள்ளது, நான் ஒரு உணவகத்தில் வேலைசெய்கின்றேன்.* |
| Madame | Ici, c'est terminé; vous pouvez aller directement au guichet trois.<br>*இங்கு முடிந்துவிட்டது, நீங்கள் நேரடியாக மூன்றாவது கவுண்டருக்குப் போகலாம்.* |
| Sri | C'est tout? Merci madame.<br>*அவ்வளவுதானா? நன்றி அம்மணி.* |
| Madame | Merci monsieur.<br>*நன்றி ஐயா.* |

# Ouvrir un compte
## ஒரு கணக்குத் திறத்தல்

*(இராஜா வங்கியில் ஒருகணக்கு திறக்கச் செல்கின்றார்)*

| | |
|---|---|
| Raja<br>இராஜா | J'aimerais bien ouvrir un compte ici.<br>*நான் இங்கே ஒரு கணக்கு திறக்கவிரும்புகின்றேன்.* |
| Employé<br>ஊழியர் | Avez-vous une activité professionnelle?<br>*நீங்கள் வேலையில் இருக்கின்றீர்களா? (நீங்கள் ஒரு தொழிற்பாட்டில் இருக்கின்றீர்களா?)* |
| Raja | Oui monsieur, je suis salarié.<br>*ஆம், நான் சம்பாதிப்பவன் (சம்பளம் பெறுபவர்).* |
| Employé | Avez-vous une pièce d'identité sur vous?<br>*உங்களுடன் ஒரு அடையாள அட்டையிருக்கின்றதா?* |
| Raja | Bien sûr, je l'ai toujours avec moi.<br>*நிச்சயமாக, அதை எப்பொழுதும் என்னுடன் வைத்திருக்கின்றேன்.* |

<u>*Employé*</u> Vous habitez chez quelqu'un?
நீங்கள் வேறொருவர் வீட்டிலா சீவிக்கின்றீர்கள்?

<u>*Raja*</u> Oui, j'habite chez mon frère.
ஆம், நான் எனது சகோதரர் வீட்டில் சீவிக்கின்றேன்.

<u>*Employé*</u> Dans ce cas, vous apporterez un certificat d'hébergement.
நீங்கள் இன்னொருவரது வீட்டில் வசிப்பதால் வசிப்பதற்குரிய அத்தாட்சிப்பத்திரம் கொண்டுவரவேண்டும்.

<u>*Raja*</u> Ce sera tout?
அவ்வளவும் தானா?

<u>*Employé*</u> Comme vous êtes salarié, vous apporterez aussi vos derniers bulletins de salaire.
நீங்கள் வேலைசெய்வதால், உங்களது இறுதிச்சம்பளச்சீட்டுபடிவங்களையும் கொண்டுவரவும்.

<u>*Raja*</u> Je voudrais savoir si je peux avoir la carte bleue.
நீலமட்டை (காசு எடுப்பதற்குரிய) யையும் வைத்திருக்கமுடியுமாவென அறியவிரும்புகின்றேன்.

<u>*Employé*</u> Pas tout de suite! Vous pourrez la demander après trois mois.
உடனடியாக இல்லை, நீங்கள் மூன்று மாதங்களின்பின் அதைக் கேட்கலாம்.

<u>*Raja*</u> Peut-on verser des espèces?
காசாகவும் (சில்லறையாகவும்) வங்கியில் போடலாமா?

<u>*Employé*</u> Aucun problème.
ஒரு பிரச்சனையுமில்லை.

***Après un an ... un compte d'épargne logement***
***ஒரு வருடத்தின் பின்.. வீட்டுவசதிக்கான சேமிப்புக்கணக்கு***

<u>*Employé*</u> Vous êtes un bon client chez nous.
நீங்கள் எமது வங்கியின் ஒரு நல்ல வாடிக்கையாளர்.

<u>*Raja*</u> Je m'en doutais (en souriant).
எனக்குத்தெரியும் (சிரித்துக்கொண்டு).

<u>*Employé*</u> Actuellement, vous avez le chéquier et la carte bleue.
இப்போது, காசோலையும், நீலமட்டையும் வைத்திருக்கின்றீர்கள்.

<u>*Raja*</u> Je les ai depuis quelques mois.
நான் சிலமாதங்களாக அவைகளை வைத்திருக்கின்றேன்.

<u>*Employé*</u> Nous vous proposons d'ouvrir un compte d'épargne logement.
நாங்கள் உங்களை வீட்டுசேமிப்புக்கான ஒரு கணக்கை திறக்க வேண்டுகின்றோம் (முன்மொழிகின்றோம்).

<u>*Raja*</u> Je veux bien, Combien verse-t-on chaque mois?
நான் விரும்புகின்றேன், ஒவ்வொருமாதமும் எவ்வளவுபணம் போடவேண்டும்?

<u>*Employé*</u> Ça dépend de votre salaire.
அது உங்களது சம்பளத்தைப்பொறுத்தது.

<u>*Raja*</u> Je touche un peu plus que le SMIC.
நான் (அடிப்படைச் சம்பளத்தை) சிமிக்கைவிட கொஞ்சம் அதிகம் சம்பாதிக்கின்றேன்.

<u>*Employé*</u> Vous virez 600F par mois; ça suffira.
*நீங்கள் மாதத்திற்கு 600பிராங்குகள் போடவேண்டும், அது போதுமானது.*

<u>*Raja*</u> Le prélèvement, ça sera quand?
*எப்பொழுது பணம் எடுக்கப்படும்?*

<u>*Employé*</u> Au début du mois soit le cinq ou le six.
*மாதத்தொடக்கத்தில் 5ம், 6ம் திகதியாகவிருக்கும்.*

<u>*Raja*</u> Si on n'a pas d'argent sur son compte à la date de prélèvement, comment réagissez - vous?
*காசு எடுக்கும் திகதியில் ஒருவரின் கணக்கில் காசுஇல்லாவிடின் நீங்கள் என்னமாதிரி நடவடிக்கை எடுப்பீர்கள்?*

<u>*Employé*</u> Ne vous inquiétez pas pour cela. Comme vous avez un compte courant, on va tirer l'argent sur le compte courant.
*நீங்கள் அதற்குப் பயப்படவேண்டாம். நீங்கள் நடைமுறைக்கணக்கு வைத்திருப்பதால் அதிலிருந்து காசு எடுக்கப்படும்.*

<u>*Raja*</u> Ah bon, je veux bien réfléchir un peu, je vous dirai tout cela la prochaine fois.
*நல்லது, நான் கொஞ்சம் யோசிக்க விரும்புகின்றேன். அடுத்தமுறை மறுமொழி சொல்லுகின்றேன்.*

<u>*Employé*</u> Vous prenez votre temps, je ne vous oblige pas, c'est votre choix.
*நீங்கள் நேரத்தை எடுங்கள், நான் கட்டாயப்படுத்தவில்லை, அது உங்கள் விருப்பம் (தெரிவு).*

<u>*Raja*</u> Oui, je le sais bien, quelle est la situation de mon compte? s'il vous plaît.
*ஆம், அது எனக்கு நன்றாகத்தெரியும், தயவுசெய்து எனது கணக்குநிலையை கூறமுடியுமா?*

<u>*Employé*</u> Le compte courant est à 2000F, le compte épargne à 15 000F.
*நடைமுறைக்கணக்கில் 2000 பிராங்குகளும், சேமிப்புக்கணக்கில் 15 000 பிராங்குகளும் இருக்கின்றது.*

<u>*Raja*</u> Jusqu'à maintenant, je n'ai pas eu d'agios.
*தற்சமயம்வரை வங்கியில் எனக்கு குற்றக்கட்டணமில்லை.*
*(வங்கியில் கட்டும்வரி - காசு கணக்கில் இல்லாதபோது காசோலை கொடுப்பதினால் ஏற்படும் குற்றப்பணம்)*

<u>*Employé*</u> Chaque fois qu'on paye par chèque, il faut vérifier le compte.
*ஒவ்வொரு தடவையும் காசோலைமூலம் கட்டணம் செலுத்தும்போது கணக்கை சரிபிழை பார்க்கவேண்டும்.*

<u>*Raja*</u> Quand même, au début du mois il y a des prélèvements d'EDF, de téléphone.
*எப்படியிருந்தாலும், மாதத்தொடக்கத்தில் மின்சாரத்திற்கும், தொலைபேசிக்கும் முன்கூட்டியே பணம் எடுக்கப்படும்.*

<u>*Employé*</u> Vous avez raison, tout le monde a des soucis, au début du mois.
*நீங்கள் சொல்வது சரி, எல்லோருக்கும் மாதத்தொடக்கத்தில் பிரச்சனைதான்.*

## A l'agence de voyages
## பயண முகவர்நிலையம்

<u>*Kumar*</u> J'aimerais avoir quelques renseignements, s'il vous plaît.
*குமார்* *நான் சிலதகவல்களை அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.*

<u>*Employé*</u> Bien sûr, je suis là pour ça.
*அலுவலகர்* *நிச்சயமாக, நான் அதற்காகவே இருக்கின்றேன்.*

*Kumar* La semaine prochaine, je pars à Singapour.
*அடுத்தகிழமை நான் சிங்கப்பூர் புறப்படுகின்றேன்.*

*Employé* Quel jour voulez-vous voyager?
*எந்தநாள் பிரயாணம்செய்ய விரும்புகின்றீர்கள்?*

*Kumar* Samedi matin, est-ce possible?
*சனிக்கிழமை காலை, சாத்தியமா?*

*Employé* Je suis désolé, c'est complet. Mais vendredi soir, il y a une place.
*மன்னிக்கவும், அன்று பூரணமாகிவிட்டது, ஆனால் வெள்ளிக்கிழமை இரவு ஒரு இடமிருக்கின்றது.*

*Kumar* Un vol direct ou avec escale?
*நேரடிவிமானமா? அல்லது (தரித்து) நின்று செல்வதா?*

*Employé* Un vol direct.
*ஒரு நேரடி விமானம்.*

*Kumar* Je voudrais un aller direct s'il vous plaît, et au retour faire escale quelques heures pour me rendre à Amsterdam.
*போகும்பொழுது நேரடியாகவும் திரும்பும்பொழுது சிலமணித்தியாலங்கள் அம்ஸ்டடாமில் நின்று வருவதை விரும்புகின்றேன்.*

*Employé* Dans ce cas là, vous payerez deux cents francs de plus.
*இந்தவேளையில் நீங்கள் 200 பிராங்குகள் அதிகம் செலுத்தவேண்டும்.*

*Kumar* Bon, faites-moi une réservation pour vendredi soir.
*நல்லது, எனக்கு வெள்ளிஇரவு ஒரு இடத்தை ஒதுக்கீடு செய்யவும்.*

*Employé* Vendredi soir à 20h.
*வெள்ளிஇரவு 8 மணிக்கு.*

*Kumar* C'est combien tout compris?
*எல்லாவற்றையும் உள்ளடக்கி மொத்தம் எவ்வளவு?*

*Employé* 5700 francs, s'il vous plaît.
*தயவுசெய்து ஐயாயிரத்தியெழுநூறு பிராங்குகள்.*

*Kumar* Voilà.
*இதோ.*

# Langue maternelle
**தாய்மொழி**

*Savine* Votre langue vient de quelle origine?
*சவீன்* *உங்கள் மொழி எந்தமொழியில் (மூலம்) இருந்து வந்தது?*

*Rubi* Elle vient du dravidien.
*ரூபி* *அது திராவிடமொழியிலிருந்து வந்தது.*

Vous écrivez de gauche à droite?
*நீங்கள் இடமிருந்து வலமாகவா எழுதுகின்றீர்கள்?*

<u>*Rubi*</u> Tout à fait comme la vôtre.
சரியாக உங்களுடைய மொழியைப்போலத்தான்.

<u>*Savine*</u> Des ponctuations?
குறியீடுகள்?

<u>*Rubi*</u> Evidemment.
நிச்சயமாக.

<u>*Savine*</u> Pour quelqu'un qui ne connaît pas le tamoul, combien de temps mettrait-il pour apprendre?
ஒருவருக்கு தமிழ் தெரியாமல் இருந்தால் அவருக்கு எவ்வளவு காலம் கற்பதற்குச்செல்லும்?

<u>*Rubi*</u> Ça dépend des gens; pour parler couramment on met deux ou trois ans environ.
அது ஒவ்வொருவரையும் பொறுத்தது. சரளமாகக் கதைப்பதற்கு கிட்டத்தட்ட இரண்டு அல்லது மூன்று வருடமாகும்.

<u>*Savine*</u> J'espère que le masculin et le féminin existent.
ஆண்பால், பெண்பால் இருக்கின்றது என்று நான் எதிர்பார்க்கின்றேன்.

<u>*Rubi*</u> Il y a deux genres, sauf pour les choses. Qui n'en ont aucun.
இரண்டுவகையும் இருக்கின்றது, ஆனால் பொருட்களுக்கு பாலில்லை.

<u>*Savine*</u> Votre langue est très facile.
உங்களுடையமொழி சுலபமானது.

<u>*Rubi*</u> J'ai encore des difficultés à distinguer le masculin et le féminin.
எனக்கு இன்னும் ஆண், பெண்பால்களை வேறுபடுத்துவதற்கு கடினமாய் இருக்கிறது?

<u>*Savine*</u> Il y a des exceptions fréquentes dans la langue française, le savez-vous?
உங்களுக்குத்தெரியுமா, பிரஞ்சுமொழிகளில் அதிகம் விதிவிலக்குகள் உண்டென்பது?

<u>*Rubi*</u> Je connais les règles; mais il y a toujours des exceptions.
எனக்கு ஒழுங்குமுறை (ஆண், பெண்பால் கண்டுபிடித்தல்) தெரியும். ஆனால் விதிவிலக்குகள் எப்போதும் இருக்கின்றது.

<u>*Savine*</u> Comme vous le savez bien, il y a des Français qui font des fautes d'orthographe.
உங்களுக்கு நன்குதெரியும் தானே, பிரஞ்சுக்காரர்களும் எழுத்துப்பிழைகள் விடுபவர்கள் என்பது.

<u>*Rubi*</u> En cours de français, on a appris le passé simple; quand on parle on ne l'utilise pas, pour quelle raison?
பிரஞ்சு வகுப்பில், "சாதாரண இறந்தகாலம்" படித்தோம், ஏன் அதை கதைப்பதில் உபயோகிப்ப தில்லை, என்ன காரணத்திற்காக?

<u>*Savine*</u> Le passé simple; on ne l'emploie que dans l'écrit, sinon il ne sert pas beaucoup.
"சாதாரண இறந்தகாலம்" எழுதுவதில் மட்டும் தான் பிரயோகிக்கப்படுகின்றது. இல்லாவிடின் அதிகம் பாவிக்கப்படுவதில்லை.

<u>*Rubi*</u> Il est utile d'apprendre à parler correctement.
சரியாக கதைக்கப்படிப்பது இன்றியமையாதது.

<u>*Savine*</u> Avant de venir en France, vous aviez déjà parlé français?
பிரான்சிற்கு வருவதற்குமுன்னர் நீங்கள் ஏற்கனவே பிரஞ்சுமொழி கதைத்தீர்களா?

<u>*Rubi*</u> Dès que j'ai été en règle, j'ai commencé à l'apprendre: mais avant de venir en France je n'en savais même pas un mot.
நான் ஒழுங்காக இருந்தபின் (விசா, வசிப்பிடம் கிடைத்தபின்), நான் படிக்கத்தொடங்கினேன். நான் இங்குவரமுன் எனக்கு ஒரு சொல்லும் தெரிந்திருக்கவில்லை.

*Savine* Êtes-vous allée d'abord dans une école française?
முதலில் நீங்கள் ஒரு பிரஞ்சு பாடசாலைக்கா போனீர்கள்?

*Rubi* Non, je suis allée à Pernety; là-bas, j'ai appris le français grâce à des tamouls.
இல்லை, நான் "பேர்னெத்தி" என்னும் மெற்றோவிலுள்ள தமிழர் பாடசாலைக்குச் சென்றேன். அங்கு தமிழர்கள் மூலமாக பிரஞ்சு கற்றுக்கொண்டேன்.

*Savine* J'ai entendu parler de ça.
நான் அதைப்பற்றிக் கேள்விப்பட்டேன்.

*Rubi* Vous parlez aussi italien?
நீங்கள் இத்தாலியும் கதைப்பீர்களா?

*Savine* Ma mère vient d'Italie. C'est pour cela que je le parle couramment.
எனது அம்மா இத்தாலியைச் சேர்ந்தவர், அதன் காரணமாகவே நான் அதை நன்றாகக் (சரளமாக) கதைப்பேன்.

*Rubi* Vous parlez déjà trois langues.
நீங்கள் ஏற்கனவே மூன்றுமொழிகள் கதைப்பீர்கள்.

*Savine* Vous aussi,
நீங்களும் தான்.

*Rubi* Ça c'est vrai, je parle le tamoul, l'anglais, mais le français.....
உண்மைதான், தமிழ், ஆங்கிலம் சரி... ஆனால் பிரஞ்சு........

*Savine* Le français, quoi, quoi...
என்ன, என்ன பிரஞ்சு....

*Rubi* Oh là là .. c'est dur.
அய்யய்யோ அது கடினம்.

## On va fêter la fin du cours
## இறுதிவகுப்பைக் கொண்டாடுதல்

*Professeur* ஆசிரியர் Nous sommes le dix aujourd'hui. Dans deux semaines, nous finirons notre cours de français.
இன்று பத்தாம் திகதி, இன்னும் இருகிழமைக்குள் எங்களுடைய பிரெஞ்சு வகுப்பு முடிந்துவிடும்.

*Sophie* சோபி Est-ce qu'on va fêter ça la semaine prochaine?
நாங்கள் அடுத்த கிழமை அதைக்கொண்டாடுவோமா?

*Rubi* ருபி Moi aussi, j'y pense.
நானும் அதைத்தான் நினைக்கின்றேன்.

*Sophie* Comment va-t-on organiser ça?
எப்படி நாங்கள் அதை ஒழுங்கு செய்வோம்?

*Professeur* De façon très pratique, chacun apporte quelque chose de chez lui.
சுலபமானமுறை, ஒவ்வொருவரும் அவரவர் நாட்டுச் சாப்பாடுகள் ஏதாவது கொண்டுவருவது.

*Paul* போல் Combien d'asiatiques y-a-t-il dans notre cours?
எங்களுடைய வகுப்பில் எத்தனை ஆசியர்கள் உள்ளனர்?

| | |
|---|---|
| *Professeur* | Trois Chinoises et deux Srilankais.<br>மூன்று சீனர்களும், இரு இலங்கையர்களும். |
| *Sophie* | Les repas asiatiques sont meilleurs.<br>ஆசிய நாட்டுணவு சிறந்தது. |
| *Professeur* | Tu as raison Sophie, ils sont un peu parfumés.<br>சோபி, நீ கூறுவது சரி, அவை கொஞ்சம் வாசனையூட்டப்பட்டது. |
| *Paul* | Mais assez piquants.<br>ஆனால் போதியளவு உறைப்பானது. |
| *Rubi* | Ça dépend des plats.<br>அது உணவுகளைப் பொறுத்தது. |
| *Lï* | J'apporte quelque chose de moins piquant.<br>நான் உறைப்புக் குறைவான ஏதாவது கொண்டுவருகின்றேன். |
| *Rubi* | Quel plat?<br>என்ன சாப்பாடு? |
| *Lï* | C'est secret, on verra...<br>அது இரகசியமானது, பின் பார்ப்போம்... |
| *Professeur* | C'est l'occasion de goûter les repas de tous les pays, n'est-ce pas?<br>இது எல்லா நாட்டுணவையும் சுவைப்பதற்கு ஒரு சந்தர்ப்பமில்லையா? |
| *Rubi* | Madame, avez-vous déjà goûté un plat indien?<br>நீங்கள் ஏற்கனவே இந்திய உணவைச் சுவைத்தீர்களா? |
| *Professeur* | Ça m'est arrivé deux fois, le repas indien ressemble-t-il au repas Sri lankais?<br>எனக்கு இருதடவை சந்தர்ப்பம் கிடைத்தது. இந்திய உணவு இலங்கை உணவை ஒத்திருக்கின்றதா? |
| *Rubi* | Beaucoup, Madame.<br>அதிகம், மெடம் |
| *Professeur* | Je vous apporte quelque chose de frais.<br>நான் உங்களுக்கு (மாணவர்கள்) குளிர்மையாக ஏதாவது கொண்டுவருகின்றேன். |
| *Rubi* | On goûtera tout.<br>எல்லாவற்றையும் சுவைப்போம். |
| *Professeur* | Silence s'il vous plaît! Vous parlez trop fort. Il y a un autre cours à côté.<br>தயவுசெய்து அமைதியாகவிருக்கவும். நீங்கள் பெரிதாகக் (சத்தமாக) கதைக்கின்றீர்கள், உங்களுக்குப் பக்கத்தில் இன்னுமொரு வகுப்பு இருக்கின்றது. |
| Les élèves....... | *(அமைதி)* |
| *Professeur* | Vous êtes combien ici?<br>நீங்கள் இங்கே எத்தனைபேர்? |
| *Sophie* | Nous sommes dix-neuf, avec vous, ça fait vingt.<br>நாங்கள் பத்தொன்பதுபேர், உங்களுடன் இருபது. |
| *Professeur* | Je vais vous faire goûter des fromages variés.<br>நான் உங்களுக்கு வித்தியாசமான பாற்கட்டிகளை சுவைக்கச் செய்யப்போகின்றேன். |

*Sophie* Pourquoi choisissez-vous du fromage?
ஏன் நீங்கள் பாற்கட்டியினைத் தெரிவுசெய்கின்றீர்கள்?

*Professeur* Comme vous allez passer l'examen dans une semaine, ça vous donnera de l'énergie.
நீங்கள் ஒருகிழமைக்குள் சோதனை எடுக்கப்போகின்றீர்கள்! பாற்கட்டி உங்களுக்கு சக்தியைத்தரும்.

*Lï* Arrêtez de parler de l'examen!
பரீட்சைபற்றிக் கதைப்பதை நிறுத்துங்கள்!

*Professeur* Pourquoi Lï? As - tu peur? ne t'inquiète pas pour rien. Quand l'examen approche, tous les élèves sont un peu énervés.
ஏன் "லீ" உனக்கு சோதனை என்றால் பயமோ, நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். சோதனை நெருங்கும் பொழுது எல்லாமாணவர்களும் பயமாகத்தான் இருக்கின்றவர்கள்.

*Sophie* Madame, je ne pense qu'à la fête.
மெடம், நான் கொண்டாட்டத்தை மட்டும்தான் நினைக்கின்றேன்.

*Rubi* Aujourd'hui, nous bavardons trop. N'est-ce pas, Sophie?
சோபி, இன்று நாங்கள் அதிகம் அலம்பு (கதைத்தல்) கிறோமல்லவா?

# Rendez-vous chez le médecin
## வைத்தியருடன் சந்திப்பு

*Docteur* / *வைத்தியர்* Qu'est-ce qui vous amène ici?
என்ன பிரச்சனையால் இங்கு வருகின்றீர்கள்? (எது உங்களை இங்கு கொண்டுவருகின்றது?)

*Malade* / நோயாளி J'ai mal à la colonne vertébrale, depuis quelques jours.
சிலநாட்களாக எனக்கு முள்ளந்தண்டில் நோ.

**Docteur** Souffrez-vous beaucoup? Précisez où vous avez mal.
அதிகம் துன்பப்படுகின்றீர்களா? (வருந்துகின்றீர்களா?) எங்கே உங்களுக்கு நோ என்று திட்டவட்டமாகக் கூறுங்கள்.

*Malade* Oui, j'ai mal quand je marche et quand je me penche, j'ai de vives douleurs dans le dos.
ஆம், நான் நடக்கின்றபோதும், நான் குனிகின்றபோதும் எனக்கு கடுமையான முதுகு நோவாக இருக்கின்றது.

*Docteur* On va voir tout ça. Quel est votre métier?
எல்லாவற்றையும் பார்ப்போம். உங்கள் தொழில் என்ன?

*Malade* Je suis cuisinier.
நான் சமையல்தொழில் செய்கின்றேன்.

*Docteur* Depuis quelques mois, peut-être travaillez-vous trop?
சிலமாதங்களாக அதிகம் வேலைசெய்கின்றீர்களா?

*Malade* Non, je travaille comme d'habitude.
இல்லை, நான் வழமைபோல்தான் வேலைசெய்கின்றேன்.

*Docteur* Avez-vous eu un accident grave?
உங்களுக்கு கடினவிபத்து ஏதும் நடந்ததா?

*Malade* En 91, en travaillant, je suis tombé dans l'escalier, mais je n'ai pas eu du tout mal.
91ம் ஆண்டு வேலைசெய்துகொண்டிருந்த பொழுது படியில் விழுந்தேன், ஆனால் துப்பரவாக நோவிருக்கவில்லை.

*Docteur* Vous n'avez pas été blessé?
நீங்கள் காயப்படவில்லையா?

*Malade* Non. Mon médecin de famille m'a simplement conseillé de passer une radio.
இல்லை, எனது குடும்பவைத்தியர் (சாதாரணமாக) ஒரு எக்ஸ்றே எடுக்க ஆலோசனை கூறினார்.

*Docteur* Ça fait déjà trois ans que vous l'avez passée.
அது நடைபெற்று ஏற்கனவே மூன்றுவருடமாகின்றது.

*Malade* J'ai remarqué que la douleur est plus grande. Surtout quand il fait froid.
முக்கியமாக குளிராகவிருக்கின்ற பொழுதுதான் எனக்கு கடும்நோவாக இருக்கின்றது.

*Docteur* Je vous prescris une pommade contre la douleur,que vous appliquerez par massages matin et soir
நான் உங்களுக்கு ஒருகளிமருந்து நோவுக்கு எழுதுகின்றேன். காலை, மாலை அதைப்போட்டு தசைப்பயிற்சி செய்யவும்.
Bien maintenant, Vous vous mettez torse nu et vous vous allongez à plat ventre.
நல்லது, நீங்கள் உடுப்புக்களை கழற்றி வயிறுகுப்புற நீண்டு படுக்கவும்.
Respirez normalement.
வழமைபோல மூச்சுவிடுங்கள்.

*Docteur* Quand j'appuie, avez-vous mal?
நான் அழுத்துகின்றபோது உங்களிற்கு நோகின்றதா?

*Malade* Oui, chaque fois que vous appuyez fort, j'ai mal.
ஆம், ஒவ்வொருதடவை பலமாக அழுத்தும்பொழுதும் எனக்கு நோகின்றது.

*Docteur* Sentez-vous quelque chose autour des hanches?
நீங்கள் இடுப்பைச்சுற்றி ஏதாவது உணர்கின்றீர்களா?

*Malade* Oui, un peu.
கொஞ்சம்.

*Docteur* Mettez-vous sur le côté droit.
வலதுபக்கம் திரும்புங்கள்.

*Malade* Sur la côte, j'ai mal.
பழுவில் எனக்கு நோகின்றது.

*Docteur* A mon avis, il n'y a rien de grave.
எனது அபிப்பிராயப்படி, கடுமையாக ஒன்றுமில்லை.

*Malade* Ah bon!
நல்லது!

*Docteur* En plus, je vous prescris une pilule que vous prendrez le soir.
மேலும், நான் உங்களுக்கு ஒரு குளிகை எழுதுகின்றேன், அதை இரவில் எடுங்கள்.

*Malade* Je dois repasser à la radio?
நான் மீண்டும் கட்டாயம் எக்ஸ்றே எடுக்கவேண்டுமா?

*Docteur* D'abord, vous essayez le traitement pendant quinze jours.
முதலில், நீங்கள் இந்த சிகிச்சைமுறையை பதினைந்துநாட்களுக்கு முயற்சியுங்கள்.
Si ça ne va pas bien, vous reviendrez me voir.
அதுசரிவராவிடின், என்னைவந்து பாருங்கள்.

*Malade* Merci docteur, au revoir!
நன்றி வைத்தியர், சென்றுவருகின்றேன்.

*Docteur* Au revoir monsieur!
சென்றுவாருங்கள் ஐயா.

## Préparation du mariage à la mairie
### நகரசபையில் திருமண ஏற்பாடு செய்தல்

*Sri* Bonjour madame.
வணக்கம் அம்மணி.
Nous avons décidé de nous marier.
நாங்கள் திருமணம்செய்வதற்கு தீர்மானித்துள்ளோம்.

*Madame* Bonjour monsieur.
வணக்கம் திருவாளர்.
C'est une bonne idée, quelle est votre nationalité?
அது ஒரு நல்ல எண்ணம், உங்களது தேசியஇனம் என்ன?

*Sri* Je suis Srilankais, ma fiancée aussi.
நான் இலங்கையன், எனக்கு நிச்சயிக்கப்பட்டபெண்ணும் அவ்வாறே.

*Madame* C'est la première fois que vous allez vous marier?
முதல்தடவையாகவா நீங்கள் திருமணம் செய்யப்போகின்றீர்கள்?

*Sri* Bien sûr.
நிச்சயமாக.

*Madame* Est-ce que vous avez une pièce d'identité?
நீங்கள் ஒரு அடையாளஅட்டை வைத்திருக்கின்றீர்களா?

*Sri* Voilà ma carte de résident, ma fiancée vient d'arriver il y a quatre mois.
இதோ எனது வசிப்பதற்கான அத்தாட்சிப்பத்திரம், எனக்கு நிச்சயிக்கப்பட்டபெண் இங்கு வந்து நான்கு மாதமாகின்றது.

*Madame* C'est à dire que votre future épouse n'est pas encore reconnue comme réfugiée.
அப்படியென்றால், உங்கள் எதிர்காலமனைவிக்கு இன்னும் அகதி அந்தஸ்து கிடைக்கவில்லை.

*Sri* Elle a fait une demande à l'OFPRA, on attend sa décision.
அவள் ஒவ்றாவில் கேட்டிருக்கின்றார், நாங்கள் அதனுடைய தீர்மானத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

*Madame* Il n'y a rien qui s'oppose à votre mariage, puisque votre future épouse a trois mois de visa, vous pouvez vous marier.
ஒன்றும் உங்கள் திருமணத்தை எதிர்க்கவில்லை, ஏனெனில் உங்கள் எதிர்காலமனைவிக்கு 3மாத கால விசா இருப்பதினால், நீங்கள் திருமணம் செய்துகொள்ளமுடியும்.

*Sri* Merci madame.
நன்றி அம்மணி.

*Madame* Comme vous êtes réfugié, vous apporterez le certificat de coutume délivré par l'OFPRA. Par contre elle doit avoir l'autorisation du parquet parce qu'elle est célibataire.
நீங்கள் அகதியாகவிருப்பதினால் ஒவ்றாவில் இருந்து ஒரு அத்தாட்சிப்பத்திரம் கொண்டுவாருங்கள் ஆனால் அவர் நீதிமன்றத்திலிருந்து உறுதிப்படுத்தும் பத்திரம் வைத்திருக்கவேண்டும். ஏனென்றால் அவர் திருமணமாகாதவர்.

<u>*Sri*</u> Vous n'avez pas besoin d'autres documents?
*உங்களிற்கு வேறு ஆவணங்கள் தேவையில்லையா?*

<u>*Madame*</u> Non monsieur. Je vous donne les papiers à remplir par vous et vos témoins.
*இல்லை திருவாளரே, நீங்களும் உங்களது சாட்சியக்காரரும் நிரப்புவதற்கான படிவங்களை தருகின்றேன்.*

<u>*Sri*</u> Et la visite médicale?
*அத்துடன் மருத்துவபரிசோதனை?*

<u>*Madame*</u> C'est obligatoire, vous la passerez chez votre médecin de famille.
*அது இன்றியமையாதது, நீங்கள் அதை உங்கள் குடும்ப வைத்தியரிடம் செய்யலாம்.*

<u>*Sri*</u> D'accord.
*சரி*

<u>*Madame*</u> Vous apporterez tous les documents qui sont indiqués sur cette liste, dans deux semaines.
*நீங்கள் இந்த அட்டவணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள எல்லா ஆவணங்களையும் பதினைந்து நாட்களுக்குள் கொண்டுவாருங்கள்.*

<u>*Sri*</u> Merci madame, au revoir.
*நன்றி அம்மணி, மீண்டும் சந்திப்போம்.*

<u>*Madame*</u> Au revoir monsieur.
*திருவாளர், மீண்டும் சந்திப்போம்.*

## Au répondeur / மறுமொழிகூறும் கருவி

**மறுமொழிகூறும் கருவியில் பதிந்துள்ளசெய்தி....**

1) Bonjour, vous êtes bien au 50.10.10.107, Actuellement je ne suis pas chez moi, Veuillez me laisser votre message après le bip sonore.
*வணக்கம், நீங்கள் 50.10.10.107 இலக்கத்தில் இருக்கின்றீர்கள். தற்சமயம் நான் வீட்டிலில்லை, பின்வரும் ஒலியின் பின்னால் தங்களது செய்தியை விடவும் (பதியவும்).*

2) Vous êtes bien chez Paul, Je suis absent pour le moment, dès mon retour, je vous contacterai, à bientôt.
*நீங்கள் சரியாக போல் வீட்டில் இருக்கின்றீர்கள் (இது போலின் தொலைபேசி இலக்கம்) தற்சமயம் நான் வீட்டில் இல்லை. நான் திரும்பியவுடன் உங்களுடன் தொடர்புகொள்வேன்.*

3) Je suis parti en vacances; vous pouvez laisser votre message sur le répondeur dès que possible je vous contacterai.
*நான் விடுமுறையில் போய்விட்டேன். உங்கள் தகவலை மறுமொழிக்கருவியில் விடலாம், முடிந்தவிரைவில் (சாத்தியமானவுடன்) நான் உங்களுடன் தொடர்புகொள்வேன்.*

**மறுமொழிகூறும் கருவியில் போலும், ரூபியும் தங்களுடைய செய்திகளைப்பதிகின்றனர்...**

4) Bonjour ici c'est Paul, Je vous ai téléphoné plusieurs fois, mais je n'ai pas osé vous laisser un mot, cette fois - ci. c'est très urgent pourriez - vous me rappeler s'il vous plaît.
*வணக்கம், இது போல், நான் உங்களுக்கு பலதடவை தொலைத்தொடர்பு செய்தேன். நான் ஒரு தகவலையும் சொல்லத் துணியவில்லை, இந்தத்தடவை மிகவும் அவசரம்! தயவுசெய்து எனக்கு தொலைபேசி அழைப்பு செய்யமுடியுமா?*

5) Salut Sophie, c'est Roubi, J'ai une bonne nouvelle pour toi. Avant de partir au travail appelle - moi!
*வணக்கம் சோபி, ரூபி (கதைக்கின்றேன்). நான் உனக்கு ஒரு நல்லசெய்தி வைத்திருக்கின்றேன், வேலைக்குப்போகமுன் எனக்கு அழைப்புச்செய்.*

# Téléphone
## தொலைபேசி

L'appareil - கருவி, தொலைபேசி
Le poste de téléphone - தொலைபேசும் கருவி
Un coup de téléphone - தொலைபேசி அழைப்பு
Un coup de fil - தொலைபேசி அழைப்பு
La ligne - தொலைத்தொடர்பு
La cabine téléphonique - தொலைத்தொடர்பு செய்யும் அறை, பெட்டி
La télécarte - தொலைத்தொடர்பு செய்யும் அட்டை
La standardiste - தொலைபேசி மையங்களை இயக்குபவர்.
Appel gratuit - இலவச அழைப்பு
Appel anonyme - பெயரில்லாத அழைப்பு
Appel en p.c.v (collect call) - ஒருவரின் அழைப்பைப்பெற்றவர் கட்டணம் செலுத்துதல்
Numéro de téléphone - தொலைபேசி எண்
Numéro personnel - தனிப்பட்ட தொலைபேசி எண்
Numéro sur liste rouge - சாதாரண தொலைபேசி எண்களைக்கொண்ட புத்தகத்தில் இல்லாத, சில முக்கிய நபர்களின் எண்கள் கொண்ட அட்டவணை

Il y a du brouillard - தொலைபேசியில் இரைச்சல்
Il y a de la friture - தொலைபேசியில் மின்பொரிப்பது போன்ற சத்தம்
La ligne est en dérangement - வேறு தொலைவரிசையால் தடுத்தல்
La ligne est coupée - தொலைத்தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது
Raccrocher au nez - கோபத்தில் உடனே தொலைபேசி அழைப்பை நிறுத்துதல்
Décrocher le téléphone - தொலைபேசியை எடுத்தல்
Raccrocher le téléphone - தொலைபேசியை மீண்டும் வைத்தல்
La ligne est occupée - தொலைத்தொடர்பு அலுவலாகவுள்ளது
La ligne est libre - தொலைத்தொடர்பு ஓய்வாகவுள்ளது
Veuillez rappeler ultérieurement - சிறிதுநேரத்தின் பின் முயற்சிக்கவும் (அதிகநேரம் முயற்சித்தும் தொலைபேசி அழைப்பு கிடைக்காதபோது ஒலிப்பதிவு நாடாவில் சொல்லப்படும் செய்தி)

Le numéro n'est plus en service actuellement nous regrettons de ne pouvoir répondre à votre appel.
தொலைபேசி எண் தற்சமயம் சேவையில் இல்லை. உங்கள் அழைப்பிற்கு மறுமொழி சொல்லமுடியாமைக்கு நாங்கள் வருந்துகின்றோம் - (தொலைபேசிநாடாவில் சொல்லப்படும்)

Votre correspondant vient de changer.
உங்கள் தொடர்பு மாற்றப்பட்டுள்ளது.

Vous composez le numéro suivant.
நீங்கள் பின்வரும் எண்ணை சேர்க்கவும் (இயக்கவும்).

Quelqu'un est à l'appareil - யாரோ தொலைபேசியில் இருக்கின்றனர்
Vous gardez la ligne - தொடர்பிலிருக்கவும்
Ne quittez pas - விலகவேண்டாம்
Qui est à l'appareil? - யார் தொலைபேசியில்?
Qui est au téléphone? - யார் தொலைபேசியில்?
C'est Raja - அது ராஜா
C'est moi - அது நான்
C'est de la part de qui? - எங்கிருந்து, எவரிடமிருந்து?
C'est de la part de son ami(e) - அவரது நண்பரிடமிருந்து
D'où téléphonez - vous? - எங்கிருந்து தொலைபேசி பேசுகின்றீர்கள்?
A qui voulez - vous parler? - யாருடன் நீங்கள் கதைக்க விரும்புகின்றீர்கள்?
Je veux parler à Raja / avec Raja! - நான் ராஜாவுடன் கதைக்கவிரும்புகின்றேன்
Est ce que je peux parler à Raja / avec Raja? - நான் ராஜாவுடன் கதைக்கமுடியுமா?
Où téléphonez - vous? - எங்கே தொலைபேசியழைப்பு செய்கின்றீர்கள்?

Raja / Kamala est appelé sur une autre ligne. pouvez - vous rappeler un peu plus tard?
*ராஜா / கமலா இன்னொரு தொலைபேசியழைப்பில் இருக்கின்றார்கள், சிறிதுநேரத்தின் பின் உங்களால் திருப்பியழைக்க முடியுமா?*

Avez - vous un message pour lui / elle?
*உங்களிடம் அவருக்கு / அவவிற்கு ஒரு செய்தியுண்டா?*

J'ai un message pour lui / elle / vous.
*என்னிடம் அவருக்கு / அவவிற்கு / உங்களுக்கு ஒரு செய்தியுண்டு.*

Pouvez - vous rappeler au bureau?
*உங்களால் அலுவலகத்துக்கு திருப்பியழைக்க முடியுமா?*

Pouvez - vous rappeler au magasin?
*உங்களால் கடைக்குத் திருப்பியழைக்க முடியுமா?*

Il / Elle n'est pas là actuellement.
*அவர் / அவள் தற்சமயம் இங்கேயில்லை.*

Il / elle viendra dans une heure.
*அவர் / அவள் ஒரு மணித்தியாலத்திற்குள் வருவார்.*

Si vous voulez, vous pouvez rappeler plus tard.
*நீங்கள் விரும்பினால், தாங்கள் சற்றுநேரத்தில் மீண்டும் அழைக்கலாம்.*

C'est à quel sujet?
*எதைப்பற்றி நீங்கள் கதைக்கின்றீர்கள்?*

Que voulez-vous savoir?
*என்ன நீங்கள் அறிந்துகொள்ள விரும்புகின்றீர்கள்?*

Est-ce que je peux avoir vos coordonnées? ou Puis - je avoir vos coordonnées?
*உங்களது விபரங்களை (பெயர், முகவரி...) நான் வைத்திருக்கலாமா?*

Je lui dirai - *நான் அவருக்கு கூறுகின்றேன்.*

Voulez - vous qu'il /elle vous rappelle?
*அவர் / அவள் உங்களுக்கு அழைப்புசெய்ய விரும்புகின்றீர்கள்?*

Il y a une erreur - *ஒரு தவறு இருக்கின்றது.*

Excusez - moi, j'ai fait une erreur - *என்னை மன்னியுங்கள், நான் ஒருதவறு செய்துவிட்டேன்.*

Vous vous trompez de numéro - *நீங்கள் இலக்கத்தைத் தவறவிட்டீர்கள்.*

# Conversation téléphonique
## தொலைபேசி உரையாடல்

**தொழில்ரீதியான நேரடியழைப்பு சிலமாதிரிகள்...**

1. a) Bonjour Madame,
   Je souhaiterais parler à Kumar s'il vous plaît.
   *வணக்கம் அம்மணி, நான் குமாருடன் பேசவிரும்புகின்றேன்.*

b) Oui, Monsieur,
Je vous le passe.
ஆம் திருவாளர், நான் அவரிடம் கொடுக்கின்றேன்.

2. a) Bonjour Madame / Monsieur,
C'est Sophie à l'appareil, je voudrais savoir si Paul est là s'il vous plaît.
வணக்கம் அம்மணி, ஐயா. தொலைபேசியில் (நான்) சோபி இருக்கின்றேன். போல் அங்கேயிருக்கின்றாராவென தயவுசெய்து அறியவிரும்புகின்றேன்.

b) Je suis navré(e), Il n'est pas là actuellement; pouvez - vous rappeler un peu plus tard?
நான் கவலைப்படுகின்றேன் (வருந்துகின்றேன்) தற்சமயம் அவர் இங்கில்லை, தங்களினால் கொஞ்சம் செல்ல மறுபடியழைக்கமுடியுமா?

3. a) Passez - moi le poste 152 s'il vous plaît.
தயவுசெய்து 152 இலக்கத்திற்கு அழைப்புத்தாருங்கள்.

b) Attendez un instant, le poste est occupé.
ஒரு கணம் காத்திருங்கள். 152 இலக்கம் அலுவலாகவிருக்கின்றது.

4. a) Bonjour Madame,
Je voudrais parler au responsable du magasin s'il vous plaît.
வணக்கம் அம்மணி, நான் கடைப்பொறுப்பாளருடன் தயவுசெய்து கதைக்கமுடியுமா?

b) Je suis désolée; il est au téléphone, essayez un peu plus tard.
நான் வருந்துகின்றேன், அவர் தொலைபேசியில் இருக்கின்றார். கொஞ்சம்செல்ல முயற்சித்துப்பாருங்கள்.

5. a) Bonjour Mademoiselle,
A propos d'un stage; pourriez - vous m'indiquer à quelle personne je pourrais parler?
வணக்கம் அம்மணி (செல்வி), பயிற்சிநெறிபற்றி அறிய (நோக்கத்துடன்) நான் யாருடன் தொடர்புகொள்ள வேண்டுமென்பதைச் சுட்டிக்காட்ட முடியுமா?

b) Bien sûr,
Normalement vous pouvez contacter le conseil professionnel.
நிச்சயமாக, பொதுவாக தாங்கள் வேலைஆலோசகரைச் சந்திக்கலாம்.

6. a) Bonjour Monsieur,
Patricia est au téléphone, Avez - vous reçu mon courrier s'il vous plaît?
வணக்கம் ஐயா. பற்றீசியா தொலைபேசியில் இருக்கின்றேன். தயவுசெய்து எனது கடிதத்தைப் பெற்றுக்கொண்டீர்களா?

b) Est -ce que je peux savoir de quel sujet il s'agit?
நீங்கள் எவ்விடயத்தைப்பற்றி அறியவிரும்புகின்றீர்களென அறியலாமா?

7. a) Bonjour,
Est - ce que c'est le magasin indien?
வணக்கம், இந்தியக்கடையா?

b) Non, non, c'est le restaurant indien. peut - être vous vous êtes trompé de numéro?
இல்லை, இல்லை, இது இந்திய உணவகம். சிலவேளை நீங்கள் தொலைபேசி இலக்கத்தை தவறவிட்டீர்களா?

8. a) Bonjour,
Est - ce que c'est bien la mairie du cinquième?
வணக்கம், இது ஐந்தாம் மாநகரசபையா?

b) Oui, c'est bien ça, voulez - vous savoir quelque chose?
ஆம் அதுதான், நீங்கள் ஏதாவது அறிந்து கொள்ளவிரும்புகின்றீர்களா?

9. a) C'est l'association Srilankaise? j'ai besoin de quelques renseignements s'il vous plaît!
இது இலங்கைச்சங்கமா? எனக்கு சிலதகவல்கள் தேவையாகவுள்ளன!

b) Vous êtes bien au bon endroit.
ஆம் அதுதான் (நீங்கள் சரியான இடத்துக்குத்தான் அழைத்திருக்கின்றீர்கள்).

10. a) Bonjour,
Le chef de gare s'il vous plaît!
வணக்கம், தயவுசெய்து புகையிரத நிலையத்தலைவர்!

b) Vous avez fait une erreur ici c'est un particulier.
நீங்கள் தவறுதலாகச் (அழைப்பு) செய்துள்ளீர்கள், இதுவொரு தனியார்வீடு (அமைப்பு).

## கடித விதிமுறைகள்...

1. எழுதுபவரின் முகவரி இடதுபக்கமூலையில், பெயர், வீதி, தபால்எண், வசிப்பிடம் என்ற ஒழுங்கில் இடப்படும்.
2. கடிதம் பெறுபவரின் முகவரி வலதுபக்கத்தில் இடப்படும்.
3. எழுதப்படும் விடயத்தை தெளிவாக குறிப்பிட்டு கோடிட்டு, காட்டவேண்டும் (சிறுதலையங்கம்).
4. கடிதம் தொடங்கும் போதும், புதியவசனம் ஆரம்பிக்கும்போதும் பெரியஎழுத்துக்கள் உபயோகிக்கப்படும்.
5. உத்தியோகபூர்வ, நிர்வாகக் கடிதங்களில் உறவுமுறைச் சொற்கள், நேசபாவனைச்சொற்கள் (அன்பு, நேசமான) ஒருபோதும் உபயோகிப்பதில்லை.
6. கடிதம்தொடங்கும்போது திரு/திருமதி என்ற சொற்களில் தொடங்கும். பிரெஞ்சில் monsieur / madame என்று உபயோகிக்கவேண்டும். ஒருபோதும் சொற்சுருக்கத்தை (Mr. / Mme) உபயோகிக்ககூடாது.
7. சிலமுக்கியம் வாய்ந்தவர்களுக்கு நிர்வாகத்தவர், அரசஅலுவலகர்களுக்கு கடிதம் அனுப்பும்பொழுது மேல் அனுப்பும் உறையிலும் Monsieur le Directeur, Monsieur என்று தெளிவுற குறித்தல்வேண்டும்.
8. நட்புரீதியான கடிதங்களுக்கு மட்டும் திரு, திருமதி, செல்வி சொற்சுருக்கங்களை ( Mr, Mme, Mlle) உபயோகிக்கலாம்.
9. நட்புரீதியான கடிதங்களுக்கு எனதன்பு, எனதருமை (Mon cher/ Ma chère) என்று ஆரம்பிக்கலாம்.
10. உறவுக்கடிதங்களில் பொதுவாக கடவுள்துணை, கடவுள் காப்பாற்றுவராக என்னும் இறையருள் வசனங்கள் உபயோகிக்கப்படுவதில்லை (பிரெஞ்சில் எழுதும்பொழுது).
11. புதியபந்தியை கடிதம்தொடங்கிய அதே நேர்வரிசையில் தொடரவேண்டும் (விருப்பமான இடத்தில் முடிக்கலாம்).
12. நிர்வாகக் கடிதங்களில் முடிவில் கடிதம் எழுதிய இடம் (fait), திகதி (date) இடப்படும்.
13. நட்புரீதியான கடிதங்களில் மிகவிரைவில் (à bientôt), நேசத்துடன் (amicalement) என முடிக்கலாம்.
14. நிர்வாகக் கடிதங்களில், உங்களது ஆவணங்களை முன்கூட்டியே அனுப்பியிருந்தால் அதன் இலக்கத்தை le numéro du dossier யை குறிப்பிடல் வேண்டும்.

*கடிதம் பெறுபவர் எமக்கு அறிமுகமில்லாதவராயின் கீழ்வரும் முறைப்படி விழிக்கலாம்.*

*பொதுவாக நிர்வாக கடிதங்களுக்கு...*
Monsieur
Madame
Messieurs
Monsieur le Directeur
Madame la Directrice

Madame , Monsieur

Cher Monsieur
Chère Madame
Chère Madame Dupont
Cher Monsieur Borland

*நன்கு தெரிந்தவர்களுக்கு, நண்பர்களுக்கு...*
Mon cher Raja
Ma chère Rani
Mes chers amis
Mon chéri
Ma chérie
Mon Kumar
Cher Raja
Chère Rani
Raja

**கடித முடிவில் இடும் மரியாதை வசனங்கள்**

*எல்லா பிரஞ்சுக் கடிதங்களிலும் இறுதியில் மரியாதை வசனங்கள் இடவேண்டும்.*

*ஏதாவது கேட்டு விண்ணப்பிக்கும் போது(வங்கியில் கடன், நகர சபையில் பிறப்புச் சான்றிதழ்)...*
Je vous demande, Monsieur le Directeur, d'accepter par avance mes remerciements.

*வேலைக்கு விண்ணப்பிக்கும் போது...*
Je vous demande de croire, Messieurs, à l'assurance de ma considération.

*தெரிந்தவர்களுக்கு எழுதும் போது...*
Recevez, chère Madame, cher Monsieur, l'expression de mes sentiments les meilleurs.

*வீட்டு உரிமையாளருக்கு...*
Avec mes sentiments les meilleurs.

*வைத்தியருக்கு...*
Avec mes remerciements, recevez Docteur, l'expression de ma cordiale estime.

*நன்கு தெரிந்தவர்களுக்கு...*
Cordialement
Amicalement

*ஒரே குடும்பத்தவராயின் அல்லது நெருங்கிய நண்பர்களுக்கு...*
Je t'embrasse fort
Affectueusement
*என முடிக்கலாம்.*

**ஒரு கடிதத்தை பின்வருமாறு ஆரம்பிக்கலாம்**

*தொலைபேசி உரையாடல் அல்லது கடிதம் கிடைத்த பின்...*
Suite à notre conversation téléphonique du 25 mai / de ce jour........
Suite à votre courrier daté du 23/10/94 ........

J'ai bien reçu votre lettre du 10 mai....
En réponse à votre lettre du 10 mai....

*நீங்கள் ஒருவரிடம் ஏதாவது செய்யச் சொல்லி கேட்கும் போது...*
**Je vous prie de bien vouloir .......**
*நீங்கள் ஒருவருக்கு நன்றி தெரிவிக்கும் போது...*
**Je vous remercie de votre participation....**

*நீங்கள் கடிதத்துடன் ஒரு அழைப்பை அனுப்பும் போது...*
**Veuillez trouver ci-joint une invitation......**
**Vous trouverez ci-joint mon invitation.....**

*விரைவாக அனுப்புமாறு கேட்கும் போது...*
**Je vous serais obligé de me faire parvenir dans les meilleurs délais.....**
**Veuillez , je vous prie, m'envoyer le plus tôt possible....**

## *Faire venir sa famille*
**குடும்பத்தை அழைத்தல் (கூப்பிடல்)**

*Je vous l'ai déjà signalé, j'ai trois enfants; l'aînée, qui avait quinze ans à la date de ma demande, a dix-huit ans actuellement, elle est donc majeure; doit-elle vous adresser une demande personnelle?*

*Dans l'attente de votre réponse, je vous prie d'agréer, Monsieur, mes salutations distinguées.*

நான் ஏற்கனவே உங்களுக்கு அறிவித்தபடி எனக்கு மூன்றுபிள்ளைகள். எனது விண்ணப்பத்திகதியின் போது மூத்தவருக்கு 15 வயது. ஆனால் தற்போது 18 வயது. ஆகையால் அவர் ஒருவயது வந்தவர் அவர் தனது விண்ணப்பத்தை தனிப்பட்டமுறையில் உங்களுக்கு அனுப்பவேண்டுமா?

## *Compléter le dossier*
**ஆவணத்தை நிரப்புதல்**

*Suite à notre entretien téléphonique, je vous prie de compléter votre dossier auquel manquent certains éléments indiqués ci-dessous.*
*1) Contrat de travail*
*2) Dernier mois de quittance de loyer.*

எங்களுடைய தொலைபேசிச் சம்பாஷணையை அடுத்து, கீழ்வரும் ஆவணங்கள் இல்லாதபடியால், உங்களுடைய ஆவணத்தைப்பூர்த்தி செய்யும்படி நான் உங்களைக்கேட்கின்றேன்.
1) வேலை ஒப்பந்தம்
2) இறுதிமாத வாடகைப்பற்றுச்சீட்டு

## *Certificat d'hébergement*
**வதிவிட அத்தாட்சிப்பத்திரம்**

*Je soussigné(e) Kumarasingam Siva demeurant 10 rue de Paul, 75012 PARIS, certifie sur l'honneur que Monsieur Bala Rajasingam habite bien chez moi.*

கீழ் கையொப்பமிட்டுள்ள குமாரசிங்கம் சிவா ஆகியநான் பாலா ராஜசிங்கம் என்னுடைய வீட்டில் வசிக்கின்றார் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

## *Lettre au propriétaire*
**உரிமையாளருக்கு கடிதம்**

*Je vous ai envoyé un chèque daté du 05/05/94 concernant mon loyer de mai 94. Cependant vous ne m'avez pas envoyé la quittance de loyer, cela m'aurait permis de renouveler mon visa.*

*Pourriez-vous avoir l'amabilité de me l'envoyer dès que possible.*

நான் உங்களிற்கு மே மாத வாடகைப்பணத்திற்கான 5-5-94 திகதியிடப்பட்ட காசோலையை அனுப்பியிருந்தேன். ஆயினும் தாங்கள் அதற்கான பற்றுச்சீட்டை இன்னும் அனுப்பவில்லை. எனது விசாவினைப் புதுப்பிப்பதற்காக அப்பத்திரம் கட்டாயமாகத் தேவைப்படுகின்றது.

முடிந்தவரையில் விரைவாக அனுப்பமுடிந்தால் நல்லது.

## *Lettre à l'ASSEDIC*

**அசெடிக்குக் கடிதம்**

*Depuis le mois de juin, je n'habite plus 10 rue de Paris, 75010 PARIS, je vous ai déjà prévenu de mon changement d'adresse à partir du 10-06-94, A cette date là, Je n'avais pas encore touché les indemnités chômage de l'ASSEDIC.*

*Je vous demande de bien vouloir transférer mon dossier à l'ASSEDIC de Paris XIIème (ma nouvelle adresse).*

கடந்த ஜுன் மாதத்திலிருந்து 10 rue de Paris 75010 Paris யில் நான் வசிப்பதில்லை. 10-06-94 இலிருந்து எனது விலாசமாற்றத்தை நான் தங்களுக்கு ஏற்கனவே தெரியப்படுத்தினேன். அந்தத் திகதியிலிருந்து வேலையில்லாமைக்கான பரிகாரப்பணம் Assedic இலிருந்து கிடைக்கவில்லை.

பாரிஸ் 12 இலுள்ள (புதியவிலாசம்) Assedic இற்கு எனது ஆவணத்தை மாற்றச்சொல்லி நான் உங்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

## *Lettre à son ami*

**நண்பனுக்கு கடிதம்**

*Mon cher Raja,*

*Nous avons une mauvaise nouvelle à t'apprendre. Comme je t'en ai déjà parlé, le dossier de mon frère vient d'être rejeté par l'O.F.P.R.A.*

*J'ai tout fait pour qu'il renonce à retourner au Srilanka. Je lui ai conseillé d'écrire à la commission mais il est un peu découragé. Peux-tu lui recommander de bien réfléchir?*

*Merci,*
*Bien amicalement*
*Ton ami*
*Kumar.*

எனது அன்பு ராஜா,

நாங்கள் ஒரு கவலையான செய்தி வைத்திருக்கின்றோம் உனக்கு தெரியப்படுத்துவதற்கு. நான் உனக்கு ஏற்கனவே கூறிய எனது சகோதரனின் விண்ணப்பம் OFPRA வால் நிராகரிக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கு திரும்புவதை கைவிடச்சொல்லி நான் முழுமுயற்சியும் செய்தேன். நான் கொமிசனுக்கு எழுதச்சொல்லி அவனுக்கு ஆலோசனை கூறினேன். ஆனால் உற்சாகமிழந்துள்ளான். நன்றாக மீளாய்வு செய்யும்படி நீ அவனுக்கு கூறுவாயா?

## *Faire venir sa femme*

**தனது மனைவியை வரவழைத்தல்**

*A la date du 03-02-93, j'ai ouvert un dossier dans votre service pour demander de faire venir ma femme. je vous ai envoyé par lettre du 5/5/93, tous les éléments que vous m'aviez demandés.*

*J'aimerais connaître la situation de mon dossier. Avec mes remerciements, veuillez agréer....*

நான் உங்களுடைய சேவையில் ஒரு ஆவணத்தை திறந்துள்ளேன். எனது மனைவியை வரச்செய்வதற்காக நீங்கள் கேட்ட முழுஆவணங்களையும் நான் உங்களுக்கு 05.05.93 கடிதம் மூலம் அனுப்பியிருந்தேன். எனது விண்ணப்பத்தின் நிலமைபற்றி அறியவிரும்புகின்றேன்.

## *Lettre aux parents*
**பெற்றோருக்குக் கடிதம் (பாடசாலையிலிருந்து..)**

*Comme votre fille, Mademoiselle Sita Sivakumar a 14 ans, elle n'a plus le droit d'être en 5ème ou en 6 ème parce qu'elle ne parle pas assez bien français.*

*Cependant, son professeur, Madame DUPONT, m'a dit qu'elle travaillait bien. Actuellement, elle est avec des élèves français, et elle a des occasions fréquentes de parler français.*

*A mon avis, il est préférable de la laisser en 4ème, mais elle peut suivre des cours particuliers avec un professeur.*

உங்களுடைய மகள் செல்வி சீதா சிவகுமாருக்கு 14 வயதாகையால் அவளுக்கு 5ம் வகுப்பிலோ அல்லது 6ம் வகுப்பிலோ இருக்கமுடியாது. ஏனென்றால் அவர் நன்றாக பிரெஞ்சு பேசமாட்டார். ஆயினும் அவள் நன்றாக படிக்கின்றாள் என அவளுடைய ஆசிரியர் திருமதி Dupont எனக்கு தெரிவித்தார். தற்போது அவள் பிரஞ்சு மாணவர்களுடன் உள்ளபடியால் அவளுக்கு பிரஞ்சு பேசவசதியுண்டு. அவளை 4ம் வகுப்பில் விடுவது நன்று என்பது எனது கருத்து. ஆனால் அவள் ஒரு ஆசிரியருடன் தனிவகுப்புகள் எடுக்கலாம்.

*Monsieur le Proviseur*

*Je vous écris pour vous prier de me donner votre avis sur le niveau de ma fille, Mademoiselle Sita Sivakumar, qui est en quatrième dans votre collège.*

*Je pense qu'elle ne peut pas suivre en quatrième. Quand elle était au Srilanka, elle n'est pas allée à l'école pendant un an, à cause de la guerre, elle a donc pris du retard.*

*J'aimerais que vous contactiez le professeur principal pour qu'un changement de classe soit effectué dans le niveau qui lui convient.*

*Veuillez agréer monsieur le proviseur, l'expression de mes sentiments les plus distingués.*

உங்கள் கல்லூரியில் நான்காம் வகுப்பிலிருக்கும், சீதா சிவகுமாராகிய எனது மகளின் வகுப்புத்தரத்தை பற்றியறிய, நான் உங்களிற்கு எழுதுகின்றேன்.

அவர் இலங்கையில் இருந்தபோது, போரின் காரணமாக ஒருவருடம் பாடசாலை செல்லாதபடியால், தாமதமாகியுள்ளதால் அவர் நான்காம் வகுப்பில் தொடரமுடியாது என நினைக்கின்றேன்.

தாங்கள் பொறுப்பாசிரியருடன் தொடர்புகொண்டு, பொருத்தமான வகுப்பிற்கு மாற்றவேண்டுமென நான் விரும்புகின்றேன்.

## *Changement d'adresse*
**முகவரிமாற்றம்**

*Cher Mani,*

*Tout d'abord je te demande de m'excuser, je n'ai pas eu le temps de t'écrire, car j'ai déménagé en banlieue. j'ai cependant reçu ta lettre datée du 15-02-94.*

*Même si tu m'écris à mon ancienne adresse, on fera suivre ta lettre, puisque j'ai déjà fait le changement d'adresse que je t'indique ci-dessus.*

முதலில் நான் உன்னிடம் மன்னிப்புக் கோருகின்றேன். உனக்கு எழுத எனக்கு நேரம்கிடைக்கவில்லை. ஏனென்றால் நான் புறநகருக்கு வீடு மாற்றியுள்ளேன், இருந்தாலும் 15-02-94 திகதியிட்ட உனது கடிதம் எனக்கு கிடைத்தது. நீ எனது பழையமுகவரிக்கு எழுதினாலும் உனது கடிதம் எனக்கு கிடைக்கும். காரணம் நான் மேற்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு ஏற்கனவே மாற்றியுள்ளேன்.

## *Lettre supposant un accord préalable*
**உடன்பாட்டுக்கடிதம்**

*Monsieur Bozonie,*

*Ainsi que je vous en ai déjà fait part, je voudrais suivre un cours de français à plein temps, C'est pour cette raison que je vous écris, le cours doit commencer au début de janvier et se terminer en mai. Ensuite, je souhaiterais vivement reprendre mon travail chez vous.*

*Je vous demande de bien vouloir me faire parvenir votre réponse dès que possible.*

ஏற்கனவே தெரிவித்தபடி நான் முழுநேர பிரெஞ்சு வகுப்பைத் தொடரவிரும்புவதன் காரணமாக, நான் உங்களிற்கு எழுதுகின்றேன். தைமாதத்தொடக்கத்தில் ஆரம்பிக்கும் வகுப்பு வைகாசிமாதத்தில் முடிவுறும்.

அதைத்தொடர்ந்து நான் உங்களிடம் மீண்டும் எனது வேலையை எடுப்பதை மிகவும் விரும்புகின்றேன். முடிந்தவரையில் உங்களது பதிலை அறியத்தரும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

## *Se perfectionner en français*
**பிரஞ்சு அறிவை முன்னேற்றிக்கொள்ளுதல்**

*Je cherche à perfectionner mon français. Je voudrais savoir si je peux venir dans votre groupe, pour voir le déroulement de son activité. Je ne sais pas du tout, si mon niveau est assez bon. C'est le Lycée François VILLON, qui m'a conseillé de prendre des cours de français, avant de suivre une formation en comptabilité.*

நான் எனது பிரஞ்சு அறிவை விருத்திசெய்யவிரும்புகின்றேன். நான் உங்களுடைய குழுவின் நடவடிக்கைகளைப் பார்க்க வரமுடியுமாவென அறியவிரும்புகின்றேன். எனது தரம்போதியதாவென்று எனக்குத் தெரியாது. கணக்கியல் வகுப்பிற்கு முதல், பிரஞ்சு வகுப்பினை எடுக்கச்சொல்லி Villon உயர்பாடசாலை எனக்கு ஆலோசனை கூறியது.

# Abréviation
**சொற்சுருக்கம்**

ஒரு ஸ்தாபனத்தின் அல்லது ஒரு தொழிலின் நீண்ட சொற்தொடர்களை அவற்றின் முதல்எழுத்துக்களை அல்லது இறுதி எழுத்துக்களை உபயோகிப்பதனால் குறுகியசொற்தொடராகப் பாவிக்கலாம்.

| | | |
|---|---|---|
| Bd | Boulevard | - நெடுஞ்சாலை, பெரியவீதி |
| C à d | C'est à dire | - அதன் அர்த்தம், அதாவது |
| Dr | Docteur | - வைத்தியர் |
| $ | Dollar | - அமெரிக்கநாணயம் |
| Dz | Douzaine | - பன்னிரண்டு (பொருளைக்கொண்ட) |
| & | et | - அத்துடன் |
| Ets | Etablissements | - ஸ்தாபனங்கள் |
| Etc. | Et cetera | - ஆகியன, அத்துடன் |
| Ex | Exemple | - உ+ம் |
| Fg | Faubourg | - நகரவீதி |
| Fo | Folio | - பக்கம் |
| T.G.V. | Train à Grande Vitesse | - வேகம்கூடிய புகையிரதம் |
| J.C. | Jésus christ | - யேசு கிறிஸ்து |
| £ | Livre sterling | - இங்கிலாந்து நாணயம் |
| Km/h | Kilomètre à l'heure | - கிலோமீற்றர் மணித்தியாலத்திற்கு |
| Mme | Madame | - அம்மணி |
| Mmes | Mesdames | - அம்மணிகள், தாய்மார் |
| Mlle | Mademoiselle | - செல்வி |
| Mlles | Mesdemoiselles | - செல்விகள் |
| Me | Maître | - தலைவர், குரு |
| M. | Monsieur | - திருவாளர் |
| MM. | Messieurs | - திருவாளர்கள் |
| N.B. | Nota bene | - முக்கியகுறிப்பு |
| N° | Numéro | - நம்பர் |
| P.V. | Procès verbal | - சிறியகுற்றங்களுக்குத் தண்டனை |
| P.R. | Poste recommandée | - பதிவுத்தபால் |
| P.T.T. | Poste et télécommunications | - தபால்தொலைத்தொடர்பு |
| % | Pour cent | - நூறுவீதம் |
| 1er | Prémier | - முதலாவது |
| P.D.G | Président Directeur Géneral | - பொதுநிர்வாகத்தலைவர் |
| R.S.V.P. | Réponse s'il vous plaît | - தயவுகூர்ந்து மறுமொழி |

| | | |
|---|---|---|
| St, Ste | Saint, Sainte | - சன்னியாசி, முனிவர், புனித - சன்னியாசிப்பெண் |
| S.V.P. | S'il vous plaît | - தயவுகூர்ந்து |
| S.A.R.L. | Société à responsabilité limitée | - எல்லைப்படுத்தப்பட்ட சங்கம் |
| S.N.C.F. | Société Nationale des Chemins de fer Français | - பிரெஞ்சு தேசிய இரும்புப்பாதைச் சங்கம் |
| Tél. | Téléphone | - தொலைபேசி |
| T.V.A. | Taxe sur à la valeur ajoutée | - சேர்த்த பெறுமதிக்கான வரி |
| T.S.V.P | Tournez s'il vous plaît | - தயவுசெய்து திருப்பவும் |
| T.S.F. | Téléphone sans fil | - வயரில்லாத தொலைபேசி |
| C.E.G | Collège d'enseignement général | - பொதுப்படிப்புக் கல்லூரி |
| C.E.P | Certificat d'études primaires | - ஆரம்பக்கல்விச் சான்றிதழ் |
| C.E.S | Collège d'enseignement secondaire | - நடுநிலைக்கல்லூரி |
| C.E.T | Collège d'enseignement technique | - தொழில்நுட்ப போதனாக்கல்லூரி |
